
# உள்ளதும் நல்லதும்

புலவர்மணி
ஏ. பெரியதம்பிப்பிள்ளை



வெளியீடு :
புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம்,
மட்டக்களப்பு.



**புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை**

# உள்ளதும் நல்லதும்

இக்கட்டுரைத் தொடர் "சிந்தாமணி" இதழில்
வெளிவந்ததன் மறு பதிப்பு.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்

வெளியிடுவோர் :

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
நினைவுப் பணிமன்றம்
மட்டக்களப்பு.

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உள்ளதும் நல்லதும் |
| ஆசிரியர் | : | புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை |
| முற்பதிவு | : | 1982 |
| இரண்டாம்பதிவு | : | 2015 |
| வெளியீடு | : | புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம். மட்டக்களப்பு. |
| முன் அட்டை ஓவியம் | : | க. ரிஜுஜா |
| அச்சுப்பதிப்பு | : | வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு |
| விலை | : | ரூ. 300.00 |

| | | |
|---|---|---|
| Title | : | Ullathum Nallathum |
| Author | : | Pulavarmani E. Periyathampippillai |
| First Edition | : | 1982 |
| Second Edition | : | 2015 |
| Publishers | : | Pulavarmani Periyathampippillai Ninaivuppani Manram, Batticaloa. |
| Cover design | : | K. Riruja |
| Printed by | : | Wanasinghe Printers, Batticaloa. |
| Price | : | Rs 300.00 |

# முன்னுரை

## புலவர்மணி ஒரு வைரமணி

மாண்புற்ற மட்டக்களப்புத் தமிழகம் மகிமையுடன் பெற்றெடுத்து உலகுக்கு உவந்தளித்த மேதைகளில் ஒருவர், ஈழத்தின் எண்டிசையும் போற்றும் ஏற்றமிகு புலவர்மணியாக விளங்கிய பேராசிரியர் பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் ஆவார்.

இலங்கை மணித்திருநாட்டின் கிழக்கு மாகாணம் கண்ட அரை நூற்றாண்டுக்கால இலக்கிய வளர்ச்சியின் வரலாற்றை எடுத்துக் கொண்டால், அதிலே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் ஒரு நெடிதுயர்ந்த கோபுரமாக, மணித்தூணாக, மலைவிளக்காக விளங்குகிறார்கள்.

பலர், பத்துப் புத்தகங்களை மனப்பாடம் பண்ணிப் பரீட்சை எழுதிப் பண்டிதர் ஆவார்கள். சிலர் கண்டது கற்றுப் பண்டிதர் ஆவார்கள். ஆனால் ஓரிருவர் மட்டுமே கருவில் திருவுடையராகப் பிறந்து, இயற்கை யிலேயே பாண்டித்தியம் பெற்றவர்களாகத் திகழ்வார்கள்.

மூன்றாவது வகையிலே, துறைதோய்ந்த திறமையும், நிறைவான புலமையும் பெற்று மக்களால் "பண்டிதர்" என்று தகுதிகண்டு, பரிவோடும் வாஞ்சையோடும் அழைக்கப்பட்டவர் பெரியார் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

காலவரையில், அவருடைய ஆழ்ந்த புலமைக் கவித்திறனை எடைபோட்டு, கற்றோரும் மற்றோரும் திரண்ட பேரவையில் "புலவர்மணி" என்ற புகழ்சான்ற பட்டம் அவருக்கு மட்டக்களப்புத் தமிழ் கலை மன்றத் தினரால் சூட்டப்பட்டது.

பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளையாக விளங்கியவர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆவதற்கு இடையில், அவர் பெற்ற பட்டங்கள் பல பலவாகும். எனினும், ஏனைய சிறப்புப் பட்டங்களை எல்லாம் உதறிவிட்டு "புலவர்மணி" என்ற ஒரே ஒரு பட்டத்தை மட்டுமே அவர் விரும்பித் தமது பெயரின் முன்னால் இறுதிவரை இணைத்துக் கொண்டார்.

இதுபற்றி அவரே கூறும் மூன்று வாக்கியங்கள் உளம் நெகிழ வைக்கும் தன்மையனவாகும். இந்நூலின் 37வது அத்தியாயத்தில் 187ஆம் பக்கத்தில் அந்த விவரங்களை நாம் காணலாம்.

அவர் கூறுகிறார் :

"எத்தனை பட்டங்கள் என்மீது சுமத்தப்பட்ட போதிலும் புலவர்மணி என்னும் பட்டமே எனக்குத் தாங்குவதற்கு இலேசாயிருக்கிறது. உள்ளூர் சுமையாதலால் இதை இலேசாகத் தாங்குகின்றேன். 'புவவர்மணி' மக்கள் மத்தியில் வாழ்கின்றது"

இந்தக் கூற்றில், அவருடைய சொந்த நாட்டுப் பற்றோடு தன்னடக்கமும், இலேசாக நகைச்சுவையும் கலந்திருப்பதைக் காணலாம்.

மேல் நாடுகளில் ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பிறர் எழுதுவதும், தமது வாழ்க்கை வரலாற்றைத் தாமே எழுதுவதும், முறையே "பையோகிராபி" என்றும், "ஓட்டோ பையோகிராபி" என்றும் மதிப்புமிக்க கலை அம்சம் கொண்ட இலக்கியப் படைப்புகளாக செழித்தோங்கி வளர்ந்து வந்துள்ளன.

தமிழில் இந்தத் துறைகள் இன்னும் அவ்வளவு தூரம் சிறக்கவில்லை. அதிலும் இலக்கிய விற்பன்னர்கள் சுயசரிதை எழுத முற்பட்டது மிகக் குறைவு. அப்படி எழுதியுள்ள மிகச் சிலரில் குறிப்பிடத் தக்க ஒருவர் மகா மகோபாத்தியர் உ. வே சாமிநாதையர் அவர்கள்தான்.

தம் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைத் திரட்டிச் "சிந்தாமணி" இதழில் எழுத விரும்புவதாக புவவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் கடிதம் எழுதியபோது இரண்டு காரணங்களால் அதை நாம் வரவேற்றோம்.

ஒன்று, புகழ்பெற்ற தமிழ் இலக்கிய கர்த்தா ஒருவரின் சுயசரிதத்தினை உருவாக்கிய பெருமை 'சிந்தாமணி' இதழுக்குக் கிடைக்கட்டும் என்ற நல்லெண்ணம்.

இரண்டு, அப்படி அவர் எழுத விரும்பி கட்டுரைத் தொடருக்கு அவர் கொடுத்திருந்த "உள்ளதும் நல்லதும்" என்ற மிகச் சிறந்த தலைப்பு.

தலைப்பே கட்டுரைத் தொடரின் உள்ளடக்கம் எப்படிப் பட்டதாக இருக்கும் என்பதை முன்கூட்டியே, சத்தியத்தின் அத்திவாரத்தின்மீது, அறுதியிட்டுக் கூறுவதாக இருந்தது.

இல்லாததையும் பொல்லாததையும் எழுதாமல் புலவர்மணி

பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பண்பட்ட உள்ளம், உள்ளதையும் நல்லதையுமே எழுதவிழைந்தது. அப்படியே அவர் அமரராகும்வரை எழுதியும் வந்தார். அவர் எண்ணியிருந்தவை முழுவதையும் எழுத்துருவில் வடிக்கமுடியாமல் இடையிலே அவரின் வாழ்வு முடிந்தமை தமிழ் மக்களின் துரதிஷ்டமாகும். இலக்கிய உலகுக்குப் பெருநஷ்டமாகும்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பட்டை தீட்டப்பட்ட வைரமணிபோல பல துறைகளில் ஜொலித்த ஒருவராவர்.

அவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர் - சிறந்த கவிஞர் - சிறந்த வசனகர்த்தா – சிறந்த மொழிபெயர்ப்பாளர் - சிறந்த நல்லாசிரியர் - சிறந்த அரசியல் ஆய்வாளர் - சிறந்த சிந்தனையாளர் - சிறந்த இலக்கிய ஆராய்ச்சியாளர் - சிறந்த பண்பாளர் - சிறந்த பக்தர் - சிறந்த நண்பர் - சிறந்த சீர்திருத்தவாதி – சிறந்த புரட்சியாளர் - சிறந்த பத்திரிகையாளர்...

இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம்.

"கிழக்குத் தபால்" என்று மட்டக்களப்பிலிருந்து வெளி வந்த ஒரு வார இதழுக்குப் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் சிலகாலம் ஆசிரியராக இருந்தார் என்பது பலருக்குத் தெரியாது.

ஒரு பத்திரிகையாளராக இருந்தமையினால்தான் அவர் ஒரு பண்டிதராக, புலவர்மணியாக இருந்தும் கூட, பண்டிதத் தமிழ் எழுதாமல், பலருக்குப் புரியும்படியான எளிய தமிழ் எழுதி, வசனநடை கைவந்த வல்லாளராகவும் திகழலானார். அவருடைய தலைசிறந்த வசன நடைக்கு இந்த "உள்ளதும் நல்லதும்" என்ற நூலே சான்று பகர்ந்து நிற்கிறது.

அவரை ஒரு நல்லாசிரியராக, பேராசிரியராக, மகா மகோபாத்தியாயராக நான் நேரில் கண்டிருக்கிறேன். இதை நான் கொஞ்சம் விளக்கமாக எடுத்துக் கூறவேண்டும்.

கண்ணபரமாத்மாவுக்கு அர்ஜுனன் எப்படியோ அப்படித்தான் சுவாமி விபுலானந்தருக்கு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் என்று சொல்லலாம்.

கண்ணன், அர்ஜுனனுக்கு நண்பன், மைத்துனன். அதேவேளையில் குருவும் ஆவார். அதேபோல், சுவாமி விபுலானந்தர் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்களின் ஒரு நெருங்கிய நண்பராகவும். உறவினராகவும் விளங்கினார். அதேவேளை, சுவாமிகளைக் குருவாகவும் ஏற்றுக் கொண்டு அவரிடம் தமிழ் இலக்கியமும், ஆங்கில இலக்கியமும்

கற்றார் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

சுவாமி விபுலானந்தரின் மாணாக்கரின் மாணாக்கர் ஆகும் பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதாவது, புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்கள் எனக்குக் குருவாக வந்து வாய்த்தார். இது நான் செய்த பாக்கியமாகும்.

என்னைப்போலவே அந்தப் பாக்கியம் பெற்ற இன்னொருவர் திரு.ம.சிவநேசராசா அவர்களாவார்.

நாங்கள் இருவரும் அப்போது மட்டக்களப்பில் சுத்தாநந்தர் கழகம் என்று ஒரு கழகத்தை அமைத்து அதன் இணைச் செயலாளர்களாகப் பணிபுரிந்து வந்தோம். அந்தக் கழகத்தின் ஆதரவுடன் ஒரு தமிழ் இலக்கிய வகுப்பை ஏற்பாடு செய்திருந்தோம். அந்த வகுப்பின் நல்லாசிரியராக அமைந்தார் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

பத்து பன்னிரண்டு மாணவர்கள் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களிடம் பாடம் கேட்டோம். நன்னூல், தொல்காப்பியம், யாப்பிலக் கணம், திருக்குறள், கம்பராமாயணம், நளவெண்பா, பெரிய புராணம் முதலிய நூல்களிலிருந்து பல பகுதிகளை ரசமாகப் பிழிந்து வடித்தெடுத்து எங்களுக்குப் பருகக் கொடுத்தார் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். அவர் போட்ட அத்திவாரம் பலமான அத்திவாரமாக அமைந்தது. அப்போதுதான் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் எப்பேர்ப்பட்ட ஒரு பேராசிரியர் என்பதை என்னால் மட்டுமல்ல நண்பர் திரு.ம. சிவநேசராசா அவர்களாலும் அறியவும் முடிந்தது, உணரவும் முடிந்தது.

"நான் பிறந்த பின்பு ஆசிரியப் பயிற்சி பெறவில்லை பயிற்சி பெற்றபின் தான் பிறந்தேன் போலும்" என்று இந்த ஆசிரியப் பெருந்தகை தம்மைப்பற்றி வேடிக்கைபோல் சொல்லும் வாக்கியம் (பக்கம் 108) பெருந்தத்துவம் பொதிந்த வாக்கியமாகும்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களிடம் பயின்றவர்கள் பல நூறு பேர் இன்று ஆசிரியர்களாகவும், வேறு உயர் பதவிகளிலும் இருக்கின்றார்கள்.

இவர்களில் ஒருவரான நண்பர் சிவநேசராசா தனித்துவமானவர். அவர் தம் நல்லாசிரியரை மறக்கமுடியாத பண்பினராக விளங்குகிறார். அதனால், புலவர்மணியின் மறைவுக்குப்பின்னர் "புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம்" என்று ஒரு மன்றத்தினை மற்றும் சிலரோடு சேர்த்து அமைத்து, எவ்வளவோ சிரமங்களின்பேரில்,

புலவர்மணி விட்டுச்சென்ற இலக்கியச் செல்வங்களுக்கு ஒரு நிரந்தரமான வடிவம் கொடுக்கவேண்டும் என்று முயற்சிசெய்து அதில் வெற்றியும் கண்டு வருகின்றார்.

முதல் வெளியீடாக, புலவர்மணியின் கவிதைத் தொகுப்பு நூல் ஒன்று வெளியிடப்பட்டுவிட்டது.

இப்போது இந்த "உள்ளதும் நல்லதும்" என்ற வசனநூல் வெளிவருகிறது. தமிழ் மக்கள் தம் ஆதரவை நல்குவார்கள் என்று நம்புகிறோம்.

இந்த நற்பணியில், ஈடுபட்டிருக்கும் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றத்தினரின் சேவை பாராட்டுக் குரியதாகும்.

**எஸ். டி. சிவநாயகம்**
பிரதம ஆசிரியர்
தினபதி - சிந்தாமணி

கொழும்பு
*05-02-1982*

## பதிப்புரை

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பேரறிஞருள் ஒருவர்; மாபெரும் கவிஞர்; சிறந்த ஆசிரியர்; சமரசவாதி, கேட்டார்ப் பிணிக்கும் மேடைப் பேச்சாளர்; தன்னலமற்ற சமயப் பிரசாரகர்; தேசப்பற்று மிகுந்தவர்.

மரபு வழியான கல்வியை நடமாடும் பல்கலைக்கழகம் போன்ற சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் பயின்றவர். இரு பல்கலைக் கழகங்களின் முதற்றமிழ்ப் பேராசிரியராக இருந்த விபுலானந்த அடிகளார் தொடர்பால் அறிவையும், புலமையையும் வளர்த்துக் கொண்டவர்.

தாம் வாழ்ந்த எழுபத்தொன்பதாண்டுகளில் அறுபதாண்டுகள் பல்வேறு சமய, கலாசார, அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டுழைத்தவர்.

இத்தகைய முதுபெரும் அறிஞரின் பெருமைகளை நாம் பூரணமாக அறியமுடியாமலிருந்துவந்தது. இக்குறையைப் புலவர்மணி அவர்களே "உள்ளதும் நல்லதும்" கட்டுரைகளை "சிந்தாமணி" இதழில் எழுத முன்வந்ததன்மூலம் தீர்த்துவைத்தார்கள்.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 'சிந்தாமணி' வார இதழில் "உள்ளதும் நல்லதும்" என்ற தலைப்பில் எழுதிய ஐம்பது கட்டுரைகளைச் சேர்த்து நூலாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றோம். இந்த நூலை வெளியிடுவதன்மூலம் புலவர்மணியின் உரைநடைத் திறனைத் தமிழுலகம் அறிந்துகொள்ள வழி செய்துள்ளோம்.

மேலும், இந்நூல் புலவர்மணியின் வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்ளவும், மட்டக்களப்பின் சமூக வரலாற்றை அறிந்து கொள்ளவும், இந்நாட்டிலுள்ள பல்வேறு சாதி, சமயங்களைச் சேர்ந்த பெருமக்களோடு அவர் கொண்டிருந்த தொடர்பைத் தெரிந்துகொள்ளவும் துணைசெய்கிறது.

கம்பராமாயணத்தில் அவர் பெற்ற தேர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக 'ஓவியப் புறாவைக் கண்டு உயிர்ப்புறா காதல்!' என்ற கட்டுரை விளங்குகிறது.

கிழக்கிலங்கையில் உதயஜோதியாக விளங்கிய விபுலானந்த அடிகளார் புலவர்மணியின் வளர்ச்சிக்கு உதவிய விதத்தையும் புலவர்மணி விபுலானந்த அடிகளார்மீது கொண்ட பக்தியையும் இக்கட்டுரைகள் காட்டுகின்றன.

நாங்கள் வெளியிட்ட "புலவர்மணி கவிதைகள்" என்ற நூலிலுள்ள

கவிதைகளின் சந்தர்ப்பங்களை அறிய விரும்புவோருக்கு இந்நூல் வேண்டிய விளக்கத்தைத் தருகிறது.

இங்ஙனம் பல்வேறு சிறப்புக்களைப் பெற்றுள்ள இக்கட்டுரைகளைச் சேர்த்து நூலாக வெளியிடவேண்டிய உரிமையைப் பெற்றுத்தந்ததுடன், சிறந்ததொரு முன்னுரையையும் எழுதி 'உதவிய தினபதி - சிந்தாமணி பிரதம ஆசிரியர் திரு. எஸ்.டி.சிவநாயகம்' அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றத்தை ஆரம்பித்து வைத்ததுடன் நாங்கள் இந்த நூலை வெளியிட பத்தாயிரம் ரூபாய் நிதியைத் தமது அமைச்சின்மூலம் வழங்கிய பிரதேச அபிவிருத்தி, இந்து கலாசார, தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் மாண்புமிகு திரு. செ. இராசதுரை அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.

நூலை அச்சிட்டுவருகையில் பிழை திருத்தங்களைச் செய்துதவிய புலவர்மணியின் மூத்த புதல்வர் திரு.பெ.தருமலிங்கம் அவர்களுக்கும், நூலை வெளியிடும்போது பல்வேறு வழிகளிலும் துணைபுரிந்த வித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராசா அவர்களுக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்களது மன்றப் பணியும் நூல் வெளியீடும் திறம்பட நடக்க உதவிய மன்றத் தலைவர் திரு. அ.கி.பத்மநாதன் அவர்களின் சேவை மறக்கமுடியாதது. நிதி விடயங்களில் உறுதுணையாக நிற்கும் பொருளாளர் திரு.லோ. நடராசா அவர்களுக்கும், சங்கப் பணிகளிலும், நூல் வெளியீட்டிலும் உதவிய உப-செயலாளர் திரு.த.செல்வநாயகம் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

எங்கள் சகல பணிகளிலும் ஒன்றுபட்டுழைக்கும் செயற் குழுவினரின் சேவை பாராட்டுக்குரியது. இந்நூலின் அட்டைப்படத்தை வரைந்துதவிய திரு.க. ஜெயபால் அவர்களுக்கும் எங்கள் நன்றி உரியதாகுக. இந்நூலை சிறப்பாக அச்சிட்டுதவிய கத்தோலிக்க அச்சகத்தாருக்கு எங்களது இதயபூர்வமான நன்றி உரியதாகும்.

எங்களது பணிக்குப் பல்வேறு வகையிலும் உதவிவரும் சகலருக்கும் எங்கள் நன்றி

**ம.சிவநேசராசா**
செயலாளர்,
புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
நினைவுப் பணிமன்றம்,
மட்டக்களப்பு.

*38, வாவி வீதி எண் 2,*
மட்டக்களப்பு.
*10.02.82*

# இரண்டாம் பதிப்புரை

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் முக்கிய இடம் வகிக்கின்ற ஒருவர். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈழத்து மரபுக் கவிதையில் சமகால சமூக, அரசியல் பிரக்ஞையை வெளிப்படுத்தி நவீன கவிதைகள் உருவாவதற்கான தளத்தை இட்டவர்களில் புலவர்மணி முக்கியமானவர்.

புலவர்மணியின் நூல்களிலே முதன்மையானதொரு நூலாக 'உள்ளதும் நல்லதும்' அமைந்துள்ளது. முக்கியமாக வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இந்நூல் விளங்குகின்றது. அதனடிப்படையிலேயே இந்த நூலுக்கு 1991ஆம் ஆண்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தமிழ் சாகித்தியப் பரிசு வழங்கப்பட்டது. புலவர்மணி இந்த நூலில் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து பிற்பகுதி வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் நிலவிய சமூக, சமய நிலைகளையும் இலங்கையின் அரசியல் போக்குகளையும் தனது அனுபவத்தின் வழியே பதிவுசெய்துள்ளார்.

புலவர்மணியைப் பற்றி நாம் புரிந்துகொள்ளவும் அறிந்துகொள்ளவும் இந்த நூல் ஆதாரமாக அமைகின்றது. இந்த வரலாற்றைப் புலவர்மணி எழுதவில்லையெனில் அவரைப் பற்றிய பல்வேறு அடிப்படையான தகவல்கள் மட்டுமன்றி அவரது பல கவிதைகளும் இல்லாமல் போயிருக்கும். இவற்றுக்கும் மேலாக, அவரது படைப்புகளை ஆராய்வதற்கான பகைப்புலத்தையும் இந்நூலே தருகின்றது.

நவீன கல்வியினையும் பாரம்பரியக் கல்வியினையும் ஒருசேரக் கற்றுக்கொண்டு பாரம்பரியத்திற்கும் நவீனத்துக்கும் இடையிலான பாலமாக, முற்போக்குச் சிந்தனையாளனாக அவர் மேற்கிளம்பினார். புலவர்மணியின் முற்போக்குச் சிந்தனைகளை அவரது கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆனால், அவர் நடைமுறை வாழ்விலும் எவ்வாறு முற்போக்காளனாக இயங்கினார் என்பதை உள்ளதும் நல்லதும் காட்டுகின்றது.

உரைநடை, எடுத்துரைப்பு முறை என்பவற்றைப் பொறுத்தும் இந்த நூலுக்கு முக்கியமானதொரு இடமுண்டு. ஒரு செந்நெறிப் புலமையாளனின் உரைநடை பேச்சு மொழியினையும் உள்வாங்கிய மிக எளிமையான நடையிலே அமைந்துள்ளமை வியப்பைத் தருகின்றது. அவரது நடை ஆர்வத்தைத் தூண்டுகின்றது.

இத்தகைய முக்கியத்துவங்களைக் கொண்டுள்ள இந்த நூல் இன்று பலரிடமும் இல்லாத நிலையே உள்ளது. உள்ளவையும் அழியும் நிலையில் உள்ளன. எனவே இதனைக் கருத்தில் கொண்டே இந்த இரண்டாம் பதிப்பைச் செய்கின்றோம். இந்த நூல் மீள்பதிப்புச் செய்யப்படுவதற்கு காலாக இருந்தவர் புலவர்மணியின் புதல்வர் சத்தியலிங்கம் ஐயா அவர்கள். புலவர்மணி நினைவுப்பணி மன்றம் சிறப்பாக இயங்குவதற்குப் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வரும் அவர் தற்போது மன்றத்தின் செயலாளருக்குரிய பணியினையும் ஆற்றி வருகின்றார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

இந்நூலை மீள்பதிப்புச் செய்வதற்கான செலவுகளை ஏற்றுக் கொண்ட திரு. எஸ். தவராசா (பொறியியலாளர்), திரு க. சத்தியமூர்த்தி, திரு க. தங்கவேல், திரு சீ. செல்வராசா ஆகியோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், நூலைச் செவ்வை பார்ப்பதிலே என்னோடு உதவியாக இருந்த கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை உதவி விரிவுரையாளர் செல்வி க.ஜீவரதி, அட்டை ஓவியத்தை அழகுபட உரிய நேரத்தில் வரைந்தளித்த கிழக்குப் பல்கலைக்கழக கட்புல, தொழினுட்பக் கலைத் துறை உதவி விரிவுரையாளர் க. ரிணுஜா ஆகியோருக்கு எமது நன்றி.

மற்றும் நூலை மிள் பதிப்புச் செய்வதில் ஒத்தாசையாக இருந்த நினைவுப் பணிமன்ற உறுப்பினர்களுக்கும் இந்நூலைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த வனசிங்கா அச்சகத்தாருக்கும் குறிப்பாக சங்கர், பிரதீபன் ஆகியோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

**கலாநிதி சி. சந்திரசேகரம்**
தலைவர்,
புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
நினைவுப்பணி மன்றம்,
மட்டக்களப்பு.

*2015.10.22*

# எமது உடம்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பழம் பெட்டி!

"உள்ளதும் நல்லதும்" என்னும் தலைப்பில் எனது வாழ்க்கையில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகளைச் "சிந்தாமணி" யென்னும் சீரிய வார இதழின் வாயிலாக எழுதி வாசக நேயர்களுக்கு உபகரிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது முயற்சி வாசக நேயர்களுக்கு நல்விருந்தாய் அமையுமோ என்னவோ நானறியேன். அதை அவர்களே தீர்மானித்துக்கொள்ளட்டும்.

"சிந்தாமணி" நிருவாகப் பொறுப்பாளருக்கு எனது மனங்கனிந்த நன்றியைக் கூறிக்கொண்டு உள்ளதில் நல்லதை எழுதுகின்றேன்.

"உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் புண்ணா?" என்று உலக வழக்கிலே கேட்பார்கள். எனது எழுதுகோல் எவர் ஒருவரின் உடம்பையோ உள்ளத்தையோ புண்படுத்தாது. நல்லதை எழுதுகின்றேன்; நல்ல நோக்கத்துடன் எழுதுகின்றேன்; நல்ல பாணியில் எழுதுகின்றேன்; நிதானமாக எழுதுகின்றேன்.

**எட்டினமட் டும்பாயும் ஏவுகணை; இவ்வுலகில்**

**எட்டாத தூரமெலாம் ஏகியே - பட்டுருவிப்**

**பாயும் எழுதுகோல் பாவிப்போம் நாமதனை**

**நேசக் கரம்பிடித்து நின்று.**

இது எழுத்தாள நண்பருக்கு நான் சொல்லும் வாசகம். நானே எனக்கு முதற் பிரமாணமாக இதை எடுத்துக்கொண்டேன்.

எனக்கு இப்போது எண்பது நடக்கிறது. எட்டாந் திகதியிற் பிறந்தவன். வாழ்க்கையிலே பிரச்சினைகளுக்குக் குறைவில்லை. நான் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்னை எதிர்நோக்கும் பிரச்சினைகள்; என எத்தனையோ பிரச்சினைகள். ஆனால், நான் பிரச்சினைகளை உண்டாக்குபவனுமல்ல; பிரச்சினைக்குரிய பேர்வழியுமல்ல.

எனது சொந்தப் பிரச்சினைகளை மறந்து பிறர் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் அதிகம் ஈடுபாடு கொண்டவன் நான். எனக்கென ஏதும் மனத்தில் வைத்துக்கொண்டு நான் பிரச்சினைக்குத் தீர்வு காண் பதில் ஈடுபட்டுள்ளேன். எண்பது வந்தும் இந்த ஈடுபாடு குறையவில்லை.

எட்டிற் பிறந்த பலரின் வாழ்க்கைச் செய்தி இதுதான். எட்டிற் பிறந்தவர்களுக்கு ஒன்று சொல்லுகின்றேன். திடபுத்தியை வளர்த்துக் கொள்ளுங்கள். சமநோக்கில் நிலைத்து நில்லுங்கள். பிரச்சினைகளுக்கு இலேசாகத் தீர்வு காணலாம். வாழ்வு வளம்பெறும்.

சிக்கலான எனது வாழ்க்கைப் பாதையிலே நம்பிக்கை, நன்றி என்னும் இரு கால்களால் நான் நிதானமாக நடந்து கொண்டிருக்கிறேன். வழியிலே கண்டதும் கேட்டதும் மிகப் பல. பலவற்றை எழுதிவைக்கவில்லை. "எழுதி வழங்காதான் வாழ்க்கை நிதமும் கழுதை புரண்ட களம்" என்பது நம்முன்னோரின் அனுபவ மொழி.

உள்ளதை எழுதிவையாமல் விடுவதும், பிறரறியாமல் மறைத்து வைப்பதும் நமது பரம்பரைப் பழக்கமல்ல. அது இடையில் வந்து புகுந்து கொண்ட புதுப் பழக்கம். இந்த உதவாத பழக்கம் நமது சந்ததியிலும், இனிவரும் சந்ததியிலும் இனிமேலும் இடம்பெறப்படாது. இடம்பெறவும் மாட்டாது எனச் சொல்கின்றது புதுமை எழுத்தாளனின் எழுதுகோல்.

நான் எழுதிவையாது ஒழிந்தவற்றுள்ளே அதிகம் மறந்துபோய் மறைந்தும்போய்விட்டன. எத்தனை இழப்புகள்! "மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டனன்" என்று இலக்கணக் கொத்து நூலாசிரியர் தம்மளவிற் கூறியதை நானும் என்னளவிற் கூறிக் கொள்கிறேன். கொள்ளையடிக்கும் ஏகாதிபத்தியக் கும்பல்களிலும் பார்க்க மறப்பெனும் பகைவன் மகா கொடியவன்.

ஏகாதிபத்தியம் இழைத்த கேடுகளை ஈடுசெய்து கொள்ளலாம். இவன் செய்யும் கேடுகளை ஈடுசெய்ய முடியாது. ஆதலின், எஞ்சியுள்ளதிலும் இவன் கை வைக்கமுந்தி ஒருசில நல்லதை எல்லாருமறிய எழுதுகின்றேன்.

எழுதுவோமென்றால் எல்லாவற்றையும் எழுத இயலவில்லை. உடம்பாகிய புகைவண்டியின் பெட்டி பழைசாகி விட்டது. அதுவும் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பழம்பெட்டி.

இயந்திரக் கோளாறு ஏற்படுவது குறைவு. இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்திலும் இருதயமாகிய இயந்திரம் பெட்டியை இழுத்துக் கொண்டு ஓடுமென நான் நினைக்கின்றேன். ஒருவேளை இது எனது அறியாமையாயும் இருக்கலாம்.

வாசக நேயர்களுக்கு ஒன்று சொல்கின்றேன். நாம் பெட்டியைப் பேணிப் பாதுகாப்பதுடன், இயந்திரத்தையும் நல்ல நிலையில் வைத்திருக்கப் பார்ப்போம். இதற்கு வாழ்க்கையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் வேண்டும்.

நான் எனது தாய்நாட்டுக்கு வெளியில் இருந்து கொண்டு இதை எழுதுகின்றேன். எனது தாய்நாடு சின்மயமான பரமாத்மபதம். அது வானுலகுக்கும் அப்பாலுள்ளது. இராப்பகலற்ற இடம்.

நான் அங்கிருந்து 1899ஆம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 8ஆம் திகதியன்று சகுணப் பிரமமாகிய குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டு அதிபரிடம் கடவைச் சீட்டும், வாசகால அனுமதிப் பத்திரமும் பெற்று, மண்ணுலகமாகிய இந்த வெளிநாட்டுக்கு அறிவுச் சுற்றுலாவின் பொருட்டு வந்துள்ளேன்.

எனவே இந்த மண்ணுலகம் எனது சொந்த நாடன்று. கடவைச் சீட்டு உடம்பு. அனுமதிப் பத்திரம் ஆயுட்காலம்.

மண்ணுலகமாகிய இந்த வெளிநாட்டிலே கிழக்கிலங்கையில் மட்டக்களப்புத் தமிழகத்திலே மண்டூர் என்னும் திருப்பதியில் வந்திறங்கினேன். அங்குள்ள கந்தசுவாமி கோயில் திருத்தொண்டுக்குத் தன்னை அர்ப்பணஞ் செய்த திருவுடைய ஒரு நல்ல குடியிலே பிறக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

எனது தந்தையார் சோமநாதர் வண்ணக்கர் ஏகாம்பரபிள்ளை அவர்கள். தாயார் வண்ணக்கர் சிதம்பரப்பிள்ளை அவர்களின் புதல்வி சின்னத்தங்கம் அம்மையார். வண்ணக்கர் ஆலய நிதி நிர்வாகத் தலைவர். தருமகர்த்தா. இது மட்டக்களப்பு வழக்கு. குடும்பத்தில் நான் ஆண்பிள்ளைகளுள் மூத்தவன். இதனால் பெரியதம்பியெனப் பெயர் பெற்றேன்.

ஐந்து வயதில் மண்டூரிலுள்ள உவெஸ்லியன் மிஷன் தமிழ்ப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்றேன். பத்து வயதில் தமிழ் ஐந்தாம் வகுப்புச் சித்தி பெற்றேன். எனது ஆரம்ப ஆசிரியர்கள் திரு. வே. கனகரத்தினம், திரு. மூ. தம்பாபிள்ளை என்போராவர். இவர்கள் இருவருக்கும் நான் அஞ்சலி செலுத்துகின்றேன். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்".

ஐந்தாம் வகுப்பிற் சித்திபெற்ற எனது சகபாடிகள் சிலர் ஆங்கிலம் படிக்கச் சென்றதால் எனக்கும் அந்த ஆசை உண்டாயிற்று. அவர்கள் இடைக்கிடையே வந்து எனக்குக் கவர்ச்சியூட்டியதால் ஆசை மேலும் அதிகரித்தது.

# மண்டூரில் தமிழ் என்றால் திருச்செந்தூர்ப் புராணம்

மண்டூருக்குத் தென் கிழக்கே எட்டு மைல் தூரத்தில் கல்முனைப் பட்டினம் அமைந்துள்ளது. அது மட்டக்களப்பின் இரண்டாவது பட்டின மாகும். அங்கே உவெஸ்லியன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையொன்று நடந்து கொண்டிருந்தது.

அது இப்போது வெஸ்லிக் கல்லூரியெனப் பெரிய கல்வித் தாபனமாக விளங்குகின்றது. அந்த நாளில் அதற்கு முகாமையாளராய் இருந்தவர் கனம் பாக்கர் ஐயரவர்கள். வெள்ளைக்காரப் பாதிரிமாரை ஐயர் என்பது அக்கால வழக்கம்.

பாதிரிமாரும், உபதேசிமாரும் ஊரூராய்ச் சென்று சமயத்தொண்டும், கல்விச் சேவையும் செய்து கொண்டிருந்த காலம் அது. கனம் பாக்கர் ஐயர் இதே நோக்குடன் எங்கள் வீட்டுக்கும் வருகை தந்தார். இதனால், எனது ஆங்கிலம் கற்கும் ஆசை இலேசாக நிறைவேறும் வாய்ப்புக் கிடைத்தது.

கல்முனைக்குப் போக ஆயத்தம் செய்துகொண்டேன். நாளும் குறித்தாயிற்று. எனது மகிழ்ச்சிக்கு அளவில்லை. இந்தச் சந்தியிலே வந்தது எதிர்பாராத முதலாவது இடையீடு.

எனக்கு நல்லாய் நினைவிருக்கிறது: ஒருநாள் காலை எட்டு மணி இருக்கும் முதியவர் ஒருவரின் வரவு. தந்தை, தாயர், இனசனம் எல்லாரும் என்னையும், வந்த முதியவரையும் வளைந்து கொண்டார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. எனது தலைவிதியை இவர்கள் நிர்ணயிக்கப் போகிறார்கள்.

எல்லாரும் என்னைப் பார்த்து "நீ இங்கிலீசு படிக்கப் போக வேண்டாம். இந்த ஐயாவிடம் நமது வீட்டிலிருந்து கொண்டே தமிழ் படிக்கலாம். உனக்கு நன்மை வரும்" என்று என்னைப் பிடியாகப் பிடித்துக் கொண்டார்கள்.

நான் என்ன செய்வேன்? பத்து வயதுப் பாலகன் அவர்களின் சொல்லுக்கு அமைந்துகொண்டேன். ஆங்கிலக் கதவு அடைபட்டுவிட்டது. அதில் முட்டி மோதிக் கொள்ளும் புத்தி அப்போது எனக்கில்லை. சமாதானமாகத் தமிழ் படிக்கச் சம்மதித்துக் கொண்டேன். அதன் பயனை இன்று அனுபவிக்கின்றேன்.

எங்கள் வீட்டுடன் சேர்ந்த ஒரு தனிக் கட்டிடம். ஒரு மண்டபமும் அறையும் இணைந்த அமைப்பு உள்ளது. அது தந்தையாரின் தோம்பு தோர்க்கந்தோர். விருந்தினரும் அதிலே தங்குவார்.

இந்தக் கட்டிடத்தின் மண்டபம் அன்று தொடக்கம் ஒரு தமிழ்க் காவிய பாடசாலையாக மாறிவிட்டது. என்னுடன் சில இளைஞர்கள் சகபாடி களாகச் சேர்ந்து கொண்டனர். இவர்களுள் க. சுப்பிரமணியம், ச. கறுவல்தம்பி, சர்க்கரையர் வினாசித்தம்பி என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களுள் ஒருவரும் இப்போது உயிருடனில்லை. வினாசித் தம்பியின் புதல்வர் பண்டிதர் வி.சீ.கந்தையா அவர்கள் பிரபல தமிழ்க் கல்விமானாய் விளங்கித் தந்தையாரின் பெயரை நினைவூட்டிக் கொண்டு வாழ்கின்றார்.

பத்து வயதிலேயே எனக்குக் குருகுல வாசம் கிடைத்தது கலைமகளின் கடாட்சமேயாகும். ஆசிரியரோடு உடனுண்டு, உடனுறைந்து தமிழ் கற்கும் பேறு எங்களுக்கு ஒரு வரப்பிரசாதமேயன்றி வேறல்ல.

சூடாமணி நிகண்டு, திருச்செந்தூர்ப் புராணம் இரண்டையும் முதல் வருடத்தில் படிக்கத் தொடங்கினோம். படிப்பென்றால் பாடமாக்குவதுதான். பரீட்சைக்குப் படியாமல் பாடத்துக்காகவே படித்தோம்.

திருச்செந்தூர்ப் புராணத்தை முதலாவதாகத் தெரிந்து கொண்ட தற்குச் சிறந்த காரணமுண்டு. எங்கள் ஊரில் உள்ள கந்தசுவாமி கோயில் மிகவும் பழைமையானது. அங்கே பழைமை இன்னும் உயிர்வாழ்கின்றது. கோயில் அமைப்பு கதிர்காமம் போன்றது. வணக்க முறையும் அப்படியே.

பூசை மௌன பூசை. கோயிற் பூசகர் கற்பகனார் எனப் பெயர் பெறுவார். ஆசாரிய அபிஷேகமும் இல்லை; சாத்திர சூத்திரப் பயிற்சியும் இல்லை. பரம்பரை உரிமையும், ஆசாரமும், பயபக்தியும், கோயிற் பழக்கமுமே முதல் அவசியம்.

பெரிய கற்பகனார் ஒருவர் இருப்பார். அந்தப் பெரியவரிடம் பயிற்சி பெற்றுத் தகுதியடைந்த ஒருவர் அல்லது இருவர் ஒரு குறித்த

நன்னாளிலே படி கடந்து கற்பகனாராவார். படி கடத்தல் என்பது மூலத் தானத்துள் கால் வைக்கும் ஒரு சம்பிரதாயச் சடங்காகும்.

அங்கே மந்திரமுமில்லை; தந்திரமுமில்லை; யந்திரமுமில்லை. மௌனமாகச் சரண்புகுவதே சடங்காகும் மூலத்தானத்துள் என்ன இருக்கிறது என்பது பரம ரகசியம். கற்பகனாருக்கு மாத்திரமே அது வெளிச்சம்.

இவ்வாலயத்திலே பூசை, விரதம், திருவிழா முதலிய வைபவங்கள் அமைதியாகவே நடக்கும். அலங்கார ஆடம்பரங்களில்லை. அதிக பணச்செலவும் இல்லை. ஆயிரம் பேர் கூடியாலும் அமைதியே குடி கொண்டிருக்கும். மௌனமே வடிவானது மண்டூர்க் கோயில்.

இவ்வாலயம் மண்டூர், குறுமண்வெளி, கோட்டைக் கல்லாறு, பெரியகல்லாறு, துறைநீலாவணை என்னும் ஐந்து ஊர்களின் கூட்டான பரிபாலனத்தின் கீழ் இனிதாக நடைபெற்று வருகிறது.

நான் பத்து வயதுப் பாலகனாய் இருக்கும் போது, குறுமண்வெளி பெரியதம்பி விதானை, கோட்டைக்கல்லாறு சின்னப்பிள்ளை விதானை, ஆசிரிய சிரோமணி சாமித்தம்பி அவர்களின் தந்தையார் வேலாயுதம் பிள்ளை, கதிரைமலை விதானை, வினாசித்தம்பி விதானை, பெரியகல்லாறு கண்டுக் குட்டி விதானை என்னும் திருமேனிப்பிள்ளை, துறைநீலாவணை வேலாயுதம் பரிகாரியார், நாகமுத்து அடப்பன் முதலியோர் நிர்வாகப் பதவி வகித்தது நினைவிருக்கிறது.

அப்போது எனது தந்தையார் நிர்வாகத் தலைவராய் இருந்தார். கோவிந்தக் கப்புகனார் பெரிய கப்புகனாரென்பது ஞாபகம்.

**'உள்ளு மன்புடன் ஐம்புலன் போலைந்தூர்**
**உவந்து நாளு மடித்தொண்டு பூண்டிட**
**வெள்ளம் போல்வரும் அன்பர் குழாந்தொழ**
**வேண்டு நல்வர மீந்தருள் மூர்த்தியைக்**
**கள்ள மில்மனத் தன்பு கனிந்துசெய்**
**கற்பக நயி னார்பூசை யேற்றருள்**
**வள்ளலைத் தமிழ் வாணர்கள் வாழ்தில்லை**
**மண்டூ ரானை வணங்கியுய்ந் தேனே"**

என இச்செய்தியினை எனது பிற்காலத்தில் 1965ஆம் ஆண்டு நான் பாடிய மண்டூர்ப் பதிகத்திலும் குறிப்பிட்டிருப்பதை இங்கே நினைவூட்ட விரும்புகின்றேன்.

ஆண்டுதோறும் பல நூற்றுக் கணக்கான மக்கள் திரண்டுவந்து இவ்வாலயத்திலே தங்கியிருந்து, கந்தசட்டி விரதம் பிடிப்பார்கள். விரத காலத்தில் ஒவ்வொரு நாளும் திருச்செந்தூர்ப் புராணம் படித்துப் பயன் சொல்வது வழக்கம்.

இப்பொழுதும் தப்பாமல் இது நடந்துவருகிறது. இதனால், மண்டூரில் தமிழென்றால் திருச்செந்தூர்ப் புராணமே முதலிடம் பெற்று நிற்கும். நாங்கள் முதன் முதல் திருச்செந்தூர்ப் புராணம் படிக்கத் தொடங்கிய காரணம் இதுதான்.

சூடாமணி நிகண்டில் முற்பகுதியும், திருச்செந்தூர்ப் புராணமும் எங்களுக்கு மனப்பாடமாய், வாய்ப்பாடமும் ஆகிவிட்டன. ஒரு வருடம் பூர்த்தியாயிற்று. கோயிலிற் பயன் சொல்லி அரங்கேற்ற நாங்கள் தயாராகிக் கொண்டோம்.

கந்தசஷ்டியும் வந்தது. மண்டூர் வதனக்குட்டி கந்தவனம் விதானையார் ஏடு படிக்க, நாவிதன்வெளி க.குமாரவேலு அவர்கள் நாவுக்கு இனிமையாகப் பயன் சொல்லிக் கொண்டிருக்கிறார். வயதில் இளைய நாங்களும் அவர்களின் பக்கத்திலே இடம் பார்த்து அமர்ந்து கொண்டோம்.

புதுப் பழக்கத்தால் எங்களுக்கு உண்டான சபைக் கோழையும், கூச்சமும், அவர்களிருவரும் உற்சாகமளித்துத் தட்டிக்கொடுத்தமையால் படிப்படியாக நீங்கிவிட்டன. என் சார்பிலும், என் சகபாடிகள் சார்பிலும் அன்னார் இவருக்கும் அஞ்சலி செலுத்துகின்றேன். புராண படன அரங்கேற்றம் இனிது பூர்த்தியாயிற்று. இனி அடுத்த கட்டத்துக்கு வருகிறேன்.

இரண்டாம் வருடம் பதினொரு வயது, 1910ஆம் ஆண்டு சூடாமணி நிகண்டைத் தொடர்ந்து பாடமாக்கிக்கொண்டு, அதனுடன் வில்லிபுத்தூரர் பாரதத்தையும் படிக்கலானோம். பாரதத்தை இரண்டா வதாகத் தெரிந்து கொண்டதற்கும், சிறந்த பாரம்பரியம் ஒன்றுண்டு. இது சற்றே விரிவானது.

ஒன்றைச் சொல்லும்போது அதன் ஒற்றுமைச் சம்பந்தத்தையும் சொல்லவேண்டும். சொன்னால் அது இலேசாக விளங்கும். அதன் சார்பும் விளங்கும். இதனால், எழுதும்போது இடைக்கிடையே இந்த முறையைக் கையாளுகின்றேன்.

# மகாபாரதப் பண்புகளைக் கொண்டது மட்டக்களப்பு.

மட்டக்களப்பு மாநாடு என்றால் அது மீன்பாடும் தேன்நாடு, நான் பாலகனாயும், வாலிபனாயும் இருந்தபோது கண்ட இந்நாட்டின் வளமையை ஒரு சிறிது கூறுகின்றேன். இது இயற்கை நவிற்சி.

**'பால்பெருகும்; தேன்பெருகும்; பண்புடைய மன்னவர்செங்**
**கோல்பெருகும் படிவயற்பைங் கூழ்பெருகும்; புனல்பரந்து**
**கால்பெருகும், கல்லார்க்கும் சொல்லாட்சி மிகப்பெருகும்;**
**நூல்பெருகும் இடையார்க்கு நூவலறங்கள் பெருகுமால்."**

இன்று காலம் மாறிவிட்டது. நிலைமை வேறு. எனது இந்தப் பாட்டைப் படிப்பவர்கள், இது வெறும் புனைந்துரை என்றுதான் சொல்ல வேண்டி இருக்கும்.

சமூக வாழ்விலும், சமய வாழ்விலும், அரசியல் வாழ்விலும் ஓர் இணைப்பு வழியைப் பின்பற்றி நடக்கும் நாடு இந்நாடு.

விபுலானந்த அடிகளார் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டு காலத்தின் முன்பே இந்த வாழ்க்கைமுறையில் இது பூரண வளர்ச்சி பெற்றிருந்தது. விபுலானந்தரின் வருகையால் ஒரு புது உயிர்ப்பும், புது மலர்ச்சியும், புது மணமும், பிறந்ததென்றே சொல்லலாம்.

இந்த இணைப்பு முறையால் சிவபக்தியும், கிருஷ்ண பக்தியும், கண்ணகி வணக்கமும், திரௌபதி வழிபாடும் இந்நாட்டு மக்களிடையே சமமாகப் பிரபலம்பெற்று விளங்குகின்றன.

கண்ணகி வணக்கத்தின் வாயிலாக வழக்குரை காதையும், திரௌபதி வழிபாட்டின் வாயிலாக வில்லிபுத்தூரர் பாரதமும் இந்நாட்டில் நிலைகொண்டுள்ளன. இங்குள்ள திரௌபதி கோயில்கள் மிகப்பல. இவற்றுள்ளே கல்முனையின் வடக்கெல்லையிலே பாண்டிருப்பு என்னும் பழம்பேரூரில் உள்ள கோயில் மிகப் பிரசித்தி பெற்றது.

உண்மையிலேயே பஞ்சபாண்டவர் திரௌபதி தேவியுடன் இப்போது அங்கே உயிருடன் வாழ்கின்றார்கள் என்றுதான் பாண்டிருப்பைச் சொல்ல வேண்டும். அவ்வளவு பஞ்சபாண்டவர், திரௌபதி பக்தியின் மயமாக அது திகழ்கின்றது.

ஆண்டுதோறும் புரட்டாதி மாசத்திலே அங்கு திருவிழா நடைபெறும். தீப்பாயும் வைபவம் மிகவும் அற்புதமானது. அக்கினி பகவான், திரௌபதி அம்மனின் பூரண கட்டுப்பாட்டுக்கு அடங்கிச் சாந்த சொரூபியாய் அமைதிகூடுவதை அங்கே காணலாம்.

திரௌபதி அம்மன் கோயில்களில் எல்லாம் இந்த விழா நாட்களில் வில்லிபாரதம் படித்துப் பயன் சொல்வது வழக்கம். பாண்டிருப்பில் பாரதமென்றால் ஒரு தனி மதிப்பு. பாரதம் தெரியாத ஒருவரை மட்டக்களப்பில் தமிழ் படித்தவராகக் கொள்ளமாட்டார்கள்.

மட்டக்களப்புக் கலாசாரம் பாரதமேதான். இந்த அமைதி யினாலேதான் திருச்செந்தூர்ப் புராணத்துக்கு அடுத்ததாகப் பாரதம் எங்களுக்குப் பாடமாயிற்று.

எங்கள் ஆசிரியருக்கு நல்ல குரல். அது மணிக்குரல். வயது சென்றும் உறுதியான சொல். அறுத்தறுத்து இனிமையாகப் பாடுவார். நாங்களும் அதே பாணியிற் பழகி பாடிப் படிக்கலானோம். இயல்பாகவே பல பாட்டுகள் எங்கள் வாயிலும், மனத்திலும் பதிந்துகொண்டன.

அவர் முதுபெரும் புலவர். நாங்கள் இள மட்டங்கள். சில வேளைகளில் நாங்கள் வயதுக்குத் தக்கபடி துடுக்காக நடந்து கொண்டாலும், அவர் மிடுக்காக நடக்கமாட்டார். கடுமுடுக்கும் பண்ண மாட்டார். எப்போதும் இனிமையாக நடந்து கொள்வார்.

இது எங்களுக்கு ஒரு முன்மாதிரியாயிற்று. பாரதம் படிப்பதுடன் ஆசிரியரையும் படிக்கலானோம். அவரது பண்புடன் பழகி எங்களை நாங்களாகவே திருத்திக்கொண்டோம். நான் நூல்களைப் படித்ததிலும் பார்க்க ஆசிரியர்களைப் படித்ததே அதிகம்.

சூடாமணி நிகண்டு அதிகம் வாய்ப்பாடமாயிற்று. அகராதியைப் பாடமாக்குவதா? என்று சில புதுக் கலைஞர்கள் கேட்கலாம். பாடமாக்குவது கிழக்கு நாட்டுப் பாரம்பரியம் என அவர்களுக்கு விடை பகர்வதன்றி வேறு யாது கூறுவேன்? சொற்பயிற்சிக்கும், சொல்லாட்சிக்கும், பொருளுணர்ச்சிக்கும் இது அதிகம் பயன்பட்டதை நினைந்து நான் மிகவும் மகிழ்கின்றேன்.

பாரதத்திலும், நிகண்டிலும் இரண்டரை ஆண்டுகள் கழிந்தன. கந்தபுராணம் படிக்கத் தொடங்கினோம். இது எங்களுக்கு ஒரு பாரமான வேலை. பாடம் அவ்வளவாக ஓடவில்லை. என்றாலும் தளர்ச்சி அடையாமற் படித்துக் கொண்டிருந்தோம். சுப்பிரமணிய சாத்திரிகளின் உரையும் கிடைத்தது.

கந்தபுராணம் படித்துக் கொண்டிருக்கையில் விழுந்தது பேரிடி. இது எங்கள் தலையிலும் விழுந்தது, ஆசிரியரின் வயிற்றிலும் விழுந்தது. தமிழ்ப் படிப்பிலும் விழுந்துவிட்டது.

ஒரு நாள் சாயந்தரம். மணி ஐந்திருக்கும். எனக்குப் பன்னிரண்டு வயது. பட்டணம் பார்க்க வேணுமென்ற ஆசை. அதற்கொரு தடை. கவலைப்பட்டு அழுதுகொண்டிருக்கிறேன். அன்னையார் கறிக்கு வாழைக் காய் வெட்டிக்கொண்டிருக்கிறார். எனது அழுகையால் அப்பாவுக்கு அலுப்பு உண்டாயிற்று. அப்பா என்னைப் பார்த்து "ஏன் குளறுகிறாய் அம்மா செத்துப்போனா என்று குளறுறையா? அதற்கு இன்னம் காலம் கிடக்கு" என்று கடிந்து கொள்கிறார்.

இந்த அமங்கலமான பேச்சு வெளிவந்து இரண்டு நிமிஷமாக வில்லை. கை கழுவத் தண்ணீர் கொண்டுவரும்படி அக்காவிடம் சொல்லிக் கொண்டு அம்மா எழுந்து போகிறார். எதிர்பாராத வகையில் ஒரு ஈனக்குரல்; புள்ளே! அம்மா சாய்ந்து போகிறார். அப்பா ஓடிப்போய்த் தாங்கிப் பிடிக்கிறார். அம்மாவின் கடைசிக் குரல் அதுதான்.

எங்களுக்கு அம்மா இல்லை. நான் அழுது கொண்டிருந்தபடி யேதான். எங்கள் ஆசிரியரும் ஆதாரமற்றவரானார். எங்கள் படிப்பும் நின்று போயிற்று. அடுத்த அடையீடு. தமிழ்க் கதவும் அடைபட்டுவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்திலே தந்தையாரைப் பற்றி ஒரு வார்த்தை. தந்தையார் அவரது பதினாறு வயதிலே சன்னியாசி வடிவில் தரிசனமளித்த முருகப்பெருமானால் நெற்றியிலே சஞ்சீவி மருந்து பாய்ச்சப் பெற்றவர். சிறந்த முருகபக்தர். வாக்குச் சித்தியுடையவர். ஒரு சுத்தாத்துமா. சமயம் வரும்போது அவரின் வாக்குச் சித்திபற்றி இடைக்கிடை சொல்கின்றேன்.

இதுவரையில் எங்கள் முதல் தமிழாசிரியர் ஆர்? எவர்? பெயரென்ன? என்று ஒன்றும் தெளிவாகச் சொல்லவில்லை. எங்கள் ஆசிரியர் யாழ்ப்பாணம் புலோலியைச் சேர்ந்தவர். பெயர் சந்திரசேகர உபாத்தியாயர்.

மட்டக்களப்பில் எங்கள் இனத்துள் கலந்து கொண்டவர். ஒரு முதுபெரும் புலவர். புத்தகம் பாராமலே பாடம் சொல்பவர். எப்போதும்

பெட்டி இழைத்துக் கொண்டேயிருப்பார். ஒரு எழுத்துத் தவறினாலும், இசை தப்பினாலும் விடமாட்டார். உடனே எங்களை இடைநிறுத்தித் திருத்திவிட்டே அப்பாற் செல்லவிடுவார். அவதானமும் அபாரமான ஞாபக சக்தியும் உடையவர்.

அன்னையார் பிரிவினால் எங்கள் அன்பின் ஆசிரியரையும் நாங்கள் பிரியாமற் பிரியலானோம். அவர் தமது மக்களுடன் சேர்ந்துவிட்டார். அவரின் வாசகத்தலம் பட்டிருப்பு. மிகவும் பிரபலம்பெற்று வாழ்ந்த களுவாஞ்சிகுடி கார்த்திகேசுப் பாதிரியார் எங்கள் ஆசிரியரின் மூத்த புதல்வராவார். இவர் எனக்குச் சிறிய தந்தையுமாவார்.

**'அன்னை நிகரன்பின் ஆசா னெனவந்தே**

**என்னைத் தமிழ்த்தாய் இணையடியில்-மன்னுவித்த**

**சந்திர சேகரனார் தாட்கமல நாட்போதெம்**

**சிந்தை மலர்க தினம்"**

எமது உள்ளத்தில் எமது முதலாவது தமிழ்க்குரவர் நிரந்தரமாகக் கலந்து வாழ்கின்றார். நீடு வாழ் சந்திரசேகரனாருக்கு எனது சார்பிலும், என் சகபாடிகள் சார்பிலும் அஞ்சலி செலுத்துகின்றேன். மேற்குறித்த செய்யுள் நானியற்றிய பகவத்கீதை வெண்பா கருமயோகப் பகுதியில் குரு வணக்கமாக அமைந்துள்ளது.

என் ஆசிரியரின் ஆசீர்வாதத்தினால் எனது பாட்டும் வாழ்கின்றது. எனது பாட்டு வாழ்ந்தால் நான் வாழாதிருக்க முடியுமா? மேல் என்ன நடந்த தென்பதை அடுத்த கட்டுரையில் சொல்கிறேன்.

## கன்னக் கொண்டைதான்

## மட்டக்களப்பின் நாகரிகம்.

**அப்படியே நானும்**

**சிகை அலங்காரம் செய்து கொண்டேன்.**

இதுவரையும் கூட்டாக நான் பெற்ற அனுபவங்களைச் சொல்லி வந்தேன். இப்போது கூட்டம் கலைந்துவிட்டது. வயதும் பதின்மூன்று சொச்சம். தனித்துக் கொண்டேன்.

பத்து வயதிலே திறந்த தமிழ்க் கதவும் பதின் மூன்றாம் வயதில் அடைபட்டுவிட்டது. அன்னையைப் பரிந்த கவலை; ஆசானைப் பிரிந்த கவலை; சகபாடிகளைப் பிரிந்த கவலை; குருகுலவாசம் பிரிந்த கவலை; தமிழ் அன்னையைப் பிரிந்த தனிப்பெரும் கவலை. எல்லாம் கவலை மயமே.

இந்த அல்லோல கல்லோலத்தின் மத்தியிலே என்னிலும் மூன்று நான்கு வயதில் மூத்த இளைஞர் ஒருவர் எங்கள் வீட்டுக்கு வருகிறார். அவர் பெயர் இ.சதாசிவம். தூரத்துச் சொந்தம்.

அவர் ஒரு குடும்பி. குடும்பியென்றால் குடும்பகாரனல்ல; குடுமிக்காரன் முன்மொட்டை; பின்குடும்பி. எங்களூர்க் குடும்பி மாணிக்கருக்கு அடுத்தாற்போல் ஊராரின் நகைப்புக்கு இலக்கான குடும்பி இவர்தான்.

கன்னக் கொண்டைதான் மட்டக்களப்பு நாகரிகம். எனக்கும் கன்னக் கொண்டை, என் போன்ற இளைஞர்கள் எல்லாருக்கும் கன்னக் கொண்டையே. இப்போது கொண்டையுமில்லை, குடுமியுமில்லை எங்கும் விரிசிகைதான்.

புதுமை பற்றிய எள்ளல் நகைக்கு இலக்காகிய இளைஞர் சதாசிவம் வந்தவர் அப்பாவிடம் சென்று, அம்மாச்சி, நான் கல்முனையில் ஆங்கிலம் படிக்கிறேன். பெரியதம்பியையும் என்னுடன் அனுப்புங்கள். ஏன் சும்மா வீட்டில் இருக்க வேணும்? படிக்கக் கூடியவர்தானே? எங்களோடு ஆங்கிலம் படிக்கட்டும் என்று சொன்னார்.

தந்தையாரும் சம்மதித்து, கல்முனைக்குப் போய் ஆங்கிலம் படிக்க ஆயத்தமாகும்படி அன்பாகக் கூறினார். தாயில்லாப்பிள்ளை சலுகையும் கூட. தமிழ்க் கதவு அடைபட, முன் அடைபட்டிருந்த ஆங்கிலக் கதவு திறந்தது. எனது கவலையெல்லாம் பறந்தது. ஒரு புது மகிழ்ச்சி பிறந்தது. நகையும், அழுகையும் கலந்ததுதானே இந்த உலகம்.

எல்லா ஒழுங்குகளையும் செய்துகொண்டு கல்முனைக்குப் புறப்பட்டேன். சதாசிவம் கோஷ்டியில் நாங்கள் நாலைந்து பேர். கல்முனை எட்டுக் கட்டை. விடிய நாலு மணிக்கு எழும்பவேண்டும். நடந்துதான் போகவேண்டும். ஆறும் கடக்க வேண்டும். துறைநீலாவணைத் துறை முக்காற்கட்டை விசாலம். துழா (சவள்), துடுப்பு (தண்டு), ஊன்றுகம்பு இம்மூன்றாலும் தோணியைச் செலுத்தவேண்டும். புதுப்பழக்கம். கைப்பட்டை தூக்கமுடியாமல் நோகும். இந்தச் சிறப்புகளின் மத்தியிலே வேர்த்து விருவிருத்துக் காலை எட்டு மணிக்குக் கல்முனை போய்ச் சேருவோம். துறைச் சுணக்கம் ஒன்பதாயும் போகும். வெள்ளிக்கிழமை சாயந்தரம் இதே நடையில் ஊருக்குத் திரும்புவோம்.

ஒரு புதுச் சூழ்நிலை. இனி எனது தனி அனுபவத்தையே சொல்ல வேண்டிய நிலை. கனம் பாக்கர் ஐயர், கனம் லொக்வூட் ஐயர், கனம் சீ. டபிள்யூ. தாமோதரம் பாதிரியார், திரு.ஈ.சீ.டேவிட் என்னும் நல்லோரின் அறிமுகமும், ஆதரவும் எனக்குக் கிடைத்தன.

திரு. டேவிட் அவர்கள் எனது கலாசாலை அதிபர். கோப்பாயைச் சேர்ந்தவர். எனக்குப் பல வகையில் உதவிய உபகாரி. அப்போது அங்கே ஆசிரியராயிருந்து எனது ஆங்கிலக் கல்விக்கு வித்திட்டவர் திரு.கே.எஸ். குஞ்சித்தம்பி அவர்கள்.

விபுலானந்த அடிகளாருக்கு ஆரம்ப ஆங்கில ஆசிரியராயிருந்த அன்னார் எனக்கும் ஆசிரியராக வாய்த்தமை ஒரு பெரும்பேறாகும். இவ்விரு பெருங்குரவரையும் இங்கே நினைவுகூருகின்றேன்.

1913ஆம் ஆண்டு எனக்கு வயது பதினாலு. ஆங்கிலத்தில் ஓரெழுத்தும் தெரியாது. முதலாம் வருட வகுப்பிற் சேர்ந்து கொண்ட என்னை அவ்வகுப்பிலுள்ள சிறுவர் சிறுமியர் அண்ணாந்து பார்க்கிறார்கள். பெரிய உருப்படி; கன்னக் கொண்டை; சால்வைப் போர்வை; சட்டையில்லை. கிளுகிளுத்துச் சிரிக்கிறார்கள். இதென்ன கருநாடகமென்று.

நிகண்டு, திருச்செந்தூர்ப் புராணம், பாரதம், கந்த புராணம் ஓரளவு படித்தவன். இங்கே சின்னப்பிள்ளைகளின் அலட்சியச் சிரிப்புக்கு

இலக்காகி விட்டேன். இது போதாமல் வகுப்பிலே தமிழ் பேசினால் அபராதமும் செலுத்த வேண்டும். இவ்வளவுக்கும் மத்தியில் ஆங்கில எழுத்துக்களை அட்சரசுத்தியாக எழுதப் பழகிக்கொண்டேன். வாசிப்பதில் பல முட்டுக்கட்டைகள்.

ஆங்கில எழுத்துக்கள் தொகையில் இருபத்தாறு ஆயினும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வைப்பு முறை ஒருபுறம்; உச்சாரண பேத மயக்கம் மறுபுறம்; பெரிய சிக்கல். தமிழில் இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் இருந்ததும், வைப்பு முறையும், உச்சாரண அமைவும் ஒழுங்காயிருப்பதால் தமிழ் படிப்பதில் முட்டு ஏற்படவில்லை.

தமிழ் படிப்பது இலேசு என்பதைப் பிற்காலத்தில் ஆசிரியர் மகாநாடுகளில் விரித்து விளக்கியிருக்கிறேன். சந்தர்ப்பம் வரும்போது இதுபற்றி ஒரு தனிக்கட்டுரை வரைகின்றேன்.

கலாசாலை அதிபர் எனது நிலையை நன்றாக விளங்கிக்கொண்டார். நான் அவரிடம் சென்று ஐயா, நான் முதலாம் வருட வகுப்பு, இரண்டாம் வருட வகுப்பு ஆங்கிலப் புத்தகங்களை ஒருமிக்கப் படித்து ஒப்படைத்து விடுகிறேன். இந்தப் பிள்ளைகளின் பிடியிலிருந்து என்னை விரைவில் விடுவிக்க வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக் கொண்டேன். அவருடைய தயவினால் பத்து மாதத்தில் ஐந்தாம் வகுப்பை அடையும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. டேவிட் என்னும் பெயருக்கு உண்மையாகவே அவர் தகுதியுடையவர்தான்.

பாடப் புத்தகங்களிலுள்ள எல்லா ஆங்கிலச் சொற்களையும் ஒன்றும் விடாமல் அறிந்து கொண்டேன். சொற் பொருளும் தெளிவாகத் தெரியும். அட்சர சுத்தியாய் அழகாக எழுதுவேன். மொழி பெயர்ப்பதிலும் முதல்தரமான திறமை பெற்றுள்ளேன். ஆனால், வாய் திறந்து ஆங்கிலம் பேசமாட்டேன். ஆங்கிலப் பாட்டும் வாயில் வராது. பாரதம், கந்தபுராணம் படித்த வாய் தடைப்படுவதற்கு வயதுதான் காரணம்.

ஆங்கிலம் ஐந்தாம் வகுப்புப் பரீட்சை வந்தது. பரீட்சகர் வித்தியாதரிசி கிறிக்கன் பேக் என்பவர். பறங்கியர் வகுப்பைச் சேர்ந்தவர். தமிழ் சுத்தசூனியம். நடை, உடை, பாவனை எல்லாம் அசல் ஆங்கிலமயம். பக்கத்து உதவியுடன் பரீட்சிக்கிறார். ஆங்கிலப் பந்தியொன்றை பிரதி பண்ணல் (Transcription). அதைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுதல் (Translation). எனது எழுத்தில் மயங்கிவிட்டார் கிறிக்கன் பேக். ஐந்தாம் வகுப்பு ஆங்கிலத்தில் திறமைச் சித்தி கிடைத்தது. வகுப்பேற்றமும் பெற்றேன்.

ஒன்றைச் சொல்ல மறந்து போனேன். கடந்த ஒரு வருட காலமாக எனது தோற்றத்தில் மாற்றம். முந்தியே கன்னக் கொண்டையை கத்தரித்துக் கொண்டேன். வைத்தியநாதர் என்னும் சிகையலங்காரக் கலைஞர் எனக்கு நல்ல நண்பராகி விட்டார். அவருடைய மகன் இன்னாசிப் போடியாரும் சாகும் வரையும் என்னுடன் சமமாகப் பழகிச் சமீபத்தில் காலமாகி விட்டார். நான் அப்போதே ஒரு சமத்துவவாதி. இன்று எனது வாழ்க்கையே சமத்துவ மயமாகிவிட்டது.

இன்னும் ஒரு மாற்றம். சட்டையும் போடப் பழகிக் கொண்டேன். ஆங்கிலம் ஆறாம் வகுப்பில் இப்பொழுது படிக்கிறேன். படிப்படியாகப் பட்டணத்துப் பிள்ளையாய் மாறுகிறேன். இந்தச் சூழ்நிலையிலே பாடசாலை விடுதியை விட்டுக் கிளம்பி ஆசிரியர் கே.எஸ்.குஞ்சித்தம்பி அவர்களின் இல்லத்தில் இருப்பிடம் கொண்டேன். முன்புபோல் வாரத்துக் கொரு பயணமில்லை. மாசமொருமுறை ஊர்ப் பயணத்தை வைத்துக் கொண்டேன்.

ஆறாம் வகுப்பில் என்னுடன் படித்த பாடசாலைத் தோழர் சிலரைப் பெயரளவாகவேனும் குறிப்பிட்டு நினைவுகூர விரும்புகின்றேன். இலண்டன் மாநகரில் விவசாயப் பேராசிரியராயிருந்த பெரிய கல்லாற்றுச் சின்னத்தம்பி, வைத்திய கலாநிதி குலேந்திரனின் தந்தையார் சி.பொன்னம்பலம், வைத்திய கலாநிதி க.கனகசபை, கல்விப் பகுதி காரியாலய அதிகாரி கல்முனை சீ.குணரத்தினம், இளைப்பாறிய தந்திப் போக்குவரத்து மாவட்டப் பரிசோதகர் கல்முனை வே.தம்பிப்பிள்ளை, கச்சேரி காரியாலய அதிபர் ஐயாக்குட்டி என்போரை இங்கே நினைவு கூருகின்றேன்.

இவர்களைவிட கலாசாலையில் என்னுடன் அன்பாகப் பழகிய மேல் வகுப்பு மாணவர்கள் கனம் தம்பிப்பிள்ளைப் போதகர், உள்ளூ ராட்சி உதவி அமைச்சர் முதலியார் எம்.எம்.இப்றாகிம், புகையிரதப் பகுதி நிலைய உயரதிபர் பரசுராமர் என்போரையும் இங்கே நினைவு கூருகின்றேன். பரசுராமர் எனது மருமகள் சிவகாமசுந்தரி விஜயரத்தினத்தின் தந்தை யுமாவார்.

இவைகளைக் குறிப்பிடுவதில் ஒரு முன்மாதிரியை நிலைநாட்ட விரும்புகின்றேன். எனது பாடசாலைத் தோழர்கள் இன்றும் என் தோழர்களே. என் ஆசிரியர்கள் இன்றும் என் ஆசிரியர்களே. பதவி முதலியவற்றால் வரும் உயர்வு தாழ்வுகள் எங்களைப் பிரிப்பதில்லை. மரணம் எங்களைப் பிரிப்பதில்லை.

# பெரியோரின் வெகுளியுரை தப்பாமற் சுடும்

ஆறாம் வகுப்பில் எனக்கு ஒரு அதிஷ்டம் அடித்தது. அது இன்றைய "சுவீப் டிக்கட்" இலாபத்திலும் அதிகம் பெறுமதி வாய்ந்தது. அதுதான் எங்கள் கலாசாலையின் புதிய அதிபரின் வரவு. அவர் மட்டக்களப்பு அன்னை பெற்றெடுத்த மாபெரும் புதல்வர்களுள் ஒருவர். எம்.ஏ.பட்டதாரி. ஓய்வு பெற்ற பாதிரியார். நல்லது என்னும் சொல் அவரது நாவிலே என்றும் நடனமாடிக் கொண்டிருக்கும்.

உங்கள் கன்னத்திலே ஒரு அறை அறையப்போகின்றேன் என்று ஆரோ ஒருவன் சொன்னாலும் நல்லது என்பார். நல்லதைவிட வேறொரு சொல் அவர் நாவிலே வராது. "ஒருவன் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உனது மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு" என்னும் கிறிஸ்து நாதர் வாக்குக்கு அவர் இலக்கியமானவர். சம்பளம் பெறாமல் கௌரவ அதிபராகக் கல்விப் பணி புரிவதற்கு முன்வந்த தியாகி அவர்.

கனம் ஆர்.என்.சேதுகாவலர் அவர்கள் அதிபராய் வந்தது எனது ஆங்கிலப் படிப்பில் என்னை ஒருபடி உயர்த்தி விட்டது. அந்தப் பெருந்தகையாருக்கு எனது பணிவான நினைவு வணக்கம். சேது காவலரின் சந்ததியார் தங்கள் கலாசார பாரம்பரியத்தை மட்டக்களப்பிலும், ஈழநன்னாட்டிலும் நிலைநாட்டி வளர்த்துவருவது இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு நாளும் பாடசாலை முடிந்ததும் நான் ஆறாம் வகுப்புக்குரிய அத்தனை புத்தகங்களுடனும் சேதுகாவலரின் வீட்டுக்குச் சென்று அவரது பாதத்தண்டையில் அமர்ந்து கொள்வேன். இது சந்திர சேகர உபாத்தியாயரிடம் நான் நடந்து பழகிய பழைய தமிழ்ப் பழக்கம். சந்திரசேகர உபாத்தியாயரிடம் தமிழை எழுத்தெண்ணிப் படித்த நான்,

அதே முறையில் ஆங்கிலத்தை எழுத்தெண்ணிப் படிக்கும் பழக்கத்தை அதிபர் சேதுகாவலரிடமும் அனுசரித்துக் கொண்டேன்.

பாட புத்தகங்களிலே தெரியாத சொல் ஒன்றுமில்லையென்று சொல்லுமளவுக்கு அவரிடம் படித்துப் பொருளையும் தெரிந்து கொள்வேன். வருடம் முழுவதும் நாளுக்குநாள் என்மீது அதிபருக்கு அனுதாபம் அதிகரித்தது.

1915ஆம் ஆண்டுக் கடைசி வந்தது. ஆறாம் வகுப்புப் பரீட்சை. வித்தியாதரிசி திரு.எஸ்.ரீ.தில்லைநாயகம் அவர்கள் பரீட்சகர். ஆங்கில வாசிப்புப் பரீட்சை ஆரம்பம். ஆளைப் பார்த்த அதிர்ச்சி ஒருபுறம். ஆங்கிலப் பாட்டைப்பற்றிய அச்சம் ஒருபுறம். முந்தியே உடன் மாணவர்கள் இதுபற்றிக் கூறிய எச்சரிக்கை ஒருபுறம்.

முதல் வரிசையில் நாங்கள் ஐந்துபேர் நிற்கிறோம். நான் நாலாமாள். ஆங்கில வாசிப்புக்கு முன்னோடியாகப் பரீட்சகர் தெரிந்து கொள்ளும் ஓர் ஆங்கிலப்பாட்டை வாய்ப்பாடமாகச் சொல்லவேண்டும். சரியாய்ச் சொல்லாவிட்டால் வாசிப்பில் "முட்டை" கிடைக்கும். பாட்டுத் தொடங்கி விட்டது. முதல் மாணவன் திருக்கோயில் வே. தங்கராசா. கணீரென்று பாடிவிட்டான். எனக்கோ நடுக்கம்.

பரீட்சகர் பாட்டுக் கேட்பதை நிறுத்திக் கொண்டு வினாவொன்றைத் தொடங்கி விட்டார். அது பாட்டிலுள்ள ஒரு சொல்லுக்குத் தமிழ்க் கருத்து சேதுகாவலரிடம் ஆங்கிலச் சொற்களை எழுத்தெண்ணிப் படித்துப் பொருளும் தெரிந்து கொண்ட நான், என்னுள்ளே அங்கலாய்த்து நிற்கின்றேன். என்னைக் கேட்டாலோ என்னும் அங்கலாய்ப்பு. முதல் மூன்று பேரும் மறுமொழி சொல்லத் தவறிவிட்டார்கள். எனது ஆசை நிறைவேறப்போகிறது. வினா என்னை வந்து சேர்ந்ததும் "அரிதாக" என்று விரைவாக விடையிறுத்தேன். குறித்த சொல் 'SCARCELY" என்பது. இந்தச் சொல் எனது நினைவிலிருக்கும்வரை சேதுகாவலரும் உடனிருப்பார். அன்னார் எனது ஆங்கிலச் செல்வம்.

பரீட்சகர் அடுத்தாற்போல் என்னைக் கேட்கிறார், உமது பெயரென்ன? பெரியதம்பி என்று அடக்கமாகச் சொன்னேன். ஆளும் பெரியாள், பேரும் பெரியதம்பி; வகுப்பிலும் முதலாள் என்று பாராட்டிக் கொண்டே ஆங்கில வாசிப்புக்குப் புள்ளடி போட்டுவிட்டார் பரீட்சகர்.

அறுபது ஆண்டுகளின் பின் அன்னாருக்கு நினைவு அஞ்சலி செலுத்துகின்றேன். நம்பிக்கையும் நன்றியுமாகிய இரு கால்களால்

வாழ்க்கைப் பாதையில் நான் நடந்து கொண்டிருப்பதால் இப்படிச் சொல்வது எனக்கு அவசியமாகும்.

இக்காலப்பகுதியில் இடையிடையே ஆசிரியப்பணி புரியுமாறும் எனக்குப் பணிப்புரைகள் வழங்கலாயின. 7ஆம், 8ஆம், 9ஆம் வகுப்புகளில் தமிழ்ப் பாடமெடுக்கும் ஆசிரியர்கள் வராதபோதெல்லாம் அந்தத் தமிழ்ப்பணி என்மீது சுமத்தப்படும் ஒரு வழக்கமும் உண்டாயிற்று. ஆங்கிலத்தில் ஓரெழுத்தும் தெரியாத நிலையில் சிறுவர் சிறுமியரின் நகைப்பிலே அகப்பட்டுக் கிடந்த நான் ஆசிரியனாகவும் மாறிவிட்டேன். இது சந்திரசேகரனாரின் ஆசீர்வாதம்.

அன்று தொடக்கம் இன்றுவரை நல்லோரின் ஆசீர்வாதமே என்னை ஆளாக்கி வருகின்றது. சர்வதேச அரங்கிலே ஜவஹர்லால் நேருவை உயர்த்தி வைத்தது காந்தி மகானின் ஆசீர்வாதமென்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். ஆசீர்வாதம் பலப்பரீட்சையால் வருவதன்று. பக்தி சிரத்தையால் வருவது. நல்லோரின் வெகுளுரை நம்மைச் சுடும்.

இந்தச் சந்தர்ப்பத்திலே அவசியமில்லாத ஒரு சம்பவத்தைச் சொல்வது அவசியமாயிற்று. கல்முனையிலே எனது பக்கத்து வீட்டில் ஒரு நாய் குட்டி போட்டிருந்தது. கொடித் தடக்குள்ள ஓர் ஆண் குட்டியை நான் தெரிந்து கொண்டேன். பின்னங்கால்களிலே ஐந்து விரல்கள் இருந்தால் ஒருவிரல் தனித்திருக்கும். நாலு விரலும் கூட்டாயிருக்கும். தனி விரலைக் கொடித்தடக்கு என்பார்கள். இது அமைவது அபூர்வம். இது நாய்க்கு உத்தம லட்சணம். மண்டூரில் வீட்டில் வைத்து இதை வளர்த்து வந்தோம். வளர்ந்து பெரிதாயிற்று.

வீட்டில் என்னிடம் ஒரு துவக்கும் இருந்தது. ஒருநாள் சில தோழர்களுடன் வேட்டைக்குச் சென்றேன். நாயும் உடன் வந்தது. காட்டிற் புகுந்ததும் வேட்டை குறுகியது. ஒரு மான் அகப்பட்டது. மானிறைச்சியுடன் பொழுதுபட வீட்டுக்கு வந்தேன். இது அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. நாய் வளர்ப்பது வீட்டுக்காவலுக்கு; வேட்டையாடுவதற்கல்ல. மூன்று நாளைக்குள் இந்த நாயைப் பன்றி வெட்டும் அல்லது முதலை பிடிக்கும் என வெகுண்டு கூறிவிட்டார்.

மூன்று நாள் செல்லவில்லை. என்னுடன் புகையிலைத் தோட்டத் துக்கு வந்த நாய் குரங்குகளைக் கலைத்தது. குரங்குகள் ஆற்றில் பாய்ந்தன. துரத்திக்கொண்டு நாயும் பாய்ந்தது. வருகிறது முதலை தனது திறந்த வாய்க்குள் நாயை வைத்து மூடிக்கொண்டு மறைந்து

போயிற்று. ஆறாத் துயருடன் வீடுவந்து சேர்ந்து ஆருமறியாதபடி பேசாமல் படுத்துக்கொண்டேன்.

தந்தையாரின் வாக்குச் சித்திக்கும், பெரியோரின் வெகுளியுரை தப்பாமற் சுடும் என்பதற்கும் சாட்சியாக இச்சிறு சம்பவத்தைச் சொன்னேன். இதிலடங்கிய பெரிய உண்மை நமக்குப் பாடமாகட்டும். பெரியோரின் வெகுளுரை யையல்ல; அருளுரையைப் பெற்று இனிது வாழ்வோம்.

1916ஆம் ஆண்டில் ஆங்கிலம் ஏழாம் வகுப்புப் பிரவேசம். திரு.எஸ்.கே.பொன்னையா என்பவர் எங்கள் வகுப்பாசிரியர். அவர் துடிப்புள்ள ஓர் இளைஞர். புதிய போக்குள்ளவர். நன்றாய் ஆயத்தம் செய்து வந்து கற்பிப்பார். கணிதம், ஆங்கிலம் இரண்டிலும் விசேட திறமையுள்ளவர்.

பாடசாலை இப்போது எனது வீடு போலாயிற்று. பாடசாலை உள்ளலுவல்களிலே எனக்கு முதன்மையும் செல்வாக்கும் கிடைத்தது. வகுப்பில் நல்ல முன்னேற்றம் காணலானேன். வெளியலுவல்களிலும் அதிகம் பங்குகொண்டேன். பள்ளிக்கூடம் தயாரிக்கும் நாடகங்களிலே பிரதம பாத்திரம் தாங்கி நடிப்பதில் எனக்குப் பேரும் புகழும் உண்டாயிற்று.

எனினும், எனது சாதகமான சுயமுயற்சிகளின் பின்னணியிலே மறைமுகமாக ஏதோ ஒரு சக்தி பாதகமாகச் செயற்பட்டுக் கொண்டே இருக்கிறது. எனது திடபுத்தியினால் நானும் அதை முறியடித்துக் கொண்டே வருகிறேன். இடையீடு வருவதும், அது இடையூறின்றிக் கழிந்துபோவதும் வாழ்க்கையிலே வழக்கமாய் விட்டது. வருவது வரும். நிற்பது நிற்கும். போவது போகும். நாம் அசையாது நின்றுபிடிப்போம். வரப்போகிறது அடுத்த பிரளயம்.

# மட்டக்களப்புக் கண்ட மாபெரும் இயக்கம்

நாம் ஒன்று நினைக்க நமது அதிட்டம் வேறொன்றாய்ப் போகிறது. அதிட்டம் என்பது திருட்டிக்கு அப்பாற்பட்டது. திருட்டி பார்வை. அதிட்டம் இன்பமாயுமிருக்கும், துன்பமாயுமிருக்கும். இன்பத்தை மாத்திரம் அதிட்டம் என்பது எனது கொள்கையல்ல.

இதோ வந்துவிட்டது அடுத்த இடையீடு. வெளிநாட்டுச் சுற்றுலா முடிந்துவிட்டதோ? தாய் நாடாகிய பரமபதத்துக்கு மீண்டும் செல்லவேண்டிய கால எல்லை வந்துவிட்டதோ? என்னும் அளவுக்கு வந்தது வாதநோய். அது எங்கேயோ வெளியிலிருந்து வரவில்லை. உள்ளேதான் இருந்து வந்தது. சுகம் மனத்தின் குணம். நோய் உடம்பின் குணம் என்பதை அது காட்டிவிட்டது. இது எனது முதலனுபவம்; 1916 நடுப்பகுதியில்.

ஆயுள்வேத வயித்தியம் நடக்கிறது. ஆறு மாதப் படுக்கை. கங்காள ரூபம். காலம் நீண்டு போகிறது. நம்பிக்கையில்லை. ஆருக்கு? எனக்கல்ல; மற்றவர்களுக்கு.

**'நாலு வயித்தியரும் - இனி**
**நம்புதற் கில்லையென்றார்**
**பாலத்து ஜோசியனும் - கிரகம்**
**படுத்து விட்டதென்றான்"**

என்றதுபோன்ற நிலை. நான் மாத்திரம் நம்பிக்கை இழக்கவில்லை. தந்தையாரைப் பார்த்துச் சொன்னேன். "நான் சாகப் பயப்படவில்லை. என்னை ஆங்கில வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுங்கள். நான் செத்தாலும் அங்கே சாகிறேன்." கண்கலங்க இதனைச் சொன்னேன். ஏதோ வீண்பழி வந்தாலும் என்றெண்ணி என்னைக் கதிரையில் வைத்துக் காவிக்கொண்டு கல்முனை அரசினர் வைத்தியசாலையில் வைத்தார்கள்.

அங்கே மறக்கமுடியாத ஒரு அன்பர் வந்து என்னை நோக்கினார். தாயினும் தயவுடைய அந்த வைத்தியர் பார்த்த பார்வையிலேயே நோயை அறிந்து கொண்டார் போலும். பயப்படாதேயென்ற ஒரு வார்த்தையுடன் அவர் போய்விட்டார். அவரது வார்த்தையில் அரைவாசி வருத்தம் சுகமானது போலாயிற்று.

பின்பு காலையும் மாலையும் வந்து கவனமாய்ப் பார்ப்பார். ஆறு மாதம் படுத்திருந்த நான் அவரது சிகிச்சை முறையால் இருபத்திரண்டாம் நாள் கயிற்றிலே பிடித்துக் கொண்டு நடந்து பழகும் நிலையை அடைந்தேன். படிப்படியாக நோய் குணமாயிற்று. ஒரு கண்டம் கழிந்தது. மறுபிறப்படைந்து வீடு போய்ச் சேர்ந்தேன்.

நோய்க்கு மருந்து செய்ய முன்பு நோயாளிக்கு மருந்து செய்யும் உத்தம வைத்தியர் அவர். தம்மை வைத்திய அதிகாரியென்று நினையாமல் நோயாளியின் தாய் என்று நினைக்கும் மனம் கொண்டவர். கல்முனை டாக்டர் எஸ்.ரீ.கந்தையா அவர்கள் இன்றும் என் கண்முன்னே நிற்கின்றார். அவர் ஒரு உத்தம கிறிஸ்தவர்.

எல்லாமாகப் பத்து மாதங்கள் கழிந்துவிட்டன. ஆங்கிலப் படிப்பிலுள்ள ஆர்வமும் படிப்படியாகக் குறைந்து போகிறது. நோய் நீங்கிய போதிலும் உடலெடுக்க நாட்செல்லும். ஒல்லியாய் விட்டேன். மெலிந்த கோலத்துடன் வெளியே செல்ல வெட்கம் பள்ளிக்கூடம் போவதைத் தற்காலிகமாக நிறுத்தியிருந்த நான் அதை முற்றாக நிறுத்திக் கொண்டேன். ஆங்கிலக் கதவும் அடியோடு அடைபட்டு விட்டது.

நியாயமான அளவு தமிழும், நியாயமான அளவு ஆங்கிலமும் அறிந்த நிலையில் வீட்டிலே முடங்கிக் கிடந்தேன். குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், தண்டலையார் சதகம், திருவாசகம் முதலியவற்றைப் படிப்பதிலே பொழுது போய்க்கொண்டிருந்தது.

சும்மா வீட்டிற் கிடவாமல் ஒரு “கிளாக்கு” வேலையிற் சேர்ந்திருக்கலாம். சேர்வதும் இலேசு. சேர்ந்திருந்தால், ஒரு கச்சேரி ஓ.ஏ. (O.A) ஆக உயர்ந்து நல்ல சம்பளமும், கைநிறைய ஓய்வூதியமும் பெற்றுச் சொகுசாக வாழ்ந்திருக்கலாம். எனக்கு அந்தப் புத்தி வரவில்லை. என்னுடன் படித்தவர் சிலர் அந்தப் புத்தியால் கிளாக்காகச் சேர்ந்து உழைத்து உயர்ந்து மறைந்து போனார்கள். ஏதோ பெரியகாரியம் என்னைக் காத்திருக்கிறது போலும். இந்நிலையிலே கால் நடையாகக் கதிர்காம யாத்திரையும் செய்து திரும்பி வந்தேன்.

இந்தக் காலப்பகுதியிலே மட்டக்களப்பு முழுவதிலும் ஒரு பேரியக்கம் நடந்து கொண்டிருந்தது. நமது பிள்ளைகள் இருக்கவேண்டிய இடத்தில் இருக்க வேண்டுமென்பதுதான் அந்த இயக்கத்தின் நோக்கம்.

சுவாமி விவேகானந்தரின் அமெரிக்க சிஷ்யைகளுள் ஒருவரான சகோதரி அவபாமியா அம்மையார் மட்டக்களப்பக்கு விஜயம் செய்து கிராமங்கள் தோறும் இந்துசமயப் பிரசாரம் செய்தமையால் நாடெங்கிலும் ஓர் எழுச்சியுண்டாயிற்று. இந்த எழுச்சியின் பயனாகவேதான் மேற்குறிப்பிட்ட பேரியக்கம் தோன்றியது. 1914ஆம் ஆண்டு தொடக்கம் 36ஆம் ஆண்டு வரையும் இவ்வியக்கம் நடைபெற்றது.

சைவப் பிள்ளைகளெல்லாரும் சைவப் பள்ளிக்கூடத்திற் படிக்கவேண்டும். தேவையான பள்ளிக்கூடங்களை ஊரெங்கும் நாமே கட்டுவோம் என்று பெரியோரும், இளைஞர்களும் துள்ளியெழுந்து தமது தோள்களால் மரம் தடிகளைச் சுமக்கிறார்கள். கட்டடங்கள் எழும்புகின்றன. முந்தியே இவ்வியக்கத்தில் விடுமுறை காலங்களில் இடையிடையே கலந்துகொண்ட நான் இப்போது முழுநேரத் தொண்டனாகிவிட்டேன்.

எங்கள் நோக்கம் நல்ல நோக்கம். இதுவரையும் நமது காரியங் களை நமக்காகப் பிறர் செய்ததுபோதும். இனி நமது அலுவல்களை நாமே பார்ப்போம் என்பதுதான் எங்கள் குறிக்கோள். இதைப் பிழையாக விளங்கிக்கொண்ட சிலர் எங்கள் இயக்கம் கிறிஸ்தவர்களுக்கு எதிரானது, மிஷனரிமாருக்குத் துரோகம் பண்ணுவது என வீண்பழி தூற்றலாயினர்.

அராசங்க உயர்மட்ட அதிகாரிகள் சிலரின் செல்வாக்கைக் கொண்டு எங்கள் இயக்கத்தை நசுக்கவும் முயன்றனர். இது பலிக்கவில்லை. எனினும் மிஷனரிமாரைப் பற்றிய நல்லெண்ணம் என் மனதில் இருந்து கொண்டேயிருந்தது. இது 1921ஆம் ஆண்டில் ஒரு செய்யுளாகப் பரிணமித்துள்ளதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

**'உடல்பொருள் ஆவி மூன்றையும் நமக்காய்**
**உதவிட உளந்தனில் உன்னிக்**
**கடல்பல கடந்து தேசத்தை விடுத்துக்**
**கதித்திடு சுதந்திரம் விடுத்துப்**
**படலரும் பெரிய பாடுகள் பட்டுப்**
**பணிக்கெனத் தம்மையர்ப் பணித்த**
**திடமுள மனத்து மிஷனரி மாரின்**
**செய்ந்நன்றி காத்தல் நம்கடனே"**

இச்செய்யுள் "கிறிஸ்தவ சபை துயிலுணர்ச்சி" என்னும் எனது நூலிலுள்ளது. இந்நூல் நாற்பத்தைந்து விருத்தங்களால் ஆகியது. 1921ஆம் ஆண்டில் மதுரையில் அரங்கேறியது. நூல் கைவசமில்லை.

இனி எங்கள் இயக்கத்துக்கு வருகின்றேன். இந்த இயக்கத்தினால் நாடெங்கும் சைவ மணம் கமழ்ந்தது ஒருபுறம். மட்டக்களப்பும் யாழ்ப்பாண மும் இரண்டறக் கலந்தது ஒருபுறம். "நமது பிள்ளைகள் இருக்கவேண்டிய இடத்தில் இருக்க வேண்டும்" என்று கோஷமெழுப்பிய எங்களைக் கைதூக்கியாண்ட பல பெரியார்களை இங்கே நினைவு கூருகின்றேன்.

இவர்களுள்ளே, முதலியார் கா.வ.மார்க்கண்டன், குருநாதபிள்ளை கனகசபை, கந்தப்பர் முத்தையா ஜே.பி, வித்துவான் ச. பூபாலப்பிள்ளை, பண்டிதர் சாமிதாச, மயில்வாகனனார், வித்துவான் அ. சரவணமுத்தன், தேசிகமணி அருணாசலம், வித்துவான் பொ. வைத்தியலிங்க தேசிகர், பொ. ஆறுமுகசாமி என்போர் இந்நாட்டைத் தாயகமாகக் கொண்ட தவப் புதல்வர்களாவர்.

அருளம்பலச் சுவாமியார், காணிப் பதிவுக் கந்தோர் அதிபர்; வட்டுக்கோட்டை க. வயித்திலிங்கம் பி.ஏ. இதே பதவி வகித்தவர்: வண்ணார் பண்ணை தம்பி பஞ்சாட்சரம், தெல்லிப்பளை பொ. அம்பலவாணர், மல்லாகம் மாணிக்கம், இவர்கள் மூவரும் மட்டக்களப்புக் கச்சேரி உயர் அதிகாரிகள்; சுளிபுரம் ஐக்கியச் செல்லப்பா, இவர் பொலீஸ் கந்தோர் பிரதம லிகிதர்; களுவாஞ்சிகுடி பொன்னம்பலச் சக்கடத்தார் என்போர் யாழ்ப்பாணத்துப் பெருமக்களாவர். நினைவில் வராத இன்னும் சிலர் இங்கே குறிப்பிட முடியாமற் போனமைக்கு வருந்துகின்றேன்.

சனி, ஞாயிறு, வேறு விடுமுறை நாட்கள் வந்துவிட்டால் எங்கள் வீடு பெரிய விழாக்கோலம் பூண்டுவிடும். இவர்களெல்லாரும் எங்கள் வீட்டில் வந்து கூடிவிடுவார்கள். நெல் மலைகள் உள்ள ஊர். விருந்துபசாரத்துக்குக் குறைவில்லை. நாயன்மார் காலம் வந்துவிட்டதோ?

நிகழ்ச்சி நிரலின்படி போகவேண்டிய ஊர்களுக்குப் போய் மக்களை உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி அஞ்ச வேண்டாம் என அபயமளித்துச் செல்வார்கள். இந்த இயக்கத்தின் பயனாகப் பல பெரியார்களைச் சந்தித்து அவர்களுக்குச் சேவை செய்யும் பழக்கமும் எனக்கு வாய்த்தது. பெரியோரின் ஆசியும் கிடைத்தது.

# இருளின் மத்தியில் ஒளி பிறந்தது: மட்டுவில் எனக்கு மண்டூராயிற்று.

கதிர்காம யாத்திரை செய்து திரும்பி வந்தபின் எனக்கு ஒரு புதிய நம்பிக்கை பிறந்தது. எல்லாருடைய வாழ்க்கைப் பாதையிலும் மேடுபள்ளம் இல்லாமலில்லை. மேடு பள்ளங்களில் ஏறி இறங்குவதுதான் வாழ்க்கை. மேலோர் கீழோராகின்றார்; கீழோர் மேலோராகின்றார். இந்த நியதிக்கு நாம் மாத்திரம் புறம்பல்ல. காலம்வரும். ஆரோ ஒருவர் தூக்கி விடுவார். நிவாரணம் கிடைக்கும். இறங்கிய பள்ளத்திலிருந்து கரையே றலாம் என்னும் திடபுத்தியுடன் இருந்துவந்தேன்.

1917ஆம் ஆண்டு நடுப்பகுதி. வந்தது வழக்கம்போல ஆவணித் திருவிழா. ஒருநாள் காலை மெலிந்த தோற்றமுடைய உயரமான இளைஞர் ஒருவர் எங்கள் வீட்டுக்கு வருகை தந்தார். அவர் ஒரு புத்தக வியாபாரி. யாழ்ப்பாணம் மட்டுவில் வடக்கைச் சேர்ந்தவர். பெயர் செ.தம்பிமுத்துப்பிள்ளை. மென்மையான தோற்றமுடைய அவர் எங்களுடன் இனிமையாகப் பழகிக்கொண்டார். அவருக்கு உணவும், விடுதியும் எங்கள் வீட்டிலேயே. அவர் எங்கள் குடும்பத்தவர் போல் ஆகிவிட்டார்.

எனது நிலைமையினை நேரிலும் தந்தையார் வாயிலாகவும் அறிந்துகொண்ட தம்பிமுத்துப்பிள்ளை ஒருநாள் என்னைப் பார்த்து, மட்டுவில்லில் பண்டிதர் மகாலிங்கசிவம் இருக்கிறார். அவர் மூலமாக யாழ்ப்பாணத்திலே தமிழ்ப் படிக்க உமக்கு வசதி செய்து தருவார்கள். கல்வி நன்கொடையும் தருவார்கள். ஒன்றும் யோசிக்கவேண்டாம் என்று உறுதியாகச் சொன்னார். இருளின் மத்தியிலே ஒளி பிறந்தது. திருவிழா முடிந்து. தம்பிமுத்துப்பிள்ளையும் போய்விட்டார். இரண்டொரு வாரத்தில் யாழ்ப்பாணமிருந்து ஒரு கடிதம் வருகிறது. பண்டிதர் மகாலிங்கசிவத்தின் கடிதம். தம்பிமுத்துப்பிள்ளை சொன்னபடி எல்லாம் செய்திருக்கிறோம். உடனே யாழ்ப்பாணம் புறப்படுக. இதுதான் கடிதத்தின் சாரம்.

ஒரு புதுயுகம் பிறந்துவிட்டது புதிய வழி. புதிய இடம். புதிய அனுபவம். அடைபட்ட தமிழ்க்கதவு மீண்டும் திறந்தது. இடையீடுகள்

இடையூறின்றிக் கழிந்துபோகின்ற இரகசியந்தான் யாதோ? இதை யார் செய்து கொண்டிருக்கிறாரோ?

ஆவணி மாதம் முடிய யாழ்ப்பாணம் பயணம். அதுவும் தனிப் பயணம். தந்தையார் முதலிய பெரியோரின் ஆசியும், சிறிய தந்தையார் வ.பத்தக்குட்டி ஆசிரியரின் கடிதமும் துணையாகப் புறப்படுகிறேன். அந்தக்காலம் மட்டக்களப்பில் பஸ் வண்டியுமில்லை, புகைவண்டியுமில்லை. மட்டக்களப்பு முகத்துவாரத் துறைமுகத்திலிருந்து பாய்க் கப்பலில் அல்லது புகைக்கப்பலில் பயணம் பண்ணவேண்டும்.

மார்க்கண்டு முதலாளிக்குச் சொந்தமான சின்னப் பருவதம், பெரிய பருவதம் என்னும் பாய்க்கப்பல்களும், லேடிமக்கலம், லேடிவிளேக் என்னும் புகைக்கப்பல்களும் இலங்கையைச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தது ஞாபகம்.

ஒரு குறிப்பிட்ட நன்னாளில் முகத்துவாரத்திலிருந்து இரவு எட்டு மணிக்கு லேடிமக்கலம் மூலமாகப் புறப்பட்டேன். விடிய ஐந்து மணியளவில் கப்பல் திருகோணமலையை அடைந்தது. திருகோணமலையில் கடல் கிழக்குப்புறம். துறைமுகம் மேற்குப்புறம். "ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்" மனம்போல் அமைதி கொண்டிருந்தது இந்த இயற்கைத் துறைமுகம். இது எனது வாழ்க்கையில் ஒரு புது அனுபவம்.

கரையிலே என்னைக் காத்துக்கொண்டிருந்தார் திரு.கோபாலபிள்ளை ஆசிரியர். சிறிய தந்தையார் பத்தக்குட்டி ஆசிரியர் கொடுத்த தந்தித் தகவலால் இந்தப் புது அறிமுகம் கிடைத்தது. அன்று அன்னாரின் விருந்தாளியாய் இருந்துவிட்டு இரவு எட்டு மணிக்குக் கப்பலேறினேன். விடிய ஐந்து மணிக்குக் கப்பல் பருத்தித்துறை சேர்ந்தது. கரைக்கு வந்ததும் இரண்டு புதுமுகத்தினர் என்னை அடையாளம் கண்டுகொண்டு அணுகிவந்து தம்மை அறிமுகஞ் செய்துகொண்டார்கள்.

ஒருவர் பண்டிதர் மகாலிங்கசிவத்தின் தம்பி நடராசா; மற்றவர் சி.கணபதிப்பிள்ளை. நடராசா பிற்காலத்தில் பி.எஸ்.ஸி. பட்டதாரியாகிக் கலாசாலை அதிபராயிருந்து அண்மையிற் காலமாகிவிட்டார். சி.கணபதிப் பிள்ளை பிற்காலத்தில் பண்டித மணியாய், இன்று பல்கலைக்கழகத்து இலக்கிய கலாநிதியாய் எண்பது கண்டு இனிது வாழ்கின்றார். நாங்கள் மூவரும் காலைச் சாப்பாடு சாப்பிட்டு மோரும் பருகிக் கொண்டு மாட்டு வண்டியில் புறப்பட்டோம்.

சாவகச்சேரி பதின்மூன்று கட்டை. அங்கிருந்து மட்டுவில் மூன்று

கட்டையென நினைக்கின்றேன். மட்டுவில் வடக்கைச் சேர்ந்ததும் அங்கே முதல் முதல் மகாலிங்கசிவத்தின் இனிய முகமலர்ச்சி எனக்கு நல்விருந்தா யிற்று. தம்பிமுத்துப்பிள்ளையும் தரிசனம் தந்தார். இங்கே மட்டுவில் வடக்கைப் பற்றிச் சிறிது சொல்லவேண்டும்.

உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளையவர்கள் பிறந்த திருவுடைய சீரூர் இதுவாகும். அன்னார் நாவலர் ஐயாவின் நன்மாணாக்கர்; சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமைத் தமிழாசிரியர்; வித்துவான் ந.சுப்பையாபிள்ளையின் நல்லாசிரியர்; சிறந்த கவிப்புலவர். அற்புத சக்திவாய்ந்த பன்றித் தலைச்சியம்மன் கோயில் இங்குள்ளது. இது கண்ணகி கோயில். மட்டக்களப்பில் அடைத்த தமிழ்க் கதவை யாழ்ப்பா ணத்திலே எனக்குத் திறந்துவிட்ட இந்த இனிய ஊரை என்னால் மறக்கமுடியாது. மட்டுவில் எனக்கு மண்டூர்போலாயிற்று.

மட்டுவில் உபசாரத்தில் மயங்கிவிட்டேன். மகாலிங்க சிவத்தின் இனிய தமிழ் விருந்தில் மெய்மறந்துபோனேன். வானரவீரர் மதுவனத்திற் பெற்ற அனுபவம்போன்ற அனுபவம் எனக்கும் கிடைத்தது. அது தேன்சுவை. இது தமிழ்த் தேன்சுவை. ஒன்றை மறந்திற்றேன். அதுதான் கொண்டுவந்த கடிதம்.

இரண்டொரு நாள் மட்டுவில்லில் இருந்து, பயணம் பண்ணிய இளைப்பைத் தீர்த்துக்கொண்டு நடராசாவுடன் சாவகச்சேரிக்கு வந்தேன். அங்கிருந்து புகையிரதத்திற் புறப்பட்டு யாழ்ப்பாண நன்னகரை அடைந்தோம். இடம் விசாரித்துக் கொண்டு குருநகருக்கு அண்மையிலுள்ள மரகதமடம் (Emerald Inn) என்னும் இல்லத்தைக் கண்டுபிடித்தோம்.

உள்ளேயிருந்த இளைஞர் என்னிலும் ஏழாண்டு மூத்தவர் “வருக வருக” என்று இனிய தமிழில் எங்களை வரவேற்றார். கடிதத்தைக் கொடுத்தேன். அவரை மட்டக்களப்பிலே முன்பு கண்டதன்றிக் கதைத்துப் பழகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. கடிதத்தைப் பார்த்தவர் நடராசாவை யும் ஆரெனத் தெரிந்துகொண்டு இன்முகம் காட்டி இனிதுரையாடிய பின் நடராசாவை அனுப்பிவிட்டார். நான் அன்னாரின் விருந்தாளியானேன். இது நடந்தது ஒரு சாயந்தரம். அன்றிரவு சாப்பாடு முடிந்தபின் அவர் ஒரு புகையிலைச் சுருட்டை மூட்டிக்கொண்டு எனக்கும் ஒன்றை நீட்டினார். நான் புகைக்கும் வழக்கம் இல்லையென்றதும் அதைத் தம்முடன் வைத்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சியை எனக்குக் கடிதம் தந்த சிறிய தந்தையாருக்கும் எழுதிவிட்டார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து என்மீது அரும்பிய பண்டித மயில்வாக னனாரின் அன்பு அவர் துறவியான பின்பு அருளாக மலர்ந்துள்ளதை நினைந்து நினைந்து உள்ளம் உருகி நிற்கின்றேன். அடுத்தநாள் ஒரு துணையுடன் என்னை மட்டுவில்லுக்கு வழியனுப்பிவைத்தார்.

இனித்தான் வந்த காரியம் பார்க்கவேண்டும். நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே காவிய பாடசாலைப் பிரவேசம் காத்திருக்கிறது. எனக்கு முந்தியே மட்டக்களப்பிலிருந்துபோய் நாவலர் காவிய பாடசாலையில் முறையாகக் கற்றுத்தேறிய பேரறிஞர் ஒருவர் நம்மிடையே வாழ்ந்து மறைந்துபோயினார். மட்டக்களப்பின் பெயரை யாழ்ப்பாணத்தில் உயர்த்திவைத்த மகாமேதை தாமரைக்கேணி சி.குமாரசுவாமி ஐயரை இங்கே நினைவு கூருகின்றேன்.

# ஒரே மரத்தின் இரண்டு கிளைகளில் ஒருமிக்கப் பழுத்த இரண்டு பழங்கள்

1917ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஒரு நல்லநாள் விஜய தசமியா யிருக்கலாம் என்பது ஞாபகம். அன்பன் வே. நடராசா என்னை வண்ணார் பண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு அழைத்துச்சென்றார். அன்று அங்கே விசேட நிகழ்ச்சிகள். மண்டபத்துள் இரண்டு கலைக்கோயில் போன்ற வடிவங்கள். ஒன்று கருமலை. மற்றது செம்மலை.

நடமாடும் பல்கலைக்கழகம் போன்ற சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் ஐயா அவர்களும், பல்கலைக்கழக நூல் நிலையம் போன்ற த.கைலாசபிள்ளை மனேஜர் ஐயா அவர்களும் ஒருவர்க்கொருவர் எதிர் முகமாக வீற்றிருக்கின்றார்கள். த.கை. அவர்கள் நாவலர் பெருமானின் சிறிய தந்தையார் புதல்வராவர்.

இரு பெரியார் முன்னிலையிலும் என்னை நிறுத்தி விட்டு மனேஜரை அணுகி என்னைச் சுட்டிக்காட்டி, “இவர் மட்டக்களப்பிலிருந்து வந்திருக்கிறார். காவியப் பாடசாலையிற் படிக்க அனுமதி கோருகிறார். அண்ணர் மகாலிங்க சிவத்தின் சொற்படி இவரை இங்கு அழைத்துவந்தேன். மட்டுவில்லில் எங்களோடுதான் தங்கியிருக்கிறார்” என்று என்னை அறிமுகஞ் செய்துவைத்தார் நடராசா.

நடராசா நாவலர் பரம்பரை. மஜேனருக்குச் சொந்தமானவர். நடராசாவின் சொல்லை மனேஜர் ஏற்றுக்கொண்டு, என்னைப் பரீட்சித்துப் பார்க்கும்படி புலவர் ஐயாவைக் கேட்டுக்கொண்டார். வில்லிபாரதத்தைத் தந்து சில செய்யுள்களை இராகத்துடன் படிக்கும்படி புலவர் ஐயா சொன்ன போது அப்படியே படித்துக் காட்டினேன். பாடசாலையிற் சேர்த்துக் கொண்டார்கள். நாவலர் நிதியிலிருந்து கல்வி நன்கொடையும் கிடைத்தது.

காவிய பாடசாலையில் ஒரு வருடத்துக்கு முந்தியே சேர்ந்த பதினொரு மாணவர்கள் இருந்தார்கள். அதிகம் பெயர்களை மறந்து

போனேன். அறுபது ஆண்டுகளுக்கு முந்திய சங்கதி. தனங்கிளப்பு சி.கணபதிப்பிள்ளை, மீசாலை பெரியதோட்டம் க.குமாரசாமி, வட்டுக்கோட்டை க.குருமூர்த்தி ஐயர், மருதையனார், அருளம்பலம் என்னும் பெயர்கள் மட்டுமே நினைவிலிருக்கின்றன.

நாவலவன் எச்சிலெனும் நறுந்தமிழை நான் நுகர நயப்புக்காட்டும் பாவலன் மகாலிங்கசிவத்தை அன்னார் மறைந்தபோது நான் பாடிய பாடல்களுள் ஒரு பாடலைக் கூறி இங்கே நினைவு கூருகின்றேன்.

**'மட்டுவிலாம் பூங்கொடியில் மலர்ந்தமலர்**
**சாதிமலர் மலர்கள் தாழ**
**மட்டவிழ்ந்து மணம்கமழ்ந்து வயங்குமலர்**
**மாணவராம் வண்டு சூழ்ந்து**
**தொட்டருந்தும் இனியமலர் மகாலிங்க**
**சிவமலர்தன் தொடர்பாம் பாசக்**
**கட்டறுந்து கருணைமலர் சிவபெருமான்**
**கழல் மலர்க்கீழ்க் கலந்ததன்னே"**

இப்படிப் பதினைந்து பாடல்கள். இப்பாடல்கள் காலஞ் சென்ற முகாந்திரம் தி.சதாசிவஐயரின் அளவெட்டி வீட்டில் இருக்கலாம். ஐயரவர்கள் வித்தியா பகுதியில் இலங்கை முழுவதற்கும் தமிழ் மேற்பார்வையாளராகச் சேவை செய்தவர்.

நாவலர் பாடசாலை ஒரு தனித்தன்மை வாய்ந்ததாபனம். அமாவாசை, பூரணை நாட்களில் விடுமுறை. ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூட நாள். இடாப்படையாளமும் உண்டு. இது அரசினர் நன்கொடை பெறும் பாடசாலையென்பதை வாசகர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போயா விடுமுறை நமக்குப் புதிதல்ல. இது நாவலர் தந்தது.

பாடசாலை விடுதியை அடுத்து ஒரு வீடும் அதனோடிணைந்த ஒரு சாலையும் இருந்தன. அங்கே சைவப் பொன்னம்பலம் குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். அங்குதான் எங்களுக்குச் சாப்பாடு. இலை போட்டுச் சாப்பிட்ட இடத்தைச் சாணத்தால் மெழுக வேண்டும். சாப்பிடுகையில் சொதி விடும்போது கவனமாயிருக்கவேண்டும். “போதும் விடுங்கள்” என்று சொல்லாமல் “விடுங்கள்” என்று சொன்னால் வெள்ளம் எடுத்துவிடும்.

கடும் ஆசாரம். விடியற்புறம் மூன்று மணிக்கு எழும்ப வேண்டும். மலசலகூட வசதியில்லாத காலம். கடற்கரைக்குப் போகவேண்டும் அல்லது வயல் வெளிக்குப் போகவேண்டும். ஒவ்வொரு நாளும் சீலை தோய்த்து முழுகவேண்டும்.

சலவைத் தொழிலாளி கொண்டுவரும் உடுப்புகளைக் கிணற்றடியில் சீலை தோய்க்கும் கல்லில் வைக்கச் செய்ய வேண்டும். அவைகளைத் தொடப்படாது. அவற்றின்மேல் தண்ணீர் அள்ளியூற்றி நனைத்துப் பிழிந்து காயவைத்தே தரிக்கவேண்டும்.

குமிழ் மிதியடிகளைப் பாவிப்பது விரும்பத்தக்கது. அந்தக்காலம் வண்ணார் பண்ணையிலிருந்து சுன்னாகத்துக்கும் குமிழ் மிதியடியிற் சென்றிருக்கிறேன்.

காவிய பாடசாலையில், படிப்பென்றால் பாடமாக்குவது தான். திருக்குறள் ஒரு அதிகாரம் பத்துக்குறளும் பரிமேலழகர் உரையும், மறைசை அந்தாதி, கல்வளை அந்தாதி, திருமுல்லை வாயில் அந்தாதி ஏதோ ஒன்றில் ஐந்து பாட்டு; சூடாமணி நிகண்டில் சில பாட்டுகள். நன்னூற் சூத்திரங்கள் உரையுடன் உதாரணமும்; சம்ஸ்கிருத சுலோகங்கள் இவ்வளவும் வாய்ப் பாடமாக ஒப்புவிக்கவேண்டும்.

மனேஜரும் வகுப்பில் புலவருக்கு எதிர்முகமாயிருப்பார். வாய்ப் பாடமாகச் சொல்வதில் ஒன்றிரண்டு தவறிவிட்டால், மனேஜர் எழும்பிப் பாடசாலைக்குள் போவார். மேல்வகுப்புப் பெண்பிள்ளைகள் சிலரை அழைத்துவந்து எங்கள் முன்னே நிறுத்திவிட்டு, இவர்கள்தான் இன்று பாடம் படியாமல் வந்தவர்கள் என்று எங்களை அவர்களுக்குச்சுட்டிக் காட்டிச் சொல்லி வெட்கப்படுத்துவார். மனேஜர் கண்டிப்பான பேர்வழி. அவருக்கு எல்லாம் வாய்ப்பாடமாகத் தெரியும். இப்படிப் படித்தவர்கள் நாங்கள்.

மேற்குறிப்பிட்ட பாடங்களுடன் பாரதமும் கந்தபுராணமும் படிக்கலானோம். குருமூர்த்தி ஐயர் ஒரு நகைச்சுவையாளர். பாரதம் படிக்கும்பொழுது புலவரையாவின் கேள்விகளுக்கு நகையும் உவகையும் பிறக்கப் பதில் சொல்லுவார். பத்து மாதம் கழிந்ததும் ஆவணி மாதத்தில் பரீட்சை நடக்கப் போகிறது. எனக்கு ஒருவருடம் முந்தியே சேர்ந்தவர்களும் எனக்கும் ஒரே பரீட்சைதான். நான் மனேஜரிடம் சென்று, இரண்டுவார காலம் வகுப்புக்குப் போகாமலிருந்து பரீட்சைக்குப் படிக்க அனுமதி தருமாறு வேண்டிக்கொண்டேன். அவரும் என்மீது அனுதாபங்காட்டி அனுமதியளித்தார். மனேஜர் திட்டவட்டமானவர்.

நாங்கள் பன்னிரண்டு மாணாக்கர். ஒரு குறிப்பிட்ட நாளில் யாழ்ப்பாணம் செந்தமிழ் பரிபாலன சங்கத்தின் செயற்குழு நாவலர் பாடசாலையிற் கூடியது. பரீட்சை தொடங்கிவிட்டது. முழுதும் வாய்ப் பாடமாகவே மறுமொழி சொல்லவேண்டும். எழுத்துப் பரீட்சையேயில்லை.

மூன்று நான்கு மணிநேரம் நடந்துமுடிந்தது பரீட்சை. புள்ளி அடிப் படையிற் கண்ட பரீட்சை முடிவில் சி. கணபதிப்பிள்ளை திறமைச் சித்தியில் முதலாமிடம் பெற்றார். எனக்கு இரண்டாமிடம் கிடைத்தது. சி.க.சீவகசிந்தாமணியை முதற் பரிசாகப் பெற்றார். சிலப்பதிகாரம் இரண்டாம் பரிசு.

சி. கணபதிப்பிள்ளையும் நானும் ஒரே மரத்தின் இரண்டு கிளைகளில் ஒருமிக்கப் பழுத்த இரண்டு பழங்கள். அவர் சற்றே மூத்தவர். எங்களுள் அக்கிர பூசை (முன்னீடு) பெறுவதற்கு உரியவர் அவரே.

அடுத்து, பாரதம் கந்தபுராணத்துடன் இராமாயணமும் படிக்கலானோம். நன்னூல் விருத்தி, நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம் என்னும் இலக்கண நூல்களும் இவற்றுடன் பாடமாயின. இது படிப்பின் இரண்டாம் படியாகும்.

இரண்டாம் படியேறி மூன்றாம் படியிற் கால்வைத்த நிலையிலே 1919ஆம் ஆண்டு புலவரையாவுக்கு வாதநோய் வந்தது. படுத்த படுக்கையிலே இருக்கலானார். நாங்கள் சுன்னாகத்துக்கு நாள்தோறும் சென்று உயர்தர இலக்கியங்களையும் இலக்கணங்களையும் தொடர்ந்து பாடங்கேட்டு வந்தோம். பஞ்சநாதக் குருக்கள் வீட்டில் மதியபோசனம் பண்ணுவோம்.

சாயந்தரம் வண்ணார் பண்ணைக்குத் திரும்பும் போது வழியில் இராமநாதன் கல்லூரி வாசலில் தாமதித்தே செல்வோம். அங்கே சில தமிழ்ச் செல்வங்களின் சந்திப்பு ஏற்படுவதால்தான் இந்தத் தாமதம். பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதியார், பண்டிதர் திருச்சோமசுந்தரம், சாவகச்சேரிப் புலவர் ச.பொன்னம்பலபிள்ளை, சைவப் பெரியார் மு.மயில்வாகனம் ஆகிய நல்லோரின் சந்திப்பால் நானடைந்த நன்மைக்கு அளவில்லை.

இந்த மூன்றாண்டு காலத்தில் பண்டித மயில்வாகனனார் வீட்டுக்கும் அடிக்கடி சென்று தெரியாததைக் கேட்டுக்கொள்வேன். பண்டிதர் வீட்டில் எனக்கு எதிர்பாராத அருட் கொடையொன்று கிடைத்தது. இதை நானறியேன். அவரறிவார்; 1943இல் எனது உள்ளத்தே முளைத்தெழுந்த உள்நாட்டமாகிய முளைக்கு யோகர்சுவாமிகளின் இந்தத் திருப்பார்வை ஒரு வித்தாக அமைந்தது போலும்.

# யோகர் சுவாமி மயில்வாகனத்தை உருவாக்கினார்.

காவிய பாடசாலையிற் படித்துக்கொண்டிருக்கையில் வசதி வந்தபோதெல்லாம் மரகத மடத்துக்குப் போவது வழக்கம் புலவரையாவிடம் கற்று அறிவை ஆழமாக்கிக் கொண்டேன். பண்டித மயில்வாகனனாரின் சேர்க்கையால் மனம் விசாலமாயிற்று. இந்த நூற்றாண்டில் பேரறிஞர் பலரைச் சந்தித்திருக்கிறேன். பண்டிதருக்கு இணையான ஞாபக சக்தியுள்ள ஒருவரை நான் கண்டதேயில்லை. அவரது ஞாபகசக்தி ஒப்புயர்வற்றது.

மரகத மடத்தை விட்டுப் பண்டிதர் சிலகாலம் இராசாவின் தோட்டத்தில் வசித்துவந்தார். அப்போதும் நான் அங்கு போய்வந்து கொண்டிருந்தேன். பின்பு மயில்வாகனனார் யாழ் ஆனைப்பந்தி விவேகாநந்த சபைக்கு நிரந்தரமாக வந்துவிட்டார். நானும் நாவலர் பாடசாலையை விட்டு விவேகாநந்த சபைக்கு வந்துவிட்டேன். இங்கே இரண்டு பிரதான வீடுகளைக் குறிப்பிட வேண்டும். ஆனைப்பந்திச் சந்தியில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் செல்லும் வளைவிலுள்ளது ஒரு வீடு. இது விஜயர் ஆசைப்பிள்ளையின் வீடு. விஜயர் என்னிலும் சில வயது இளையவர். மேல் வகுப்பு மாணவர். பண்டிதரிடம் கணிதமும் விஞ்ஞானமும் படிப்பதற்கு அவர் அடிக்கடி வருவார். எனக்குச் சைக்கிள் ஓடப்பழக்கிய இவர் பின்னாளில் யாழ் இந்துக்கல்லூரி அதிபரானார். இது எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

மற்ற வீடு சற்றே தள்ளி வலப்புறமாக அதே வீதியிலுள்ளது. உலகப் புகழ்பெற்ற நியாயவாதி தம்புத்துரைச்சாமியின் வீடு அதுவாகும். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் எல்லாவற்றையும் தலைகீழாய்ப் பாடமாக்கிய அவர் ஒரு சிறந்த நடிகருமாவார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மட்டக்களப்புக் கொலை வழக்கொன்றில் இவர் அதிக பணம் வாங்காமல் எதிரிக்காகத் தெரிபட்டு வாதாடி எதிரியை விடுதலை செய்தவர். இந்த எதிரி எனக்கு நெருங்கிய உறவினராதலால் அன்னாரைச் சந்தித்து அறிமுகப்பட்டு நன்றி தெரிவித்துக் கொண்டேன்.

துரைச்சாமியின் தந்தை தம்பு நீதவான் பிரபலம்பெற்ற ஒரு மாவட்ட நீதிபதி. ஒரு கமக்காரரின் புதல்வர். ஒரு நாள் நீதிமன்றத்தில் தந்தைக்கும் மைந்தனுக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. மைந்தனுடைய சட்டவாதம் சரியல்ல என்கிறார் தந்தை. மைந்தன் எதிர்மறுத்து "கனம் நீதிபதி அவர்களே, நீங்கள் ஒரு கமக்காரரின் மகன். நான் ஒரு நீதிபதியின் மகன். எனது சட்டவாதமே சரியானது எனத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார். மகனுக்காகத் தந்தை நீதிபதிப் பதவியில் இருந்து ஓய்வுபெற்றதாக யாழ்ப்பாணத்தில் ஒரு கதை உலாவுகின்றது.

பண்டிதரின் ஆனைப்பந்தி வாசத்தலம் ஒரு உயர்கல்வி நிலையம் போல் காட்சியளித்தது. அவர் அப்போது அங்கே சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான போதனாசிரியராய்க் கடமைபுரிந்து கொண்டிருந்தார். அவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர். இலண்டன் பல்கலைக் கழகத்துப் பீ.எஸ்.சீ.பட்டதாரி.

இவருடன் கூட பீ.எஸ்.சீ. பட்டம்பெற்ற வேறொரு பேரறிஞரையும் இங்கே குறிப்பிடுவதில் நான் மிகவும் பெருமையடைகின்றேன். அவர் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஏ.எம்.கே. குமாரசுவாமி என்னும் உலகப் பிரசித்திபெற்ற ஆங்கில நகைச்சுவைப் பேச்சாளராகிய அன்னார் பண்டிதரின் இணைபிரியாத நண்பர். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பதிவாளராக உயர்பதவி வகித்தவர். நமது பண்டிதர் சுவாமி விபுலாநந்தராகிப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராய் இருந்த போது சுவாமிகளின் வங்கிப் பொறுப்பாளராய் இருந்தவர். சுவாமிகள் இறுதி மூச்சு விடும் வரையிலும் அவர் பக்கத்தே இருந்த அன்பாளர். இவர் சிறந்த கிறிஸ்தவர்.

இன்னும் சொல்கிறேன். இலங்கையில் இன்று புகழ் பெற்று விளங்கும் மெல்லிசைப் பாடகர்களாகிய பரமேஸ், கோணேஸ் என்பவர் களின் தந்தையார் கவிஞர் ம.பீதாம்பரனின் மூத்த சகோதரராகிய இவர், சிந்தாமணி ஆசிரியர் இராச அரியரத்தினத்தின் தாய்மாமனுமாவார். இவரது சாவகச்சேரி இல்லத்தில் இவர்களுடன் சிலகாலம் தங்கியிருந்து நண்புரிமை கொள்ளும் பேறு பெற்றமை குறித்து நான் மனமுருகி மகிழ்கின்றேன்.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஓய்வு நேரங்களிலும் மாணவர்கள் கூட்டம் கூட்டமாக விவேகாநந்த சபைக்கு வந்துகொண்டே இருப்பார்கள். இவர்களுள் அதிதீவிர புத்தியுள்ள மாணவர்களே அதிகம். படிப்பித்தல்

என்றால் பண்டிதருக்கு ஒரு விளையாட்டுப்போல. எத்தனை பேரை ஆளாக்கலாம் என்பதே அவரது நோக்கம். எத்தனைபேர் வருவார்கள், எவ்வளவு பணம் சேரும் என்பது நோக்கமல்ல. பயன் கருதாத சேவை. அவர் தேசிய நோக்கம் படைத்தவர். இந்தக் கும்பலின் மத்தியிலே ஒரு அற்புதக் காட்சி. நாலு முழ வெள்ளைவேட்டி; ஒரு துவாய்த்துண்டு; வெள்ளிக்கம்பி போன்ற நரை; உறுதியான தேகக்கட்டு; ஒளி வீசும் திருமேனி. மயில்வாகனம் என்ற ஒரு சத்தம். இருவரும் ஒரு அறைக்குள்ளே போய் விடுவார்கள். கூட்டம் கலைந்து விடும். பெரியதம்பி என்ற ஒரு குரல் கேட்கும். நானும் உள்ளே போய்விடுவேன். இந்தப் பையனுக்கு யோகர் சுவாமியைப்பற்றிப் பயமில்லை. பக்கத்தில் அமர்ந்து கொள்வேன். மயில்வாகனம் மாணவரை உருவாக்கிக் கொண்டிருக்க யோகர் சுவாமி மயில்வாகனத்தை உருவாக்கிவரும் இரகசியத்தை யாரறிவார்? 1919ஆம் ஆண்டு முடியுமட்டும் இது நடந்து கொண்டிருக்கிறது.

சாயங்கால வேளைகளில் யோகர் சுவாமிகள் பண்டிதரை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குக் கூட்டிச் செல்வார். நானும் பின்னே இழுபட்டு விடுவேன். உள்வீதியில் உட்கார்ந்து கொள்வோம். சுவாமி திருப்புகழ் படிப்பார். நாங்கள் திருமுருகாற்றுப்படை படிப்போம். வாய்ப்பாடமாக அதைச் சொல்லும்படி சுவாமி எங்களைத் தூண்டிவிடுவார். நான் பத்துவரி பாடமாக்க முன்பு மயில்வாகனம் ஐம்பது அடிகளைப் பாடமாக்கி விடுவார். மயில்வாகனனாரின் ஞாபக சக்தியின் முன்பு நமது ஞாபகசக்தி வெறும் சூனியமே.

இந்தக் காலப்பகுதியிலே ஓர் புது இளைஞர் எனக்கு நண்பரானார். இவர் வவுனியாவைச் சேர்ந்தவர். அவ்வூர் ஆபிரகாம் உபதேசியாரின் புதல்வர். பயிற்றப்பட்ட ஒரு தமிழாசிரியர். டேவிட் இராசையா என்னும் இவ்விளைஞர் யாழ் பரியோவான் கல்லூரியிற் படிப்பித்துக் கொண்டிருந்தார். பண்டிதரின் ஆனைப்பந்தி வாசத்தலத்தில் என்னைச் சந்தித்து என்னுடன் யாப்பும் அணியும் படிக்க விரும்புவதாகச் சொன்னார்.

பாடம் சொல்லிக் கொண்டிருக்கையில் ஒரு நாள் யாழ் பெரும்பாக வித்தியாதரிசியாய் இருந்த திரு.க.ச. அருள்நந்தி அவர்கள் பண்டிதரைப் பார்க்க வந்தவர் முன் விறாந்தையில் இருந்த எங்களை அணுகினார். என்ன படிக்கிறீர்கள் எனக் கேட்பார். யாப்பருங்கலக்காரிகை என்றோம். எவ்வளவு படித்திருக்கிறீர்கள் என்று அடுத்த வினா வந்தது. வெண்பா இலக்கணம் முடிய எனப் பதிலளித்தோம். எனது படிப்பைப்பற்றி அவருக்குத் தெரியாது. இராசையாவின் அளவில் நானும் நின்று கொண்டேன்.

சரி, முதலாம் அடியிலும் மூன்றாம் அடியிலும் அருள்நந்தி என்னும் இரு சொற்களும் முறையே முதலில் அமைந்து நிற்க வழிபடு கடவுள் வணக்கமாக ஒவ்வொரு நேரிசை வெண்பா பாடுங்கள் என்று அவர் பணித்தார். இராசையா சற்றே துடுக்குள்ளவர். அவசரம் அவசரமாகப் பாடிக்கொடுத்ததில் அவர் பாட்டுப் பிழைத்துவிட்டது. என் பாட்டை அமைதியாகப் பாடிக்கொடுத்தேன். இராசையாவின் பாட்டைப் பிழைதிருத்திக் கொடுக்கும்படி என்னிடம் தந்துவிட்டு என் பாட்டைச் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு தன்பாட்டிற் போய்விட்டார் அருள்நந்தி. இராசையா சில வருடங்களுள் பெரிய கல்விமானாய் பண்டிதர் வ.சு.இராச ஐயனார் எனப் பேரும் புகழும் பெற்று வாழ்ந்து அகால மரணமானார். அவர் தனித்தமிழின் வடிவம். மறைமலை அடிகளின் மதிப்பைப் பெற்ற தமிழ்மகன். என் பாட்டை இதோ தருகிறேன்.

**அருளா தொழியிலெனக் கார்துணைநீ சொல்லாய்**
**குருவாய் அமர்ந்ததிருக் கோவே - பொருளாக**
**நந்தியைமுன் ஆண்டுகதி நல்குபர னானசிவன்**
**தந்தமுரு காகிருபை தந்து.**

## கவிஞன் வளர வளரக் கவிதா சக்தி நிறைவு பெறுகின்றது.

இயல்பாக என்னுள்ளே அமைந்துகிடந்த கவிதாசக்தி இலக்கண அறிவினால் தூய்மை பெறலாயிற்று. வரம்புக்கு உட்பட்ட நடையினால் அது வளம்பெற்று வாழ்கின்றது. இங்கே இளங்கவிஞர்களுக்கு ஒன்று சொல்கிறேன். கவி இயற்கை, கல்வியறிவால் அதை வளஞ்செய்து கொள்ளுங்கள். வளம் பெறாத கவியூற்று வற்றிப்போகும். அது வாழாது.

**மக்கள் நடைக்கு வரம்புண் டதுபோல**
**மக்கள் கவிக்கும் வரம்புண்டு - மக்கள்**
**வரம்பு கடந்தால் மதியார் கவியும்**
**வரம்பு கடந்தால் வழு.**

அன்றியும் பாட்டின் இசைக்கு மாத்திரையே அத்திவாரம். மாத்திரை குறைந்தாலும், கூடினாலும் இசை கெடும். பாட்டின் உருவமும் கெடும். "இழுக்குடைய பாட்டுக்கிசை நன்று" என நம் முன்னோர் கூறிய இயல்பினையும் புதுக்கவிஞர்கள் நினைவில் வைத்துக் கொண்டு பாடவேண்டும். நாவிற் படுவதால் பாட்டென்னும் பெயர் வந்தது.

**மாத்திரையில் நின்றும் வளருமிசை யவ்விசையால்**
**நாத்திருந்தும் செய்யுள் நடக்குமே - சாற்றின்**
**ஒருமாத் திரைதப்பின் ஓசைகெடும் பாட்டும்**
**உருமாற்றம் பெற்றொழி யும்.**

மட்டக்களப்பிலே பிறந்த நான், சந்திரசேகர உபாத்தியாரின் மடியிலே கிடந்து தவழ்ந்து, விளையாடி, ஆர். என்.சேதுகாவலரின் ஆடையைப் பிடித்து எழும்பிநின்று, குமாரசுவாமிப் புலவரிடம் நடைபழகி, மயில்வாகனனாரின் மருங்கிலே ஓடி விளையாடி வளருகின்றேன்.

மண்டூர் முருகன் திருமுன்னே ஒரு தனி வெண்பாவாக அரும்பிய எனது கவிப்புலமை நாளடைவில் ஒரு சிறு பிரபந்தமாக மலர்ச்சியடைந்தது. அதுதான் முதல்முதல் நான் இயற்றிய "மண்டூர்ப் பதிகம்" மயில்வாகன னாரின் சிறப்புப் பாயிரத்தால் அது மக்களிடையே ஒரு மதிப்பைப் பெற்றது. இதோ அந்தச் சிறப்புப்பாயிரம்:



புலவர்மணியின் குரு
**சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர்**



மகாவித்துவான்
**பிரமஸ்ரீ சி.கணேசையர்**



புலவர்மணியின் ஆருயிர் நண்பர்
இலக்கிய சலாநிதி, பண்டிதமணி
**சி.கணபதிப்பிள்ளை**

**'பண்டூரும் முகிற்குலங்கள் எமதிறைவர்**
**மருகர்திருப் பதியீ தென்ன**
**விண்டூர மழைபொழியும் சிறப்பதனால்**
**வளம்மலிந்து மிகுந்து தோன்றும்**
**மண்டூரி லுறைமுருகன் மலரடிக்கோர்**
**திருப்பதிகம் மரபிற் சொற்றான்**
**கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்**
**பிள்ளையெனும் கலைவல் லோனே."**

பிறரை ஆளாக்கவேண்டுமென்னும் பெருந்தன்மை வாய்ந்த மயில்வாகனனாரின் மனப்பண்பின் பிரதிபலிப்பே இந்தச் செய்யுள். எனது தகுதியின்மையை நோக்கி இச்செய்யுளை உபசார வழக்கென்றே கருதுகின்றேன். பதிகத்தின் முதற் செய்யுளை வாசக நேயர்கள் இங்கே படித்துப் பார்க்க:

**மலர் கிரண மெறிகோடி சூரியர் மழுங்கவொளி**
**வளர்திரு முகங்க ளாறும்**
**மண மறாப் பாலுண்ட கனிவாயி னோடிந்த**
**மகிதலம் மருட்டு நகையும்**
**மலர் கடம் பாரமோ ராடவட முந்திகழும்**
**மாமேரு வொத்த மார்பும்**
**மலை தோறு மாடல்புரி மலர்போ லிலங்கிவரு**
**மாண்புற்ற பாத யுகமும்**
**கல னெனும் பாடகம் போலெழு மையுந்தொடர்**
**கன்மபா வங்கொல் வேலும்**
**கல கலென ஒளிர்துவச மதிலே விளங்கிவரு**
**காற்படைச் சேவ லுடனே**
**வல மருவு நீலமயில் மீதேறி ஏழையென்**
**மனக்குறைகள் தீர்க்க வருவாய்**
**மதி யேறு பணியேறு நதியேறு வேணியன்**
**மைந்தமண் டூர்க் கந்தனே.**

இப்பாட்டின் முற்பகுதியிலே முருகப்பெருமானின் திருவுருவம் வருணிக்கப்பட்டுள்ளது. பிற்பகுதியிலே பெருமானின் படையும், கொடியும், ஊர்தியும் வருணிக்கப்பட்டுள்ளன. தேவசேனாதிபதியின் திருக்கோலக் காட்சி இதுவாகும். மதியும், பணியும், நதியும் அணிந்த தந்தையின் மைந்தனாதலால் முருகன் ஒட்பமும், வெப்பமும், தட்பமும் உடைய பெருமான் என்பது என் கருத்து. ஒட்பம் - ஒளி; இது அறிவைக் குறிக்கும். வெப்பம் - சூடு; கோபம்; இது அகந்தையை அடக்கும்

குறிப்புடையது. தட்பம் - குளிர்ச்சி; கருணை; இது அறக்கருணை, மறக்கருணை இரண்டுக்கும் பொதுவாய் நின்றது.

ஆரம்பத்தில் பாட்டையே பொருளாகக் கொண்டு வெளிப்பட்ட எனது கவிதாசக்தி போகப் போகப் பொருளையே பாட்டாகக் கொண்டு வெளிப்படலாயிற்று. அதாவது முன்பெல்லாம் பாட்டைப்பாடிய பின்பே பொருளைப் பார்ப்பேன். காலப்போக்கிலே பொருளை உருவகஞ் செய்துகொண்டே பாட்டைக் காண்பேன்.

சிந்தனாசக்தி வளருமுன்பு கவிஞர்களின் பாட்டு வெறும் அறிவு மயமாகவே தோன்றும். சிந்தனைசக்தி வளர வளரப் பாட்டுகள் அறிவும் உணர்ச்சியும் பிறக்க வெளிவரும். கவிஞன் வளர வளரக் கவியும் வளர்ந்து வளர்ந்து நிறைவு பெறுகின்றது.

இதுவரையில் எனக்குக் கிடைத்து வந்த யோகர் சுவாமிகளின் ஆசி என் பாட்டுக்கும் கிடைத்துவிட்டது. நல்லோர் பெரியோரின் ஆசியினால் நானும் வாழ்கின்றேன். எனது பாட்டும் வாழ்கின்றது. மட்டக்களப்பிலே யோகர் சுவாமிகளைப் பற்றி அதிகம் தெரியாது. அந்த மகானின் அருகிலிருந்து, அவரின் அருள் மொழிகளைக் கேட்டு அளவளாவி அனுபவித்தவன் நான். சுவாமிகளின் அற்புத சக்திகளுள் நான் நேரே அறிந்துள்ள ஒருசிலவற்றை இங்கே நினைவுகூர்ந்து என்னைத் தூய்மை செய்து கொள்கின்றேன்.

உள்ளக்கருத்து வள்ளலுக்கன்றோ தெரியும். சுவாமிகள் தம்மைத் தரிசிக்க வருகின்ற அன்பர்களின் உள்ளத்தையும் அறிவார்; தம்மைப் பரிசோதிக்க வருகின்ற வறண்ட அறிவு பெற்ற "கோவூர்"களின் உள்ளத்தையும் அறிவார்.

இல்லாததையும், செல்லாததையும் சொல்லித் திரிகின்ற பேர்வழி களைக் "கோவூர்" என்பது எனது கொள்கை. சிலநேரம் ஒருவர் வந்து தம்மை வணங்கும்போது சுவாமிகள் என்னைப் பார்த்து, என்ன பெரியதம்பி! இவன் சாமிபண்ணுகிறான்? என்று சொல்வார். குறித்த ஆசாமி சுவாமியைப் பரிசோதிக்க வந்தவர் என்று நாம் உடனே தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

சுவாமியை நான் நன்றாய் அணுகுவேன். உள்ளது உரியதையும் கேட்பேன். ஒருநாள் சுவாமி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த நான் ஏதோ தொடர்பில் "சுவாமிகளின் குளிப்பு, முழுக்கு என்ன மாதிரி?" என்று கேட்டேன்.

“கொழும்புத்துறையில் இருந்து சுன்னாகத்துக்குப் போகும் வழியில் இடையே மழை பெய்தால் குளித்து முழுகிக் கொள்வேன்” என்று பதில் கிடைத்தது.

சுன்னாகத்தில் செல்லாச்சி அம்மாள் என்னும் பெயர் பெற்ற ஒரு சந்நியாசினி வாழ்ந்து வந்தார். அந்தத் தாயாரைப் பார்ப்பதற்கு சுவாமிகள் இருந்திற்று எப்பவோ ஒரு தரம் செல்வார்.

அந்நாளில் கொழும்புத்துறையிலே ஒரு ஓலைக் குடிசையில் சுவாமிகள் வசித்து வந்தார். இன்று அது பெரிய தாபனமாக விளங்குகின்றது.

யோகசித்திக்கும், ஆன்மீக சக்திக்கும் யோகர் சுவாமிகள் உதாரணமாக விளங்குகிறார்கள். வண்ணை வித்துவான் க.சி.நடராசன் இயற்றிய யோகர் புராணத்துக்கு அடியேன் சிறப்புப் பாயிரம் செய்தது எனக்கோர் ஆசீர்வாதமாகும்.

# கல்லடி வேலனின் சொல்லடிக்கு யாழ்ப்பாணம் அன்று கலங்கியது.

இன்னும் ஒரு நினைவு. இது 1917ல் தொடங்கி 1928ல் முடிந்த ஒரு சம்பவம். 17ஆம் ஆண்டில் நான் நேரிற் பழகாமல் கேள்வியால் அறிந்துகொண்ட ஒரு பெரிய புள்ளியின் நினைவு. அவர் ஓர் ஆசுகவி; வசைக்கவி மன்னன். வசனங்களிலும் சிலேடை வழங்குவார். சரியாக ஞாபகமில்லை. வண்ணார் பண்ணை ஓட்டுமடம் வீதியிலோ, அதன் மேல் வீதியிலோ அண்மையில் வசித்த அன்னாரை நான் அணுகிப் பழகாமல் விட்டதற்கு அச்சமே காரணமாகும்.

அவரை அணுகவோ எதிர்க்கவோ அநேகமாக எல்லாரும் அஞ்சுவர். அவர் மாத்திரம் அஞ்சாமல் எவரையும் அணுகுவார். மிஞ்சாமல் எவரையும் எதிர்ப்பார். அவர் ஒரு தனிக்காட்டு ராஜா.

அந்நாளில் புகையிரதப் பாதையிலே பாதுகாப்பற்ற கடவைகள் அதிகம். யாழ்ப்பாணத்திலே புகைவண்டியைக் கோச்சி வண்டி என்பர். குதிரை வண்டியை குதிரைக் கோச்சி என்பர். 'Coach" என்னும் மேல்நாட்டு மொழியின் திரிபாக அது தமிழ்ப் பேச்சுவழக்கில் இடம்பெற்றுள்ளது. புகைவண்டியென்றால் உண்மையிலேயே புகைவண்டிதான். ஒரே புகையும் தூசும். கரிக்கோச்சி. தூம சகடம். "டீசெல்" இயந்திரங்கள் வந்தபின் நிலைமை மாறிவிட்டது. பெயர் மாத்திரம் மாறவில்லை.

பாதுகாப்பற்ற கடவைகளிலே "கோச்சிவரும் கவனம்" என்று எழுதியிருக்கும். யாழ்ப்பாணத்திலே அந்நாளில் உமது ஆச்சி என்பதைக் கோச்சி என்றும், உமது அப்பர் என்பதைக் கொப்பர் என்றும் வழங்குவர்.

மட்டக்களப்பிலே அக்காலம் இந்தக் கோச்சிக்கதை இல்லை. 1925இல் தான் மட்டக்களப்புக்குப் புகையிரதம் வந்தது. அப்போதைய சட்டசபைப் பிரதிநிதி திரு.ஈ.ஆர்.தம்பிமுத்து அவர்களே ரயிலை மட்டக்களப்புக்குக் கொண்டு வந்தவர். கல்லடிப் பாலத்தைக் கட்டுவித்தவரும் அவரே.

அவர் ஒரு சட்டமேதை. அவரது நாவன்மையைச் சேர். பொன். இராமநாதனும் பாராட்டியுள்ளமை நமக்குப் பெருமை தருகின்றது. கல்லடிப் பாலத்துக்குத் தம்பிமுத்து வாராவதி என்று பெயர் வைத்தாலோ என நான் அடிக்கடி நினைப்பதுண்டு. எனினும், தம்பிமுத்துவின் அரசியற் சித்தாந்தம் தமிழருக்கு நன்மையளிக்கவில்லையென்றே நான் கருதுகின்றேன்.

இனிப் பெயர்ப் பலகைகளைக் கவனிப்போம். "கோச்சி வரும் கவனம்" என்று அங்கே எழுதியிருக்கும். விடியப் பார்த்தால் "கொப்பரும் வருவார் கவனம்" என்று இன்னொரு வரியைப் பலகையிலே காணலாகும். இரவிரவாக இந்தத் திருவிளையாடலை யார் செய்தாரோ? அவர்தான் நான் கண்டு பழகப் பயந்துகொண்டிருக்கும் அந்தப் பெரிய புள்ளி. புகையிரதப் பகுதியார் "கோச்சி" என்பதைக் கோச்சு எனத் திருத்திக் கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் நீதிமன்றம் ஒன்றிலே ஏதோ ஒரு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. சில பெரிய தலைகள் தொடர்ந்த வழக்கு அது. சாட்சிக் கூண்டிலே ஒருவர் நிற்கிறார். நியாயவாதியின் கேள்விக்கணைகள் அவர்மீது பாய்கின்றன.

**'உமக்கு என்ன தொழில்'**

**'கோச்சிக்கு ஆள்கூட்டிக் கொடுப்பது எனது தொழில்"**

"கோச்சி என்பதற்கு உமது ஆச்சி என்பதும் பொருளல்லவா?" அப்புக்காத்தர் சாட்சியின்மீது சீறிப்பாய்கிறார்.

"ஐயா என்னைக் கோபிக்கவேண்டாம். நான் சொன்னதை விளக்கிக் கூறுகின்றேன். ஐயா! கொடிகாமத்துக்கும் பருத்தித்துறைக்கும் இடையே குதிரைக் கோச்சி ஓடுகிறது. அந்தக் கோச்சிக்கு நான் ஆள் சேர்த்துக் கொடுத்து வாசி (கமிஷன்) வாங்குவது எனது தொழில். இதைத்தான் நான் சொன்னேன். ஆபாசக் கருத்தில் சொல்லவில்லை" என்று சாட்சி விளக்கம் கூறவே "கோர்ட்" முழுதும் கொல்லென்ற சிரிப்பு. சீறியவர் ஆறுகிறார். யார் இந்தப் பெரிய புள்ளி?

நாம் ஒருவரோடு ஒருவர் பேசுவோம். ஒருவர்மீது ஒருவர் பாயாமற் பேசுவது நல்லது.

இனி அரசாங்கக் கந்தோர்க் கதவுகளுக்கு வருவோம். உட்பிரவேசிக்கப்படாது என அங்கே எழுதியிருப்பதைக் காணலாம். மார்புப் பட்டிதரித்த சேவகன் அங்கே நிற்பான். மின்சார விசிறி இல்லாத

காலம். "பாங்கா"ப் பையன் கயிற்றைப் பாங்கா இழுத்துக்கொண்டிருப்பான். மெல்லென்ற காற்று வீசும். உள்ளே வெள்ளைத் துரையோ உள்ளூர்த் துரையோ உல்லாசமாக வீற்றிருப்பார்.

அது மக்கள் காலமல்ல; மேனாட்டு மன்னர் காலம். எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்னும் உரிமைக்குரல் அங்கே எழும்பாது. எழுப்பவும் முடியாது. உள்ளே போவதற்கு அநேகமாக எல்லாரும் அஞ்சுவர்.

ஒருநாள் வருகிறார் ஒருவர். தூங்கிய கை. ஓங்கிய நடை. நிமிர்ந்த தலை. வந்தவர் அங்கே தட்டிக்கேட்ட பட்டிக்காரனை விட்டு விட்டுத் தங்கு தடையின்றிச் சட்டென்று உட்பிரவேசிக்கிறார்.

கிழட்டுத் தையற்காரன் ஊசி ஓட்டையைப் பார்ப்பதுபோல உள்ளேயிருந்த உள்ளூர்த் துரை அந்த நபரைப் பார்த்துக் கொண்டு நீர் யார்? உட்பிரவேசிக்கப்படாது என்று எழுதியிருப்பது உமக்குத் தெரியாதா? என்று கடிந்துகொள்கிறார்.

உட்பிரவேசித்தவர் சொல்கின்றார்: "தெரிந்து கொண்டு தான் உள்ளே வந்தேன். அங்கே என்ன எழுதியிருக்கிறதென்று உங்களுக்குத்தான் தெரியவில்லை. உள்ளேயிருக்கும் பிரபுவே, நீங்கள் பொது மக்களிடம் சிக்கப்படாது; கடமையை ஒழுங்காகச் செய்துகொடுக்கவேண்டும் என்றுதானே எழுதியிருக்கிறது. இது இவ்வளவு காலமும் தெரியாமலா இங்கே வேலை பார்க்கிறீர்கள்?"

இப்படி இடித்துரைத்துப் பெரும் புரட்சியொன்றைச் செய்த இந்தப் பேர்வழிதான் யாரோ? அவர்தான் நான் விரைவில் வெளியிடப் போகும் அந்தப் பெரிய புள்ளி.

"அச்சமென்ப திருப்பினும் இல்லாமை சொல்லேன்; அதிக நிதி வழங்கினும் இல்லாமை சொல்லேன்; பஷத்துக் காயினும் நான் இல்லாமை சொல்லேன்; பரிகசிப்பவரைத் துணிந்து பரிகசிப்பேன்" என்று தலை நிமிர்ந்து இறுமாப்போடு பாடும் கவிஞர் யார்? என்று அந்தக்காலம் யாழ்ப்பாணத்திலே கேட்டால் அவர்தான் கல்லடி வேலுப்பிள்ளை என்று சின்னப் பையன்களும் சொல்வார்கள். அவ்வளவு பிரசித்தமானவர் அவர்.

கல்லடி வேலுப்பிள்ளை வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். "கந்தாயுதக் குழவி" என்னும் புனைபெயரும் அவருக்குண்டு. "சுதேச நாட்டியம்" என்னும் பத்திரிகையை நடத்தி எதிரிகளைக் கதிகலங்க அடித்தவர் அவர். பல சம்பவங்கள் எனக்குத் தெரியும்.

உள்ளதும் நல்லதும் சொல்வதால் அவைகளை முழுதும் இங்கே எடுத்துச் சொல்ல நான் விரும்பவில்லை.

1922ஆம் ஆண்டிலோ அதற்கு முந்தியோ தெரியாது. சரியாக ஞாபகம் இல்லை. யாழ்ப்பாணத்தில் பெரிய உணவுப் பஞ்சமொன்று ஏற்பட்டது. வியாபாரிகள் கடைகளைப் பூட்டிவிட்டார்கள். வயற்சொந்தக் காரர்கள் அரிசி நெல்லைப் பதுக்கி வைத்துக்கொண்டார்கள். பசிக் கொடுமையால் மக்களின் வயிறு பற்றியெரிகிறது. கொள்ளை லாபம் ஒருபுறம், கொள்ளைக்கூட்டம் மறுபுறம். நானும் இரண்டு நாள் பட்டினி.

இந்தச் சஞ்சலம் கலந்த சூழ்நிலையைக் கண்ட நமது ஆசுகவியின் நெஞ்சம் கொதிக்கிறது. அங்கிருந்து ஒரு கவிதை நெருப்பாகப் பறக்கிறது. நாடு முழுவதும் பற்றியெரிகின்ற வயிற்று நெருப்பைத் தமது கவிதை நெருப்பால் அணைக்கிறார் கவிஞர். இந்த நேரத்தில் அன்னாரை நான் நினைவுகூர்ந்து அஞ்சலிசெலுத்திக்கொண்டு அந்தப் பாடலையும் இங்கே தருகின்றேன்.

**'அறுகுமுள் நெருஞ்சி கோரை கொட்டணையால்**
**அழிந்திடும் அலதெரிந் தழியும்**
**மறுகிடும் அறக்கொட்டி யான்புழு விழுந்து**
**மடிந்திடும் இரக்கமில் லாத**
**குறுகிய மனத்தால் மக்களின் வயிற்றில்**
**கொடும்பசி நெருப்பினை மூட்டும்**
**கறுமியுன் வயல்நெற் பயிர்வரு வருடங்**
**களில்திறை யெமக் கிலையே"**

இவ்வளவுக்கும் கல்லடி வேலுப்பிள்ளை அவர்களை நான் அணுகிப் பழகவில்லை. அவர் பெரியர். நான் சிறியன். 1928ஆம் ஆண்டில் மட்டக்களப்பிலே அப்பெரியாரைத் தற்செயலாகச் சந்தித்து நண்பு பூண்ட வரலாற்றை அடுத்த கட்டுரையில் விபரித்து விட்டு அப்பால் ஆனைப்பந்திக்கு வருகின்றேன்.

# கல்லடி அடியெடுக்க அடியேன் தொடர்ந்த கட்டளைக் கலித்துறை!

“நமது பிள்ளைகள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும்” என்னும் குறிக்கோள்கொண்ட மட்டக்களப்பு இயக்கம் அதிதீவிரம் அடைந்துவிட்டது. எங்கும் சைவப் பள்ளிக்கூடம் என்பதே பேச்சாயிற்று. பல கட்டிடங்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன.

1928ஆம் ஆண்டென்று நினைக்கிறேன். வாழைச்சேனையிலே ஒரு பிரபல தனவந்தர் இருந்தார். வலையிறவு என்னும் கிராமத்திலும் ஒரு பிரபல தனவந்தர் இருந்தார். அவர் பெயர் கொஸ்தாப்பல் கந்தையா. இவர் பெயர் தம்பிமுத்துப் போடியார். இருவரும் பெரிய உபகாரிகள். தம்பிமுத்துப் போடியாரின் உபகாரம் பற்றிப் பின்னொரு கட்டுரையில் சொல்கிறேன். கொஸ்தாப்பல் கந்தையா பற்றிய செய்திகளை இங்கே பார்ப்போம்.

கொஸ்தாப்பல் என்பது ஒரு அரசாங்க உத்தியோகம். அது விதானைக்கும் உடையாருக்கும் இடைப்பட்ட பதவி. Constable என்னும் மேல்நாட்டு மொழியை இவ்வண்ணம் தமிழ் வடிவில் வழங்குவர். இலக்கணக் கொத்தரும் இந்தச் சொல்லாக்க முறையை ஆதரிக்கின்றார். வாழைச்சேனை ஆறுமுகம் கொஸ்தாப்பல், ஆரையம்பதி தம்பாப்பிள்ளைக் கொஸ்தாப்பல், களுவாஞ்சிக்குடி வேல்முருகுக் கொஸ்தாப்பல், முதலிய சிலரின் பெயர் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது.

கொஸ்தாப்பல் தம்பாப்பிள்ளையின் மகன் சீனித்தம்பி என்பவர் என்னுடன் ஒரே காலத்தில் யாழ்ப்பாணம் வந்தவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றுக் கலாசாலை அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றிருக்கும் அன்னார் ஒரு சிறந்த தமிழறிஞர். அதிதீவிர மதி படைத்தவர். மட்டக்களப்பு இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவோர் சேமநலச் சங்கத்தின் தாபகருள் ஒருவருமாவார்.

கொஸ்தாப்பல் கந்தையா தமது சொந்தப் பணத்திலே வாழைச் சேனையில் ஒரு சைவப் பாடசாலை தாபித்துத் தமது பணத்திலேயே ஆசிரியர்களுக்குச் சம்பளமும் கொடுத்து வந்தார். பக்கத்திலே ஒரு பழைய கிறிஸ்தவ பாடசாலையும் இருந்தது. அது இங்கிலாந்து திருச்சபைக்குச் சேர்ந்தது. முகாமைப் பாதிரியாருக்கு இது பிடிக்கவில்லை. உடனே அரசாங்க அதிபரிடம் ஓடுகிறார்.

பாதிரியாரின் முறைப்பாட்டைக் கேட்ட அதிபர் கொஸ்தாப்பல் கந்தையாவை விளங்க ஒருநாள் குறித்துக் கட்டளையும் அனுப்புகிறார். நாளும் வந்தது. அரசாங்க அதிபர் முதலியாருடன் வந்திருக்கிறார். கந்தையாவின் கொஸ்தாப்பல் வேலை பறக்கப்போகிறது என் மக்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்கிறார்கள்.

விளக்கம் தொடங்கப் போகிறது. பாதிரியாருக்கு ஆசனம். நம்மாட்கள் நிற்கிறார்கள். ஒரே பயம். ஏசண்டர் வந்திருக்கும்போது திலாந்து (கிணற்றுத்துலா) குளறினாலும், காகம் கத்தினாலும் விதானைமார் ஓடிப்போய் அமைதியை நிலைநாட்டும் காலம் அது.

முதலியார் பெயர் கூப்பிடுகிறார். "கொஸ்தாப்பல் கந்தையா!"

"நிற்கிறேன்" என்று பதில் அளித்துக் கந்தையா போய் மேசையின் முன்னே நிற்கிறார்"

"நீர் இங்கே சைவப் பள்ளிக்கூடம் ஒன்றைக் கட்டி எங்களுடைய பள்ளிக்கூடத்துக்கு நட்டம் உண்டாக்குவதாக முறைப்பாடு வந்திருக்கிறது. இதற்கு என்ன சொல்லுகிறீர்? என்று முதலியார் கேட்கிறார். கந்தையா ஒன்றும் பேசாமல் தமது சட்டைப் பைக்குள்ளே கையைப் போட்டுச் சில கடதாசிகளை எடுக்கிறார். மார்பிலே குத்தியிருந்த கொஸ்தாப்பல் சின்னத்தைக் கழற்றுகிறார். அவற்றை மேசையில் வைத்துவிட்டு வீறு நடை போட்டு வெளியேறுகிறார்.

"கொஸ்தாப்பல்! கொஸ்தாப்பல்! கொஸ்தாப்பல்!" என்று முதலியார் கூப்பிடுகிறார்.

"கொஸ்தாப்பல் மேசையில் இருக்கிறார். கந்தையா போகிறார்" என்று சொல்லிக் கொண்டு ஒரே நடையாய் வீடு போய்ச் சேர்கின்றார் கந்தையா.

அடங்காத கோபத்துடன் வெளியேறுகிறார் அரசாங்க அதிபர். இதன் தொடர்பாகச் சொல்ல இன்னும் நீண்ட கதை இருக்கிறது. அது மிகவும் நல்லகதை. எனினும் இவ்வளவில் இந்தக் கதையைக் கட்டுகின்றேன்.

இந்தச் சைவத் தமிழ் வீரனுக்கு ஆலோசனை கூறவும் பக்கபலமாயிருக்கவும் நான் இடையிடையே வாழைச்சேனைக்குச் சென்று அவருடன் தங்கியிருப்பது வழக்கம். அந்தக் காலப் பகுதியில் நான் திருகோணமலை இந்துக்கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராயிருந்தேன். மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும்போதும், திரும்பி மட்டக்களப்புக்கு வரும்போதும் வாழைச்சேனையில் வீரர் கொஸ்தாப்பல் கந்தையா வீட்டில் தங்கியிருந்தே பயணத்தைத் தொடர்வேன்.

இதற்கிடையில் கொஸ்தாப்பல் வேலை நீக்கம் செய்யப்பட்டதும், வேலைக்கு அரசாங்க அதிபர் விண்ணப்பம் கோரியதும், ஒருவரும் வேலைக்கு விண்ணப்பம் செய்யாமல் விட்டதும், கந்தையா திரும்பவும் கொஸ்தாப்பலானதும் வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சி களாகும். கந்தையாவின் இந்த வெற்றி சைவ அரசாங்க ஊழியர்களுக்கு அந்நாளில் ஏற்பட்டிருந்த பயத்தை அடியோடு தொலைத்துவிட்டது.

1928ஆம் ஆண்டு ஜுலை மாசம் ஒருநாள் காலை எட்டு மணியிருக்கும். திருகோணமலை வஸ்வண்டிக்காகக் காத்துக்கொண்டு நின்றேன். அந்தக்காலம் கொம்பனி வஸ்கள் கிடையா. தனியார் வஸ்கள் ஒன்றிரண்டோ, சற்றே அதிகமோ ஓடிக்கொண்டிருந்தன.

ஆ.சு.வஸ், சைமன் வஸ், கம்மல் வஸ், தம்பசிட்டி வஸ் என்னும் பெயர்கள் ஞாபகமிருக்கின்றன. ஏதோ ஒரு வஸ் வந்ததும் உள்ளே ஏறி இடம்பிடித்துக் கொண்டேன்.

பக்கத்தில் அடைப்பையுடன் ஒரு குடுமிக்காரர் இருந்தார். வஸ் ஓடத் தொடங்கியதும் குடுமிக்காரர் என்னைப் பார்த்து நீர் "சுதேச நாட்டியம்" பத்திரிகை வாசிப்பதுண்டா? என வினாவினார். "பல பத்திரி கைகளிருக்க ஏன் "சுதேச நாட்டியம்" பற்றிக் கேட்கிறீர்கள்?" என நான் திருப்பி வினாவினேன். அவர் முன்னாசனத்தில் கறுப்புக் "கோட்"டுடன் கம்பீரமாக இருந்த ஒருவரைக் கைவிரலால் சுட்டாமல் கண்ணாற் சுட்டிக் காட்டி, "அதோ இருப்பவர்தான் சுதேச நாட்டியம் பத்திராதிபர். கல்லடி வேற்பிள்ளை" என்று கூறினார். எனக்குக் க.வே.பற்றி முன்பு கேட்ட பயம் இன்று கண்ட பயமாய் விட்டது!

கம்பர், காளமேகம், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் இவர்களுக்கு அடைப்பைக்காரர் இருந்தது போல "கானா வேயன்னா"வுக்கு இந்தக் குடுமி அடைப்பைக்காரர் எனச் சொல்லாமலே அறிந்து கொண்டேன். அடைப்பை என்பது வெற்றிலை பாக்குப் பை.

எங்கள் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த க.வே. என்னைப் பார்த்து "நீவிர் யாவிர்? யாது செய்கின்றீர்? எங்கே செல்கின்றீர்" என்று இலக்கணத் தமிழிலே கேட்டார். என்னை வெளிக்காட்டிக் கொள்ள நான் விரும்பவில்லை. "ஐயா, நான் ஒரு தமிழாசிரியன், திருகோணமலையிற் படிப்பிக்கிறவன்; அங்கு செல்கிறேன்" என அடக்கமாகக் கூறிவிட்டு அமைதியாய் இருந்துகொண்டேன்.

"வஸ் வண்டி ஓடுகிறது. காலமோ முதுவேனில். வெயில் ஏறுகிறது. இடையிடையே பிரயாணிகள் ஏறுகின்றார்கள்; இல்லை ஏற்றித் திணிக்கி றார்கள். ஒரே வேர்வை. ஒருவரின் வேர்வையை எழுவர் பூசிக்கொள்கிறார்கள். இது அந்தக் காலம். இந்தக் காலம் ஒருவர் பூசிய பவுடரை ஒன்பது பேர் பூசிக் கொள்கிறார்கள். ஒரு ஏனவாயரின் வாய்க்குள்ளே பெண்ணொ ருத்தியின் கொண்டை புகுந்து கொள்கிறது. ஆவென்று நின்ற அவர் அருவருப்புடன் இம்மென்று வாயை மூடிக்கொள்கிறார். நெருக்கடி தாங்க முடியவில்லை.

இவைகளை அவதானித்துக்கொண்டு, இல்லை அனுபவித்துக் கொண்டிருந்த க.வே.ஆசுகவியல்லவா? "மனமும் விறைத்தது"; மார்பும் விறைத்தது என்றார். இதைக் கேட்டதும் நானும் என் பிறவிக்குணத்தினால் என்னை மறந்து அமைதி குலைந்து வயதுக்குத் தக்கபடி "மாதர்கன தனமும் விறைத்தது" என்று வாயடங்காது சொன்னேன். பிறவி: கவிப்பிறப்பு.

உடனே க.வே.எழும்பி முதுகிலே தட்டி, "நீ உன்னை மறைத்துக் கொண்டாய். நீ யார்? உண்மையைச் சொல்" என்று அன்பு சுரக்கக் கூறினார். நானும் என்னைக் காட்டிக் கொண்டேன்.

"தாங்காத வெப்பம் தகித்திட ஆசனமும் விறைத்தது" எனத் தொடர்ந்து கூறினார்.

"ஆள் மேல் ஆளையேற்றச் சனமடை விசனமும் உரைப்பதென்?" என்று நானும் தொடர்ந்தேன். "வஸ் பயணம் பெரும் சங்கடமே" என்று பாட்டை அவரே முடித்து வைத்தார்.

நாங்கள் இருவரும் துண்டு துண்டாகத் தனித்தனியே செய்த செய்யுள் ஒரு கட்டளைக் கலித்துறையாய் அமைந்திருந்தது கண்டு மனம் மகிழலானோம். வடக்கும் கிழக்கும் இணைந்தது போன்ற இச் செய்யுள் எங்கள் இருவரையும் நண்பர்களாக இணைத்து வைத்துள்ளதை இங்கே நினைவு கூருகின்றேன். பாட்டை முழு உருவத்தில் இங்கே தருகின்றேன்.

'மனமும் விறைத்தது மார்பும் விறைத்தது மாதர்கன
தனமும் விறைத்தது தாங்காத வெப்பம் தகித்திடவா
சனமும் விறைத்ததாள் மேலாளை யேற்றச் சனமடைவி
சனமு முரைப்பதென் வஸ் பயணம் பெருஞ் சங்கடமே"

கல்லடி வேற்பிள்ளை அவர்களுக்கு மட்டக்களப்பிலே பல நண்பர்கள் இருந்தனர். அவர்களுள் வித்துவான் அ.சரவணமுத்தனை விசேடமாகக் குறிப்பிட வேண்டும். அவரும் அவர் போன்றவர். அவரும் இவர் போன்றவர். வித்துவானின் சனிவெண்பா என்னும் நூலுக்கு சாற்று கவி கொடுத்து அதை வெளியிட்டவர் நமது ஆசுகவியே என்பது எனது நினைவுக்கு வருகிறது. அந்திய காலத்தில் நமது ஆசுகவி சாத்துவிக குணசம்பன்னராய் வாழ்ந்திருந்தார்.

# பண்டிதர் மயில்வாகனனாரின் துறவுள்ளம் முகிழ்ந்தது எப்படி?

பண்டித மயில்வாகனனாரின் அறிவொளி யாழ்ப்பாணம் முழுதும் பரவலாயிற்று. வாசலில் வாகனங்கள் காத்து நிற்கும். ஏறிச் சென்று கோயில்களிலே பிரசங்கமாரி பொழிகிறார். என்னையும் உடன் கொண்டு செல்வார். சொற்பொழிவுகளின் தொகுப்புரைகளை முந்தியே எழுத்தில் எனக்குத் தந்துவிடுவார். பாடமாக்கிக் கொள்வேன். பண்டிதர் சொல்மழை பொழிந்தபின் எனது தூவானம் வீசும். நான் பேசப் பழகிய முறை இதுதான்.

இந்தச் சூழ்நிலையில் 1919ஆம் ஆண்டின் பிற்பகுதியில் யோகர் சுவாமிகள் திருவருட்பார்வை மயில்வாகனனாரின் கள்ளமில்லா உள்ளத்திலே பூரணமாகப் பதிந்துவிட்டது. மானிப்பாயிலுள்ள சில கனதனவான்கள் மீதும் அது விழுந்து விட்டது.

திருவாளர்கள் ஸி.என்.தேவராஜன், புறோக்கர் காராளபிள்ளை, சட்ட நூலறிஞர் மு.திருவிளங்கம், டாக்டர் எம்.எம்.குமாரசுவாமி முதலிய பிரமுகர்கள் மயில்வாகனனாரிடம் படையெடுத்து வருகிறார்கள். இவர்களின் வேண்டுகோளை ஏற்று மயில்வாகனனார் 1920இல் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபரானார்.

அங்கே பண்டிதர் செய்த சீர்திருத்தங்கள் மிகப் பல. உடலுரமும் உள்ளத்துறுதியும் வாய்ந்த ஒரு மாணவர் சமுதாயத்தை ஓராண்டினுள்ளே உருவாக்கிவிட்டார் அவர். அது பெரியதோர் சாதனை.

அங்கே சுப்பிரமணிய ஐயர் என்று ஓர் இளம் ஆசிரியர் இருந்தார். புவியியல், கணிதம் என்பவற்றில் மிகவும் நுண்ணறிவு படைத்த அவர் ஆன்மீக வழியிலே ஓரளவு தடுமாற்றம் கொண்டிருந்தார். இவரின் தந்தையார் மட்டுநகர் ஆனைப்பந்தி பிள்ளையார் கோயிலில் அப்போது பூசகரா யிருந்த சிவஸ்ரீ சின்னையர் என்பது எனக்கு ஞாபகம். இதனால் அவர்மீது எனக்கொரு அன்பு.

அவரின் மனநிலை ஒன்று; நிலைக்களம் வேறொன்று. அவரின் மனச்சார்பு கருமம் பற்றியது. அவரோ ஞானம் பேசுகின்றார். உத்தேச ஞானம் மாத்திரமே அவர் கண்டது. உள்ளுணர்வும் இல்லை. அனுபவ ஞானமும் இல்லை. இந்த நிலையில் இருபத்தொரு வயதுள்ள நான் இவர் பேசும் பேச்சுக்களைக் கேட்பது மாத்திரமல்ல; இவரோடு சமாளித்து நடந்துகொள்ள வேண்டிய பொறுப்பும் எனக்கு ஏற்பட்டு விட்டது.

ஐயர் சாதாரண பேர்வளியல்லர். அந்த நாளில் அதிதீவிர போக்குள்ள மாவட்ட வித்தியாதரிசியாயிருந்த வன்கைலன்பேக் என்பவரை மடக்கிய நிமிர்ந்த தலை அவர். ஐயர் மேல் வகுப்பிற் புவியியற் பாடம் படிப்பித்துக் கொண்டிருக்கிறார்.

வித்தியாதரிசி வகுப்பினுள் பிரவேசிக்கிறார். குறித்த பாடத்தைத் தமக்குப் படிப்பித்துக் காட்டும்படி ஐயரிடம் கேட்கிறார். ஐயர் வித்தியாதரிசியைப் பார்த்து, "உமது கேள்வி எனக்கு நூதனமாயிருக்கிறது. நான் படிப்பிக்கும் பாடத்தை விளங்கிக்கொள்ளும் அறிவு உமக்கு இருக்குமோ என நான் சந்தேகிக்கிறேன்" என்று ஏளனமாகக் கூறினார். ஒருவருக்கு அதிகாரத் திமிர். மற்றவருக்குத் தலைக்கெறுக்கு.

வித்தியாதரிசி சீறிப் பாய்ந்துகொண்டு அதிபரிடம் ஓடுகிறார். குற்றப் பத்திரிகை படிக்கிறார். அதிபர் சிரித்துக் கொண்டே அது ஒரு அரைப்பைத்தியம். பெரிய அறிவாளி. நாங்கள் அவரோடு மோதிக் கொள்வதில்லை எனச் சாதுரியமாகப் பேசி வித்தியாதரிசியைச் சாந்தப்படுத்தி அனுப்பி விடுகிறார்.

ஐயர் அதிபருடன் ஒரே வீட்டில் வசிப்பவர். தமது கையாலேயே சமைத்து சாப்பிட்டுக் கொள்வார். "நீதான் நான்: நான் தான் நீ; நீ செய்வது நான் செய்வது; நான் செய்வது நீ செய்வது" இவைதாம் ஐயரின் வேதாந்த மகா வாக்கியம்; அனுபவ ஞானமில்லாத பேச்சு. "குட்டி வேதாந்தம் குடி கெடுக்கும்" என்னும் வேதாந்த அரிச்சுவடியும் அறியாத பருவத்தில் ஐயர் அத்துவித ஞானம் பேசத் தொடங்கி விட்டார்.

எனக்கும் ஐயருக்கும் நெருங்கிய நட்பு. நாங்கள் இருவரும் மட்டக்களப்பில் நாட்டிய யாழ்ப்பாணத்துப் பனங் கொட்டைகள். இந்த ஆதி மூலம் எனக்கும் தெரியாது.

ஒருநாள் ஐயர் சமையலறையிலே காலைச் சாப்பாட்டுக்காக உப்புமா தயாரித்து வைத்து விட்டுக் குளித்துக் கொண்டு நிற்கிறார்.

குளிப்பு முடியுமுன் நான் அவசர அவசரமாக அடுக்களைக்குள் புகுந்து ஐயர் சமைத்த உப்புமாவை ஒரு துளியும் விடாமல் அடியோடு அப்படியே சாப்பிட்டுவிட்டுப் பேசாமல் வெளியே வந்து மேசையில் உட்கார்ந்து கொண்டேன்.

ஐயர் குளித்து அனுட்டானம் முடித்துக் கொண்டு சமையலறையை நோக்குகிறார். மேசையிலிருந்த நான் "ஐயா, எங்கே போகிறீர்கள்? கதைக்க இருக்கிறது; வாருங்கள்" என்று அழைத்தேன்.

"சாப்பிட்டு விட்டு வருகிறேன். சற்றே பொறுங்கள்!" என்றார்.

"சற்று முன்பு நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களே!" என்றேன்.

"இல்லையே" என்றார்.

"நீங்கள் குளித்துக் கொண்டும் அதே நேரத்தில் சாப்பிட்டுக் கொண்டும் இருந்தது நினைவில்லையா" என்றேன்.

"இதென்ன விந்தை" என்றார்.

"விந்தையில்லை; உண்மை" என்றேன். ஐயர் என்னைக் கூர்மையாக நோக்குகிறார்.

"ஐயா, நீங்கள் அடிக்கடி சொல்வதையே நான் இன்று நடைமுறையிற் செய்தேன். "நீ தான் நான்; நான் தான் நீ; நீ செய்வது நான் செய்வது; நான் செய்வது நீ செய்வது" என்றல்லவா சொல்வீர்கள்? இந்த மகா வாக்கியத்தின்படி உப்புமாவை நான் சாப்பிட்டு விட்டேன். நான் சாப்பிட்டது நீங்கள் சாப்பிட்டதற்குச் சரிதானே" என்றேன்.

ஐயர் உள்ளே சிரித்துக்கொண்டு, "நீ சரியான ஆளப்பா" என்று சொல்லிவிட்டு என் பக்கத்தில் சற்றே அமைதி கூடினார். அன்று காலை ஐயர் பட்டினி. குட்டி வேதாந்தம் பண்ணிய கோளாறு அது. வாய் வேதாந்தம் பேசுவோர் இதை அவதானித்துக் கொள்வது நன்று.

ஐயரை நான் இவ்வளவில் விடவில்லை ஒரு நாள் மாலை, விளக்கேற்றும் நேரம். வழக்கமாக விளக்கேற்றும் வேலையைச் செய்பவன் நான்தான். அதிபர் பண்டித மயில்வாகனனார், விறதர் மயில் என்னும் க.மயில்வாகனம். இவர் எட்டு முறை லண்டன் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சையெடுத்து, பி.எஸ்.ஸி (B.Sc) சிறப்புப் பட்டம் பெற்றுக் கலாசாலை அதிபராயிருந்து சில ஆண்டுகளின் முன் காலமானவர்.

முயற்சியுடையார் உயர்ச்சியடைவார் என்பதற்கு அவர் உதாரண

மாவார். கலைப்புலவர் நவரத்தினம், நமது சுப்பிரமணிய ஐயர் முதலியோர் சூழ்ந்திருக்கிறார்கள். விளக்குவைக்க வந்த நான் கண்ணாடிச் "சிமினி"யை வேணுமென்று கீழே போட்டு உடைத்து விட்டு, சிமினியைச் சுப்பிரமணிய ஐயர் உடைத்து விட்டார் என்று சிரித்துக் கொண்டே சொன்னேன்.

ஒருவருக்கும் விஷயம் விளங்கவில்லை. ஐயரின் வேதாந்த மகாவாக்கியங்களை நான் அங்கே எடுத்துக் கூறி விமர்சனம் பண்ணலானேன். பண்டிதர் மவுனமாயிருந்தார். மற்றையோர் புன் முறுவல் பூத்து ஐயரை நோக்கினர். ஐயர் அமைதி குழம்பவில்லை. நானும் புதுச் சிமினி கொண்டு வந்து விளக்கேற்றி வைத்தேன். அன்று தொடக்கம் ஐயருக்கும் படிப்படியாக அனுபவ சாதனையில் நாட்டமுண்டாயிற்று. இவற்றால் ஐயருக்கும் எனக்குமிடையேயுள்ள பேரன்பு ஒரு சிறிதும் பாதிக்கப்படவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றும் இரண்டு செய்திகளை இங்கே வெளியிட விரும்புகிறேன். ஒன்று சிலரறிந்தது. மற்றது ஒருவரும் அறியாதது. திருவருள் பல வேறு படிகளில் நின்று பக்குவ ஆன்மாக்களை ஆட்கொள்ளுகின்றது. இது இரண்டு உலக இன்பங்களைப் பண்டிதருக்குக் காட்டி மறைக்கச் சித்தங் கொண்டது.

கொழும்பில் அப்போது நடந்து கொண்டிருந்த ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலே அதிபரும் பண்டிதரின் ஆசிரியருமாயிருந்தவர் திரு. இவான்ஸ் என்பவர். பின்னர் அவர் உதவி வித்தியாதரிசிப் பதவி வகித்தவர். பண்டிதரை விஞ்ஞான வித்தியாதரிசிப் பதவியை ஏற்க முன்வருமாறு அவர் கேட்டுக் கொண்டார். பண்டிதரும் சம்மதித்து விட்டார். ஏதோ சந்தர்ப்பவசத்தால் அது தட்டுப்படுகிறது.

மற்றது: ஒருநாள் பண்டிதரும் நானும் சாப்பிட்டுக் கொண்டிருக் கையில் என்னோடு இரகசியமாக, இன்ன பெண் பிள்ளை மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையிற் சித்தியடைந்துள்ளார். நாங்களிருவரும் சேர்ந்து வாழ்ந்தால் தமிழுக்கு அதிகம் தொண்டு செய்யலாம். திருவருட் குறிப்பு எதுவோ என்று கூறிக்கொண்டார். இது எங்கள் சாப்பாட்டு மேசைப் பேச்சளவிலேயே நின்று விட்டது. இவ்விரு சம்பவங்களாலும் மயில்வாகனனாரின் துறவுள்ளம் உறுதி பெற்று ஒருநிலைப் படலாயிற்று.

## சேர் பொன். இராமநாதனின் தந்தி கிடைத்தது: ஆனால் வேலை?

1921ஆம் ஆண்டளவில் நான் மட்டக்களப்புக்கு வந்து விட்டேன். எவ்வளவோ படித்தும் கையில் ஒரு கடதாசி (சேட்டிபிக்கற்) இல்லை. இதுவும் நன்மைக்குத் தான். இது இப்படியிருக்க மயில்வாகனனாரின் வாழ்க்கையிலே திடீரென்று ஏற்பட்ட திருப்பத்தை இனி நோக்குவோம்.

ஒரு பக்கம் யோகர் சுவாமி. மறுபக்கம் சுவாமி சர்வானந்தா. நடுவே பண்டிதர். இரு பக்கமும் திருவருட்சக்தி நிற்க அதனிடைப்பட்ட ஆன்மாபோல் ஆகிவிட்டார் அவர். இனி ஆள் இந்தப் பக்கமில்லை.

இந்நிலையில் 1922ஆம் ஆண்டு பண்டிதரின் வாழ்க்கையிலே பெரியதொரு நிறைவுண்டாயிற்று. பொறிகள் மனத்தின் வழி நிற்க; புத்தி ஆன்மாவுக்கு அரண் செய்து நிற்க; காலமும் இடமும் வாய்க்கப் பெற்றமையால், பண்டிதர் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் பதவியைத் துறந்து சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத் திருமடத்துத் திருக்கூட்டத்திற் சேர்ந்து பிரபோதசைதன்னியர் என்னும் பிரமசரியத் திருநாமமும் பெறலானார்.

இனி இங்கே எனது நிலையைச் சொல்கின்றேன். மயில் வாகனனாருக்கும் சேர்.பொன் இராமநாதனுக்கும் நெருங்கிய நண்புரிமையுண்டு. நான் வெறுங்கையோடு மட்டக்களப்புக்கு மீண்டது குறித்து அவர் என்மீது இரக்கங் கொண்டிருந்தது எனக்குத் தெரியாது. எனக்கு ஒரு வேலை கொடுக்கும் படி சேர் பொன்னிடம் அவர் சொல்லி வைத்திருந்ததும் எனக்குத் தெரியாது. ஒருநாள் அவசரமாக மண்டூருக்கு ஒரு தந்தி வந்தது. பிரித்துப் பார்த்தேன். "உடனே பரமேசுவரக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகக் கடமை ஏற்கவும். சேர் பொன். இராமநாதன்" என அந்தத் தந்தியிற் கண்டிருந்தது.

இந்த நற்செய்தி கண்ட வீட்டிலும் மகிழ்ச்சி; கேட்ட ஊரிலும் மகிழ்ச்சி. அவசர அவசரமாகக் கப்பலேறி யாழ்ப்பாணம் போய்க் கல்லூரி

அதிபர் சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்களிடம் தந்தியைக் கொடுத்தேன். “ஏற்கனவே சுப்பிரமணிய தேசிகரை இந்த இடத்துக்கு நியமித்து விட்டேன். இது எசமானுக்குத் தெரியாது. நான் அவர்களுக்கு அறிவிக்கிறேன். நீங்கள் போய் எசமானைச் சந்தியுங்கள்” என்று அவர் சொன்னார். இந்த “எசமான்” பாஷை எனக்குப் பிடிக்கவில்லை. இது அடிமைப் பாஷை.

நான் தந்தியையும் கொண்டு மருதனா மடத்துக்குப் போய் இராமநாதன் கல்லூரிக் காரியாலயத்தில் சேர் பொன்னிடம் தந்தியைக் கொடுத்தேன். அவர் தந்தியைப் பார்த்துவிட்டு, பண்டிதர் மயில்வாகனனார் உம்மைப் பற்றிப் பெரிதாகச் சொல்லி வைத்திருக்கிறார். ஒருவரை ஒருவர் அறியாமல் இந்தத் தவறு நடந்து விட்டது. பயணச்செலவைப் பெற்றுக் கொண்டு நீர் மட்டக்களப்புக்குச் செல்லும். சந்தர்ப்பம் வரும்போது அறிவிக்கிறேன் என்று அவர் கூறி விட்டார். இது எனக்குப் புதியதல்ல. எனது வாழ்க்கையில் எங்கும் இடையீடுதானே.

மட்டக்களப்புக்குத் திரும்ப எனக்கு மனம்வரவில்லை. மட்டுவில் சாவகச்சேரிப் பகுதியில் எனக்கு நண்பர்கள் அதிகம். சாவகச்சேரியில் இராஜ அரியரத்தினம் வீட்டில் விருந்தாளியாய் இருந்துகொண்டு வேலை விசாரிக்கலானேன். இராஜ அரியரத்தினம் அப்போது சின்னப் பிள்ளை. இன்று இந்தச் சிந்தாமணிப் பத்திரிகையின் ஆசிரியராயிருப்பவர் அந்தப் பிள்ளைதான்.

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை சைவ வித்தியாசாலையில் எனக்கு ஒரு இடம் கிடைத்தது. இந்த வாய்ப்பை எனக்களித்த நண்பர் நாகலிங்கம் என்பவரை நினைவு கூருகிறேன். சில மாதங்கள் சென்றதும் சாவகச்சேரி சங்கத்தானை இந்துக் கல்லூரியில் பண்டிதராகக் கடமை புரியும் சிறந்த வாய்ப்பினை நான் அடையலானேன். சங்கத்தானையிலே இளைஞர் தியாகராசா என்பவர் வீட்டில் சில காலம் தங்கினேன். தியாகராசாவின் மைத்துனர்களாகிய வேலுப்பிள்ளையும் இராமநாதனும் எனக்கு நண்பர்களாயினர். கைலாசபிள்ளை என்னும் இளைஞரும் பழக்கமானார்.

இந்துக் கல்லூரியின் மனேஜர் சி.தாமோதரம்பிள்ளை என்பார்: அவரின் மைத்துனர் பிரபல வர்த்தகர் வல்லிபுரம்; அவரின் மகன் சட்ட நூல்வல்லார் வீ.சீ. கனகரத்தினம்; அவரின் மைத்துனர் வீ.பாலசுந்தரம். இவர்களெல்லாம் எனக்குப் பலவகையிலும் உதவியவர்கள்.

இவர்களைவிட, துபாற்கந்தோர் வீதியில் வசித்து வந்த தம்பிப்பிள்ளை என்னும் வைத்தியரைப் பற்றி ஒரு சிறிது குறிப்பிட விரும்புகின்றேன். வைத்தியர் ஒரு மந்திரவாதியும், இரேகைச் சாத்திர நிபுணருமாவார். இவ்வளவு சரக்கு வைத்திருக்கும் இவர், எத்தனையோ பேரை அணுகித் தொட்டுத் தொழில் பார்க்கும் இவர் ஒரு நாளும் குளிப்பதோ, முழுகுவதோ கிடையாது.

முன்பு எப்பவோ ஒருநாள் நடுச்சாமவேளை இவர் சுடுகாட்டுக்குச் சென்று அங்கே தகனமாகிக்கிடந்த ஒரு பிரேதத்தின் சாம்பலை அள்ளி மேல் முழுவதும் பூசித் தேய்த்துக் கொண்டாராம். அன்று தொடக்கம் அவருக்குக் குளிப்பு அவசியமில்லாமற் போயிற்றாம். இது அவர் எனக்குச் சொன்னது. பிறர் சொல்லக் கேட்டறிந்த செய்தியல்ல. ஆளின் தேகம் தங்க நிறம்.

எனது புறங்கையில் நாகரேகையும், உள்ளங்கையில் இணைக் கயல்ரேகையும் இருப்பதாகக் கண்டு காட்டியவரும் அவரே. கோபம் வரும் வேளைகளிற் பிறருக்கு எதிராக வலது கையை உயர்த்தக் கூடாது என்று அவர் எனக்கிட்ட கட்டளையை நான் ஒரு போதும் மீறியதில்லை.

இந்தக் கட்டத்திலே மந்திரவித்தை சம்பந்தமாக நான் நேரே கண்ட இரண்டு சம்பவங்களை இங்கே எடுத்துக் கூறிவிட்டு இந்துக் கல்லூரிக்கு வருகிறேன்.

வண்ணார்பண்ணையில் ஒரு சைவர். அவர் படுத்து நித்திரை கொள்ளும்போது உடுப்பில் நெருப்புப் பிடித்துக் கொள்ளும். உடுப்பை உதறி எறிந்து விட்டுப் பக்கத்துக் கோயிலினுள்ளே ஓடிப்போய்ப் புகுந்து கொள்வார். வேறு உடை கொடுப்பார்கள். உடுத்துக் கொள்வார். அங்கே நெருப்புப் பிடியாது. படுத்திருக்கும் போதுதான் இந்த நெருப்பு விளையாட்டு. இதன் இரகசியந்தான் யாதோ?

இன்னுமொரு சைவர். இலையிலே சோறுகறிவைத்து இவர் பிசைந்து உண்ணத் தொடங்கியதும் கைக்கவளம் முழுதும் அவர் கண்ணுக்கு புழுவாக நெளியும். தண்ணீர்க் கிண்ணத்தை உடுத்துக் குடிப்பதற்கு அண்ணாந்தால் முழுதும் புழுவாகக் கொதிக்கும். இதென்ன பாவம்?

இதைக் கண்டதும் எனக்குப் பாரதந்தான் நினைவுக்கு வந்தது. துரியோதனன் உண் கலத்தில் உணவுண்ணக் கையை வைத்தால்

உணவு முழுதும் புழுவாய்த் துடிக்குமாம். கன்னன் வந்து கைவைத்தால் உணவு உணவாகவே கண்ணுக்குத் தோன்றுமாம். இதனால், சீவிய காலம் முழுதும் துரியோதனனும் கன்னனும் ஒரே கல்லையிற் கூட்டாக உண்டு உயிர் கொடுக்கும் கூட்டாளிகளாக வாழ்ந்ததன் இரகசியந்தான் யாதோ? நமது தம்பிப்பிள்ளை வைத்தியர் மந்திரத்தை நன்மைக்கேயன்றித் தீமைக்கு உச்சரித்தது கிடையாது.

இப்போது தியாகராசாவின் வீட்டை விட்டுச் சாவகச்சேரி இந்து வாலிபர் சங்கத்துக்கு வந்து விட்டேன். இனித்தான் எனது வாழ்க்கையிலே பெரும் புயல் அடிக்கப் போகிறது. நான் எட்டு வயதுப் பாலகனாயிருந்த போது மட்டக்களப்பிலே 1907ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஒன்பதாந் தேதி சனிக்கிழமை மாலை அடித்த பெரிய புயலிலும் பார்க்க இது பெரும் புயல்; வாழ்க்கைப் புயல்.

**'ஆயிரத்துத்தொள் ளாயிரத் தேழாம்**
**ஆண்டு பங்குனி ஒன்பதிலே**
**மாயிருசனி வாரத்து மாலையில்**
**மானே புயல்தான் வந்தபடி"**

**என்னும் பாடல் இதை நினைவூட்டி நிற்கிறது.**

இந்து வாலிபர் சங்கத்தில் விடுதி. சைவப் பொன்னம்பலம் வீட்டிலே சாப்பாடு. இரவிலே சற்று நேரத்தோடுதான் சாப்பிடப் போவேன். நேரஞ் சென்று போய் மற்றவர்களுக்கு வசதிக் குறைவை உண்டாக்கப் படாது என்பதே எனது எண்ணம். சைவப் பொன்னம்பலத்துக்கு ஒரு சகோதரியார். ஐம்பது வயதிருக்கும். அம்மையாரின் கணவர் சதாசிவம் என்பவர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் மாணாக்கர். ஏதோ குடும்பப் பிரச்சினை காரணமாகச் சதாசிவம் எப்பவோ பிரிந்து போய் விட்டார்.

ஒருநாள் அம்மையார் எனக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டே என்னைப் பார்த்து இங்கே ஒரு புத்தகக் கட்டுக் கிடக்கிறது. நீங்கள் பார்த்து விரும்பினால் விலைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். சரியென்று சொல்லிக்கொண்டே நான் உள்ளே சென்று புத்தகக் கட்டை அவிழ்த்துப் பார்த்தேன். அருமையான தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களும், கையெழுத்துப் பிரதிகளும் இருக்கக்கண்டு அளவில்லா மகிழ்ச்சி கொண்டேன். கையெழுத்துப் பிரதிகள் இராமாயண உரைச் செல்வம். அம்மையாருக்கு நாற்பது ரூபா கொடுத்துவிட்டு அப்படியே முழுவதையும் கட்டோடு பெற்றுக்கொண்டேன்.

அச்சில் வெளிவந்த இராமாயணப் புத்தகங்களில் இல்லாத உரைச் சித்திரங்கள், படிப்போர்க்கு மெய்ப்பாடு உண்டாகக் கூடிய உரை நுணுக்கங்கள், கதாபாத்திரங்களின் குணாகுணங்களை அறிந்து கொண்டு அவர்கள் கூறிவைத்த சொற்களுக்கு அதற்கிணங்க உரை கண்ட அகநூற் புலமை முதலிய சிறப்புகள் அமைந்த இந்தக் கையெழுத்துப் பிரதிகளால் எனது இராமாயண விரிவுரைகள் அழகும், இனிமையும், தெளிவும் பெறலாயின. இந்தக் கையெழுத்துப் பிரதிகளைப் பண்டிதமணியும், பண்டிதர் இராஜஐயனாரும் படியெடுத்துக் கொண்டு படித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓவியப் புறாவைக் கண்டு உயிர்ப் புறா காதல்!

### கம்பனின் கவியோவியம் ஏற்படுத்திய சர்ச்சை

முதலியார் சிவகுரு என்னும் பிரமுகர் இந்து வாலிபர் சங்கத்தின் காரியதரிசியாய் இருந்தார்.

சாவகச்சேரியில் அப்போது இரண்டு தமிழறிஞர்கள் இருந்தார்கள். ஒருவர் ச. பொன்னம்பலபிள்ளைப் புலவர். இவர் இராமநாதன் கல்லூரியின் தமிழ்ப் பண்டிதர். இராமநாத மான்மியம், அருணாசல மான்மியம் என்னும் செய்யுள் நூல்களை இயற்றியவர்.

மற்றவர் வித்துவான் ந.பொன்னம்பலபிள்ளை. இராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்துக்கு உரை எழுதி அச்சிட்டவர். சங்கத்தானை இந்துக் கல்லூரியில் இருவரும் பண்டிதர். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மைத்துனர். வாலிபர் சங்கத்துக்கும் வருவார்கள்.

இந்துவாலிபர் சங்கத்தில் இராமாயணப் படிப்பைத் தொடங்கி நடத்தினால் நல்லது எனப் பல அன்பர்கள் என்னை வேண்டிக் கொண்டனர். இந்த வேண்டுகோளைக் காரியதரிசிக்கு நான் தெரிவித்தேன். அவரின் அனுமதியும் ஆதரவும் கிடைத்தன. எல்லாருக்கும் வசதியாய் இருக்கும் பொருட்டு ஞாயிற்றுக்கிழமை தோறும் படிப்பை நடத்தலானோம். ஒருவர் படிக்க நான் பயன் சொல்வேன். வேறு சிலரும் கலந்து கொள்வார்கள். நல்ல சனக்கூட்டம் வித்துவான் ந. பொன்னம்பலபிள்ளையும் முன்வரிசையில் இருப்பார். அவர் சற்றே வயது முதிர்ந்தவர். அறிவிலும் முதிர்ந்தவர்.

ஒரு நாள் நான் பயன் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஓர் உயிரோவியம் பற்றிய வருணனைச் செய்யுள் அது. அதன் பொழிப்பை இங்கே தருகிறேன்.

பெடையும் சேவலுமான இரண்டு புறாக்கள் ஒரு மரக்கிளையில் இருக்கின்றன. அவற்றின் கண்ணுக்குத் தெரிந்த தூரத்தில் உள்ள ஒரு மேல்மாடிச் சுவரிலே ஓவியப் புறாவொன்று காட்சியளிக்கிறது. அது

ஒரு பேடைப் புறா. மரக்கிளையிலிருந்த சேவற்புறாவுக்கு ஓவியப் புறாவின் மீது ஒரு தலைக் காமம் உண்டாகிறது. அது தன் பேடையைப் பிரிந்து பறந்து சென்று ஓவியப் பெடையை உயிர்ப்பெடையென்று, மயங்கிய மயக்கம் தலைக்கேற அதன் பக்கத்தே உட்கார்ந்து கொள்கிறது. புறாப் பாஷையிலே காதற்கதை பேசுகிறது. உயிர்ப்புமில்லை. அசைவுமில்லை. உடன்பாடுமில்லை. மறுப்புமில்லை.

இதை மரக்கிளையில் அவதானித்துக் கொண்டிருந்த பெடைப் புறா; தன்னுடைய சேவலுக்கு வேறொரு பெடையுடன் தகாத சம்பந்த மிருக்கிறதென்று பிழையாக விளங்கி, அதனோடு ஊடல் கொள்கிறது. இது சேவலுக்குத் தெரியாது.

ஓவியப் புறாவின் பக்கத்திலிருந்த சேவல் தன் பிழையையுணர்ந்து கொண்டு தன் பெடையை நோக்கிப் பறந்து வருகின்றது. பெடை இருந்த கிளையை விட்டு மேலே வேறொரு கிளைக்கு மாறுகிறது. பெடையைத் தன் பக்கத்தே வருமாறு சேவல் கூவி அழைக்கிறது. பெடைப் புறா மேலும் உயர உயரச் சென்று மறைந்து ஒதுங்கிக் கொள்கிறது. இதுதான் ஓவியனின் கைவன்மை; உயிரோவிய மென்பதற்குக் கம்பன் தரும் கவியோவியம்.

இந்தப் பயனைச் சொல்லிக் கொண்டு வந்து சேவல் கூவ என நான் வாயெடுக்க; வித்துவான் பொன்னம்பலபிள்ளை இடையே கைமறித்து நில்லு நில்லு; பிழையாகப் பயன் சொல்லாதே. நில்லு என்று தடை விதித்தார்.

சரி நிற்கிறேன். உங்கள் உரையைச் சொல்லுங்கள் என்றேன். பெடை கூவச் சேவல்வராது ஒதுங்கும் என்றார். ஐயா பண்டிதர் அவர்களே, பெடை கூவுதல் மரபன்று. உங்கள் இந்த உரை மரபுவழு. பெடை கூவச் சேவல்வராது ஒதுங்கு மென்பது உலக நடைமுறைக்கும் பொருந்தாது. எத்துக்கு மூத்தீர்? என்று கூறிக்கொண்டு நான் சொல்லும் உரையே சரி; நீங்கள் சொல்லும் உரை பிழையென்று எதிர்மறுத்தேன்.

வித்துவான் விடவில்லை. படிப்பை இவ்வளவில் நிறுத்து என்று பிடிவாதம் செய்தார். நான் படிப்பை நிறுத்திக் கொண்டு இதற்கு ஒரு மத்தியட்சர் வேண்டும்; இதைச் சபை முடிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன்.

அடுத்த ஞாயிற்றுகிழமை ச. பொன்னம்பலப்பிள்ளைப் புலவரின் மத்தியட்சத் தீர்ப்புக்கு இதை விடுவோம் என சபையோர் தீர்மானித்தனர்.

நான் ஒரு ஆலோசனை சொன்னேன். அடுத்த ஞாயிற்றுக் கிழமை புலவர் வந்ததும் நாம் சொன்ன உரைகளை அவருக்குச் சொல்லாமல், பாட்டை மாத்திரம் சொல்லி விட்டு அவர் சொல்லும் உரையைக் கேட்போம். அதையே முடிந்த தீர்ப்பாக ஏற்போம். இந்த எனது ஆலோசனையை எல்லாரும் ஏற்றுக்கொண்டனர். புலவர் நமது வித்துவானின் மைத்துனர் என்பது நமது வாசகநேயர்களுக்கு ஞாபகமிருக்கட்டும்.

அடுத்த ஞாயிறு வந்தது. நாங்களும் கூடினோம். புலவரும் வந்தார். பாட்டைச் சொன்னோம். எனது உரையைப் படம் பிடித்தது போலப் புலவர் உரை சொல்லிவிட்டு ஆசனத்தில் அமர்ந்தார். சபையில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.

இந்தச் சந்தடியின் மத்தியிலே நமது வித்துவான் ந.பொன்னம்பல பிள்ளை எழுந்து மத்தியட்சரைப் பார்த்து மட்டக்களப்பானோடு சேர்ந்து நீயும் என்னை அவமதித்துவிட்டாய் என்று சொல்லிக்கொண்டே சபையை விட்டு வெளியேறினார். இராமாயணப் படிப்புத் தொடர்ந்து நடைபெறலாயிற்று. சம்பந்தப்பட்ட கம்பராமாயணச் செய்யுளை இங்கே தருவது பொருத்தமாகுமென நினைக்கின்றேன்.

**'தாவில்பொற் தலத்தில்நற் தவத்தினோர்கள் தங்குதாள்**
**பூவுயிர்த்த கற்பகப் பொதும்பர்புக் கொதுங்குமால்**
**ஆவியொத்த சேவல்கூவ அருகுவந் தணைந்திடாது**
**ஓவியப் புறாவின்மா டிருக்க ஊடு பேடையே."**

யாழ்ப்பாணத்து நல்லறிஞர்கள் உண்மையறிவுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் என்பதை இங்கே கூறிக்கொள்கின்றேன். பொன்னம்பலப் புலவர் என்னைக் கண்டு கொண்டார். என்னில் அவருக்கு மனம் பதிந்துவிட்டது.

சாவகச்சேரியில் இன்னுமொரு பெரியாருடன் எனக்குப் பழக்கம். அவர் ஒரு சட்டநூல் அறிஞர். பெயர் வேலுப்பிள்ளை. வாரியுடையாரின் பேரர். அன்னாருக்கு இரண்டு ஆண்பிள்ளைகள். ஒருவர் குமாரசுவாமி; மற்றவர் சந்திரசேனன். இருவரும் நான் தூக்கி வளர்த்த பிள்ளைகள். தாயின் பேரை மறந்து போனேன். பிற்காலத்தில் குமாரசுவாமி பேர் பெற்ற நியாயவாதியாய்; சட்டசபைப் பிரதிநிதியாய், உதவி அமைச்சராய் உயர்ச்சி பெற்றுச் சாவகச்சேரித் தொகுதியைத் திருத்தி அமைத்த கருமவீரர். சந்திரசேனன் கல்ஓயா அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளராக உயர்பதவி வகித்தவர்.

நான் சாவகச்சேரியில் இருக்கும்போதே வேலுப்பிள்ளை அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தமையால் அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரது அந்தியேட்டிக் கிரியைக்கு இரண்டு வாரம் இருக்கையில் பொன்னம்பலப் புலவர் என்னைத் தேடி வருகிறார். வேலுப்பிள்ளை அவர்கள் மீது நான் சரமகவி பாடுகிறேன். நீங்களும் சில செய்யுள் செய்து தரவேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டார். பாடிக் கொடுத்தேன். ஒன்றை மாத்திரம் இங்கே தருகின்றேன்.

**'பாராளும் வாரி உடையான்**
**மகன்மகன் பார்க்குயிராம்**
**காராளர் தங்குலக் கோமானென்**
**நாதனைக் கண்டினியென்**
**நீராமுங் கண்ணும் துயராமும்**
**நெஞ்சமும் நீங்கலென்றோ**
**தாராளுங் கொன்றைத் தனிமார்**
**பருட்சிவ சங்கரனே."**

பொன்னம்பலப் புலவர் கேட்குமளவுக்கு கலைமகளின் கடாட்சம் எனக்குக் கிடைத்துவிட்டது ஒரு பெரும் பேறாகும்.

சாவகச்சேரியில் இன்னுமொரு சின்னப் பையன்; என் அன்பு மாணவன். இன்று இலங்கை முழுதும் பேர்பெற்ற பெரிய நியாயவாதியாய் விளங்கிக்கொண்டிருக்கும் சுப்பையா சரவணமுத்துவை நினைக்க நினைக்க நானடையும் பெருமைக்கு அளவில்லை. மட்டக்களப்புக்கு வரும்போதெல்லாம் என் வீட்டுக்கு வந்து மரியாதை செலுத்திச் செல்கின்ற சிறிய உருவமுள்ள இந்தப் பெரிய பண்பாளரைச் சாவகச்சேரியைப் பற்றிச் சொல்லும்போது சொல்லாமல் விடமுடியுமா?

அப்போது சாவகச்சேரியில் அருளம்பலம் என்னும் ஓர் "அப்போதிக்கரி" இருந்தார். அவர் உடுவிலைச் சேர்ந்தவர். கவிஞர் சுவபாக்கியம்பிள்ளை அவர்களைப் பற்றி எனக்கு முதல் முதல் சொன்னவரும் அவரே. அவர் ஒரு தமிழ்ப்பிரியர். உவேல்ஸ் இளவரசர் வின்சர் கோமகன் இலங்கைக்கு வந்த போது அவர்மீது பல கவிஞர்கள் பாடிய இயன்மொழி வாழ்த்துப் பாடல்களைப் படித்துப் பார்த்துப் பரிசுக்குரிய பாட்டைத் தெரிந்து கொடுத்த மகாகவிஞர் சுவபாக்கியம்பிள்ளை அவர்களை எனக்குப் பழக்கமில்லை. பண்டிதர் மயில்வாகனனாருக்கு நல்ல பழக்கம்.

இங்கே ஒரு முக்கிய சம்வத்தைக் குறிப்பிடும் பொருட்டே அருளம்பலத்தின் பெயரை நினைக்கிறேன். அப்போது "தில்லை மண்டூர் முருகர் மும்மணிக்கோவை" என ஒரு சிறு பிரபந்தம் பாடி நான் அதைக் கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்தேன். அதைப் படித்து மகிழ்ந்த அருளம்பலம் தமது வீட்டில் உள்ளவர்களுக்குப் படித்துக் காட்டிவிட்டுக் கொண்டு வருவதாக எடுத்துச் சென்றவர் கைசோர விட்டுவிட்டார். இப்படி எத்தனையோ இழப்புகள்.

# தீண்டாமையை எதிர்த்ததால் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பம்.

இனித்தான் பெரிய சம்பவம் காத்திருக்கிறது. நான் முன்பு கூறிய பெரும் புயல் அடிக்கும் சூழ்நிலை உருவாகப் போகிறது. சாவகச்சேரியிலே தாழ்த்தப்பட்ட குலத்திற் பிறந்து, தன் முயற்சியால் உயர்ச்சியடைந்த ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். தூய்மையான உடை; அடர்ந்து வளர்ந்த தாடி; திருநீற்றுப் பூச்சு; சந்தனப் பொட்டு; உருத்திராட்ச மாலை; தவமுனிவர் போன்ற தோற்றப் பொலிவு.

நாதசுரம், வீணை, வயலின் ஆகிய இசைக் கருவிகளில் வல்லவர். சைவசித்தாந்த சாத்திரப் பயிற்சியும் உடையவர். இவர் பெயர் ஆறுமுகம். இவரது மகன் பெயர் அப்பாத்துரை. மகனும் வயலின் வாசிப்பதில் வல்லவர். இசை பயிற்றுவதால் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்.

ஆறுமுகப் பெரியார் என்னைப் பற்றி ஏதோ அறிந்து கொண்டு இந்து வாலிபர் சங்கத்துக்கு அடிக்கடி வருவார். அவர் வரும்போதெல்லாம் நான் எழுந்து வணக்கம் செலுத்தி வரவேற்று, ஆசனமளித்து உபசரித்து உரையாடி மகிழ்ந்து அவரை வழியனுப்பி வைப்பது வழக்கம். யாழ்ப்பாணத்தில் அந்தக்காலம் இப்படிச் செய்வது பெருங்குற்றமாகும். ஆரோ போய்க் காரியதரிசிக்குச் சொல்லிவிட்டார்.

ஒருநாள் முதலியார் சிவகுரு அவசரமாக சங்கத்துக்கு வந்து கொண்டிருக்கிறார்; முகம் சரியில்லை. அவர் என்னைப் பார்த்து "நீங்கள் இங்கே பள்ளர் பறையருக்கெல்லாம் கதிரை கொடுத்து விடுவீர்கள் போல் தெரிகிறது. உமது புரட்சிக்கு இது இடமல்ல. இனிமேல் இந்த வழக்கத்தை வைத்துக்கொள்ள வேண்டாம்" என்று கடிந்து கொண்டார்.

இப்படிச் சொன்னது எனக்குப் பிடிக்கவில்லை. நான் சமத்துவவாதி. வாய் வேதாந்தம் பேசும் பேர்வழியல்ல. நான் முதலியாரைப் பார்த்து

“நமக்குள்ளே ஒழுக்கங் கெட்டுப் பள்ளராய் எத்தனைபேர் வாழ்கிறார்கள் என்பதை நாம் பார்ப்பதில்லை. அவர்களைத் திருத்த நினைப்பதில்லை. பள்ளர் குலத்திற் பிறந்து ஒழுக்கத்தால் உயர்குலமான நல்லோரை அவமதிக்கும் பழக்கம் பற்றி நாம் பெருமைப்படுகிறோம். இந்த வீண் பெருமை நம்மை விட்டு ஒழிய வேண்டும்.” இவ்வாறு அழுத்தமாகக் கூறினேன். முதலியார் ஏதோ நினைத்துக் கொண்டு போய்விட்டார். காலம் அதை வெளிப்படுத்தும்.

ஆறுமுகம் நல்ல வயதாளி. சில மாதங்கள் சென்றதும் அவர் இறந்துவிட்டார். அமைதியாக நடந்த மரணச் சடங்கில் நானும் கலந்து கொண்டு ஆறுதல் மொழி கூறினேன். சில நாள் கழிந்து மகன் அப்பாத்துரை என்னிடம் வந்து, “நீங்கள் அப்பாவுடன் நல்லாயிருந்தவர். அவரின் நினைவாகச் சில பாடல்கள் பாடித்தர வேண்டும். எங்களுக்கு ஆறுதலாயிருக்கும்” என்று வேண்டிக் கொண்டதும் பத்து வெண்பாக்கள் பாடிக் கொடுத்தேன்.

ஒரு வெண்பாவை இங்கே தருகின்றேன். எனது வாழ்க்கையிலே பெரும் புயலடிக்கச் செய்த இந்தப் பாட்டை நான் ஒரு நாளும் மறப்பதில்லை.

**“ஒழுக்கத் துயர்குலமாம் ஓங்குபுக முண்டாம்**
**இழுக்கத் திழிகுலமாம் என்றே - விழுப்பத்து**
**நூற்குலத்தை யெல்லாம் நுணுகியறிந் தாறுமுகன்**
**மேற்குலத்த னானான் விரைந்து.”**

இந்த பாட்டுக்கள் அச்சாகி வெளிவந்ததுதான் தாமதம் முதலியாரும் இந்து வாலிபர் சங்க நிருவாகிகளும் முண்டியடித்துக் கொண்டு வந்து என்னை இந்து வாலிபர் சங்கத்திலிருந்து வெளியேற்றி விட்டார்கள். இதுதான் அரை நூற்றாண்டின் முன்பிருந்த யாழ்ப்பாணச் சமூக நிலை. மட்டக்களப்பில் இந்த ஏற்றத்தாழ்வு கிடையாது. மட்டக்களப் பின் இந்தச் சமூக வாழ்க்கை நிலை தென்னகத் தமிழ் மக்களும் தெரிந்துகொண்ட செய்தியாகும்.

1966ஆம் ஆண்டு ஆவணி மாதம் முப்பதாந் தேதியன்று செந்தமிழ்ச் செல்வர், வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்களின் மணிவிழாவைக் கொண்டாடும் முகமாக மட்டக்களப்பு மக்கள் அளித்த வரவேற்பு வைபவத்தில் என்னாற்பாடி அன்னாருக்கு வழங்கப்பெற்ற வாழ்த்துமடலில் இச்செய்தி இடம்பெற்றுள்ளது. அதைக் குறிப்பின் பொருட்டு இங்கே தருகின்றேன்.

**" கோயிலிலும் பள்ளி**
**குளங்களிலும் நீர்பெருகிப்**
**பாயும் நதியில்வயற்**
**பண்ணையிலும் - போயொருங்கோர்**
**தாய்வயிற்றுப் பிள்ளைகள்போல்**
**சார்ந்துசம மாயெவரும்**
**நேயமுடன் வாழும்**
**நிறைநாடு - தூயமனச்**
**சிட்டர் புகழும்**
**திருநாடு செந்தமிழ்வாழ்**
**மட்டக் களப்பென்னும்**
**மாநாடு "**

நான் வெளியேறியதைப் பற்றிய கவலை எனக்கில்லை. விசாலமான இந்த உலகத்திலே மக்கள் பலர் ஏன் ஒடுக்கமான கொள்ளையுடன் வாழ்கிறார்கள்? என்பது பற்றிய கவலைதான் எனக்கு. இராஜ அரியரத்தினம் வீட்டில் வசித்துக்கொண்டு அவரின் தாய்மாமன் கவிஞர் மா. பீதாம்பரனுடன் கூடித்திரியலானேன். வெளிப் பார்வைக்கு எனது போக்கு ஒருமாதிரி எனது உள்நோக்கமோ வேறுபட்டது.

சம சந்தர்ப்பம், சமத்துவம், சமரசம் என்னும் மூன்று மொழிகளும் எனது ஜீவமந்திரமாகிவிட்டன. ஒரு சமத்துவ சமுதாயத்தைக் காண முடியாதா? அதில் நான் ஒரு அங்கமாயிருக்கும் நாள் ஒன்று எனக்கு வராதா? என்ற சிந்தனையில் நான் ஆழ்ந்துவிட்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இரண்டு பெரியாரின் நட்பு எனக்குத் தற்செயலாகக் கிடைத்தது. ஒருவர் ஞானகலாநிதி ஐசக் தம்பையா; மற்றவர் எட்வேட் மேதர். இருவரும் என்னை அழைத்துக் கொண்டு சாவகச்சேரியில் கனம் ஜே. கே. சின்னத்தம்பிப் போதகரிடம் போய் எனது மனநிலை மாற்றத்தை அன்னார்க்குச் சொன்னார்கள். அவர் என்னைச் சமாதானப்படுத்தி, "இங்கே எங்கள் மத்தியில் எல்லாரும் சமம். பள்ளருமில்லை, பறையருமில்லை. சமத்துவ சமுதாயமாக நாங்கள் வாழ்கின்றோம். எங்களோடு சேர்ந்தால் உங்கள் நோக்கம் நிறைவேறும். நீங்கள் எங்கள் சகோதரர்" என்றார்.

போதகரின் பேச்சு எனக்குப் பிடித்துக் கொண்டது. மருள்நீக்கியார் சமணர்களுடன் சேர்ந்துகொண்டது போல நான் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து கொண்டேன். மிகவும் கவர்ச்சிகரமான சில சம்பவங்களை வாசக நேயர்கள் இனித்தான் படிக்கப் போகிறார்கள்.

எனக்கு சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதர் வேலை கிடைத்தது. இந்துக் கல்லூரியில் நின்றும் வெளியேறிவிட்டேன். ஆசிரியர் ஜே. கே. சின்னத்தம்பி அவர்களின் வீட்டில் எல்லா வசதிகளுடனும் வசிக்கலானேன். இந்த எதிர்பாராத சம்பவம் யாழ்ப்பாணம் முழுவதும் பரவி மட்டக்களப்பிலே பெரும் கலக்கடியை உண்டாக்கிவிட்டது.

எத்தனையோ பல தூண்டுதல்களுக்கும், வேண்டுதல்களுக்கும் இடையில் நான் அகப்பட்டுக்கொண்டேன். மட்டக்களப்பிலிருந்து எனது தம்பி சிதம்பரப்பிள்ளையும் வந்துவிட்டார். அவர் சி. க. சகிதம் வந்து வீட்டிலே தந்தையார் முதலியாரின் ஆறாத்துயரத்தையும், நாட்டில் மக்கள் அடைந்துள்ள கவலையையும் கண்ணீர்விட்டு வாய் தழுதழுத்துச் சொல்லி என்னை மட்டக்களப்புக்கு வருமாறு எவ்வளவோ மன்றாடியும் இந்தப் பைத்தியத்துக்கு இரக்கம் வரவில்லை. தம்பி மனமடிவுடன் ஊர் திரும்பிவிட்டார். தம்பியார் இன்று மண்டூரில் பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளராய், சமாதான நீதிபதியாய் நல்மதிப்புடன் வாழ்ந்து வருகின்றார் என்பதையும் இங்கே குறிப்பிடுவதில் மகிழ்ச்சி கொள்கின்றேன்.

கிறிஸ்தவர் மத்தியிலே இங்குமொரு தருமசேனர். கிறிஸ்தவ வேதாகமத்தைக் கரைத்துக் குடித்து ஏப்பமிடத் தொடங்கிவிட்டேன். புதுப்புதுக் கருத்துக்களை வெளியிடலானேன். எல்லாத் தேவாலயங்களிலிருந்தும் அழைப்பின் மேல் அழைப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அங்கெல்லாம் சென்று பிரசங்கமாரி பொழிந்து கொண்டிருக்கின்றேன். குருபீடத்தில் ஏறி நின்று பேசுவதற்கு மாத்திரம் அனுமதியில்லை.

இந்த நிலையில், 1923 பிற்பகுதியில் என்னைப் பசுமலையிலுள்ள வேத சாத்திர கலாசாலையில் இரண்டு வருடம் பயிற்சிக்காக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

பசுமலையென்பது மதுரைக்கும், திருப்பரங்குன்றத்திற்கும் இடையிலுள்ள ஒரு சிறிய நகரம். அமெரிக்க மிஷனின் அரண் போன்றது. அங்கே ஞானகலாநிதி பனிங்கா என்னும் அமெரிக்கப் பெரியார் அதிபராயிருந்தார். கலாசாலையில் எனக்குப் படிக்கும் வேலை மிகக் குறைவு. திருச்சபைச் சரித்திரம் மாத்திரம் படிப்பேன்.

வந்தது நத்தார்ப் பண்டிகை. கலாசாலை விரிவுரையாளர்களுள் ஒருவரான கனம் மாசிலாமணிப் போதகர் என்னைக் கூப்பிட்டுக் கிறிஸ்தவ ஜயந்தி கீதங்கள் சில பாடித் தருமாறு கேட்டுக் கொண்டார். உடனே கிறிஸ்து திருவவதார கீதங்கள் என ஒரு சிறு பிரபந்தம் பாடிக் கொடுத்தேன்.

அது அச்சு வாகனமேறி இந்தியா, பர்மா, இலங்கை முழுவதும் பிரபலம் பெற்றது. பிரதி கைவசமில்லை. மாதிரிக்கு இதோ ஒரு கீதத்தின் முதற் பகுதியை நினைவிலிருந்து தருகின்றேன்.

**“பூலோகந் தனிற்பிறந்தாரே - பரனாரே**

**மேலோகத்தின் மேன்மைவிட்டு**

**மிகுமதிசய சுதனென இதோ - பூலோகந்**

**வரத்தையும் வேதாட் சரத்தையும் கிர்பா**

**கரத்தையும் சுதந்தரத்தையும் தரப்**

**பரத்தையும் தேவ புரத்தையுமுயர்**

**தரத்தையும் துறந்திரட்சகரெனப் - பூலோகந்**

**வஞ்சமும் பிரபஞ்சமும் தீய**

**நெஞ்சமும் பவ நஞ்சமும் கெடக்**

**கொஞ்சமும்மினி அஞ்சலென்றுநற்**

**தஞ்சமும் பத கஞ்சமுந்தரப் - பூலோகந்”**

இப்படிச் சுவையான கீதங்கள் பல அந்தப் பிரபந்தத்தில் உள.

# விபுலாநந்தரும் நானும் இரு துருவங்களானோம்.

## பசுமலையில் கிறிஸ்தவம் வளர்ந்த வரலாறு.

புதிய சூழ்நிலையில் கிறிஸ்தவர்களின் மத்தியில் எனக்கு நல்ல செல்வாக்கு உண்டாயிற்று. இரட்சணியபுரம், திண்டுக்கல், ஈரோடு, கோயம்புத்தூர் முதலிய பல இடங்களுக்குச் சென்று விரிவுரைகள் நிகழ்த்தியதில் அங்குள்ள நல்லோர்களின் நட்பு எனக்குக் கிடைக்கலாயிற்று.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நான் புரட்சி செய்யத் தொடங்கி விட்டேன். அந்தநாளில் கிறிஸ்தவ சமூகத்தில் வேரூன்றியிருந்த மேல்நாட்டு ஏகாதிபத்திய மனப்பான்மையைக் களைவதே எனது புரட்சியின் நோக்கம்.

1923க்கும் 25க்குமிடையில் நிகழ்ந்த சம்பவங்களுள் சிலவற்றை இங்கு சொல்கின்றேன். நான் முன்பு குறிப்பிட்டுள்ள கிறிஸ்தவசபைத் துயிலுணர்ச்சியென்னும் நூல் இந்தக்காலப்பகுதியிலேதான் வெளிவந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த சபையிலே ஞான கலாநிதி பனிங்கா அவர்கள் தலைமையிலே இந்த நூல் அரங்கேறியது.

கிறிஸ்தவ சபையிற் செய்ய வேண்டிய பல சீர்திருத்தங்கள் பற்றி நூலிற் குறிப்பிட்டுள்ளேன். கலாநிதி ஸ்ரான்லி ஜோன் அவர்கள் இந்திய நோக்கில் கிறிஸ்தவம் என்னும் ஆங்கில நூல் இயற்றியுள்ளதும் எனக்கு ஆதரவளித்தது. கிறிஸ்தவம் ஒருபுறம், திருச்சபை ஒருபுறம் செல்வதாக நான் பலமாக அபிப்பிராயப்பட்டேன். எனது அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கும் ஒரு செய்யுளைக் குறித்த நூலிலிருந்து இங்கே தருகிறேன்.

**'சாட்சியாய் நின்று கிறிஸ்து மார்க் கத்தில்<br>
சமஸ்தசாதிளையும் அழைத்து<br>
மீட்சியாய் அவர்தம் அன்பினை தெரிவிக்கும்<br>
விதத்தினை உரைக்கிலீர் வீணே<br>
'சேட்சியா னிற்றி" எனவொரு வழியைத்<br>
தேடினீர் ஈதுலௌ கீக<br>
காட்சியே யன்றி மீட்சிதா னுண்டோ<br>
கழறுவீர் திருச்சபை யோரே."**

இந்த நூல் அரங்கேறி இரண்டொரு தினங்களாகவில்லை. பசுமலைச் "சேட்சி"னுள்ளே நூறாண்டு காலமாய் போடப்பட்டிருந்த எல்லா ஆசனங்களும் காலியாகிவிட்டன. வணக்க முறையில் இது முதல் புரட்சி.

வணக்கப்பாடல் முறையில் அடுத்த புரட்சி. ஆங்கிலத் தொனியிலும் ஆங்கில ராகத்திலும் தமிழ்பாடல்களைத் தமிழன் பாடுகின்ற தமிழிசைக் கொலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்னும் எனது தீவிர நோக்கம் இனி நிறைவேறப்போகிறது.

**"ஆடும் பாம்பு செயலடங்க**
**அடங்கா யானை மதமடங்கப்**
**பாடு மினிய இந்தியசங்**
**கீதம் பாடீர் துதிபாடீர்**
**ஓடும்மனத்தை ஒருநிலையில்**
**ஒடுக்கீர் கதியை உறுவதெங்ஙன்?**
**வீடும் கதிக்கே செல்லாது**
**விரைந்து வாரும் சபையோரே"**

படிப்படியாகச் "சேட்சு"களில் தமிழிசை இடம்பெறலாயிற்று. பாளையங்கோட்டை மகாகவி கிருஷ்ணபிள்ளை, யாழ்ப்பாணம் கனம் அப்பாப்பிள்ளைப் போதகர் முதலியாரின் பாடல்களுக்கு முக்கியத்துவம் கிடைத்தது.

அடுத்த புரட்சி அகில இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகள் சம்பந்தமானது. இந்திய நோக்கில் கிறிஸ்தவ வேத வியாக்கியானம் என்னும் பொருள் பற்றிய கட்டுரைப் பரிசுப்போட்டி. எனது கட்டுரையே முதற்பரிசு பெற்றது. பரிசுக்குழுவின் தலைவர் கலாநிதி அப்பாசாமி அவர்கள் ஒரு கால் பசுமலைக்கு வந்தபோது என்னை நேரே பார்த்துப் பாராட்டியதுடன் எனது விஷயத்தில் தமது அக நூலறிவு தம்மை ஏமாற்றிவிட்டது என்றும் கூறினார். அன்னார் கூறிய மதிப்புரை எனது தமிழ்க் குரவர்களுக்கே உரித்தாகுக.

இருபத்துநான்கு வயதுள்ள என்னை அவர் சென்னையிலிருந்து கொண்டு இந்தக் கட்டுரை ஆசிரியர் நாற்பத்தைந்து வயதுடைய வராயிருப்பார் எனக்கருதியே இந்த ஏமாற்றமாகும். டாக்டர் அப்பாசாமி அந்நாள் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் பதிப்பாசிரியராவார்.

அடுத்து கோயம்புத்தூர் எழுச்சி மகாநாட்டுக்கு வருகின்றேன். அன்று பெரிய வெள்ளிக்கிழமை. பசுமலை வேதசாத்திர கலாசாலையின்

உபஅதிபர் கனம் மாட்டின் ரெய்லர் அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். அன்பர்களின் விருப்பத்துக்கிணங்க மகாநாட்டுத் தொடக்கத்தில் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாக நான் ஒரு பாடலை இயற்றி இராகத்துடன் உணர்ச்சியோடு பாடினேன். பாடி முடிந்து ஐந்து நிமிஷம் தலைவர் ஆசனத்தை விட்டு அசையவில்லை. உணர்ச்சிவசப்பட்டு அப்படியே மெய்மறந்து போனார். பாடலை இங்கே தருகின்றேன். இவ்வளவுக்கும் ஒரு பாடலும் என் கைவசமில்லை எல்லாம் மனவசமே.

**"எல்லா மறிந்தநீ என்றைக்கு முள்ளநீ**
**இன்பமது வேயுடைய நீ**
**எழில்ஞான வாழியைத் திறந்தூட்டும் ஆதிநீ**
**எமதருட் சோதி நீ தான்**
**பொல்லாத வேதபா ரகர்கெட்ட பரிசேயர்**
**பரிசூழ்ச்சி யதனுள் பட்டுப்**
**பொருந்தியு பிலாத்துமனை நிந்தனைக் காட்பட்டுப்**
**பொருந்தாத தீர்ப்புள் பட்டு**
**பொல்லாத வசைமொழிகள் பலவற்று ளேபட்டுச்**
**சூட்டுமுள் முடியும் பெற்றுத்**
**துன்பமுற வாரினால் அடிபட்டுப் புண்பட்டுச்**
**சோரிநீர் வடியப் பெற்றுக்**
**கொல்கதா மலையிலே குரிசதனில் அறைபட்டுக்**
**கொடியரெம் பவங்கள் தீர்த்தாய்**
**குருராச பரதீசு வரராசர் அருள்நேச**
**குமரேச அருள் யேசுவே"**

இனி 1924இல் பசுமலையில் நிகழ்ந்த ஒரு மிகப் பெரிய மகா நாட்டுக்கு வாசகர்களை அழைத்துச் செல்ல விரும்புகிறேன். அகில இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளில் மேற்றிராணிமார், குருமார், கிறிஸ்தவ பிரமுகர்கள் கலந்து கொள்கின்ற உயர்மட்ட மாநாடு அது. கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் இதில் கலந்து கொள்வதில்லை. மகா நாட்டிலே பலர் பேசுவதால் ஒரு பேச்சுக்குப் பத்து நிமிஷமே ஒதுக்கப்பட்டுள்ளது. பேச்சு முடிந்ததும் கலந்துரையாடல் நடைபெறும்.

கடைசி நேரத்தில் கலாசாலைப் "பிறின்சிப்பில்" என்னை அழைத்து "ஒரு பேச்சுக்கு வசதியான ஆளில்லை; "சங்கீதத்தின் மூலம் சமயத்தைப் பரப்புதல்" என்ற தலைப்பில் மாநாட்டிலே நீங்கள் பத்து நிமிஷம் பேசவேண்டும். இந்த விஷயத்தை உங்களுக்குக் கொடுக்கலாமெனக்

கனம் மாசிலாமணி சொல்கிறார்" என்று கூறினார். நானும் சம்மதித்துக் கொண்டேன். வேதசாத்திர கலாசாலை தோன்றிய காலத்துக்கு இதுவரை ஒரு மாணவருக்கும் கிடையாத இடம் எனக்குக் கிடைத்து விட்டது.

நிகழ்ச்சி நிரலின்படி எனது முறை வந்ததும் நான் மேடையில் ஏறி நின்று சைவமும் வைணவமும் வளர்ந்த வரலாற்றை விரித்துரைத்துச் சைவம் பரம்புதற்குத் தேவார திருவாசகத் திருப்பனுவல் ஒன்றே போதும். வைணவம் பரம்புதற்கு நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் ஒன்றே போதும். எந்தப் பாடலைக் கொண்டு கிறிஸ்தவம் பரம்பப்போகிறது? நமக்குள்ளே ஓர் அருட்கவி தோன்றப் பிரார்த்திப்போமாக என்று சொல்லு மளவில் பத்து நிமிஷம் முடிந்துபோயிற்று. உட்கார்ந்து கொண்டேன்.

சபையில் ஒரே கலகலப்பு. இந்தக் கலகலப்பினிடையே எனக்கு இன்னும் பத்து நிமிஷம் கொடுக்க வேண்டுமெனச் சபையில் ஏகோபித்த குரல் கிளம்பிற்று. தலைவரும் அனுமதியளித்தார். நான் எழுந்து அடுத்த பத்து நிமிஷம் அனுபவரீதியிற் பேசிவிட்டு அமர்ந்துகொண்டேன். சபையில் ஒரே சந்தோஷ ஆரவாரம். பலர் எழுந்து வந்து கைகுலுக்கிப் பாராட்டுத் தெரிவித்தார்கள். கலாசாலை அதிபர் என்னை நோக்கி வந்து "நான் எதிர்பார்த்ததைவிட, அதிகம் நன்றாய்ச் செய்திருக்கிறீர்கள். கலாசாலைக்கு ஒரு பெருமதிப்பு" என்று கூறி மகிழ்வுற்றார். ஏதோ ஒரு சாதனையை நிலைநாட்டி விட்டதாக நான் பெருமைப்படவில்லை.

இதையடுத்து மாநாட்டில் ஒரு தீர்மானமும் நிறைவேறியது. 1925ஆம் ஆண்டிலே சென்னையில் நடைபெறும் மாநாட்டுக்குப் பசுமலைப் பிரதிநிதியாக என்னைப் போட்டியின்றித் தெரிந்து கொண்டார்கள். எனது நிலை இங்கே இவ்வாறிருக்க அங்கே, கல்கத்தா வேலூர் இராமகிருஷ்ண சங்கத் திருமடத்திலே பிரபோத சைதன்னியர் (பண்டிதர் மயில்வாகனனார்) தலைமைப் பீடாதிபதி சுவாமி சிவானந்த மகராஜ் அவர்களால் சுவாமி விபுலாநந்தர் எனத் துறவு நாமம் சூட்டப்பெற்று இராமகிருஷ்ண சங்க சன்னியாசிகளுள் ஒருவரானார். இது நடந்தது 1924இல் சித்திராபூரணைத் திருநாளில். இருவரும் இருதுருவங்களாகிவிட்டோம்.

# பசுமலையிலுள்ள வேத சாத்திர கலாசாலைக்கு வந்து சேர்ந்தார் தேவதாசன்.

வேத சாத்திர கலாசாலை விடுதி மேற்பார்வையாளராகவும், பொருளாளராகவும் நான் சேவை செய்து வருவதை இதுவரை குறிப்பிட மறந்து போனேன். இங்கே தாழ்த்தப்பட்ட வகுப்புகளிற் பிறந்தோரே அதிகம். இவர்களிடம் தாழ்வு மனப்பான்மை இல்லை. உயர்குலத்திற் பிறந்தவர்களை அலட்சிய புத்தியுடன் அணுகும் பழக்கம் இவர்கள் மத்தியில் இடம்பெற்றிருந்தது.

இவர்களை இழிவாக மதிக்கும் பழைய புத்தியுடன் உயர்குலத்திற் பிறந்த மாணவர்கள் நடந்து கொள்வதையும் நான் அவதானித்துக் கொண்டேன். கிறிஸ்தவ சகோதரத்துவம் இவர்களுள் பெரும்பாலா னோரிடத்தில் பெயரளவில் மாத்திரமே இருந்தது. சில போதகர்களிடமும் இந்தப் போக்கு இடம்பெற்றுள்ளதையும் நான் கண்டுகொண்டேன்.

ஒவ்வொரு அறையிலும் இவ்விரண்டு பேர் தங்குவர். எனது அறை மிகப் பெரியது. சகபாடிகள் எல்லாருக்கும் என்னுடன் தங்கியிருக்க விருப்பம். இலங்கையிலிருந்து யாராவது வராவிட்டால் சீட்டுக் குலுக்குவதன் மூலம் ஒருவருக்கு இடம் தருகிறேன் எனச் சொல்லி வைத்துக் கொண்டு நான் தனிமையாகவே இருந்து வந்தேன்.

ஒருநாள் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. உடைத்து பார்த்ததும் என்னுள்ளம் உடைந்துவிட்டது. “இங்கிருந்து தேவதாசன் என்று ஒரு இளைஞர் வருகிறார். இவர் பள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர். எல்லா வகையாலும் இவரை ஒதுக்கி நடந்து கொள்ள வேண்டும்” என அதிற் கண்டிருந்தது. இதே மாதிரி வேறு சில கடிதங்களும் அடுத்தடுத்து வந்தன. இதை நான் எப்படிப் பொறுப்பேன்? ஒருவருக்கும் ஒன்றும் பதிலெழுதவில்லை.

தேவதாசனுக்கு அவசர அவரமாக ஒரு கடிதம் எழுதினேன். நீங்கள் தேவசாத்திர கலாசாலைக்கு வருவதாகச் சில அன்பர்கள் எழுதியிருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. நீங்கள் வந்து என்னுடன் ஒரே அறையில் தங்கியிருக்கலாம்; என்னைப்போலவே இருக்கலாம். இதுதான் எனது கடிதத்தின் வாசகம். இங்கும் அங்கும் நானறிந்துவரும் சாதித் துவேஷ நடவடிக்கைகளை என் மனத்திலே போட்டு வைத்துக் கொண்டேன். இன்னும் அறிவோம்.

ஒருசில நாளில் தேவதாசன் வந்து விட்டார். எனது அறையில் அவருக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்துவிட்டு அடுத்த நாள் சாயந்தரம் அவரை மதுரைக்குக் கூட்டிகொண்டு போய் சாப்பிடும் கோப்பை, தண்ணீர் குடிக்கும் கோப்பை, ஒரு"கிளாஸ்" இம் மூன்றையும் நான் வைத்திருப்பவை போலவே ஒரே மாதிரியாய் வாங்கிக் கொடுத்தேன். நான் ஏன் இப்படி வாங்கினேன் என்பது சொல்லாமலே விளங்கும். தேவதாசன் வதிரியைச் சேர்ந்தவர். லண்டன் சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சையில் சித்தியடைந்தவர். அவர் இன்னுமே பள்ளரா?

பசுமலைக்கு நான் வந்தபின்பு பழகிய சில அறிஞர்களின் பெயரை நினைவின் பொருட்டு இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மதுரைத் தமிழ்ச்சங்க கலாசாலை அதிபர் திரு. நாராயண ஐயங்கார், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், நாவலர் ச. வேங்கடசாமி நாடார், நாவலர் ச. சோமசுந்தரபாரதியார், கனம் பொப்லி, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் திரு. ரீ.சீ. சிறீநிவாச ஐயங்கார் இப்பெயர்களே நினைவுக்கு வருகின்றன.

கதிரேசன் செட்டியார் ஒரு ரசிகர்; வடமொழி தென்மொழிக் கடல் "சுக்கிரநீதி" என்னும் பெரிய வடமொழி அர்த்த சாத்திரத்தைத் தமது ஐம்பதாவது வயதில் அழகு தமிழிலே ஆக்கம் செய்து வெளியிட்ட பின்புதான் யாரிந்த அறிவுக் கடல்? என்று பேரறிஞர்கள் இவரை தேடிச் செல்வாராயினர். அவர் அடக்கத்தின் வடிவம்.

ஒரு முறை ஒரு பெரிய மகாநாட்டுக்குத் தலைமை தாங்குவதற் காக யாழ்ப்பாணம் வந்த இப்பேரறிஞர் மகாநாட்டு மண்டபத்துள் வந்ததும். "இங்கே வித்துவான் கணேசையர் வந்திருக்கிறாரா?" என்று வினாவினார். மேடையில் இருக்கிறார் என்றதும் உடனே மேடைக்குச் சென்று கணேசையரை விழுந்து வணங்கிவிட்டுத் தலைமை தாங்கிய மனத்தை உருக்கும் காட்சியை நான் எப்படி மறப்பேன்? அந்தப் பண்பின் மணி முடியைக் காணப்பெற்றதும் எனது வாழ்க்கையில் நானடைந்த ஒரு நற்பேறேயாகும்.

இன்னொன்று நினைவுக்கு வருகிறது. இடம் மதுரைத் தமிழ்ச் சங்க மண்டபம். பண்டிதமணியின் மணிவாசகச் சொற்பொழிவு. மணி மணியாகச் சொரிகின்றார். இடையிலே சந்தர்ப்பம் நோக்கி :

**'விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவு கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"**

என்னும் அப்பர் திருப்பாட்டை, மேற்கோள் காட்டி உவம உருபு பிரிந்து, நிரல்நிறைப் பொருள் கோளாக உரை விரித்த அழகும் இனிமையும் என்னுள்ளத்தில் இன்றும் தெவிட்டாமல் இனித்துக் கொண்டிருக்கின்றன.

விறகில் தீயில் - விறகிலே தீப்போலவும், நன்பாலில் படுநெய்போல் - நல்ல பாலிலே நெய்போலவும், மறைய நிற்கிறான் யார்? மாமணிச்சோதியான் - மணியில் ஒளிபோல் வெளிப்பட்டு நிற்கின்ற எம்மிறைவன். இந்த மறையோனை வெளிக்காண்பது எவ்வண்ணம்?

உறவாகிய தீக்கடை கோலை நாட்டி உணர்வாகிய கயிற்றைப் பூட்டி முறுகக் கடைந்தால், விறகிலே தீப்போல மறைய நின்றவன் வெளிப்பட்டு முன்னிற்பான். முறுகக் கடைதல் தீயை வெளிக்கொணரும் உபாயமாகும்.

உறவாகிய மத்தை நாட்டி உணர்வாகிய கயிற்றை மாட்டி வாங்கிக் கடைந்தால் பாலில் நெய் போல் மறைந்து நின்றவன் வெளிப்பட்டு முன்னிற்பான். வாங்கி (இழுத்து)க் கடைதல் நெய்யை வெளிக்கொணரும் உபாயமாகும்.

இதுவரையும் இத்திருப்பாட்டுக்கு ஆற்றொழுக்காகப் பொருள் சொல்லி வந்த நான் இன்று உண்மைகண்டு இன்பம் கொண்டேன். பண்டித மணிக்கு என் மனங்கனிந்த நன்றி.

பண்டித மணியின் “மண்ணியற் சிறுதேர்” என்னும் நாடகத்துக்கு விபுலாநந்த அடிகளார் எழுதியுள்ள அணிந்துரை தமிழ், வடமொழிகளின் நாடக இலக்கணப் பொக்கிஷமாக அமைந்துள்ளது. பண்டிதமணியின் மணிவிழா மலரில் அடிகளார் எழுதியுள்ள ஆங்கில வாணியென்னும் கட்டுரை ஆங்கிலக் கவிதைகளின் தொகுப்புரையாக அமைந்துள்ளது.

அடிகளார் எல்லார்க்கும் பொதுப் பொருளாயினும் பிறந்த மண்ணுரிமை கொண்டு மட்டக்களப்பு மக்கள் இவை குறித்துப் பெருமிதம் அடைகின்றனர்.

நாவலர் வேங்கடசாமி நாடார் சித்திரப் பாவைபோல் நின்று மணிக்கணக்கில் உரை விரிப்பார். எழுதிப்பார்த்தால் ஒரு எழுத்தும் தவறிராது. மணிமேகலைக்கு உரையெழுதிய மகாமேதை இவர்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் ஒரு சட்ட மேதை. இலக்கணக் கடல். "தசரதன் குறையும் கைகேயி நிறையும்" என ஓர் ஆராய்ச்சி நூல் எழுதியவர். இந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய நாராயண ஐயங்கார் தமது மதிப்புரையை முடிக்கும் போது "தசரதன் குறையுடையவனோ என்பது ஆராயத்தக்கது" எனக் கூறியுள்ளார்.

இந்நூலுக்கு ஒரு விமர்சனம் எழுதுமாறு விபுலாநந்த அடிகளார் என்னைப் பணித்தார்கள். ஐயங்கார் கூறியதை முன்பே அவதானித்த நான் ஒரு முடிவுக்கு வரலானேன். இங்கே இரண்டு தருமங்கள் இருக்கின்றன. ஒன்று அரசதருமம். மற்றது சத்தியதருமம். இரண்டுக்கும் இடையில் நிற்கின்றான் தசரதன். எதைத் தெரிந்து கொள்வது? தரும சங்கடம் என்பது இதுதான். அரச தருமம் நிலையற்றது. சத்திய தருமம் நிலையுள்ளது. நிலையற்ற அரச தருமத்துக்காக நிலையுள்ள சத்திய தருமத்தைத் தியாகஞ்செய்வதா? நிலையுள்ள சத்திய தருமத்துக்காக நிலையற்ற அரசதருமத்தைத் தியாகஞ் செய்வதா? எதைத் தியாகம் செய்வது? இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதில் தசரதனுக்கு நிச்சய புத்தி உண்டாகவில்லை கைகேயி துணை செய்கின்றாள். தசரதன் நிச்சய புத்தி பெறுகின்றான். நிலையற்ற அரச தருமத்தைக் கைவிட்டு நிலையுள்ள சத்திய தருமத்தைக் கடைப்பிடித்து அதற்காகத் தன்னுயிரை விடுகின்றான். தசரதன் குறைவுடையவனல்லன், நிறைவுடையவனே. இதுதான் எனது முடிவு.

# பழரசத்தைப் பகிர்ந்தளித்த பொப்லி ஐயரின் பண்பு

கனம் பொப்லி என்பவர் ஒரு ஆங்கிலேயர். கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் பொதுச் செயலாளராக மதுரையிலே தொண்டு செய்து கொண்டிருந்தவர்; ஒரு கதாப்பிரசங்கி; இந்திய சங்கீதம் என்னும் பொருள் பற்றி ஆங்கிலத்தில் ஒரு நூலெழுதியவர். உயர்ந்தரகத் தமிழ்ப் பேச்சாளர். தமிழ்ப் பண்பிலே இவர் தமிழரையும் விஞ்சியவர் என என் அனுபவத்தைக் கொண்டு சொல்கின்றேன். தமிழ்ச் சங்கத்திலே இடைக்கிடை உரை நிகழ்த்துவார்.

ஒரு நாள் சங்க மண்டபத்திலே திருக்குறள் விரிவுரை நிகழ்த்துகிறார்.

**'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற."**

என்னும் செய்யுளை எடுத்துக் கொண்டார். மனத்துக் கண் மாசு இலன் ஆதல் - அறம் செய்பவன் தனது மனத்தின் கண்ணே குற்றம் இல்லாதவன் ஆகுக. தல் என்பது வியங்கோள் விகுதி. அனைத்து அறன் - அவ்வளவே அறமாவது அனைத்து என்பது குறிப்பு வினையாலணையும் பெயர். அறன் என்னும் பண்புப் பெயர் குறிப்பு வினைத்தன்மை எய்திப் பயனிலையாயிற்று.

பெயர் பயனிலையாகும் என்றாரேனும், அது பயனிலை யாகும்போது பெயர் தன்மையை இழந்து குறிப்பு வினைத் தன்மை பெற்று நிற்குமெனக் கொள்க. பிற ஆகுலநீர - மனத் தூய்மையில்லாத சொல்லும் செயலும் அறமாகா. நீர என்பது அகர ஈற்று அஃறிணைப் பன்மைக் குறிப்பு வினை முற்று.

இவ்வாறு ஆரம்ப உரையைத் தொடங்கினார். இது வாசகர்களுக்குக் கடினமாயிருக்கலாம். ஒரு ஆங்கிலேயனின் இந்த இலக்கணத் தமிழ்

நமக்கு வெட்கமாகட்டும். அல்லது ஒரு முன்மாதிரியாகட்டும்.

இவர் கதாப்பிரசங்கம் செய்யும் போது "வயலின்" வாத்தியத்தைத் தாமே மீட்டிக் கொண்டும், தாம் இயற்றிய பாடல்களையே பாடிக் கொண்டும் சரளமாகப் பேசுவார். இவ்வளவுக்கும் ஏகார உச்சரிப்பு அவர் வாயில் வராது. ஏகார எழுத்தை ஐகார எழுத்தாகவே உச்சரிப்பார்.

**'கலியாணம் செய்து வைத்தானே தயாளப் பிரபு**
**கலியாணம் செய்து வைத்தானே"**

என்னும் இப்பாடலைப் படிக்கும் போது "கலியாணம் செய்து வைத்தானை" - தயாளப் பிரபு - கலியாணம் செய்து வைத்தானை" என்றுதான் உச்சரிப்பார்.

பொப்லி என்னும் பெயரை நான் பாப்புலியாக மாற்றிக் கூப்பிடலானேன். இந்த அன்புத் தமிழாக்கத்தை அவரும் அன்பாக ஏற்றுக் கொண்டார். ஒருநாள் பகல் பத்து மணியளவில் "பிறின்சிப்பல்" ஞான கலாநிதி பனிங்கா அவர்களைப் பார்ப்பதற்கு அன்னாரின் இல்லத்துக்குச் சென்றிருந்தேன். நான் போய்ச் சிறிது நேரத்தில் பாப்புலியும் அங்கு வந்தார். இருவரும் கலந்து பேசிக்கொண்டிருந்தோம்.

பாப்புலி ஐயர் தனது எசமானின் நண்பர் என்பது வீட்டு விசாரணைக்காரனுக்குத் தெரியும். கலாசாலை மாணவன் என என்னையும் தெரியும். சிறிது நேரம் சென்றதும் ஒரு நீளமான பெரிய "கிளாஸ்" நிறையத் தோடம்பழ ரசம் வருகிறது. பாப்புலியின் முன்னே வைக்கிறான். நானும் இருக்கிறேன். பாப்புலி என்ன செய்யப் போகிறார்? அவர் சங்கடப்படவில்லை.

பழரசக் "கிளாசை" எடுத்து எனக்கு நீட்டி "அரைவாசியைக் குடித்துவிட்டுத் தாருங்கள்" என்று அன்னார் கூறிய அன்புரைக்கு நிகரான ஒரு சொல்லை என் வாழ்க்கையில் நான் கேட்டதுமில்லை, இனிக் கேட்கப் போவதுமில்லை. அவர் சொன்னாரென்று அன்பு கலந்த பழரசத்தில் அரைவாசியை நான் அப்படியே குடித்துவிடுவதா?

விசாரணைக்காரனைக் கூப்பிட்டு ஒரு வெறும் "கிளாஸ்" கொண்டு வருமாறு சொன்னேன். "கிளாஸ்"வந்தது அரைவாசி ரசத்தை அதில் ஊற்றி அதைப் பருகும்படி எனக்குத் தந்தார். அந்தப் பண்பாளர். இருவரும் பருகினோம்.

பண்பு என்னும் சொல்லுக்கு எவ்வளவு பண்பு கற்பிக்க முடியுமோ அந்தப் பண்பின் எல்லையாக இன்றும் என்முன்

காட்சியளிக்கின்ற பாப்புலி ஐயருக்கு எனது பணிவான அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

மற்றது "மண்படம் கேம்பி"ற் கண்ட மனிதத் தன்மை. பாம்பன் என்னும் இடத்தில் மாணவர் பாசறையொன்று அமைத்து நாங்கள் ஒருவார காலம் சமயப் பிரசாத்திலும் ஞான ஒடுக்கத்திலும் ஈடுபட்டிருந் தோம். பாம்பன் தடுப்பு முகாமின் அத்தியட்சகராக டாக்டர் குருசாமி நாயுடு என்னும் பெரியார் இருந்தார். முகாம் பரிசோதகராகத் தேவசகாயம் பிள்ளை என்னும் அன்பர் ஒருவரும் இருந்தார்.

தடுப்பு முகாமில் ஒரு பிரசங்கம் செய்யுமாறு எங்களுக்கு அழைப்பு வந்தது. எங்கள் மத்தியில் நல்லையா என்று ஒருவர் இருந்தார். அவர் கதாகாலட்சேபம் செய்வதில் ஓரளவு திறமை வாய்ந்தவர். அவரின் கதாப்பிரசங்க நிகழ்ச்சிக்கு நான் தலைமை தாங்கினேன். ஒன்றரை மணிநேரம் நல்லையாவின் இசைத் சித்திரம் நடைபெற்றது. நல்லாயிருந்தது. எல்லாரும் பாராட்டினர்.

டாக்டர் குருசாமி நாயுடு பாரியார் சகிதம் வந்திருந்தவர் எழுந்து வந்து என்னை அணுகி நீங்கள் எந்தப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய் இருக்கிறீர்கள்? என்று கேட்டார். "ஐயா அப்படியொன்று மில்லை. நான் ஒரு மாணாக்கன்" என்று அடக்கமாகக் கூறினேன். உங்கள் பேச்சு அப்படியிருந்தது என்று அவர் சொல்லி முடிப்பதற்குள் டாக்டரின் பாரியார் எழுந்துவந்து இவர்களை நாளைக் காலைப் போஜனத்துக்கு வரச்சொல்லுங்கள் என்று கணவரைக் கேட்டுக் கொண்டார். அவரும் இன்முகம் காட்டி எங்களை வரவழைத்தார்.

அடுத்தநாள் காலை அன்பரொருவர் எங்களை அழைத்துச் செல்ல வந்தார். எங்களுள் பலருக்கு ஒருவித கூச்சம். அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பிற் பிறந்தவர்கள். இப்படியான உபசாரங்களை ஒரு போதும் கண்டறியாதவர்கள்.

குருசாமி நாயுடுவின் மாளிகை ஒரு இராஜபவனம் போற் காட்சியளித்தது. கழுவிப் போட்டுக் கைவைக்க வேண்டும் அந்த மாளிகையின் அடித்தளத்தில். நாங்கள் எவ்வாறு கால்வைப்போம்? நாங்கள் முப்பது பேர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பரிசாரகன். ஒவ்வொரு வெள்ளிக்கலசம். ஒவ்வொரு துவாய். குருசாமியின் மாதச் சம்பளம் 1924இல் மூவாயிரத்து ஐந்நூறு ரூபா. அந்தக்காலம். இராசப்பிரதிநிதிக்கு ஏழை இந்தியாவில் படிச் செலவுகள் நீங்கலாக

மாதம் இருபத்தோராயிரம் ரூபா சம்பளமென்றால் குருசாமிக்கு மூவாயிரத்து ஐந்நூறு சம்பளம் ஒரு வியப்பல்ல.

உள்ளே சென்றோம். டாக்டருக்கும் மனைவியாருக்குமிடையில் எனக்குப் பிரத்தியேக ஆசனம். எல்லாரும் உட்கார்ந்து கொண்டோம். தென்னிந்திய சமையற்பாகத்தில் தயாரித்த பலவகைப் பதார்த்தங்கள். அந்த நேரத்தில் எதைச் சாப்பிட்டால் உடம்புக்குப் பொருத்தமாயிருக்குமோ அதெல்லாம் அங்கேயிருக்கின்றன. அன்பு கலந்த உணவு. அன்பு கலந்த உபகாரம். டாக்டரும் மனைவியாரும். இது நல்லது; இது நல்லது; உண்ணுங்கள்; உண்ணுங்கள்" என்று எனது உண்கலத்திலே பதார்த்தங் களை எடுத்து வைக்கிறார்கள். இந்தப் பையனுக்கு இவ்வளவு நடப்பேன்? இதை யார் செய்கிறார்? கால மறுமொழி சொல்லட்டும்.

விருந்து முடிந்தது. டாக்டரின் உள்ளத்திலிருந்து வாய் வழியாக எனக்கு ஒரு அன்புக் கட்டளை பிறக்கிறது. நீங்கள் இலங்கைக்குப் போகும் போதும். இந்தியாவுக்கு வரும்போதும் இரண்டொரு நாள் எங்களுடன் தங்கியிருந்தே செல்லவேண்டும். மறுத்தால் காய்ச்சல் என்று சும்மா சொல்லியேனும் மறித்து வைத்துக் கொள்வேன் என்பதுதான் அந்த அன்புக் கட்டளை.

எல்லாரும் எழுந்து இளைப்பாறும் மண்டபத்துக்குச் சென்றோம். அந்த அனுபவம் இதுவரை நாங்கள் பெற்றதுமில்லை; இனிமேற் கிடைக்கப்போவதுமில்லை என்று எல்லாரும் ஒருவரோடொருவர் பேசிக் கொள்கிறார்கள். டாக்டருக்கும் மனைவியாருக்கும் சிப்பந்திகளுக்கும் நன்றியும் வணக்கமும் செலுத்திக்கொண்டு எங்கள் முகாமுக்குச் சென்றோம்.

# மதுரைச் சத்திரத்தில் என்னை ஆட்கொண்டார் ஈழத் துறவி

மண்டபம் முகாமிலிருந்து பசுமலைக்குத் திரும்பியதும் நான் டாக்டர் குருசாமி நாயுடு அவர்களுக்கு அன்பனாகிவிட்ட செய்தி மதுரையிலும் அதைச் சூழ்ந்துள்ள வட்டாரங்களிலும் பரவலாயிற்று. மதுரை அமரிக்கன் கல்லூரிக்கும் என் பெயர் தெரியவந்தது. இலங்கைக்குச் செல்லும் பிரயாணிகள் பலர் அடிக்கடி என்னை நாடி வந்து உதவி கேட்பது வழக்கமாயிற்று.

அமரிக்கன் கல்லூரியில் இருந்துதான் அதிகம் பேர் வருவார்கள். பசுமலைக்கும் மண்டபம் தடுப்பு முகாமுக்குமிடையே அடிக்கடி பயணம் பண்ணுவதும் எனக்குப் பழகிப்போயிற்று. இரண்டரை வருடகாலம் இவ்வாறு கழிந்து போகிறது. படிக்கும் வேலை எனக்குக் கிடைச்சியைச் சுமப்பது போலிருந்ததால் இதெல்லாம் செய்ய முடிகிறது.

இன்னுமொன்று, சோமசுந்தர பாரதியின் சேர்க்கையால் காந்தியடிகளின் இயக்கத்திற் கலந்து கொள்ளும் சந்தர்ப்பங்களும் எனக்குக் கிடைத்தன. தேசிய வீரர்கள், தியாகிகள் பலரின் மனத்தை உருக்கும் பேச்சுகளும், சுயநலமற்ற சேவைகளும் என்னைப் பெரிதும் கவர்ந்ததன். அரசபோகம் அனுபவித்துக் கொண்டிருந்த, சீ.ஆர்.தாஸ் என்னும் வங்காளத்துச் சிங்கம் சித்தரஞ்சனதாசர் தமது பட்டுடைகளைக் களைந் தெறிந்ததும், கதராடை உடுத்துக்கொண்டதும், தேசபந்து தாசர் எனப் பெயர் பெற்றதும் மதுரையில் நடந்த சம்பவங்களாதலால் அவை பற்றிக் கேள்வியுற்றதும் தேசிய உணர்ச்சி என்னை ஆட்கொண்டு விட்டது. இதன் பயனாக எழுந்ததே

**'இலங்கை மணித்திருநா டெங்கள் நாடே - இந்த**
**இனிய உணர்ச்சி பெற்றால் இன்பவீடே"**

என்னும் எனது முதலாவது தேசிய கீதம்.

காந்தியடிகளின் இருபத்தொரு நாள் உண்ணாவிரத நிகழ்ச்சி

இங்கே நினைவுக்கு வருகிறது. இந்த உண்ணாவிரதத்தை எட்டு நாட்களுக்குத் தானும் அடிகளாரின் உடல்நிலை தாங்கமாட்டாது என்று அரசினர் வைத்தியர்கள் அபிப்பிராயம் தெரிவித்துவிட்டர்கள். அடிகளோ ஒன்பதாம் நாளையும் எட்டிவிட்டார். இந்த நெருக்கடியில் மதுரையிலே நடந்த மாபெரும் கூட்டத்தில் உரையாற்றுதற்கு எனக்கும் இடம்கிடைத்தது. இது சோமசுந்தர பாரதியாரின் கூட்டுறவால் நான் பெற்றபேறாகும்

மேற்குறித்த சம்பவங்களால் எனது மனம் சிறிது சிறிதாக மாற்றமடைந்து வருகிறது. கிறிஸ்தவர் மத்தியில் நிலவும் ஏகாதிபத்திய மனப்பான்மை, மேல்நாட்டு முறையையே நோக்கிச் செல்லும் திருச்சபை நடையொழுங்கு திருச்சபைக்குள்ளேயே சாதித்துவேஷம், தேகப் பயிற்சி போன்ற தேவாலய வழிபாட்டு, பேசும் தமிழ்ப் பேச்சு இவைகளை மாற்றியமைக்கும் பணியில் எனக்கு ஆரம்ப ஆதரவு கிடைத்தாலும், அது நமது சகோதரர்களின் ஆரம்ப சூரத்தனமாகவே முடிந்தது.

பண ஆதாயமே முன்னிற்கிறது. ஜீவ ஆதாயம் பெரும்பாலும் இரண்டாம் பட்சமே. தியாக சிந்தைக்கும், தியாக புத்திக்கும் வெகுதூரம் அன்பு மார்க்கமாகிய கிறிஸ்தவம் மேல் நாட்டு ஏகாதிபத்தியப் பிடியில் அகப்பட்டுக் கொண்டபின் அங்கே அன்பேது? தியாகமேது? அமர்க்களமே.


**'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீ மையால்திரிந் தற்று"**

என்பது போலாயிற்று. கிறிஸ்தவ நாடுகளின் நோக்கையும் போக்கையும் அவதானித்த எனக்கு மேல் நாட்டு முகமூடியணிந்த திருச்சபையை விட்டு வெளியேற வேண்டும் என்னும் எண்ணம் வலுபெற்றுவிட்டது. இதற்கிடையில் யாழ்ப்பாணத் திருச்சபையை நிருவகிக்கும் செயலாளர் பதவி என்னைக் காத்துக்கொண்டிருக்கிறது. எனது நோக்கமோ வேறு.

பசுமலை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் கனம், எல். எல். லாபியர் என்னும் அமரிக்கப் பாதிரியார் அதிபராயிருந்தார். அவர் காந்தியடிகளின் சாத்துவிக இயக்கத்தில் அசையாத நம்பிக்கையுடையவர். அதைப் போதிப்பதிலும் சாதிப்பதிலும் மிக ஈடுபாடுள்ளவர். நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் சாத்துவிகமே பேசுவார்.

ஆசிரிய மாணவர் எவரேனும் யாதேனும் தவறு செய்து விட்டால் ஏனைய மாணவரோடு சேர்ந்து அவரும் உண்ணாவிரதமிருப்பார். இந்த உண்ணாவிரதம் வயிற்றைச் சுத்தமாக்க உதவியதேயொழிய மனப் பரிசுத்தத்தை உண்டாக்கவில்லை. அவர்கள் வேறுபாடு உணராமலிருந்ததே இதற்குக் காரணமாகும்.

# இரும்பை இழுத்த காந்தம்



புலவர்மணியை ஆட்கொண்ட அடிகளார்.

மண்டூர்ப் பதிகம்

சிறப்புப்பாயிரம் – சுவாமி விபுலானந்தர்

**மண்டூரும் முகிற்குலங்கள் எமதிறைவர் மருகர் திருப்பதி யீதென்ன**
**விண்டூர மழைபொழியும் சிறப்பதனால் வளம்மலிந்து மிகுந்து தோன்றும்**
**மண்டூரி லுறைமுருகன் மலரடிக்கோர் திருப்பதிகம் மரபிற் சொற்றான்**
**கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்பிள்ளையென்னும் கலைவல்லோனே**

இவர்கள் விஷயத்தில் உண்ணாவிரதம் சக்தியற்ற ஆயுதமாயிற்று. சாத்துவிகம், சத்தியாக்கிரகம் ஆகிய இரண்டுமே கிறிஸ்தவத்தின் இரு கண்கள் என்பது லாபியரின் கொள்கை. இந்த இரண்டு கண்ணுமில்லாதவன் தியாக மார்க்கத்தைக் காணமாட்டான் என்று அவர் அடிக்கடி என்னிடம் சொல்வதுண்டு. உத்தம கிறிஸ்தவர் வரிசையில் வைக்கத்தக்க ஒரு மேல்நாட்டவர் இவர்.

இதே ஆசிரிய கலாசாலையில் றாஜறாவ் என்னும் பெயருடைய பண்டிதர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு கிறிஸ்தவர், நேர்மைக்கு இருப்பிடம். கண்டிப்பான பேர்வழி. எனக்கு நண்பர். பிழை செய்யும் பாதிரிமாரைப் பகிரங்க மேடைகளிலே வருணனை செய்து கண்டித்துப் பேசுவார்.

லாபியருக்கு அடுத்து என்னைக் கவர்ந்து கொண்டவர் இவர். பாதிரிமாருக்குக் கீழே படிப்பித்துக் கொண்டு அவர்களின் பிழைகளைப் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டுகின்ற பண்டிதர் றாஜறாவின் மனத்துணிவை அரை நூற்றாண்டு சென்றும் நான் மறப்பதற்கில்லை.

மதுரை மாநகரில் இன்னும் இரு பெரிய சம்பவங்கள். இந்த இரு சம்பவங்களையும் சொல்லிவிட்டு இந்திய நாட்டிலிருந்து பிறந்த பொன்னாட்டுக்கு வருகின்றேன். வெளிநாடுகளில் எல்லா ஆசார உபசாரங்களுடன் வாழ்வதிலும் பார்க்க நம்மைப் பெற்ற தாய்நாட்டில் வாழ்வது எவ்வளவு மதிப்பு? எவ்வளவு இன்பம்? இதை மனிதன் உணர வேண்டும்.

மதுரை அமரிக்கன் கல்லூரியில் ஒரு பரிசளிப்பு விழா. இந்திய இராசப் பிரதிநிதியின் சபையிலே சட்டமா உறுப்பினராயிருக்கும் சேர். சீ.பி இராமசுவாமி ஐயர். விழாத் தலைவராக வருகின்றார். இருபத்தொரு மரியாதை வேட்டுகளின் பெரு முழக்கின் மத்தியில் ஐயர் தலைமை தாங்குகிறார். அவர் ஒரு ஆங்கிலக் கடல்.

அதிபர் ஆண்டறிக்கையைப் படித்து முடித்ததும் ஐயர் பொங்கியெழுந்தார். அறிக்கையிற் கண்ட ஒரு வாக்கியம் பிரச்சினையைக் கிளப்பிவிட்டது. அறியாமையில் மூழ்கிக் கிடந்த இந்திய மக்களின் கண்களைத் திறந்து அறிவொளியூட்டிய பெருமை அமரிக்கன் மிஷனரிகளுக்கே உரியது என்று அதிபர் கூறிய அந்த வார்த்தையை சுக்குநீறாக்கி விடுகிறார் சேர்.சீ.பி.

"அகில உலகுக்கும் அறிவொளியூட்டிய வரலாற்றுப் பெருமை

வாய்ந்த ஒரு பெரிய சாதிக்கு எதிராக இப்படி நாக்கு நீட்டுவதா? அதுவும் ஒரு இந்தியப் பெருமகனின் வாயிலிருந்து இப்படியான சொல் வரலாமா? நான் மிகவும் வருந்துகிறேன்" மன்னிக்கவும் என்று ஐயர் முழங்கியதும் அதிபருக்கு வேர்வை கிளம்பி விட்டது. இது எனக்குமொரு பாடமாயிற்று.

பசுமலையிலுள்ள உயர்கல்வி நிலையத்தில் நா. சுப்பிரமணிய சர்மா என்பவர் தமிழ்ப் பண்டிதராயிருந்தார். ஒருநாள் காலை அவர் என்னைத் தேடிவந்து நேற்றுமாலை மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நான் கண்ட அற்புதக் காட்சியை என்னென்று சொல்வேன்? ஒரு துறவி, ஈழ நாட்டிலிருந்து வந்தவராம். ஆள் சரியான கறுப்பு. தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டில் அவர் நிகழ்த்திய தலைமைப் பேருரை தமிழுக்கு வரம்பு. ஆராய்ச்சியின் எல்லை. மதுரைச் சங்கமே மதுர மயமாயிற்று. அப்பெரியாரின் பெயர் சுவாமி விபுலாநந்தராம் என்று அவர் கூறியதும் நான் உணர்ச்சிவசமாகி அவர் இப்பொழுது எங்கே என்று கேட்டேன். மங்கம்மாள் சத்திரத்தில் தங்கியிருக்கிறார் என்றார்.

எனது நிலை காந்தத்தை நோக்கிய இரும்பு போலாயிற்று. மதுரைக்கு விரைகின்றேன். மங்கம்மாள் சத்திரத்தில் அடிகளாரின் அறை வாயிலை அணுகி முகத்தைக் காட்டிக்கொண்டு அமைதியாக நின்ற என்னைக் கண்டதும் விரைந்து வந்து இரும்பைக் காந்தம் இழுப்பது போல அவர் என்னை இறுகத் தழுவிக் கொண்டார். இரண்டு நிமிஷம் ஒரு பேச்சுமில்லை. பரமஹம்சர் கைப்பட்ட நரேந்திரர் போல் ஆகிவிட்டேன் நான். பரிசதீட்சை கிடைத்து விட்டது. இனி நான் வேறு மனிதன்.

"மட்டக்களப்பில் அதிகம் வேலைகளைத் தொடங்கிக் கொண்டேன். ஆட்கள் தேவை" இவ்வண்ணம் இரண்டு வாக்கியங்களிலே பேச்சை முடித்துக் கொண்டு சுவாமிகள் திருச்சிக்குப் புறப்பட்டு விட்டார்கள். எனது மனமாற்றம் பூரணமாகத் திடம்பெற்றுவிட்டது. இது 1925ஆம் ஆண்டில் நடந்தது. ஒருவருக்கும் சொல்லவில்லை. குருநாதருக்கும் எனக்குமே தெரியும்.

விடுமுறை வந்ததும் எனது எல்லா உடைமைகளையும் நண்பன் தேவதாசனுக்கு அன்பளிப்புச் செய்துவிட்டுக் காந்திப் படம் ஒன்றை மாத்திரம் கையிற்கொண்டு பிறந்த மண்ணுக்குத் திரும்பினேன். எங்கும் வெறுங்கைதான். ஆனால் ஒன்றுக்கும் குறைவில்லை. யாரோ பின்னின்று இயக்குகிறார் பார்ப்போம்; காலம் வரட்டும்.

**'சங்கத் தமிழ்மதுரைச் சத்திரத்தில் வைத்தெம்மை**
**அங்குவச மாக்கி அருள்செய்தே - தங்கியெம்**
**புத்தி புகுந்தவிபு லாநந்தர் பொன்னடிக்கண்**
**வைத்திந்நூல் நெஞ்சே வணங்கு"**

பகவத்கீதை வெண்பா முதலாம் பாகத்தில் வரும் இச் சமர்ப்பணச் செய்யுள், மேற்கூறிய வரலாற்றைக் குறிப்பதாகும்.

# திருமணப் பதிவின் போது எனக்குக் கிடைத்த பரிசு

தருமசேனர் மீண்டும் மருள்நீக்கியரானது போன்ற ஒரு நிலையினை நானும் அடைந்துவிட்டேன். இங்கும் ஒரு திலகவதியார். அவர்தான் எனது மூத்த சகோதரியார். பெயர் பொன்னம்மா. உண்மையில் அவர் எங்களுக்குப் பொன் போன்றவர்தான். நான் 1925 பிற்பகுதியில் பசுமலை யிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் போகாமல் நேரே மட்டக்களப்புக்கு வந்து மண்டூரில் எனது தாயகத்தை அடைந்துவிட்டேன்.

எனது வாழ்க்கைப் பாதையில் இருபத்தாறாவது தொலைக் கல்லில் ஐந்தாவது கட்டம் ஆரம்பமாகிறது. இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் எனது சுய யுத்தி காரணமா? அல்லது மறைமுகமாக வேறொரு சக்தி இயக்கி நிற்கின்றதா? இதற்கு நான் மறுமொழி சொல்லிவிட்டு அப்பாற் செல்ல விரும்புகின்றேன்.

எனக்குப் பன்னிரண்டு வயதிருக்கும் ஒருநாள் காலை காலக்கணிதர் ஒருவர் மண்டூருக்கு வருகிறார். அவர் பெயர் சிவசரணம். அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். குருக்கள் மடத்தில் வசிப்பவர். அங்குள்ள செல்லக்கதிர்காம சுவாமிகோயிலில் முதல் முதல் பஜனையையும் கூட்டுப் பிரார்த்தனையையும் ஆரம்பித்து வைத்தவர் அவரே.

ஒரு குடும்பத்தில் மூத்த பிள்ளையின் சாதகத்தைக் கொண்டு எல்லாப் பிள்ளைகளின் பலன்களையும் விரித்துரைக்கும் நிபுணர் அவர். வீட்டில் அக்காவின் சாதகத்தைப் பார்த்துப் பலன் சொல்லியபோது அவர் என்னைப் பற்றியும் சொன்ன குறிப்புகளுள் நினைவிலிருப்பதை இங்கே சொல்கின்றேன்.

இந்தப் பிள்ளைக்கு நேரே இளைய சகோதரர் யாழ்ப்பாணம், இந்தியா ஆகிய நாடுகளுக்குச் சென்று பல கலை பயின்று பேரும்



புலவர்மணியின் துணைவியார்

புகழும் பெற்று விளங்குவார். கவிப் புலமையால் பெரிய காரியங்களைச் செய்வார் என்று அவர் கூறியது இன்று மெய்யாகிவிட்டது.

இதைத் தற்புகழ்ச்சிக்காக இங்கே சொல்லவில்லை. முன்னோர் எழுதி வைத்த காலக்கணித முடிவுகள் சரியே என்பதையும், ஊழ் அல்லது விதி என்னும் நமது முன்னோரின் கொள்கைதப்பாத நியதியே என்பதையும் சொந்த அனுபவத்தைக் கொண்டு நிலை நாட்டுதற்காகவே சொல்கின்றேன்.

**'முன்னை வினைப் பயனே பின்னை வரும் ஊழென்று**
**சொன்னார்முன் னோர்கள் துணிந்து."**

ஊழ் என்பது மலர்ச்சி. ஒரு மரத்தின் கிளையிலே தோன்றா நிலையிற் கிடந்து காலம் வரும்போது முகிழாய், அரும்பாய், போதாய் அலர்ந்து தோன்றிய நிலையிலே காட்சியளிக்கின்றது மலர். முன் வினையும் மறைந்து கிடந்து காலம் வரும்போது ஊழாகிப் பயன் தருகிறது. ஊழ் என்னும் சொல்லின் பொருள் அறிந்து மகிழ்தற்குரியது. எனது சுயபுத்தியை மாத்திரம் கொண்டு நான் வாழவில்லை.

கையிற் கடதாசியுமில்லை. பையிற் பணமுமில்லை. நாளைக்கு என்ன செய்வது என்று தெரியாது. இந்நிலையிலே திருமணமாகப் போகிறது. பெண் வீட்டார் ஆறு மாதம் சாப்பாடு போடுவார்கள். மங்கம்மாள் சத்திரத்தில் தடுத்தாட்கொண்ட வள்ளலுமிருக்கிறார். பயமில்லை. கலியாணம் நடக்கட்டும் இதுதான் எனது நம்பிக்கை.

குருக்கள்மடத்திலே கோயில் திருப்பணி செய்து வரும் ஒரு நல்ல குடும்பத்திற் பிறந்த பெண்தான் மணமகள். திருப்பணித் தலைவர் நா.குமரப்பெருமாள் உடையாரின் பேத்தி. பெயர் நல்லம்மா. தந்தையார் வினாசித்தம்பி மூத்த தம்பி; கோயில் வண்ணக்கர். தாயார் உடையாரின் மூத்த மகள் கந்தம்மை என்பார்.

1926 ஆவணியில் திருமணப்பதிவு நிறைவேறியது. விருந்து வைபவத்தில் மாப்பிள்ளைப் பகுதியாருக்கு மயக்கமுண்டாயிற்று. அது மதுபோதையல்ல. கதிர்காம யாத்திரை அமுதென்று சொல்லுகிறார்கள். இறைச்சிக் குழம்பையும் படைத்து விட்டார்கள். இதென்ன அசம்பாவிதம் என்ற மயக்கந்தான். எனது சிறிய தந்தையார், மாமிச போசன சமையல் பாகத்தில் கைதேர்ந்த ரசிகர். களுவாஞ்சிக்குடி நாகப்பர் குருநாதபிள்ளைக் கண்காணியாரே இந்தக் குழம்புக் கறியால் மனம் குழம்பிவிட்டாரென்றால் எங்களைப் பற்றிச் சொல்வானேன்? இதென்ன குழம்புக் குழப்பம்? இந்தக் குழப்பத்தின் மத்தியிலே நான் சமயம் பார்த்து பதிவுப் பெண்ணை

ஒருவாறு அணுகிக் கதிர்காம யாத்திரை அமுதில் இதென்ன இறைச்சிக் குழம்பு? என்று விசாரித்தேன்.

இது தென்னங் குரும்பைக் கயறும் பயறும் சேர்ந்த குழம்பு; ஒன்றும் வித்தியாசமில்லை எனப் போட்டிருந்த நகை யொளியைப் புன்னகையொளி மிஞ்சும் வண்ணம் புகன்றார். இந்தக் குழம்பு மயக்கத்தால் மாப்பிள்ளைப் பகுதியாருக்கு ஒன்றும் குறைந்துவிடவில்லை. பெண் எனது மாமன் மகள்தானே!

இதற்கிடையில் விபுலாநந்த அடிகளாரிடமிருந்து வருகிறது ஒரு நற்செய்தி. திருக்கோணமலை இந்துக் கல்லூரிக்கு நீங்கள் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். கடமை கையேற்க உடனே வருக. இந்த நற்செய்தி எனக்குத் திருமணப் பதிவுப் பரிசு போலாயிற்று. தாமதமின்றிச் சென்று 1926 ஆவணியிலேயே கடமையை ஏற்றுக் கொண்டேன்.

யாழ்ப்பாணம் மரகத மடத்தில் முகிழ்ந்த நல்லன்பு இராசாவின் தோட்டத்தில் அரும்பாகி ஆனைப்பந்தியில் போதாகி, மானிப்பாயில் மலராகி, திருக்கோணமலையிலே அருள் மணம் வீசலாயிற்று. இதனால் நான் ஒரு புது உயிர்ப்பைப் பெறலானேன்.

நான் பகலிலே பண்டிதன்; இரவிலே மாணாக்கன் அன்பர்கள் கவிஞர் மா. பீதாம்பரன், பண்டிதர் செ. பூபாலபிள்ளை, பண்டிதர் ஐ.சரவணமுத்து, க. சீனிவாசகம், சிதம்பரப்பிள்ளை, சிவதாஸ், அ.பரமசாமி முதலியோரும் இவ்வண்ணமே பகலில் ஆசிரியர்; இரவில் மாணாக்கர். சுவாமிகள் பீதாம்பரத்தைத் “தம்பி” என்றே அழைப்பார். சீனிவாசகத்தைச் “சீனி” என்றே செல்லமாகக் கூப்பிடுவார். எங்களை யெல்லாம் பெயர் சொல்லியே அழைப்பார். ஆனால், அன்புக்குக் குறைவில்லை.

இந்தச் செல்லச் சீனிதான் சுவாமி நடராஜானந்தா. சிவதாஸ் பின்னர் சுவாமி பரிபூரணானந்தர் என்னும் திருநாமம் பெற்றுத் துறவு நெறியில் நின்று சில ஆண்டுகள் தொண்டு பூண்டு, அதன் பின்னர் இராமேசுவரத்தில் சித்த வைத்திய கலாநிதியாகச் சிறந்த சேவை செய்துவிட்டு, யாழ்ப்பாணம் திரும்பி வந்து நல்லூர் கயிலாசபிள்ளையார் கோயில் வீதியில் டாக்டர் பரிபூரணானந்தர் என்னும் பேருடன் பிரபலம் அடைந்து ஜே.பி பட்டமும் பெற்று வாழ்ந்திருந்தார்.

நான் யாழ்ப்பாணம் செல்லும் போதெல்லாம் அன்னாரின் விருந்தாளியாகத் தங்கியிருப்பேன். அவரது மனைவி மக்கள் மிக

நல்லவர்கள். நல்லாயிருக்கிறார்கள். அந்த உபகாரியை இங்கே நினைவு கூருகின்றேன். அவர் தந்த ஒரு மருந்து நாராயண செந்தூரம்தான், எத்தனையோ ஆண்டுகள் சென்றும் எனது உடம்பினுள்ளே இன்னும் வேலை செய்து கொண்டிருக்கிறது. நானும் வேலை செய்து கொண்டிருக்கிறேன்.

இது நிற்க; ஒவ்வொரு நாளும் இரவு ஏழு மணிக்கு விபுலாநந்தரின் வகுப்பு தொடங்கும். குரு சீஷர் எல்லாருக்கும் சமாசனந்தான். அன்பாய் விரித்த பன்பாயில் நாங்கள் அடிகளார் முன்பாய் அரை வட்டமாயிருப்போம். அடிகளார் பாயில் அமர்ந்து பீடத்தின் மீது புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு விரித்துரைப்பார். நேரசூசியில்லாத வகுப்பு. பாடக் குறிப்பில்லாத விரிவுரை. நேரம் நீண்டு போகும். பீதாம்பரமும் ஒரு சிலரும் வயிற்றைப் பிசைந்து கொண்டு எழுந்து நிற்பார்கள். சோற்றைப் பிசைகின்ற நேரம் கடந்து போவதை இது காட்டும்.

நான் சுவாமியைப் பார்த்து "சுவாமி, நேரமாகிறது" என்று சொல்வேன். "என்ன நேரம்?" என்று கேட்பார். "பத்தரை மணி சுவாமி" என்பேன். "ஆகப்பத்தரை மணிதானா?" என்று சொல்லிக் கொண்டே பாடத்தைத் தொடர்வார். பதினொரு மணியானதும் நான் எழுந்து வணங்கிப் புத்தகத்தை வாங்கிக் கொள்வேன். வகுப்பு முடிந்துவிடும்.

ஒரு விஞ்ஞானி; கணித மேதை; இலக்கிய இலக்கணக் கடல் தத்துவ ஞானி. காலம் நேரம் மாத்திரம் தெரியாது. சுவாமிகள் ஐம்பத்தைந்து வருடம் இவ்வுலகில் வாழ்ந்திருந்தாலும் அவர் நூறு வருட சேவையைப் பூர்த்தி செய்து மறைந்தார் என்றே நான் துணிந்து கூறுவேன். ஒரு விபுலானந்தரைப் பெற ஈழநாடு நூறாண்டு தவமிருந்திருக்க வேண்டும்.

# பிறக்க முன்னரே
# ஆசிரியப் பயிற்சி பெற்றவரா புலவர்மணி?

இந்துக் கல்லூரியில் இரண்டு முதற் கடமைகளை நான் நிறைவேற்ற வேண்டும். ஒன்று தமிழிலே கவர்ச்சியுண்டாக்குதல். மற்றது தமிழின் தரத்தை உயர்த்துதல். நான் முதல்நாள் எஸ்.எஸ்.ஸி வகுப்புக்குச் சென்று மாணவரின் பெயர்களைத் தெரிந்து கொண்டு ஏதோ சொல்லத் தொடங்கினேன். அப்போது தாமோதரம்பிள்ளை என்னும் மாணவர் எழுந்து ஐயா, எனக்குத் தமிழ் எழுதவும் வராது; பேசவும் வராது; என்னை தயவுசெய்து விட்டுவிடுங்கள் என்று சொன்னார். இதைக் கேட்டதும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

உடனே அம்மாணவரைப் பார்த்து நான் சொன்னேன். "உமக்கு நன்றி. நான் வேலை செய்தற்குரிய ஒரு இடத்தை நீர் எனக்கு காட்டித் தந்து விட்டீர். உம்மைப் போன்ற மாணவர்களுக்காகத்தான் சுவாமி என்னை இங்கே கொண்டு வந்திருக்கிறார். நோகாமல் படிப்பிப்பேன். பயப்பட வேண்டாம்"

நான் கூறிய வார்த்தையைக் கேட்டு அவர் தம்மை சமாதானம் செய்து கொண்டு தமிழை விரும்பிப் படிக்கலானார். இவர் போன்ற மாணவர் பலர் சிலநாளில் என் வசமாகி விட்டார்கள். எஸ்.எஸ்.ஸி வகுப்புக்குத் தமிழ் கட்டாயமில்லாத காலம் அது.

1941ஆம் ஆண்டு ஜப்பானியரின் குண்டு வீச்சுக்கு இலங்கையும் சிறிது இலக்காகிய காலச் சூழ்நிலையில் இருபத்தெட்டுநாள் நான் கொழும்பில் இருக்க நேர்ந்தது. மருதானை போப்ஸ் வீதியிலுள்ள மட்டக்களப்பு நண்பர் க.ஞானசெல்வம் அவர்களின் வீட்டிலே தங்கியிருந்தேன்.

அவரின் மைத்துனர் நாகலிங்கம் சிவராசா என்பவரும் அங்கே வசித்து வந்தார். சிவராசா விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பிரதம லிகிதர். இவ்வுலகப் பற்றில்லாதவர். படம் பார்க்க வரும்படி என்னை

ஒவ்வொரு நாளும் அவர் நெருக்குவார். நானும் ஏதோ தடை சொல்லிக் கொண்டே வந்தேன்.

இருபத்தேழாம் நாள் வந்தது. நாளைக்கு மட்டக்களப்புக்குப் பிரயாணமாகிறேன். இன்று சிவராசா என்னை அன்பினாற் பிணித்து விட்டார். இராப்போசனத்தை முடித்துக் கொண்டு இருவரும் இரண்டு நர வாகனத்தில் (றிக்ஷோ) ஏறிச் சென்று ஜிந்துப்பிட்டிப் படமாளிகையை அடைந்தோம். நேரமிருக்கிறது. மின் வெளிச்சத்தின் கீழ் இருவரும் தரித்து நின்றோம்.

இளைஞர் கூட்டமொன்று எங்களை நோக்கி விரைந்து வருகிறது. வந்ததும் ஒரு இளைஞர் என்னை பார்த்து "ஐயா, நான்தான் திருகோணமலை தாமோதரம்பிள்ளை. எனக்குத் தமிழ் பேசவும் வராது, எழுதவும் வராது என்னைத் தயவுசெய்து விட்டுவிடுங்கள் என்று சொன்ன அந்த மாணவன் தான் இவன். தங்கள் அன்பாலும் ஆதரவாலும் தமிழ் சித்தியடைந்ததன் பயனாக இன்று முந்நூற்றைம்பது ரூபா சம்பளம் பெறுகிறேன். ஐம்பது ரூபாவை இன்று தங்களுக்காகச் செலவழிக்கத் தயவு செய்து சம்மதிக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

நான் அவருக்கு வாழ்த்தும், மகிழ்ச்சியும் தெரிவித்தேன். சிவராசா உட்பட எல்லார்க்கும் பிரத்தியேக ஆசனம் எனது மாணவர் செலவில்.

இனி மீண்டும் திருகோணமலைக்கு வருவோம். இந்தக் காலப் பகுதியில் சுவாமிகளின் தூண்டுதலால் சீவகசிந்தாமணி, நாமகள் இலம்பகத்தைப் பாலசரிதை நாடகமாக இயற்றிவிட்டேன். விவேகானந்தன் பத்திரிகையில் அது வெளிவந்து கொண்டிருக்கிறது. சிலமாதம் சென்றதும் எனது நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு ஒரு சமயோசித பரிசோத னைக்காக உதவி வித்தியாதிபதி திரு.எஸ்.கே.இராசசிங்கம் அவர்கள் எனது வகுப்பினுள்ளே திடீரப் பிரவேசம் செய்தார்.

சுவாமியின் அனுமதியுடன்தான் அவர் அங்கு வந்தார். நான் படிப்பித்துக் கொண்டிருந்த பாடத்தைத் தமக்குப் படிப்பித்துக் காட்டுமாறு அன்னார் கேட்க, நான் அவ்வாறு செய்து காட்டினேன். நல்ல திருப்தி தெரிவித்து அவர் மேசையிற் கிடந்த விவேகானந்தனை எடுத்து விரித்ததும் நாமகள் இலம்பக நாடகத்தைக் கண்டு அதை முழுவதும் ரசித்து வாசித்து முடித்துவிட்டுச் சுவாமியின் அறைக்குச் சென்று கலந்துரையாடிக் கொண்டு கொழும்புக்குப் புறப்பட்டுவிட்டார். அன்று தொடக்கம்

அப்பெரியாருக்கு என்மீது அளவிறந்த மதிப்பு.

அடுத்து மேலும் இரண்டு குறைகளைக் களையும் பணியில் ஈடுபடலானேன். ஒன்று பக்கத்து மாணவனைப் பார்த்தெழுதும் களவுப் பழக்கம். மற்றது உறுப்புக் குறைவுள்ள கையெழுத்து.

நான் கல்முனையிற் படிக்கும்போது உடன் மாணவர் ஒருவர்; அவர் பெயர் மாணிக்கம். அவர் ஒவ்வொரு நாளும் கணக்குப் பாடத்தில் எல்லாக் கணக்குகளையும் சரியாய்ச் செய்துவிடுவார். தவணைப் பரீட்சைகளில் மிகக் குறைந்த புள்ளிகளே அவருக்குக் கிடைக்கும்.

அவர் கண்ணாகிய "கமறா" வினால் பக்கத்து மாணவர் வீ.சின்னத்தம்பியின் கணக்குகளை அப்படியே படம் பிடித்து விடுவார். அது சின்னத்தம்பிக்குத் தெரியாத பகற் களவு. சின்னத்தம்பி ஆழமும் அடக்கமும் வாய்ந்த ஒரு மாணவர். பிற்காலத்தில் லண்டன் வரையும் புகழ் பரப்பிய ஒரு பேரறிஞர் ஊர் பெரியகல்லாறு.

மாணிக்கத்தின் இந்தப் பழக்கத்தால் இரண்டு குறைபாடுகளுக்கு அவர் ஆளாகி விட்டார். ஒன்று களவு. மற்றது அறிவு வளர்ச்சி பெறாதிருந்தமை. இந்த இரண்டு குறைபாடுகளையும் இந்துக் கல்லூ ரியிலும் இலேசாக அவதானிக்கலானேன். எந்த மாணவரையும் கடிந்து கொள்ளும் பழக்கம் என்னிடமில்லை. குறைகளைக் குறை கேளாமல் திருத்தி விடுவேன்.

பாடங்களைக் களவாகப் பார்த்தெழுதுவதால் ஒழுக்கம் கெடுகிறது. உள்ள குறை குறையாகவே இருந்து கொள்ளும் எதிர்கால வாழ்க்கையைப் பாதிக்கும். கல்விகற்பது உண்மை காண்பதற்கு. பள்ளிக்கூடத்துக்கு வந்த நோக்கமே பாழாய்ப் போகிறது.

"அன்புள்ள மாணவர்களே பயப்படாதீர்கள். துணிவு கொள்ளுங்கள். உங்கள் குறைகளை ஆசிரியர்களுக்கு வெளிப்படுத்துங்கள். உங்கள் குறைகளை அறிந்து அனுதாபத்துடன் அவற்றை நீக்கி வைப்பார்கள் உங்கள் ஆசிரியர்கள். நீங்கள் நிறைவு பெறுவீர்கள். உண்மை காண்பீர்கள்."

இவ்வாறு சொல்லி இளம் உள்ளங்களைக் கனியச் செய்தேன். சில நாளில் களவு நின்று விட்டது. மாணவர்கள் தங்கள் குறைபாடுகளைப் பயமின்றி ஆசிரியர்களுக்கு வெளிப்படுத்தும் மன நிலையைப் பெற்று விட்டார்கள். வகுப்புகளில் உண்மையான திருத்தம் உண்டாகிவிட்டது. எவர் மனத்தையேனும் கடினப்படுத்தாமல் கனியப் பண்ணும் முறையால்

காரியசித்தி கைமேற்பலனாகும். நான் பிறந்த பின்பு ஆசிரியப் பயிற்சி பெறவில்லை. பயிற்சி பெற்ற பின்புதான் பிறந்தவன் போலும்.

இனி, இந்துக் கல்லூரியில் எனது முதற்கடமைகளுள் ஐந்தாவது எது என்பதைச் சொல்கின்றேன். உறுப்புக் குறைவுள்ள எழுத்துகள். சொல்லுக்கும் சொல்லுக்குமிடையே இடைவெளி விடாமல் எறும்பு வரிசைபோல் காட்சியளிக்கும் வரிகள் ஒவ்வொரு வகுப்பிலும் காணப்பட்டன. அந்தக் குறைபாடுகள் மாணவர் வைத்திருக்கும் "றோயல் கிறவுண்" என்னும் அச்செழுத்துக் கொப்பிகளிலிருந்து ஆரம்பமாவதை நான் அவதானித்தேன்.

இந்த அச்செழுத்துக் கொப்பிகளையெல்லாம் ஒன்றும் விடாமல் மாணவரிடமிருந்து வாங்கி சேகரித்து அவற்றிலுள்ள அச்செழுத்து வரிகளை நீளமான துண்டுகளாகக் கத்தரித்துச் சிறு சிறு கட்டுகளாகக் கட்டி வகுப்பு "அலுமாரிக்குள் வைத்துக் கொண்டேன்.

எழுத்துப் பாட நேரங்களில் ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு துண்டைக் கொடுப்பேன். "இது ஒரு படம். உங்கள் இரட்டை றூள் கொப்பியில் இதைப் பார்த்து வரையுங்கள்" என்று சொல்வேன். பிழைகளைச் சிவப்பு மையால் திருத்திவிட்டு "இது பெரிய படம். ஒற்றை "றூல் கொப்பி"யை எடுத்து இதைச் சிறிய படமாக வரையுங்கள்" என்று சொல்வேன். வரைவார்கள். பிழை அதிகம் வராது. அழகாயிருக்கிறது என்பேன். இது பத்து நிமிஷ நேரம் நடக்கும்.

அடுத்த முப்பது நிமிஷமும் வாக்கியமியற்றல், கதை புனைதல், கட்டுரை வரைதல் ஏதோ ஒன்று இடம்பெறும் ஒருமாத காலம் இவ்வாறு நிகழும். அடுத்த மாதம் அச்சிட்ட ஒரு சிறு பந்தியை அப்படியே பார்த்தெழுதும் பயிற்சி நடக்கும். இந்தப் பயிற்சியின் போது சொல்லுக்குச் சொல் இடைவெளி விட்டு எழுதுவதிலும் தேர்ச்சி பெற்றுவிடுவார்கள். மூன்று மாதம் முடிய எல்லா மாணவரும் அச்செழுத்துப் போல் எழுதும் அழகினைக் கண்டு நான் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டேன்.

இவ்வளவுக்கும் நான் வகுப்பிலே ஆசனத்தில் இருப்பதில்லை. ஒரு பாட நேரம் நாற்பது நிமிஷமானால் நான் முற்பத்தொன்பது நிமிஷம் அல்லது நாற்பத்தொரு நிமிஷம் படிப்பிப்பதுமில்லை.

# திருமலை மக்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் உயிர் கொடுப்பவர்கள்

இப்போது எனது முதற் கடமைகள் ஐந்தும் மாணவர் மத்தியில் ஒரு புது நோக்கையும், புதுப்போக்கையும் உண்டாக்கி விட்டன. சுவாமிகளின் பாராட்டும் எனக்குக் கிடைத்தது. எனது முதற் கடமைகள் பலனளித்தமை குறித்து எனக்கும் ஒரு மனத்திருப்தி.

ஒருநாள் இலங்கை முழுவதுக்கும் தமிழ் மேற்பார்வையாளராக உயர்பதவி வகிக்கும் முதலியார் கந்தையா அவர்கள் இந்துக் கல்லூரிக்கு வருகிறார்கள். அன்னாரை வித்தியாதரிசியாக நான் முன்னமே தெரிந்திருந்தேன் நல்லூரைச் சேர்ந்த இவரைத் தேவாரக் கந்தையா என்று சொன்னால் எல்லாருக்கும் தெரியும்.

மாணாக்கராயிருக்கும் போது அவர் வாரமொருமுறை ஒரு அஞ்சல் அட்டையில் ஒரு தேவாரத்தை எழுதி வீட்டுக்கு அனுப்பி விடுவார். சுகமாயிருக்கிறேன் என்பதுதான் அதன் கருத்து. தேவாரக் கந்தையா என்று பெயர் வந்த காரணம் இதுவே.

எனது வகுப்புக்குள் வந்த முதலியார் மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளை வாங்கிப் புரட்டிப் பார்த்தார். செந்தாமரை மலர் போன்ற அவரது முகம் மேலும் ஒரு புதுப் பொலிவினைப் பெற்று விட்டது. அவர் என்னைப் பார்த்து, "இது என்ன அழகு! முழுப் பிள்ளைகளும் அச்செழுத்துப் போல் எழுதியிருக்கிறார்களே. இந்தச் சாதனையை எப்படிச் செய்து முடித்தீர்கள்?" என்று என்னைக் கேட்டார். நானும் சொன்னேன். அவர் என்னை நன்றாகப் பாராட்டிவிட்டுச் சென்றார். பெரியோரின் ஆசியும் பாராட்டுந்தான் எனது வாழ்க்கை.

நான் எஸ்.எஸ்.ஸி வகுப்புத் தமிழைப் பொறுப்பேற்கும் போது பதின்மூன்று மாணவருள் இருவர் மாத்திரமே பகிரங்கப் பரீட்சையில் தமிழ் சித்தி பெற்றிருந்தனர். அடுத்த பரீட்சையில் பதின்மூன்று பேருள்

பத்துப்பேர் சித்தி பெற்றனர். சுவாமிகள் என்னில் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. அவரருளாலே அவர் தந்த பணியினைச் செய்தேன். இது எனது பிறப்புரிமை. விபுலாநந்த அடிகளார், கவிஞர்.மா. பீதாம்பரம், எனது தமயனார் கிரான் ஜே.கே. பூபாலப்பிள்ளை, கல்லாறு ஆசிரிய சிரோமணி வே. சாமித்தம்பி, மட்டுநகர் ஆசிரிய சிரோமணி கே. எல். இராசேந்திரம் முதலியவர்களைப் போல ஆசிரியன் பிறக்கும்போதே ஆசிரியனாகப் பிறக்க வேண்டும்.

**'கல்வியும் அறிவும் கனிமனப் பண்பும்**
**கருத்தினில் உணர்ச்சியும் இனிய**
**சொல்வளம் அடக்கம் ஒப்புர வுண்மை**
**துலங்குநற் பரம்பரைத் தொடர்பும்**
**செல்வமா யமைந்த உடல்நலம் ஒழுக்கம்**
**தேசீய அடிப்படை நோக்கும்**
**வல்லவர் பயிற்சி நெறிமுறை கற்றால்**
**வயங்குமா சிரியராய் வாழ்வார்"**

இந்தச் செய்யுள் ஓர் ஆசிரிய மகாநாட்டில் நான் பாடியது. சந்தர்ப்பம் நோக்கி இங்கே தந்துள்ளேன். வாசகர்கள் இதைப் பயன் செய்க.

நாலாம் வகுப்பில் தமிழ் படிப்பிக்கும் ஆசிரியர் ஒருவர் ஒருநாள் வரவில்லை. அந்த வகுப்பைப் பார்க்கும் படி சுவாமி என்னை அனுப்பினார். சிறு பிள்ளைகளில் எனக்கு அதிகம் விருப்பம். விளையாட்டுப் போல் பாடம் படிப்பிக்கும் பழக்கம் உள்ளவன் நான். அங்கு சபாபதிப் பிள்ளை விசுவலிங்கம் என்னும் சிறுவன் எழுந்து ஐயா, ஐந்து நிமிடம் நாங்கள் சும்மா இருக்கப் போகிறோம் என்றான். நானும் சரி சந்தோஷம் என்றேன்.

**'என்றும் கணமேனும் யாரெனினும் யாதேனும்**
**ஒன்றும் செய்யாதிருத்தல் ஒண்ணாதே"**

பிள்ளைகள் சும்மா இருக்கிறார்களில்லை. ஏதோ ஒன்று செய்யாமலிருக்க அவர்களால் முடியவில்லை. நான் உடனே சொன்னேன் : பிள்ளைகளே, நான் உங்களை சும்மா இருக்கத்தான் விட்டேன். நீங்கள் சும்மா இருக்கிறீர்களில்லை. சும்மா இருக்க உங்களால் முடியாது; என்னாலும் முடியாது; அது பெரிய வேலை. ஏதோ படிப்போம் என்று சொல்லிக் கொண்டே பாடத்தைத் தொடர்ந்தேன். சிரித்துக் கொண்டே படித்தார்கள்.

சிறு பிள்ளைகளின் குணத்தோடு ஆசிரியர் பழக வேண்டும். உயர்கல்வி பயிலும் மாணவர்கள் ஆசிரியரின் குணத்தோடு பழக

வேண்டும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டவன்.

இந்துக் கல்லூரியில் ஒரு நாடகம் மேடையேறுகிறது. ”ஆமோனியம்” வாசிக்க ஒரு நிபுணர் தேவை. திருமலை சுண்டங்காட்டில் ஒரு இசைக்கலைஞர் இருக்கிறார். மிக மிகப் பிரபல்யமானவர். குறுக்கிடுகிறது சாதிப்பிரச்சினை. கதிரையிலிருந்து அவர் பெட்டி வாசிப்பதா?

அவரை நானே மேடைக்குக் கொண்டுவர வேண்டும். எங்கும் புகழ்பெற்ற ஒரு இசைமேதை. நமது காரியத்தில் நமக்கு உதவப்போகிறார். உதவியும் வேண்டும். ஒதுக்கவும் வேண்டும். ஒரு இசைப்புலவன் பள்ளர் குலத்திற் பிறந்த குற்றத்துக்காக இந்தச் சமூகத் துரோக நடவடிக்கைக்குப் பலியாக வேண்டுமா? காலும் கையும் சேர்ந்து இயக்க வேண்டிய கருவியைப் பாயிலிருந்து இயக்குவது முடியும் காரியமா? இவ்வாறு நான் உணர்ச்சி பிறக்கப் பேசினேன்.

இவ்வளவுக்கும் இந்தச் சிக்கல் சுவாமிக்கும் தெரியாது. இசைக் கலைஞர் தம்பிமுத்துவுக்கும் தெரியாது. எனது பேச்சை ஏற்றுக் கொண் டார்கள். பிரச்சினை தீர்ந்து விட்டது. எனது வாழ்க்கை முழுதும் இந்த பிரச்சினைதானே! சாவகச்சேரியில் ஆறுமுகம்; பசுமலை தேவதாசன்; திருமலை தம்பிமுத்து. இவர்களை என்னால் மறக்க முடியாது.

நாடக அமைப்புக் குழுவினரின் அனுமதியோடு போகிறேன் சுண்டங்காட்டுக்கு. அங்கு அன்பு கலந்த தேநீர். என்போன்றவர்களுக்கு இது புனிதமானது.

கலாசாலைக்குத் திரும்பினேன். அன்றிரவு நாடக மேடையிலே கதிரையில் அமர்ந்து கொண்டு தம்பிமுத்து மதுரகானம் பொழிகின்றார். திருகோணமலைக்கே அணிகலனாக விளங்கிய இசைக்கலைஞர் தம்பிமுத்துவை தென்னிந்திய ஆமோனியச் சக்கரவர்த்தி காதிர்பாக்ஹாவுடன் இங்கே நான் நினைவு கூருகின்றேன். இனி, கல்லூரியின் அடுத்த நாடகத்துக்கு வருவோம்.

கல்லூரி நிதிக்காக இன்னொரு நாடகமும் நடக்கப் போகிறது. பிரவேசச் சீட்டு விற்பனையும் ஆரம்பமாகிவிட்டது. ஐந்துரூபா தொடக்கம் ஐம்பது ரூபாவரை சீட்டுப் புத்தகங்கள் அச்சாகியுள்ளன. சுவாமி என்னை அழைத்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார். ஐம்பது ரூபாப் புத்தகம் ஒன்று தாருங்கள் சுவாமி என்று துணிவுடன் சொன்னேன்.

அன்று சாயந்தரம் முதல் முதல் ஒரு பிரபல வர்த்தகரின் "சாய்ப்பு"க்குச் சென்றேன். கொழும்பிலே பற்று வரவுக்குச் சாமான் வாங்காமல் கைமேல் பணம் கொடுத்து வாங்கும் பெரிய தனவந்தர் அவர். நான் அன்னார் முன் போய் நின்று; இல்லை இருந்து, வந்தகாரியம் இதுவெனச் சொன்னதுதான் தாமதம் உடனே ஒரு நூறு ரூபா "நோட்"டை எடுத்துத் தந்து இரண்டு சீட்டுகளை வாங்கிக் கொண்டு என்னை வாசல்வரையும் அழைத்து வந்தார் அந்தப் பேருபகாரி. அவர் வந்தது என்னை வழியனுப்புவதற்கல்ல. அவர் வயதில் அதிகம் மூத்தவர் நான் மிக இளையவன்.

நாம் புகுமுக வாயில் வழியாக உள்ளே வந்ததும் முதற் காண்பது ஒரு சிறு கண்ணாடி "அலுமாரி". தேக்க மரத்தாற் செய்தது. முக்கோண வடிவானது. வளவளப்பாக மெருகூட்டப்பட்டுள்ளது அது. அதனுள்ளே நீலநிறமான "வெல்வெற்" உறையினுள்ளே வட்டவடிவமான ஏதோ ஒரு பொருள் இருந்தது. அந்தப் பெரிய மனிதர் அதைச் சுட்டிக்காட்டி இதென்ன தெரியுமா? இதுதான் நான் முட்டைவிற்ற பெட்டி. இதை மறக்கப்படாது. இதைத் திரும்ப எடுக்க வேண்டி வந்தாலும் ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று அந்த முஸ்லிம் வள்ளல் சொன்ன சொற்கள் எளிமையின் சின்னம் நன்றியின் வடிவம். செல்வச் செருக்கை வென்ற திருமலை ஜனாப் அப்துல் றசூல் முதலாளியை இங்கே நினைவு கூருகின்றேன்.

அவர் உபகரித்த நூறு ரூபாவும் மணிமேகலையின் கையிலுள்ள அட்சயபாத்திரம் என்னும் அமுத சுரப்பில் ஆதிரையிட்ட பிச்சை போலாயிற்று எனக்கு. அன்றைக்கே இருபத்தைந்து சீட்டுகளின் பணத்தையும் இலேசாகப் பெற்றுச் சுவாமிகளிடம் ஒப்படைத்துவிட்டு அவரது ஆசியைப் பெற்று அகநிறைவுகொண்டேன்.

திருகோணமலை மக்கள் சைவமென்றால், தமிழென்றால் உயிரையும் கொடுப்பார்கள். அவர்கள் என்மீது வைத்துள்ள நல்லன்பு அரை நூற்றாண்டாகியும் இன்னும் புதுமை குலையாதிருக்கின்றது. பேரறிஞர் திருகோணமலை. த.கனகசுந்தரம்பிள்ளை அவர்தம் சகோதரியார் திருமதி தையல்நாயகி சுப்பிரமணியம் இருவரையும் இங்கே நினைவு கூருகின்றேன்.

# எமது 80ஆவது வயதிலும் குறிப்பில்லாமலே சம்பவங்களை நினைவில் வைத்தது எப்படி?

கல்லூரி ஆண்டுப் பரீட்சையொன்று இங்கே நினைவுக்கு வருகிறது. பெரும்பாக வித்தியாதரிசி திரு.கே.எஸ். அருள்நந்தி அவர்கள் எட்டாம் வகுப்பினுள் பிரவேசித்து ஆசனத்தில் அமர்கின்றார். என்னையும் பக்கத்தில் அமர்த்துகின்றார். “இவர்களுக்கு என்ன இலக்கிய பாடம் படிப்பித்திருக்கிறீர்கள்?” என்று என்னை வினவினார்.

எட்டாம் வகுப்புக்குக் குறிப்பிட்ட இலக்கிய பாடப் புத்தகமில்லை. பல இலக்கியங்களிலிருந்து தெரிந்தெடுத்த நூறு பாடல்கள் இவர்களுக்குத் தெரியும். இவைகள் மாதிரிப் பாடல்களே. இந்தப் பாட்டுகளில் ஒன்றையும், நீங்கள் விரும்பும் வேறொருபாட்டையும் கொடுத்துப் பரீட்சித்துப் பாருங்கள்” என்றேன்.

அப்படியே இரண்டு பாட்டுகளைக் கரும்பலகையில் எழுதிவிட்டுச் சில வினாக்களையும் கொடுத்து விட்டு அவர் அடுத்த வகுப்புக்குச் சென்றுவிட்டார். போய்ப் பார்த்தேன். அவர் எழுதிய பாட்டில் பிழையிருந்தது. பெரியவர்களிடம் பிழை காண்பதில் நாம் குருடராயிருக்க வேண்டும் ஆனால், குறித்த அந்தப் பிழை மாணவர்களைப் பாதிக்கும். இதனால் நான் அன்னாரிடம் சென்று, “நீங்கள் எழுதிய பாட்டை ஒரு தரம் வந்து பாருங்கள்” என்றேன்.

“பாட்டில் பிழையிருக்கிறதா?” என்று கேட்டார். நான் அது பற்றி ஒன்றும் குறிப்பிடாமல் “வந்து பாருங்கள்” என்று மீண்டும் சொன்னேன். வந்து பார்த்து அழித்துத் திருத்தம் செய்து கொண்டு அடுத்த வகுப்புக்குச் சென்று விட்டார்.

குறித்த நேரம் முடிந்ததும் என்னைக் கூப்பிட்டு விடைத்தாள்களைச் சேகரித்துப் புள்ளிபோட்டுவைக்கும்படி சொன்னார். நான் விடைத்தாள் களைப் புள்ளியிட்டுத் தரம் பிரித்து மூன்று கட்டாக கட்டி வைத்துக்

கொண்டேன். மூன்றாவது கட்டிலுள்ள பதின்மூன்று பேரும் வேண்டிய புள்ளிகள் பெறாமையால் பரீட்சையில் தவறிவிட்டார்கள்.

அருள்நந்தி அவர்கள் வந்து நானிட்ட புள்ளிகளைப் பரிசீலனை செய்ததில் கடைசிப் பதின்மூன்று பேருக்கும் தேவையான புள்ளிகளையிட்டு வகுப்பில் எல்லாரையும் சித்திபெறச் செய்து விட்டுச் சென்றார்.

இரண்டொரு மாதம் சென்றபின் ஒருநாள் சுவாமி என்னைக் கூப்பிட்டு ஒரு கடதாசிக் கோவையைக் காட்டினார். அது பரீட்சை அறிக்கை. தமிழ்ப் பண்டிதர் திறமையும் கூர்மையும் உள்ளவர் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் குறிப்பு அருள்நந்தி அவர்களின் பெருந்தன்மையைப் பிரதிபலிக்கின்றது.

மாதங்கள் செல்லச் செல்ல மாணவர்கள் என்னைப் போல் எழுதுவது மாத்திரமல்ல பேசவும் பழகிக் கொண்டார்கள். சொல்லாக்கம் செய்யும் முறையிலும் மாணவர்கள் கவர்ச்சி பெற்றனர். ஒரு வினையடியைக் கொடுப்பேன். அந்த அடியிலிருந்து உண்டாக்கக் கூடிய உடன்பாட்டு முற்றுகள், எச்சங்கள் எல்லாவற்றையும் உண்டாக்கச் சொல்வேன். எழுதி முடிந்ததும் விடுபட்டவை இருந்தால் அவற்றைக் குறிப்பிட்டு உரிய இடத்தில் சேர்த்துக்கொள்ளச் செய்வேன்.

அடுத்து, குறித்த வினையடியிலிருந்து உண்டாக்கி உடன்பாட்டுச் சொற்களுக்குரிய எதிர்மறைச் சொற்களை உண்டாக்குமாறு மாணவர்களைக் கேட்பேன். உற்சாகமாகச் செய்துவிடுவார்கள்.

இந்தப் பயிற்சி ஓரளவு சென்றதும் அடுத்த பயிற்சி தொடங்கும். அது எதுகை அமைந்த சொற்பயிற்சி. சிறிய சொற்களில் தொடங்கிப் போவோம் கொக்கு, அச்சு, பட்டு, பத்து, அப்பு, ஒற்று இம்மாதிரிச் சொற்களைக் கொடுத்து இவை ஒவ்வொன்றின் கீழே அதேபோன்ற நாலு சொற்களை எழும்படி கேட்பேன். விருப்பமாகச் சொற்களை எழுதும்படி கேட்பேன். விருப்பமாகச் செய்வார்கள். நாளடைவில் மாணவருக்கு இது ஒரு விளையாட்டுப் போலாகிவிட்டது.

அடுத்த பயிற்சி மோனைப் பயிற்சி. சொல்லின் முதலாமெழுத்தைக் கவனித்து அதைக் கொண்டு சொல்லாக்கம் செய்தல். இதைச் செய்வதற்கு முதல், மாணவர் வருக்க எழுத்துக்களை அறிந்திருப்பது அவசியம் அ,ஆ,ஐ,ஔ இவை ஒரு வருக்கம். இவற்றின் உயிர் மெய்களும் அதேவருக்கமே. இ, ஈ,எ,ஏ இவை ஒரு வருக்கம் உ,ஊ,ஒ, ஓ இவை ஒரு வருக்கம் இவற்றின் உயிர் மெய்களும் இதே வருக்கமே.

இன்னுமொன்று இதில் கவனிக்க வேண்டும். ஞ,ந; ச,த; ம,வ இவை இவ்விரண்டு. தமக்குள்ளே ஒன்றோடு ஒன்று ஒத்து நடக்கும்.

இந்த அடிப்படை விதிகளை மாணவருக்கு இலேசாகக் காட்டிக் கொடுத்தேன். இலேசாகப் பிடித்துக் கொண்டார்கள்.

உயர் மட்டத்துக்குப் போகமுன் அடிமட்டம் பெலனா யிருக்க வேண்டும். பெட்டி பீத்தலானாலும் வாய்க்கட்டுப் பெலன் என்ற நிலையில் நாம் இருக்கப்படாது.

பால் பழம்; காய் கறி; நோய்நொடி; மலர் மணம், காரணம் காரியம்; கை கால்; வாய் வயிறு போன்ற சொற்களிலுள்ள மோனை எழுத்துக்களைக் காண்பது மாணவருக்கு ஒரு பொழுது போக்குப் போல் ஆகிவிட்டது.

அடுத்து, பாட்டுகளைப் பாடமாக்குவதில் ஒரு புதுமுறையைப் புகுத்தலானேன். வகுப்பு மாணவர்களை நந்நான்கு பேர் சேர்ந்த பல இணைப்புக் குழுக்களாக அமைத்தேன். ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு நான்கடிப் பாட்டு. ஒவ்வொரு மாணவருக்கும் வரிசைப்படி ஒவ்வொரு அடியைச் சொல்வேன்.

ஒரே முறையில் தனித்தனியே அதை அவர்கள் வாய்ப்பாடமாகச் சொல்ல வேண்டும். நால்வரும் இவ்வாறு தனித்தனியே சொல்ல பாட்டு முழு உருவத்தில் வெளிவந்துவிடும். ஒவ்வொரு அடியையும் ஒவ்வொருவரும் மறவாமல் வாயில் வைத்திருக்கவேண்டும்.

இவ்வளவில் விடமாட்டேன். நால்வரும் கூட்டாகச் சென்று பாட்டை முழு உருவத்தில் ஒவ்வொருவரும் தனித்தனியே கொப்பியில் அழகாக எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். அடுத்த முறை ஒவ்வொருவரும் வாயிலிருந்தும் தனித்தனியே பாட்டு முழு உருவத்தில் வெளிவர வேண்டும். அடுத்த பாட்டு அங்கே காத்திருக்கும்.

இந்த முறையினால் மாணவர்களிடையே கூட்டுணர்ச்சியையும், கூட்டுப்பொறுப்பையும், அவதான சக்தியையும் வளர்ச்சி அடையச் செய்தேன். இவ்வளவுக்கும் என்னிடம் அடக்குமுறை கிடையாது. அன்புமுறைதான்.

இன்னொரு கண்டிப்பான முறையும் என்னிடமிருந்தது. ஒன்றை இரண்டுமுறை சொல்லமாட்டேன் ஒரே முறையிலேயே மாணவர்கள் அதைக்கிரகித்து அவதானித்துக் கொள்ளவேண்டும்.

ஒரே முறையில் கிரகிக்கும் பழக்கம் மாணவரின் புத்திக் கூர்மையையும் அவதான சக்தியையும் வளர்க்கும். இரண்டாம் முறை சொல்வதை எதிர்பார்க்கும் மாணவன் தனது புத்திக் கூர்மையை நாளடைவில் மழுங்கச் செய்வதுடன் தனது ஆசிரியரின் முதற் சொல்லுக்கு மதிப்புக் கொடாதவனும் ஆகின்றான்.

எண்பது வயதாகியும் ஒரு குறிப்பும் பாராமல் எனது வாழ்க்கைச் செய்திகளை எழுதிவரும் இரகசியம் மேற்கண்ட முறைதான்.

# கிட்டப்பாவின் அற்புத நடிப்பில் பரதனைக் கண்டேன்

*1927-1929* காலப் பகுதியில் நிகழ்ந்த நான்கு சம்பவங்களை இரு கட்டுரைகளில் விபரித்துவிட்டுத் திருகோணமலைச் செய்திகளை முடித்துக் கொள்கிறேன்.

இந்துக்கல்லூரி மண்டபத்தில் இந்துசமய மகாநாடொன்று நடக்கிறது. சுவாமி சர்வானந்தா, சுவாமி விபுலாநந்தா, சுவாமி உருத்திர கோடீஸ்வர் இன்னும் சில பேறிஞர்கள் மேடையில் வீற்றிருக்கிறார்கள். நான் மேடையில் இருந்ததைப் பற்றி நினைவில்லை. எனக்கு ஒரு பேச்சு; கம்பராமாயணம் குகப்படலம். பேச்சுகள் முடிந்தபின் குறிப்புரை கூறுவதற்கு இடமில்லை.

நான் சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டு நிற்கிறேன். 2924 இல் மதுரை மாநகரிற் கண்ட என் மனத்தைக் கொள்ளைகொண்ட ஒரு நாடகக்காட்சி எனது அகக்கண்முன் தோன்றுகிறது.

ஆடல், பாடல், அழகு மூன்றும் ஒன்றாயமைந்த நடிகவேள் எம்ஜீ.கிட்டப்பா பரதனாக நாடக மேடையில் ஏறுகின்றார். குகப்பெருமாளின் வேடம் பூண்டு மற்றொருவர் வருகின்றார். கானகம் வரையும் நீண்டு வந்த கள்ளமில்லாத உள்ளன்பு கொண்ட பரதனின் உண்மை நிலையைக் கண்டு கொண்ட குகன் வில் கையில் நின்றும் நிலத்திலே விழ ஒரு நிமிஷம் மெய்மறந்து நிற்கிறான்.

மறுகணம் விரைந்து பாய்ந்து ஒருவரை ஒருவர் இறுகத் தழுவிக் கொள்கின்றனர். சிறிது நேரம் பேச்சு மூச்சில்லை. நாடகம் பார்த்துக் கொண்டிருந்த எங்கள் ஒருவருக்குமே பேச்சு மூச்சில்லை. இதுதான் நான் மதுரையிற் கண்ட காட்சி.

**'வில் கையில் நின்று இடை வீழ**
**விம்முற்று நின்றொழிந்தான்"**

என்னும் அடியினை நான் படித்ததும், என்னை அறியாமலே என்

கையிலிருந்த கடதாசி கீழே விழ, நான் அப்படியே மெய்ம்மறந்து ஒரு நிமிஷம் தம்பிதம் அடைந்து விட்டேன்! பின்னர் உணர்வு வரப்பெற்றுப் பேச்சினைத் தொடர்ந்தேன். எல்லாமாக என் பேச்சுக்கு ஒன்றரை மணி நேரம் பிடித்தது.

என் பேச்சு முடிந்ததுதான் தாமதம். முன் வரிசையில் தோற்றமும் ஏற்றமும் தோன்ற வீற்றிருந்த அறிவுக்கடல் சிவத்திரு கு.பூரணாநந் தேஸ்வரக்குருக்கள் தலைவரின் மேசையை நோக்கி விரைகின்றார். அவர் தலைவரை அணுகி "ஐயா சபைக்கட்டுப்பாட்டை மீறுவதற்கு என்னைத் தயவு செய்து மன்னிக்க வேண்டும். இந்தப் பிரசங்கத்துக்குப் பாராட்டுத் தெரிவிக்காமலிருக்க என்னால் முடியவில்லை. அனுமதிக்க வேண்டும்." எனக் கேட்டுக் கொண்டார். அனுமதி கிடைத்தது. பலத்த கரகோஷத்தின் மத்தியிலே பாராட்டுரை வழங்கிவிட்டு அமர்ந்து கொள்கிறார்.

அந்தப் பேரறிஞரே ஏனைய அசுரர்களுக்குப் போலவே, சூரபன்மனுக்கும் மிருக முகமுண்டு: அது குதிரை முகம்; கலித்தொகையிற் கண்டதென எனக்குக் காட்டியவர்.

மகாநாடு நிறைவுற்றது. சுவாமி உருத்திர கோடீஸ்வரர் என்னை நோக்கி வந்து "சுத்தமான வாக்கு" என வாழ்த்துரை கூறினார். சுவாமி தனித்தமிழில் தெளிவும் இனிமையும் பிறக்கப் பேசும் அழகான பேச்சாளர். நல்லோரின் ஆசியால் நான் வாழ்கின்றேன். இந்த இருபெரும் குரவர்களையும் இங்கே நினைவு கூருகின்றேன்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் சங்கத்து முதலாவது ஆண்டு விழா அதன் தலைவர் பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் அவர்களின் தலைமையில் இந்துக் கல்லூரியிலே மூன்றுநாள் நடைபெற்றது. அப்போது மாணவர் சங்கத்தின் பிரதான உறுப்பினர்களாக எனது நினைவின்படி எஸ்.ஆர். கனகநாயகம், துரைச்சாமிப்பிள்ளை, எம். நவரத்தினராசா முதலிய அதி தீவிர விவேகிகள் விளங்கினர். கனகநாயகம் பின்னர் மேற்சபை உறுப்பினராயிருந்தவர்; பிரபல நியாயவாதி. துரைச்சாமிப்பிள்ளை ஆங்கில இலக்கிய மாமேதை; வடமராட்சியைச் சேர்ந்தவர். இவர் அகாலமரணம் நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

நவரத்தினராசா இராணி அப்புக்காத்தாகப் பெரும்புகழ் படைத்து வாழ்கின்றார். பேராசியர் சுந்தரலிங்கத்தின் மனைவியார் மாண்பு மிக்கவர். தாய்மை அன்பு கனிந்தவர். பட்டதாரி மாணவர்களின்

மரியாதையையும் மதிப்பையும் பூரணமாகப் பெற்றவர். அம்மையாரின் சமயோசித புத்தி மகாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு அதிகம் பயனளித்தது.

விழாப் பிரமுகர்களில் சிலரை மறந்து போனேன். பல்கலைக் கழகத்தின் தலைமைத் தமிழ் விரிவுரையாளர், கிங்ஸ்பெரி அழகசுந்தரம். அவர் தமிழ் வளர்த்த சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் புதல்வர். சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை, தெல்லிப்பளை, வீ. முத்துக்குமாரு எம். ஏ. இருவரும் விழாவிற் கலந்துகொண்டு விரிவுரை நிகழ்த்தியதும் நினைவிலிருக்கிறது.

விபுலாநந்த அடிகளார் விழாவில் பெரும்பங்கு கொண்டு விஞ்ஞானமும் சமயமும் என்னும் விரிவுரையின்போது எழுந்த பெரிய சிக்கல்களைப் பேராசிரியரின் பணிவான வேண்டுகோளுக்கிணங்க மாதுரியமும், சாதுரியமும் தோன்ற ஆங்கில மொழியில் விளக்கி வைத்ததும் பேராசிரியர் உணர்ச்சிவசப்பட்டுச் சுவாமிகளை விழுந்து வணங்கியதும் நினைவு கூர்தற்கு உரியனவாகும்.

விழா நிகழ்ச்சிகளில் எனக்கும் ஒரு பங்கு கிடைத்தது. அது கம்பராமாயணத்தில் சூளாமணிப் படலம் பற்றிய விரிவுரை. பட்டதாரி மாணவர்கள் மத்தியிலே உரை நிகழ்த்துவது அவ்வளவு இலேசான காரியமல்ல. விழா மண்டபத்தில் உரை நிகழ்த்திய ஆங்கிலப் பேரறிஞர்களையே தமது கேள்விக் கணைகளால் திணறடித்த இவர்களின் மத்தியில் நானும் பேசப்போகிறேன். என்னிடம் நல்ல ஆயுதம் கைவச மிருக்கிறது. பயமில்லை.

விரிவுரைகளின் இடையே குறுக்கீடுகளும் முடிந்த பின்பு கலந்துரையாடலும் இடம்பெறுவது வழக்கம். குறுக்கீடுகள் இல்லாமல் நான் தப்பிக்கொண்டேன். கேள்விக் கணைகளுக்கு இலக்கானேன். கேள்விகள் எழுத்து மூலமாகவே வந்துசேர்ந்தன. அவற்றை வரிசைப்படுத்திக் கொண்டு நான் விடை சொல்ல எழுந்தபோது அழகசுந்தரம் அவர்கள் எழுந்து எனது சார்பில் பதில் சொல்வதற்குத் தம்மை அனுமதிக்குமாறு தலைவரை வேண்டிக் கொண்டார். அனுமதி கிடைத்தது.

கம்பராமாயணத்துக்கும் கம்பரின் வாழ்க்கை வரலாற்றுக்குமிடையே பெரிய முரண்பாடு காணப்படுகிறதே. இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? இது முதற் கேள்வி. கம்பரின் உண்மையான வாழ்க்கை வரலாறு இன்னும் எழுதப்படவில்லை. இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் வரலாறு தெருக் கதை. உண்மை வரலாறு வெளிவந்தால் முரண்பாடுகள் மறைந்து போகும்.

இவ்வாறு பதிலளித்தார் அழகசுந்தரம். ஏனைய வினாக்களுக்கும் அன்னார் விடைகூற எனது பேச்சு நிறைவுற்றது. கிங்ஸ்பெரி அழகசுந்தரம் அவர்களை இங்கே நன்றியுடன் நினைவு கூருகிறேன். எனது பிரியாவிடை வாழ்த்துடன் விழா இனிது நிறைவுற்றது.

1928ஆம் ஆண்டு மகாத்துமா காந்தியின் இலங்கை விஜயம் நடைபெற்றது. யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிறஸ் விடுத்த அழைப்பை ஏற்று காந்திஜி இலங்கை வரலானார். பேரறிஞர் எச். பேரின்பநாயகம் வாலிபர் காங்கிறஸ் ஐம்பதினாயிரம் ரூபா சேர்த்து உபகரிக்க வேண்டும் என்பது காந்திஜியின் நிபந்தனை. ஆனால், ஒரு லட்சத்திக்கு மேல் நிதி இலேசாகச் சேர்ந்துவிட்டது.

காந்தி மகாத்மா கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்யவில்லை. திருகோணமலை மக்கள் தேசிய சேவைகளில் முன்னணியில் நிற்பவர்கள். சில துடிப்புள்ள இளைஞர்கள் காந்திஜியின் காரியதரிசி மகாதேவ தேசாய் அவர்களுடன் தொடர்பு கொண்டு மகாத்துமாவை வரவேற்கும் பாக்கியம் திருகோணமலைக்கும் கிடைக்க உதவுமாறு வேண்டினார்கள்.

தேசாயின் பெரும் பிரயாசத்தினாலும், திருமலை இளைஞர்களின் விடாப்பிடியினாலும் ஒரு சிறு இடம் கிடைத்தது. வரவேற்கும் இடம் திருமலையல்ல; அனுராதபுரம் புகையிரத நிலையம்: நேரம் பத்து நிமிஷம்; வேளை நள்ளிரவு. கொழும்பிலிருந்து மகாத்துமா யாழ்ப்பாணம் செல்லும் நிகழ்ச்சியின் இடையே சமயோசிதமாகத் திருமலைக்குக் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு காந்தி தரிசனம் பெற்ற கண்கொளாக் காட்சியை அடுத்த கட்டுரையில் தருகின்றேன்.

# சேற்றில் புரண்ட திறப்பை காந்தம் இழுக்குமா?

## திருவருட் சக்தியை விளக்க சேர் இராமநாதன் உத்தி

மகாத்மா காந்தியை வரவேற்பதற்கான வரவேற்புச் சபையொன்று தெரிவாயிற்று. உறுப்பினரின் பெயர்கள் சரியாய் நினைவில்லை. பிழையோ சரியோ சில பெயர்களைச் சொல்லுகின்றேன். இந்துக் கல்லூரி அதிபர் கே. எஸ் இராமசுவாமிஜயர், ஆசிரியர் செல்லையா, அல்லிராஜா, க. சிவபாலன் வன்னியனார், ஓவசியர் வீ. குகதாசன், சரவணப்பெருமாள், ஒப்பிலாமணி உருத்திரா, த. பாலசுப்பிரமணியம், ந. பாலசுப்பிரமணியம் என்போர் சுறுசுறுப்பாக இவ்வரவேற்புப் பணியில் ஈடுபட்டனர். வரவேற்புப் பத்திரம் தயாரித்து வாசித்துச் சமர்ப்பிக்கும் பணி எனக்கு ஒப்படைக்கப்பட்டது.

ஒருநாள் பகல் ஒரு மணியிருக்கும்; சுவாமி அவிநாசானந்தரும், சுவாமி விபுலானந்தரும் போசனம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பக்கத்து விறாந்தையில் நான் உலாத்திக் கொண்டு நிற்கிறேன். சுவாமிகள் இருவரையும் நான் அணுகி "மகாத்துமாவுக்கு வரவேற்புப் பத்திரம் எழுதவேண்டும், நான் என்ன செய்ய?" என்று கேட்டேன்.

"பாட்டில் பாடிவிட வேண்டியதுதானே" என இருவரும் ஒருமித்துச் சொன்னார்கள். நான் உலாத்திக்கொண்டே "சுவாமி ஒரு பாட்டு வந்து விட்டது" என்றேன்.

"சொல்லுங்கள் பார்ப்போம்" என்றனர்.

**'சாந்தம் பொலிமுகமும் தண்ணளிசேர் கண்ணிணையும்**
**வாய்ந்தகத ராடை வடிவழகும் - சேர்ந்துமகான்**
**காந்தியென ஓர்வடிவம் கண்முன்னர் நின்றதால்**
**சாந்தி எமக்கின்று தான்"**

எனப் படித்துக் காட்டினேன். "நல்லாயிருக்கிறது; பாடுங்கள்" என்றனர். உலாத்திக் கொண்டே "அடுத்த பாட்டும் வந்துவிட்டது சுவாமி" என்றேன். "பாடுங்கள்" என்றனர்.

**'சகதர்ம மெல்லாம் தனிவளர்க்கு மன்பாம்**
**தகவுடைய கஸ்தூரித் தாயை - அகமகிழக்**
**கண்ணிற் தரிசித்தோம் காய மெடுத்திந்த**
**மண்ணிற் பிறந்தபயன் வாய்த்து"**

எனப் பாடினேன்.

சுவாமிகள் இருவரும் "மிகமிக நல்லது" என்று உற்சாக மூட்டினர். போசனம் பண்ணி முடிவதற்குள் இன்னும் மூன்று பாட்டுகளைப் பாடி எல்லாம் ஐந்து வெண்பாக்களில் வரவேற்புப் பத்திரத்தை மனத்தில் எழுதிக் கொண்டேன். இனித்தான் கடதாசியில் எழுதப் போகிறேன்.

எனது தமிழ்க் குரவரின் ஆசி முந்தியே என்னோடுள்ளது. இன்று அவிநாசானந்த சுவாமிகளின் அருளாசிக்கும் பாத்திரனாய் விட்டேன். இங்கே அவிநாசானந்த சுவாமிகளைப் பற்றி இரண்டொரு வார்த்தை சொல்ல வாசகர்கள் என்னை அனுமதிக்க வேண்டும்.

சுவாமிகள் முன்னரே ஒரு குடும்பஸ்தர். எம்.ஏ. பட்டதாரி: இந்திய தேசியக் கல்லூரியின் முன்னைநாள் அதிபர் காந்தியடிகளுக்கு இரண்டு வருடம் காரியதரிசியாயிருந்தவர். இவரது அறிவு, ஆற்றல், தூய்மை, துணிவு என்பவற்றை நேரில் அறிந்த ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் தலைமைப் பீடாதிபதி இவரது குடும்பத்தினர்க்கு மாதச் சன்மானம் கொடுக்கும் ஒழுங்கினைச்செய்து இவரைத் துறவியாக்கிப் பயன் செய்தனரென்றால், அவிநாசானந்த சுவாமிகளின் ஆசியைப் பெறுவதற்கு அடியேன் முன்பு என்ன தவம் செய்து வைத்தேனோ?

1976ஆம் ஆண்டில் வெளிவந்த மட்டக்களப்பு கல்லடி உப்போடை ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லப் பொன்விழா மலரில் அடிகளாரை நினைந்து சிறியேன் பாடியிருக்கும் அஞ்சலிப் பாடலை இங்கே தருகின்றேன்.

**'அஞ்சாமை நேர்மை அகந்தூய்மை நம்மகத்தே**
**எஞ்சாமல்நிற்க இணைத்து வைத்தார் - தந்தை**
**அவிநாசா னந்த அடிகளார் நாம்செய்**
**தவமாக வந்தபுனி தர்"**

பாடல்களை வரவேற்புச்சபை அங்கீகரித்து அதிபர் இராமசுவாமி ஐயர் அழகான ஆங்கில மொழிபெயர்ப்பும் செய்து தந்தார். கைதேர்ந்த ஒரு சித்திரகாரரைக் கொண்டு பாடல்களை அழகாக எழுதிக் கண்ணாடியும் போட்டுக் கொண்டோம். ஆங்கில மொழிபெயர்ப்புடன் பலநூறு பிரதிகளையும் அச்சிட்டு வைத்துக் கொண்டோம்.

குறித்த நாள் வந்ததும் வரவேற்புச் சபை அதிகாலையிலேயே அனுராதபுரம் புகையிரத நிலையத்தை அடைந்துவிட்டது. நிலைய அதிபரின் அனுமதியுடனும் அன்பர்களின் ஆதரவுடனும் நிலைய முன்றிலில் இயற்கை அழகு மிளிர அலங்கார மேடை அமைக்கப்பட்டது. ஆடம்பரமற்ற முறையில் சுற்றிவரச் சோடிப்பும் செய்யப்பட்டது.

நேரம் ஆக ஆகச் சனசமுத்திரம் அலை அலையாகக் கூடிவிட்டது. சரியான நேரம் வந்ததும் கை காட்டியின் பச்சை விளக்கு மகாத்துமாவின் வருகையை எல்லார்க்கும் அறிவித்தது. ஓசை ஒலி எல்லாம் அடங்கிவிட்டது. ஆர்வம் பெருக்கெடுக்கிறது. புகையிரதம் வந்து நின்றதும் "வந்தே மாதரம்! மகாத்மாவுக்கு ஜே!" என்னும் கோஷங்கள் வானைப் பிளந்தன.

மகாத்மாஜீ புகையிரதத்தை விட்டு இறங்கவில்லை. வெளியே தலையை நீட்டிப் புன்னகை செய்து கை கூப்பி எல்லார்க்கும் வணக்கம் செலுத்தினார். வரவேற்புச் சபையினர் அனுமதியுடன் உள்ளே சென்று மகாத்துமாவுக்கும் கஸ்தூரி தாய்க்கும் முதல் வணக்கம் செலுத்தி விட்டு மகாதேவ தேசாய், இராஜ கோபாலாச்சாரியார் முதலிய பிரமுகர்களுக்கும், பரிவாரங்களுக்கும் முறையே அஞ்சலி செலுத்தி முடிந்ததும், நான் வரவேற்புப் பத்திரத்தை ஆங்கில மொழிபெயர்ப்புடன் மகாத்மாவுக்குச் சமர்ப்பித்து அஞ்சலி செலுத்தி நின்றேன். அச்சிட்ட பிரதிகள் எல்லார்க்கும் வழங்கப் பெற்றன.

மற்றதை மறந்து போனேன்; கலியாணச் சந்தடியில் தாலி கட்ட மறந்தது போல. வரவேற்புச் சபைத் தலைவர் நானூற்றொரு ரூபா அடங்கிய அன்பளிப்பினை வணக்கத்துடன் காந்திஜீயிடம் ஒப்படைத்தார். காந்தியடிகள் ஆங்கில மொழியில் நற்செய்தியும் நன்றியும் நவில ; இராஜகோபாலாச்சாரியார் தமிழிற் சொல்ல பச்சை விளக்கின் ஒளியும், நிலைய அதிபரின் "விசிலி"ன் ஒலியும் ஒருக்கே கிளம்ப, நாங்கள் வணக்கத்துடன் கீழே இறங்கினோம்.

புகையிரதம் நகரலாயிற்று. "வந்தே மாதரம்! காந்திஜீக்கு ஜே!" என்னும் ஒலிகளின் மத்தியில் புகையிரதம் வடக்கு நோக்கி விரைந்தது. நாங்களும் திருமலைக்கு விரைந்தோம்.

மட்டக்களப்பான் ஒருவனுக்கும் காந்தி தரிசனம் கிடைத்துவிட்டது. இனி இரண்டாவது தரம் இராமநாத தரிசனம் கிடைக்கப் போகிறது. திருகோணமலையில் சண்முக வித்தியாலயம் என ஒரு தனவந்தரின் நினைவாக அவரது பாரியாரால் நிறுவப்பட்டது. எனது நண்பர் சண்முகத்தாரின்

பேரா் ஓய்வு பெற்ற நீதியரசர் நா. கிருஷ்ணதாசன் அதன் முகாமையாளராய் இருந்தார்.

பல்லாயிரம் ரூபா செலவில் அதற்கு ஒரு புதுக்கட்டிடம் கட்டப்பட்டது. கட்டிடத் திறப்பு விழாவுக்கு விழாத் தலைவராகச் சேர்பொன்னம்பலம் இராமநாதன் வரப்போகிறார். அப்பெரியாருக்கு ஒரு வரவேற்புப் பாட்டுப் பாடித் தரவேண்டுமெனத் தலைமை ஆசிரியை திருமதி வள்ளியம்மை கயிலாயபிள்ளை கேட்க நான் பாடிக் கொடுத்தேன்.

விழா நாளன்று மாலை மிகப்பெரிய ஊர்வலம் சனசமுத்திரம் பொங்கி வழிகிறது. நெருக்கடிக்குப் பயந்து நூற்றுக்கணக்கானோர் முற்றவெளிக்குச் சென்று அங்கே உட்கார்ந்து கொள்கிறார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறேன். இருட்டாய்விட்டது "பண்டிதர் இருக்கிறாரா? பண்டிதர் இருக்கிறாரா?" என்று பல குரல்கள் அங்கே எழுகின்றன.

நான் எழுந்து சென்று விசாரித்தேன். "சேர் பொன் உங்களைப் பார்க்க வேண்டுமாம் வாருங்கள், வாருங்கள், வாருங்கள்" என்று விரைபொருளிற் சொல்லிக் கொண்டு செல்ல, நானும் விரைந்து சென்று அப்பெரியாரின் அருகில் நின்றேன்.

"இந்த வரவேற்புப் பாட்டுப் பாடியது நீர் தானா?" என்று கேட்டார் "ஆம் ஐயா" என்றேன்.

"இப்படி இரும். இதில் முதற்பாட்டை உமது கைப்பட எழுதித் தாரும்" என்று கேட்க நானும் அப்படியே எழுதிக் கொடுத்து விட்டு மவுனமாய் இருந்து கொண்டேன். உப்புக்கு உணவில் முதலிடம், சிறியேனுக்கும் ஒரு பெரியாரின் பக்கத்தில் ஒரு முதலிடம்.

எனது பாட்டே தலைமைப் பேருரைக்குப் பீடிகையாயிற்று. இராமநாதன் தமிழிலே பேசினால் அழுதபிள்ளையும் வாயை மூடும். ஆங்கிலத்திற் பேசினால் ஆங்கிலேயரும் "ஆ" வென்று கேட்டுக் கொண்டிருப்பார்கள். அந்தப் பெருமகனாரின் சரிதையை ஆங்கிலத்தில் இரண்டு பாகங்களாக எழுதி வெளியிட்டுள்ளார் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திரு. எல். வயித்திலிங்கம் அவர்கள். அன்னாரின் அரும்பெரும் செயலுக்கு எனது மனம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

குறித்த பாடலை இங்கே தருவதுடன், அப்பெரியாரின் ஐம்பதாண்டு அரசியல் வாழ்வின் நிறைவினை நினைந்து நான் பாடியுள்ள மற்றொரு

செய்யுளையும் உடன் தருகின்றேன்

வரவேற்புச் செய்யுள்:

> **'கல்வி யுடையார் கனதனம் பெற்றாரில்லை**
> **செல்வமுடை யார்கல்வி சேர்ந்திலரால் - எல்லாம்**
> **எவன்பால் ஒருங்கே இருந்தனசொல் நெஞ்சே!**
> **அவன் ராம நாததுரை யாம்"**

அரசியற் பொன் விழாச் செய்யுள்:

> **'தாடி தலைப்பாகை சார்ந்தமுக மண்டலந்தேன்**
> **கூடிதெனத் தோன்றும் குறிப்பிற்றே - நீடவையில்**
> **சீராம நாதன்சொல் தேன்சுவையிற் குத்துண்கை**
> **தேரார்நே ராரும் தெளிந்து"**

தேனெடுப்போர் தேன்சுவையில் ஈடுபட்டு தேனீக்கள் குத்துவதை மறந்திருப்பர். (நேரே ஆரும் தேரார்: நேராரும் தேரார் எனப் பிரித்து இரு பொருள் காண்க. நேரார் - எதிர்க் கட்சியினர்) இராமநாதன் பேசும்போது எதிரிகளும் தம்மை மறந்து பேச்சில் லயித்திருப்பர்.

இனி, அடுத்த நாள் இந்துக்கல்லூரி விஜயத்தைச் சொல்லி திருமலைச் செய்திகளை அவ்வளவோடு முடித்துக் கொள்கின்றேன். அடுத்தநாள் முற்பகல் பத்து மணிக்குச் சேர். பொன்னுக்கு இந்துக் கல்லூரியில் வரவேற்பு. சேர் பொன்னென்றால் அதிகமாக எல்லாரும் பேசப் பின்னடிப்பர். வரவேற்புரையை என் தலைமேல் சுமத்திவிட்டார்கள். சேர். கல்லூரி மண்டபத்துள் பிரவேசித்ததும் தேவாரம் பாடி முடிந்தபின் நான் வரவேற்புரையைத் தொடங்கினேன். எனது சொந்தச் சரக்கை அவிழ்த்து விடவில்லை. அதற்கு இது இடமல்ல.

பிரபு, எனது பணிவான வணக்கம்,

மாபெருந் தலைவ,

> **'முன்னமே துயின் றருளிய முதுப யோததியோ?**
> **பன்ன காதிபப் பாயலோ? பச்சைஆ லிலையோ?**
> **சொன்ன நால்வகைச் சுருதியோ? கருதிநீ வருதற்கு**
> **என்ன மாதவம் செய்தது இச்சிறுகுடில்? என்றான்"**

பிரபுவே, விதுரன் கண்ணபிரானுக்குக் கூறிய இந்த ஆர்வ மொழிகளையே நான் தங்களுக்குக் கூறி இக்கலாசாலையின் சார்பில் தங்களை வரவேற்கின்றேன். இவ்வாறு சொல்லி விட்டு ஒதுங்கிக் கொண்டேன்.

எல்லாரும் நிற்கின்றோம். சேர்.பொன் சட்டைப்பைக் குள்ளிருந்து திறப்புக் கோவையை எடுத்து அண்மையில் நின்ற சபாபதி விசுவலிங்கம் என்னும் மாணவனை அழைக்கிறார். அவனிடம் ஒரு திறப்பைக் காட்டி “இது என்னத்தால் செய்தது?” எனக் கேட்க இரும்பால் செய்தது என்றான்.

“காந்தத்தின் சமீபத்தில் இதை வைத்தால் என்ன நடக்கும்,” “காந்தம் இதை இழுக்கும்” என்றான். “இதில் சேறு புரண்டுவிட்டால்?” அடுத்த கேள்வி. பையன் அவரின் முகத்தைப் பார்க்கிறான். அவனுக்குச் “சேர்” சேறு இரண்டுக்கும் உச்சரிப்பில் வித்தியாசம் தெரியவில்லை.

நான் அவரைப் பார்த்துச் “சேறு என்னும் சொல்லை வேற்றுமை உருபு சேர்த்துக் கேளுங்கள்” என்றேன். “எப்படி” என்றார். “சேற்றில் புரண்டு விட்டால்” என்று சொன்னேன். அப்படியே கேட்டார்.

“அது இழுக்காது” என்று உடனே பதில் வந்தது.

இதுபோலவேதான் ஆன்மா ஆணவத்தால் மறைக்கப்பட்டிருப் பதால் திருவருட் சத்தி ஆன்மாவில் பதியாது. தன்வசம் ஆன்மாவை இழுக்காது; ஆணவம் நீங்கினால் ஆன்மா சிவமயமாகும்; திருவருட்சக்தி அதை இழுக்கும்.

**'இரும்பைக் காந்தம் இழுக்கின்ற வாறெனைத்**
**திரும்பிப் பார்க்க வொட்டாமல் திருவடிக்**
**கரும்பைத் தந்துகண் ணீர்கம் பலையெலாம்**
**அரும்பச் செய்என தன்னையொப்பாமனே"**

என்னும் இந்தத் திருப்பாடலை ஒவ்வொரு நாளும் அதிகாலையிலே மனமுருகப் பாடி அவனருளாலே அவன் மயமாகி அவன்தாள் அடைவோமாக. இதுதான் உங்களுக்கு நான் விடுக்கும் நற்செய்தி என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார் சேர்.பொன்னம்பலம் இராமநாதன். அன்னாரை இங்கே நினைவு கூருகின்றேன்.

# முகாமையாளரிடம் சென்று சம்பள ஏற்றம் கேட்ட பண்டிதரின் ஏமாற்றம்

1930ஆம் ஆண்டு திருகோணமலையை விட்டு மட்டக்களப்புக்கு வந்துவிட்டேன். வரும்போது எனது குரவரின் ஆசியைப் பெறவில்லை. அவரது ஆணையையும் மீறி வந்துவிட்டேன் சில அன்பர்களின் தூண்டுதலும் எனது விருப்பமுமே இதற்குக் காரணம். நான் செய்தது பெரும் பிழை; பேதுருதலகல மலைபோன்ற பெரும் பிழை. இதன் பயனை அனுபவிக்க வேண்டியதுதான். மனம் ஒருநிலைப்படும் மட்டும் தடுமாற்றம் வந்து கொண்டேயிருக்கும்.

மங்கம்மாள் சத்திரத்தில் வைத்துத் தடுத்தாட்கொண்ட வள்ளலின் அருட்திறத்தை அரிதென்றெண்ணாமல் எளிதாகக் கருவிதிட்டேன். வள்ளலைப் பிரிந்து வெகுதூரம் வந்து விட்டேன்.

**'மையிலங்குநற் கண்ணி பங்கனே**
**வந்தெனைப்பணி கொண்டபின் மழக்**
**கையிலங்குபொற் கிண்ணமென்ற லால்**
**அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்"**

ஒன்றுமறியாத பச்சைப் பசுங்குழந்தையின் கையிற் கிடைத்த தங்கக் கிண்ணம் போலாயிற்று விபுலாநந்த அடிகளார் என்மீது வைத்த கருணை. ஒரு புதிய சூழ்நிலை, புதிய நண்பர்கள்; புதிய அனுபவம்.

நான் மட்டக்களப்புக்கு வந்ததும் முன்னைய ஒழுங்கின் படி புளியந்தீவு அர்ச்சியசிட்ட அகுஸ்தீனார் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராக அடுத்த நாளே பதவியேற்றுக்கொண்டேன். பக்கத்திலுள்ள புனித சூசையப்பர் கன்னியர் திருமடத்தைச் சேர்ந்த அர்ச். சிசிலியா மகளிர் ஆங்கிலக் கல்லூரியிலும் எஸ்.எஸ்.ஸி வகுப்புக்குத் தமிழ் பயிற்ற வேண்டும். ஊரோடு வேலை. திருமலையிற் பெற்றதிலும் பார்க்க இரண்டு மடங்கு சம்பளம். என் மனமே என்னை எங்கே கொண்டுவந்து விட்டாய்?

இந்தக் காலப்பகுதியில் நான் நன்கு பழகிய சில அன்பர்களின் பெயர்களை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். ஞானச் சகோதரர்கள் பிறதர் பிலிப், பிறதர் இக்கேஷியஸ், பிறதர் ஆசீர்வாதம் பிறதர் ஜெறாட், பிறதர் கிறிசொஸ்தம் ஆகியோரின் தியாக சேவையையும் நான் மறப்பதற்கில்லை.

தமிழாசிரியர்களின் இன்றைய உயர் நிலைக்கு வித்திட்ட வீர தீரர் பிறதர் பிலிப்பேயென்பதை இங்கே நினைவூட்டிக் கொள்கின்றேன். தமிழாசிரியர் உலகம் பிறதர் பிலிப்பு அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

ஆசிரிய கலாசாலை அதிபர்களுள்ளே நான் கண்ட ஒரு பேரறிஞரைப் பற்றி இங்கே குறிப்பிடுவதில் மிகவும் பெருமையடைகின்றேன். ஞானத்தந்தை டானியேல், அவர்கள் ஒரு தத்துவ சாத்திர மேதை. ஆங்கிலம், இலத்தீன் மொழிகளில் ஆழ்ந்து அகன்ற நுண்ணறிவாளர். உளநூற் பேரறிஞர். உரோமபுரி வத்திக்கான் சகர் வரை நீண்ட பெரும் புகழாளர். நமது நாட்டவர். நாவற்குடாவிற் பிறந்தவர். இவர் போதனாசிரியர் களுடனும் மாணவாசிரியர்களுடனும் நடந்து கொள்ளும் முறை மிகவும் கவர்ச்சிகரமானது.

இனிய எளிய நடையில் தமிழ்மொழியை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பார். எஸ். எம். சீ. தமிழ்ப்பாட நூல்களை இவர் மொழி பெயர்த்துத் தருவார். நான் சிசிலியா மாணவிகளுக்குக் கொடுப்பேன். அவர்கள் பிரதிபண்ணி அப்பியாசம் செய்து கொள்வார்கள். எனது அனுபவத்தைக் கொண்டே இதைச் செய்தேன்.

வசனத்துக்கும் செய்யுளுக்கும் நான் ஒரு முன்மாதிரியைப் பின்பற்றியே வளச்சிபெற்றேன். வசனத்துக்கு எனது தமிழ்க் குரவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் ஐயா வெண்பாவுக்குப் புகழேந்திப் புலவர்; விருத்தத்துக்குக் கம்பன். முன்மாதிரியைப் பின்பற்றாமல் ஒருவரும் ஒரு கலையிலும் முன்னேறமுடியாது.

எனது அந்த முறையினால் சிசிலியா மாணவிகள் நல்லதோர் ஆங்கில மொழி நடையைப் பிடித்துக் கொண்டார்கள். பகிரங்கப் பரீட்சைகளில் தமிழிலே மட்டுமன்றி ஆங்கிலத்திலும் விசேஷ சித்தி பெறலாயினர். கல்லூரிக்கும் புகழுண்டாயிற்று.

ஆசிரிய கலாசாலையிலும் பயிற்சி ஆசிரியர்களுக்கு ஒரு புது ஆர்வத்தை உண்டாக்கினேன். அது இலக்கணம் படிப்பதில் ஒரு கவர்ச்சி.

இலக்கணமென்றால் இலட்சணம். அது அழகு. அழகைப் படிப்பதுதானே மனதுக்கு இன்பம். இலக்கணம் மொழியழகு. இந்த அழகிலே இன்பம் காண்போம். கூட்டுண்போம் எனக்கவர்ச்சியூட்டினேன்.

நகைச்சுவை பிறக்க உலக நடையிலே புதுப்புது உதாரணங்களைக் காட்டி விளக்குவேன். சிலநாளில் இலக்கணம் இன்பமாயிற்று. எனது காலத்தில் நன்னூல் விருத்தியுரைபடித்து முடியாத ஆசிரியர்களைக் காண்பது அரிது. பிரபலம் பெற்ற கல்விமான் வித்துவான் எவ். எக்ஸ். சீ. நடராசா ஆசிரியகலாசாலையில் எனது மாணவர் என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது

நடராசா பற்றிக் குறிப்பிடும்போது

**“தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது”**

என்னும் திருக்குறள் நினைவுக்கு வருகிறது.

அந்த நாளில் ஆசிரியர் கலாசாலைகளின் பொறுப்பதிகாரியாயிருந்த உதவி வித்தியாதிபதி திரு. ஈ. இவான்ஸ் என்பவர் ஒருநாள் அர்ச். அகஸ்தீனர் ஆசிரிய கலாசாலையைப் பார்வையிடவருகின்றார்.

அவர் ஒரு ஆங்கிலேயர். அதிபருடன் எனது வகுப்புக்குள் வந்த அவர் நான் ஒரு தமிழ்ப்பண்டிதர் என அறிந்ததும் இலேசாக என்னை அணுகினார்.

தமிழ்ப் பண்டிதரென்றால் அந்நாளில் மேலதிகாரிகளுக்கு அலட்சிய புத்தி. பல பண்டிதர்களும் அப்படித்தான். மாணவர் மத்தியிலே தம்மைத் தாமே புளுகியடித்துக் கொள்வார்கள். மாணவரும் கிண்டல் பண்ணிக் கேலி செய்து “பிறின்சிப்பில்” வருமளவுக்கு ஆரவாரிப்பார்கள்.

இராஜம்ஐயர் எழுதிய கமலாம்பாள் சரித்திரத்தைப் படித்தவர்கள் மகாவித்துவான் அம்மையப்பபிள்ளையின் அண்டப்புளுகையும் மாணவர் மத்தியில் அவர்பட்ட அவஸ்தையையும் அறிந்திருப்பார்கள்

மேலதிகாரிகளின் அவமதிப்புக்கும் ஓர் உதாரணம் தருகிறேன். ஒரு பண்டிதர் தமது முகாமையாளரிடம் சென்று எசமான் எனக்குக் குடும்பப்பாரம் அதிகம் சிறிது சம்பள உயர்வு தந்தால் நல்லது என்று வேண்டிக்கொள்கிறார். முகாமையாளர் பண்டிதரைப் பார்த்து உமக்கு இராஜபாஷை தெரியுமா? இல்லை. தேவபாஷை தெரியுமா? அதுவுமில்லை. கேவலம் மனுஷ பாஷை படித்தீர்; அற்ப பாஷை; அற்ப சம்பளம்: போகலாம் என்று அவமதித்து அனுப்பி விடுகிறார். என்னிடம் வந்து

உதவி வித்தியாதிபதி என்ன சொல்லப்போகிறார் பார்ப்போம்.

வித்தியாதிபதி என்னைப் பார்த்து "நீங்கள் எந்த முறையைக் கையாண்டு படிப்பிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"கற்பித்தல் முறைபற்றி நீங்கள் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறீர்கள். அந்தப் புத்தகத்தில் முதலாம் பந்தியில் முதலாம் வசனத்தில் நீங்கள் கூறியிருக்கும் முறைதான் நான் கையாளும் முறை" என்று பதிலளித்தேன். அது என்ன முறை? தாமாகவே நல்ல புதுப்புது முறைகளை அறிந்து கற்பிக்க முடியாத ஆசிரியர்களுக்காக நான் இந்த முறைகளை எழுதுகின்றேன் என்று அங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். எனது சொந்த முறைதான் நான் கையாளும் முறை என்றேன். ஒரு புன்முறுவல்

கற்பித்தல் முறை பற்றி கேள்வியை அவ்வளவில் நிறுத்திவிட்டு அடுத்த கேள்வியைப் போடுகிறார்.

"வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் பேச்சாளர்கள் உயர்த்தியும் தாழ்த்தியும் குரலெழுப்பிப் பேசாமல் ஒரே சமமாகப் பேசுகிறார்கள். இதற்குக் காரணமென்ன?"

"இது இயற்கை அமைதி. மலைகளும் பள்ளத்தாக்குகளும் உள்ள இடத்தில் வாழ்வோர் உயர்வு தாழ்வாகப் பேசுகிறார்கள். சம பூமியில் வாழ்வோர். சமமாகப் பேசுகிறார்கள் எனக் கருதுகின்றேன்" எனப் பதிலளித்தேன். பின்னும் ஒரு புன்முறுவல்.

பண்டிதர் சொல்வதில் ஏதோ உண்மையிருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு எனக்கு நன்றியும் தெரிவித்துவிட்டு அடுத்த வகுப்புள் பிரவேசித்தார். திரு. இவான்ஸ் ஒரு புவியியல் பேரறிஞர்.

# உலகம் ஒரு பயிற்சிச்சாலை பயித்தியங்களைக்கூட அங்கு பார்க்கலாம்.

அர்ச். சிசிலியாக் கல்லூரி எங்கும் அமைதியே குடி கொண்டிருக்கும். ஒரு வகுப்புச் சத்தம் அடுத்த வகுப்புக்குக் கேளாது. கல்லூரி அதிபர் ஞானத்தாய் லியூசி அம்மையார் சாந்தமே உருவானவர். நானோ ஒரு பீரங்கி. அங்கு சென்றதும் நிலைமையை அவதானித்து அமைதியான இனிய குரலிலே படிப்பிக்கும் முறையை அனுசரிக்கலானேன்.

ஒருநாள் மேல்நாட்டு உடையணிந்த இளைஞர் ஒருவர் லியூசி அம்மையாருடன் எனது வகுப்புக்கு வருகின்றார். அவர் யாரென்பது அம்மையாருக்குத் தெரியும்; எனக்குத் தெரியாது. ஒருவர்க்கொருவர் வணக்கம் செலுத்திக்கொண்டோம்.

வந்த புதியவர் என் பெயர் திருச்செல்வம் வயிரமுத்து; வித்தியா தரிசியாக இங்கே வந்திருக்கிறேன். உங்களைச் சந்தித்து உங்கள் ஆலோசனை கேட்டு நடக்கும்படி அண்ணர் ஜேம்ஸ் டாக்குத்தர் என்னை அனுப்ப நான் உங்களைப் பார்க்க வந்தேன் என்றார். இந்தச் சொற்கள் என்னைக்கவர முன்பு லியூசி அம்மையாரைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

நான் திருச்செல்வத்தோடு அளவளாவி உறவுமுறை கொண்டாடி அவரை வழியனுப்பி வைத்தேன். இதனால் லியூசி தாயார் என்மீது வைத்திருந்த நம்பிக்கையும் மதிப்பும் மேலும் அதிகரித்துவிட்டது.

அடுத்து ஒரு கதை சொல்லப் போகிறேன். அது ஒரு பைத்தியக் கதை. உலகமாகிய பயிற்சிச்சாலையில் எத்தனையோ பாடம் படிக்க வேண்டும் இதென்ன பயித்தியக் கதை? என்று வாசகர்கள் ஏளனம் பண்ண வேண்டாம். பயித்தியக் கதையிலும் பாடமிருக்கிறது.

அர்ச். சிசிலியாக் கல்லூரிக்கு மேல் வகுப்புக் கணித ஆசிரியராக ஒரு இளைஞர்வந்தார். இவர் பெண் கொடுத்த மாமன் பணத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டம் பெறப் படித்தவர்.

பரீட்சையில் தவறிவிட்டார். பெயர் சுவாமிநாதன். திருமதி சுவாமிநாதன் கோட்டைமுனை அர்ச். திரேசாக் கல்லூரியில் தலைமை ஆசிரியை.

கல்லூரிக்கு வந்த முதல் நாளே சுவாமிநாதன் என்னோடு நல்ல பழக்கமாகிக் கொண்டார். வகுப்புக்குப் புதிசாய் வந்தவர் இளைஞர்; மாணவிகள்; அழகிய யுவதிகள். உற்சாக மேலீட்டால் பெரிய சத்தமாகப் படிப்பிக்கிறார். மணியடித்ததும் சுவாமிநாதன் வெளியே வந்தார். நான் அவரைச் சந்தித்து "உங்கள் சத்தம் கூடிப் போயிற்று. லியூசி அம்மையார் உங்களிடம் வரக்கூடும்" என்று சொல்லி முடியமுன் அம்மையார் அங்கே வந்துவிட்டார். அம்மையார் சுவாமிநாதனிடம் இரகசியமாகச் சொன்ன ஆலோசனையால் அடுத்த பாடத்தை அவர் அமைதியான குரலில் நடத்தலானார்.

சுவாமிநாதனின் மனைவியாரும் எனக்கு நல்ல அறிமுகமாகி விட்டார். குடும்பத்தில் சில பிரச்சினைகள் இருப்பதையும் சொல்வார். சுவாமிநாதனும் சொல்வார். நானறிந்த அளவில் பெரிய பிணக்கொன்றும் இல்லை. இவர்களின் வீடு கோட்டை முனை அரசினர் அரிசி ஆலைக்கு அண்மையில் உள்ளது.

ஒருநாள் காலை 7-45 மணியிருக்கும்; நான் கோட்டை முனைப் பக்கமிருந்து சிசிலியாக் கல்லூரியை நோக்கி "சர்னலிஸ்" கட்டிடத்துக்குப் பக்கமாக நடந்து போய்க்கொண்டிருக்கிறேன். சுவாமிநாதன் "சைக்கிளில்" எதிர்முகமாக வழக்கத்துக்கு மாறாய் விரைவாக வந்துகொண்டிருக்கிறார். அவர் என்னைக் கண்டதும் "போங்க மாஸ்டர்" என்று சொல்லிக் கொண்டே ஓடிப்போகிறார். என்னைக் கண்டவர் வழக்கம் போல இறங்கவுமில்லை; மரியாதையாகப் பேசவுமில்லை.

நான் கல்லூரி முன் வாசலை அடைந்ததும், லியூசி அம்மையார் என்னை நோக்கி விரைந்து வருகிறார். வந்தவர் சுவாமிநாதனுக்குப் பயித்தி யமாம். உங்களை உடனடியாக வீட்டுக்கு வரட்டாம். போய்ப் பாருங்கள்" என்று கூறினார்.

இப்படியான தருணங்களில் எல்லாரையும் முந்தி நிற்பது எனக்கு வழக்கம். பசுமலையில் இருந்த போது பயங்கரமான வாந்தி பேதி நடந்த இடங்களுக்கு சென்று சேவை செய் திருக்கிறேன்.

மதுரை ஆசுபத்திரியில் சொந்தக்காரர் வரும் வரையும் இரவு காலங்களில் ஏழைகளின் பிணங்களுக்கு நுளம்படித்துக் கொண்டு காவலுமிருந்திருக்கிறேன். நாம் ஒருவர்க்கொருவர் சேவை செய்யவே பிறந்திருக்கிறோம்.

அம்மையார் சொன்னதுதான் தாமதம் நான் சுவாமி நாதனின் வீட்டை நோக்கி விரைகின்றேன். நான் அங்கே போய்ப் பார்த்ததும் எனக்குக் கோபம் பொங்கியெழுந்தது.

அங்கே கோளைகளின் கூட்டம். ஒன்றைக் கண்டேன். உள்ளே போய் உதவும் துணிவு ஒருவருக்குமில்லை. அரசடி ஆசிரியர் கலாசாலை அதிபர், போதனாசிரியர்கள், மாணவாசிரியர்கள், பக்கத்துத் தொழிலாளிகள் எல்லாரும் சூழ்ந்து நிற்கிறார்கள். சுவாமிநாதன் நாகபாம்பும் இவர்கள் எலிகளும் போலாகிவிட்டார்கள்.

நான் போனதும் சுவாமிநாதன் எங்கேயென்றேன். ஆள் "கக்கூசுக்"குள்; இரண்டு கையிலும் இரண்டு போத்தல்; அங்கே அணுக முடியாது என்றார்கள்.

மனிதனுக்குச் சமயோசித புத்தி வேண்டும். உர பிடியான நான்கு தொழிலாளரை உதவிக்குப் பிடித்தேன். நான்கு சாக்குகளை ஒவ்வொன்றாகக் கொடுத்தேன். பயமில்லாமல் என்னுடன் வாருங்கள். நான் பேசாமல் உள்ளே சென்று சுவாமிநாதனின் கையைப் பிடிப்பேன். அதே நேரம் நீங்கள் அவரின் முகத்திலே சாக்குகளைப் போட்டு ஆளை அமர்த்தி விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லித் தைரியப்படுத்திக் கொண்டேன்.

உள்ளே போனதும் நான் பாய்ந்து சுவாமிநாதனின் கையைப் பிடிக்க, நால்வரும் முகத்திலே சாக்கைப் போட்டு ஆளை இறுகப் பிடித்துத் தூக்கிக்கொண்டு வெளியே வந்து கையையும் காலையும் கட்டிக்கணுவிலே சாம்பிவிட்டோம். வெளியில் நின்ற எல்லாரும் பயமில்லாமல் உள்ளே வந்து குவிந்து விட்டார்கள்.

மனைவியாரை ஆறுதற்படுத்திவிட்டு ஆளை ஆசுபத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அங்கே ஊசி பாய்ச்சி இருபத்துநாலு மணி நேரம் உறக்கத்திற் போட்டுவிட்டார்கள். பின்னர் முறையான சிகிச்சை பெற்றுக் குணமாகி வேலைக்குத் திரும்பிவிட்டார் சுவாமிநாதன்.

சுவாமிநாதன் கையில் வைத்திருந்த போத்தல்களைப் பற்றிச் சற்றே சொல்ல விரும்புகிறேன். போத்தல்கள் இரண்டு மட்டுமல்ல; டசின் கணக்கில் பல போத்தல்கள் அங்கே கிடந்தன. அவை சாராயப் போத்தல்களல்ல ஆமணக் கெண்ணெய்ப் போத்தல்கள் ஒரு சில மணி நேரத்துள் முழுவதையும் காலியாக்கிவிட்டார். ஒரு துளியேனும் மலசல விமோசனமாகவில்லை.

சுகமாகி வந்த சுவாமிநாதன் இதுபற்றி எனக்குச் சொன்னதை இங்கே சொல்கின்றேன். சம்பவம் நடந்த அன்றிரவு தனது வயிற்றிலே தீ மூட்டியது போல ஓர் எரிவு உண்டாயிற்றாம். தான் பௌதிகம்' இரசாயனம் பற்றிப் படித்திருந்ததால் ஆமணக்கெண்ணெய் குடித்தால் இந்த எரிவு குணமாகும் என்று எண்ணினாராம். ஆமணக்கெண்ணெய்யைக் குடிக்கக் குடிக்க எரிவு தணியாமல் தான் பெரிய அக்கினிச் சுவாலைக்குள் அடக்கப்பட்டது போன்ற தாங்க முடியாத நிலைமை உண்டாயிற்றாம்.

தன் கண்முன்னே யாராவது எதிர்ப்பட்டால் அவரைக் கொலை பண்ண வேண்டுமென்ற எண்ணந்தான் வருமாம். இந்த எரிவு உண்டான காரணம் தனக்கு இன்னும் விளங்கவில்லையாம் என்று அவர் சொன்னது இன்னும் என் நிலைவில் இருக்கிறது. அந்த ஆபத்து நேரத்தில் தன்னைத் துணிவாக அணுகி உதவி புரிந்த எல்லா அன்பர்களுக்கும் என் மூலமாக அவர் நன்றி தெரிவித்ததும் இங்கே நினைவுக்கு வருகிறது.

என்னிடம் படித்த யுவதிகளிற் சிலர் துறவு பூண்டு கன்னிகாஸ்திரிகளாக அங்கங்கே சமய சமூகப் பணி புரிவது எனக்கு மகிழ்ச்சி தருகின்றது.

ஆறு வருட சேவையின் பின்பு நான் அகஸ்தினர் ஆசிரிய கலாசாலைக்கு முழு நேர ஊழியனாகச் செல்ல நேர்ந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் லியூசி அம்மையார் என்னிடம் வந்து "நீங்கள் என்ன சமயம்?" என்று கோட்டார். "சைவ சமயம்" என்றேன்

"இந்த ஆறு வருடமும் உங்களைப் பற்றி ஒரு முறைப்பாடும் வரவில்லை. மகிழ்ச்சியுடன் சென்று வாருங்கள்" என்று அவர் நல்வாழ்த்துக் கூறி என்னை வழியனுப்பினார். அவரின் முகபாவம் இன்னும் என் கண் முன் நிற்கிறது.



கருமவீரர் திரு. வ. நல்லையா

முன்னாள் கற்குடாப் பிரதிநிதி

# கருமவீரர் நல்லையாவின் காலத்தில் மட்டக்களப்பு வளர்ச்சியுற்றது

நான் அகஸ்தீனார் ஆசிரிய கலாசாலையில் இருந்த காலப் பகுதியில் இலங்கை அரசாங்க சபையிலே மட்டக்களப்பு தெண்பகுதியின் பிரதிநிதியாகத் திரு. ச. தருமரத்தினம் அவர்கள் பதவியில் இருந்தார்கள். இது 1938ஆம் ஆண்டின் பிற்பகுதியாயிருக்கலாம்.

தருமரத்தினம் ஒரு தனவந்தர்; ஆடம்பரமற்றவர்; ஏழைபங்காளர்; காட்சிக்கெளியர்; கடுஞ்சொல் இல்லாதவர். வீட்டின் முன்பக்கத்தில் அரைச்சுவர்க் கட்டின் மேலேதான் அதிகமாயிருப்பார்.

அவரின் மருகர் கே. வீ சோமசுந்தரமும் ஏழைகளுக்கு அன்பர்; தமிழுக்கு வாரி வழங்குபவர். எனது பகவத்கீதை வெண்பா ஒவ்வொரு பிரதிக்கும் ஒவ்வொரு நூறு ரூபா உபகரித்துச் சில பிரதிகளைப் பெற்றுக் கொண்ட திருவுடையவர் அவர்.

அந்நாளில் அதிதீவிர கரும வீரராக விளங்கிய இளைஞர் வ. நல்லையாவைத் திரு. தருமரத்தினம் தமக்கு உசாத்துணையாகப் பிடித்துக்கொண்டவர். நுளம்புகளின் பாசறையாய்க் கிடந்த அட்டாளைச் சேனையிலே நல்லையாவின் ஆலோசனை கொண்டு திரு. தருமரத்தினம் ஓர் ஆசிரிய கலாசாலையை அங்குரார்ப்பணஞ் செய்து வைத்தார். இது தமிழ் முஸ்லீம் சமூகங்கள் இரண்டுக்கும் சம உரிமை வழங்கும் ஒரு பொதுத் தாபனமாக 1941இல் நிறுவப்பெற்றது.

நல்லையா இதன் அதிபராயிருந்தார். மன்னாரைச் சேர்ந்த ஜனாப் காதர் உப அதிபராயிருந்தார்.

சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நானும் அங்கே சென்று இலக்கியமும் நன்னூல் விருத்தியும் படிப்பித்து உதவி புரியலானேன். இது நல்லையாவுக்காகச் செய்யும் கௌரவ சேவை. என்னைப்

பொறுத்தவரை ஒரு இரவு நுளம்புக் கடிமாத்திரமே. நான் என் அனுபவத்தைக் கொண்டு சொல்கின்றேன்; நல்லையா, காதர் இருவரின் உதிரத்தில் வளர்ந்து உருவாகியதுதான் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை.

ஆசிரிய கலாசாலை உருவாகிக்கொண்டு வருகிறது. அதனோடு கூட ஒரு காதற் கதையும் உருவாகிறது. மாணவாசிரியர் மத்தியில் யுவதிகளுமில்லை. இதென்ன காதற் கதை? நானும் அங்கே போவதை நிறுத்திக் கொண்டதால் சம்பவங்களை உடனுக்குடன் அறிவதற்குமில்லை.

அப்போது மல்லாகம் அ. சரவணமுத்து அவர்கள் மட்டக்களப்புப் பெரும்பாக வித்தியாதரிசியாயிருந்தார். புளியந்தீவில் அவரும் நானும் ஒரே வீட்டில் வசித்து வந்தோம். செல்வி முத்தையா என்பவர் வித்தியா தரிசியாய் இருந்தார். இவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்.

ஒருநாள் அதிகாலையிலே புறப்பட்டு அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலைக்குச் சென்ற சரவணமுத்து அன்று திரும்பிவரவில்லை. அடுத்தநாள் மாலையிலேதான் வந்தார். வந்தவர் சிரமபரிகாரம் செய்து விட்டு என்னுடைய மேசைக்கு வந்தார். முகத்திலே ஒரு புன்முறுவல். கதையைத் தொடங்குகிறார்.

நேற்று அந்திமாலை நேரம். இடம் அட்டாளைச்சேனைக் கடற்கரை. வெண்மணற் பரப்பின்மீது நாங்கள் மூவர் வீற்றிருந்தோம். ஒருவர் பெண்மணி. நாங்கள் உரையாடிக்கொண்டிருக்கையில் அங்கு வந்த எருமைக் கூட்டங்களும் காடும் கடலும் எல்லாம் செவ்வானத்தின் ஒளியால் சிவப்பு நிறமாய்க் காட்சியளித்தன என்று கதையை முடித்தார்.

பெண்மணி என்ன நிறச் சேலை உடுத்திருந்தார்? என்று வினாவினேன். சிவப்பு நிறம் என்றார். நான் சிறிதும் தாமதியாமல் குறித்த காட்சியை:

> **'நீலக் கடல்சிவப்ப நீண்டமேல்வான் சிவப்பப்**
> **பாலுற்ற கார்வண்ணன் பால்வண்ணன் - மேல்சிவப்பக்**
> **கான்சிவப்ப மேதிக் கணம்சிவப்ப வீசிற்றே**
> **தேன்மொழியாள் சேலைச் சிவப்பு"**

எனக் கவியோவியமாகப் புனைந்து காட்டினேன். எனது கவியோவியப் பிரதிகள் அடுத்தநாள் காலையிலேயே செல்வி முத்தையா, செல்வன் நல்லையா இருவர் கையையும் சென்றடைந்தன.

திருமதி நல்லையாவின் உள்ளத்திலே பதிந்துவிட்ட எனது கவியோவியம் நல்லையாவின் பிரிவின் பின்னர் அன்னாரின் நினைவுச்

சின்னமாகி விட்டது. சரவணமுத்துவின் நிறம் கறுப்பு. நல்லையாவின் நிறம் வெள்ளை.

நல்லையாவின் சட்டசபைப் பிரவேசமும் அவர் உதவி மந்திரியானதும், தபால், தந்தித் தொடர்பு அமைச்சரானதும் அவரது தன்னலமற்ற சேவையால் மட்டக்களப்பு மறுரூபமடைந்ததும் எல்லாம் உலகறிந்த விஷயமாகும்.

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம், மட்டக் களப்பு அரசினர் கல்லூரி, அரசினர் ஆசிரிய கலாசாலை, அரசினர் வைத்தியசாலை விஸ்தரிப்பு முதலியவை நல்லையாவின் நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன.

இன்றைய அரசியல்வாதிகள் பலரின் காலமும் நேரமும் பெரும்பாலும் ஒருவரை ஒருவர் தூற்றித்திரிவதிலேயே கழிந்து போகின்றது. நல்லையா போன்றோரை நாடு பெற்றது அது செய்த தவம். இவர்களைப் பெற்றது நாடு செய்த பாவம். இவர்கள் பேசும்போது எல்லாம் காந்தி மகானை நினைத்துப் பார்த்தால் நல்லது.

அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையின் தொடர்பாக இன்னுமொன்று சொல்ல விரும்புகின்றேன்.

திருக்கோணமலையிலே விபுலானந்த அடிகளாரின் தமிழ் வகுப்பைப் பற்றிச் சொன்னபோது அங்கே பெயரளவிற் குறிப்பிட்ட எனது சகபாடி பண்டிதர் செ. பூபாலபிள்ளையின் நினைவு இங்கே வருகிறது.

பண்டிதர் பூபாலபிள்ளை வேறு. வித்துவான் ச. பூபாலபிள்ளை வேறு. இருவரும் மட்டக்களப்பு அன்னையின் புதல்வர்களே. வித்துவான் முந்தியவர். பண்டிதர் பிந்தியவர். வித்துவான் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் பெரும் புலமை படைத்தவர்.

நான் திருமலையைப் பிரிந்த பின் பண்டிதரும் மட்டக்களப்பு வந்துவிட்டார். அவர் எனக்குப் பக்கபலமானவர்; தம்பி போன்றவர். திருமலையில் நான் நோய்வாய்ப் பட்டிருந்தபோது மருத்துவதாதி போன்று என்னைப் பராமரித்தவர். ஒரு கருமவீரர்.

பண்டிதர் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகக் கடமை புரிந்து வருகையில் ஆசாரம் சம்பந்தமான ஒரு பிரச்சினை தலைதூக்கியது. பண்டிதரும் தலை நிமிர்ந்து நின்று சுவதருமத்துக்காக வாதாடினார். இதன் பயனாக மட்டக்களப்பில் தமிழருக்கென ஒரு தனித் தன்மை வாய்ந்த ஆசிரிய கலாசாலை நிறுவப்பட்டது. பண்டிதர் அங்கு

விரிவுரையாளராயிருந்து சைவ சீலங்களை நிலைநாட்டி வைத்து எல்லா மதிப்புகளுடனும் ஓய்வு பெற்றார்.

கருமவீரர் பண்டிதர் பூபாலபிள்ளை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவராகவும் கல்லடி உப்போடை அருள்நெறித் திருக்கூடத்தின் தலைவராகவும் சமயப் பணி புரிந்து கொண்டே 1967 ஆம் ஆண்டு வைகாசி மாதம் தமது நெல் வயலில் தலைசாய்ந்து இவ்வுலக வாழ்வை நீத்தார். அகில இலங்கை இந்து மாமன்றம் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 1967-05-20இல் அன்னாரின் பிரிவு குறித்து நடத்திய அனுதாபக் கூட்டத்திற் பாடிய எனது பதினொரு இரங்கற் செய்யுள்களுள் இரண்டை இங்கே தருகிறேன்.

**'பட்டார் களத்தே பண்டிதபூ**
**பாலபிள்ளை யெனுஞ் சொல்லால்**
**சுட்டார் சுட்ட சொல்தமிழர்**
**மனமும் சுட்டே, ஆசிரிய**
**வட்டாரத்தில் நெருப்பூட்டி,**
**மயல்நீத் துலக ஆசைதனை**
**விட்டார் மனமும் சுட்டதெனில்,**
**எங்ஙன் வென்மை யாம்பொறும்போம்!**
**விஞ்ஞா னம்செய் அணுக்குண்டின்**
**வெம்மை இதினும் சுடுமோதான்."**

**'நிமிர்ந்த நடையை, அன்பொழுக**
**நெகிழ்ந்த நோக்கை, மெய்யடியார்**
**அமர்ந்த மனதை அருளொளிபோல்**
**அள்ளிப் பூசும் திருநீறு**
**திமிர்ந்த வடிவைச் சைவமணம்**
**திளைத்தே இனி செந்தமிழ்த்தேன்**
**கமழ்ந்து துளிக்கும் வாய்மலரை,**
**இன்னும் காணப் பெறுவோமோ!**
**கலைப்பண் பமைந்த பண்டிதரை**
**ஒருக்கால் இன்னும் காண்போமோ!"**

பண்டிதரின் மூத்த புதல்வி மங்கையர்க்கரசியின் கணவர் மாஸ்டர் சிவலிங்கம் தினபதி-சிந்தாமணியில் கலைத்தொண்டு செய்து வருவது பொருத்தமானதாகும். தம்பதிகள் இருவரும் எனது மாணாக்கர் என்பதும் எனக்கு மகிழ்ச்சி தருகின்றது.

# பண்டித வகுப்பு நடத்தி நான் படித்த பாடம்!

## அபயகரம் காட்ட வேண்டியவர்கள் முழங்கையைக் காட்டிவிட்டனர்.

தினக் குறிப்புகளோ வேறு குறிப்புகளோ நான் வைத்திராமையால் செய்திகளையெல்லாம் மனத்தைக் கேட்டே எழுதுகின்றேன். மனத்தைப் பற்றிப் பல்வேறு அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் மனம் எனக்கு இனிய நண்பன்.

எண்பதாண்டு காலம்வரை நான் எழுதி வைக்கத் தவறியவைகளைத் தான் எழுதி வைத்துக்கொண்டு தருணம் வரும் போதெல்லாம் எனக்குத் தந்துதவுகின்ற மனத்தை எனக்கு நண்பர் என்று சொல்லாமலிருக்க முடியுமா? எவ்வளவு பாவம்.

**'தன்மனமே ஆக்கம் தரும் நண்பாம்."**

**'அது நன்மைப் பயன் இனிது நல்கும்."**

எனப் பகவத்கீதை கூறுவதை என் மனம் எனக்குச் செய்து வருகிறது. சம்பவங்கள் பற்றிய காலக் குறிப்புகளைத் தந்து உதவுவதில் சிலபோது என் நண்பனுக்குச் சோர்வு ஏற்படலாம். ஆனால், சம்பவங்களைச் சரியாகவே தருகின்றான்.

1940ஆம் ஆண்டளவில் திருக்குறள், கம்பராமாயணம் ஆகிய இரு வகுப்புகளை மட்டுநகரில் தொடங்கினேன். பல மாணவர்கள், படித்த பிரமுகர்கள் ஆகியோர் வகுப்பிற் கலந்துகொண்டு படித்தும், கலந்துரையாடியும் பயன் பெற்றனர். எனது அறிவும் வளரலாயிற்று.

இந்த வகுப்பால் நான் பெற்ற பண ஊதியத்திலும் பார்க்க அழிவில்லாத பெரிய ஊதியமொன்றைப் பெறலானேன். எங்கும் இந்த ஊதியந்தான் எனக்கு மிச்சம். இறந்த பின்பும் இது எஞ்சி நிற்கும்.

**'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடையாளர் தொடர்பு"**

இந்த வகுப்பில் பல பண்பாளர்களோடு பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர்களுள் இருவரைப்பற்றி அதிகம் சொல்லலாம். அது தனித்தனி நூலாகிவிடும். சந்தர்ப்பம் நோக்கி இங்கே சிறிது சொல்கின்றேன்.

ஒருவர் வெ. திருநாவுக்கரசு. இவர் ஒரு பி. ஏ. பட்டதாரி. பண்பின் வடிவம். பணிவின் சின்னம். உருவும் திருவும் வாய்ந்த தோற்றப் பொலிவு. செருக்கில்லாத நிமிர்ந்த நடையையும், உருக்கமான உபசார மொழியும் இவரிடத்தே காணலாகும்.

கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயத்தில் விரிவுரை யாளராயிருந்த இவர் ஒரு கணித விற்பன்னருமாவார். மட்டக்களப்பில் எல்லாராலும் விரும்பப்படுகின்ற டாக்டர் ரவீந்திரன் இவரது மனம் போன்றமைந்தரென்பதை மகிழ்ச்சியுடன் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

**'பண்புடையார்ப் பட்டுண்டுலகம் இது இன்றேல்**
**மண்புக்கு மாய்வதுமன்"**

என்னும் திருக்குறளைப் படிக்கும்போது அன்பர் திருநாவுக்கரசு என் கண்முன்னே நிற்கின்றார்.

மற்றவர் எஸ். டி. சிவநாயகம். இவர் மட்டக்களப்பு மாநாட்டின் மாதவப் புதல்வர்களுள் ஒருவர். அகங்காரத்தோடு கூடிய அதிகாரத்தின் முன்னே தமது முழங்கால்களை மடக்காதவர். ஆர். சீ. எஸ். குக் என்பவரின் அடக்குமுறைப் போக்குக்கு அடிபணிய மறுத்துத் தமது கூட்டுறவுப் பரிசோதகர் பதவியைத் துறந்த தன்னம்பிக்கை கொண்டவர். சிவநாயகம் கூட்டுறவுப் பரிசோதகர் பதவியைத் துறந்தமையினால் அல்லவா இன்று அகில உலகிலுமுள்ள தமிழ் மக்கள் அன்னாரின் சொல்லமிர்தத்தைத் தினசரி பருகிக் கொண்டிருக்கின்றர்கள்.

சிவநாயகத்தால் பத்திரிகைத் தருமம் வாழ்கின்றது. பத்திரிகைத் தருமத்தால் சிவநாயகம் வாழ்கின்றார்.

**'விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்"**

என்னும் திருக்குறளைப் படிக்கும் போதெல்லாம் சிவநாயகம் நினைவுக்கு வந்து விடுகிறார்.

*1932-34* காலப் பகுதியில் மட்டுநகரில் தமிழ்ப் பாலபண்டிதர் வகுப்பு ஒன்றை நடத்த ஒழுங்கு செய்தோம். வகுப்பு அமைப்பாளர்களில் பிரதான பிரமுகர்கள் இருவர் ஒருவர் ஒரு துறவி. அவர் வியாபார

மனப்பான்மையுடையவர் என்பது எனக்குப் பிந்தித்தான் தெரியவந்தது. மற்றவர் ஒரு கலாசாலை அதிபர். அவர் பண நிருவாக விஷயத்தில் நேர்மையற்றவர் என்பதும் மிகப் பிந்தித்தான் வெளியானது.

அவர்கள் இருவரும் கூட்டாக எனக்கு ஒரு நிபந்தனை விதித்தார்கள். வகுப்பை நடத்துவது உங்கள் பொறுப்பு; பணம் பெறுவதும் உங்கள் பொறுப்பு; எங்களுக்கு இதில் பொறுப்பில்லை; இதுதான் நிபந்தனை. அவர்களுடைய எண்ணம் அதிகம் பேர் வகுப்பிற் சேரமாட்டார்கள்; பணம் அதிகம் வராது; தமது கையிற் கடிக்கும் என்பதுதான்.

"பாம்பறியும் பாம்பின் கால்" என்றபடி படிப்போர்க்கு என்னைத் தெரியும்; படிப்பவர்களையும் எனக்குத் தெரியும். முதல் நாளே தலைக்கு ஐந்து ரூபா கொண்டு முப்பத்தைந்து பேர் வகுப்புக்கு வந்து விட்டார்கள். பணம் என் கைக்கு வந்துவிட்டது.

இதை அறிந்ததும் அவர்கள் இருவரும் என்னிடம் வந்து வகுப்பில் அதிகம் பணம் சேர்கிறது; வகுப்பு நீண்டகாலம் நடக்கவேண்டும்; பணப் பொறுப்பை நாங்கள் எடுக்கிறோம்; உங்களுக்கு மாதம் முப்பது ரூபா தருகிறோம்; சம்மதியுங்கள் என்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள். ஒருவர் துறவி. மற்றவர் அதிபர். இடையில் நான் என்ன செய்வது?

நிபந்தனை தலை கீழாய்விட்டது. இதென்ன பிச்சைக்காரப் புத்தி? "பிச்சைக்கு மூத்தது கச்சவடம்" என்பது போலாயிற்று எனது தமிழ்த்தொண்டு. எனக்குத் தமிழ்ப் பயித்தியம்; இவர்களுக்குப் பணப் பயித்தியம். சரி என்று இணங்கிக் கொண்டேன். முப்பது ரூபா ஒரு காசா?

சில மாதம் சென்றதும் கடும் உழைப்பினால் உடல் இளைத்து எனக்கு வாதநோய் வந்துவிட்டது. இருபத்திரண்டு நாள் படுக்கையில். நான் பாடுபட்ட பணம் என் கையில் இல்லை. எல்லாம் தருமகர்த்தாக்கள் கையில். அதர்மம் அவர்களுக்குத் தர்மமாயிற்று. நான் சற்றே பொறுமையிழந்துவிட்டேன்.

எனக்கு எங்கும் வெறுங்கைதான். ஆனால் ஒன்றுக்கும் குறைவில்லை. இன்றும் அதே நிலைதான். இது தமிழ் தந்த செல்வம். இவர்களின் சேர்க்கையால் பெயர் வினைகளுக்கு இடையில் நிற்கும் இடை உரிகள் போல் ஆக்கமடைவேன் என, நான் எண்ணியது வீணாய்ப் போயிற்று. வல்லின மெய்களுக்கு இடையில் அகப்பட்ட குற்றியலுகரத்தின் நிலை எனக்கு வந்துவிட்டது.

அகஸ்தீனார் ஆசிரிய கலாசாலை அன்பர்களின் உதார குணமும், தியாக சேவையும் ஒருபுறம்; பால பண்டித வகுப்பு மணவர்களின் ஆதரவு மறுபுறம்; பொதுமக்களின் அனுதாபம் மற்றொரு புறம்; அன்பர் ஆசிரியர் ஏ. எவ். ஞானப்பிரகாசம் தம்பதிகளின் மருத்துவத் தாதி போன்று எனது நேரடித் தேவைகளை நிறைவு செய்யும் மனித சேவை இன்னொருபுறம். இவையெல்லாம் எனக்கு ஆறுதலளித்தன.

எல்லாவற்றிலும் மேலாக நான் பெற்ற மருத்துவ சிகிச்சையைப் பற்றிச் சொல்கின்றேன் கேளுங்கள். அது இலவச சிகிச்சை. அரசினர் வைத்தியசாலையிலுமல்ல; தனியார் மருத்துவ மனையிலுமல்ல; நண்பர் ஞானப்பிரகாசம் தம்பதிகளின் இல்லத்தில் நடக்கிறது.

மட்டக்களப்பு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வீ. ரீ. பசுபதி அவர்கள் மேற்குறித்த வீட்டுக்கு வந்து என்னை பரிசோதித்துப் பார்த்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஞானப்பிரகாசம் வந்து வைத்திய ஆலோசனைக் கட்டணத்தை ஒரு உறையுள் வைத்து அன்னாரிடம் நீட்டுகிறார். டாக்டர் கைமறித்து, "அதை வைத்துக்கொள்ளுங்கள் பண்டி தருக்கு அதிகம் சேவை செய்யவேண்டிய கடமை எனக்கிருக்கிறது, மருந்துக்கு ஆளனுப்புங்கள்"என்று சொல்லிவிட்டுப் போகிறார். அப்பெருமகனார் ஒவ்வொரு நாளும் என்னை வந்து பார்க்கத் தவறுவதில்லை.

இருபத்திரண்டு நாள் சிகிச்சை; படிப்படியான சிகிச்சை; இது நல்ல முறை; எனக்குப் பிடித்துக் கொண்டது; நல்ல குணமடைந்து விட்டேன். டாக்டர் பசுபதி உண்மையிலேயே பசுபதிதான். அவர் வண்ணார்பண்ணையில் ஒரு வைத்திய சித்தராயிருந்த கஸ்தூரி வேலுப்பிள்ளையாரின் மகளின் மகளை மணந்தவர். பிரபல வைத்தியர் கஸ்தூரி முத்துக்குமாருவின் மருகர்; மருத்துமாமரம் டாக்டர் மு. கதிரவேற்பிள்ளையின் மைத்துனர். டாக்டர் ஜெகா பசுபதியின் தந்தை. உரும்பிராய் டாக்டர் க. சிவஞானரத்தினத்தின் மைத்துனர். நான் நாவலர் காவிய பாடசாலையிற் படிக்கும்போது பெற்ற ஒரு சின்ன அறிமுகம் இப்படியெல்லாம் செய்கிறது. கஸ்தூரியார் குடும்பத்தினர்க்கு என் மனம் கனிந்த நன்றி.

நோய் நீங்கிய பின்பு நான் வந்து பார்த்தேன். பண்டித வகுப்பிற் சேர்ந்த பணமுமில்லை; வகுப்புமில்லை; வகுப்பு நடந்த இடமுமில்லை; தலைமைத் தருமகர்த்தா வகுப்புக்கு வேறிடம் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். அபயகரம் காட்ட வேண்டிய அவர் முழங்கையைக் காட்டி விட்டார். இப்படியும் தமிழ் வளர்க்கிறவர்கள் இருக்கிறார்கள். புண்ணியம் போல் பாவம்.

# அரசாங்க சபைக் காலத்தில் நான் செய்த தேர்தல் பிரசாரம்

1935ஆம் ஆண்டிலிருந்து இரண்டு மூன்று வருடம்வரை ஆசிரியத் தொழில் புரிவதில் நின்றும் சற்றே விலகியிருப்பது நல்லதெனக் கருதினேன். எங்கிருந்தாலும் என்னைச் சும்மா இருக்க விடமாட்டார்கள். 1936இல் அரசாங்க சபைத் தேர்தல் வந்தது.

அதில் எனக்கு ஒரு தருமசங்கடம் உண்டாயிற்று. இரு வேட்பாளருள் ஒருவரைத் தெரிந்து கொள்வதுதான் அது. ஒருவர் எனது இனிய நண்பர் ஜனாப் எம். ஏ. எல். காரியப்பர். இவர் ஒரு சட்டத்தரணியு மாவார். மற்றவர் எனது நெருங்கிய உறவினர் முதலியார் எஸ். ஓ.கனகரத்தினம். அவர் மட்டக்களப்பு வரலாறு என்னும் ஆங்கில நூலின் ஆசிரியர்; நல்ல நிருவாகத் திறமையுள்ளவர்.

நன்றாக ஆலோசனை செய்த பின்பு முதலியாரை ஆதரிப்பதெனத் தீர்மானஞ் செய்து கொண்டேன். வாக்குறுதியும் கொடுத்துவிட்டேன். இதையறிந்த நண்பர் காரியப்பர் என்னிடம் வந்து தேர்தலில் நடுநிலைமை வகிக்குமாறு பரிந்து வேண்டிக்கொண்டார்.

நடுநிலைமை வகிப்பது நாட்டுக்குச் செய்யவேண்டிய கடமையிலே தவறுவதாக முடியும். நான் முதலியாரைப் பற்றி நல்லதைச் சொல்வேன். உங்களைப் பற்றிக் குறைவாகப் பேசமாட்டேன் என்று சொல்லிவிட்டுத் தேர்தல் பிரசாரத்தில் இறங்கலானேன்.

எதற்கும் ஒரு முன்மாதிரி வேண்டும். பாலகங்காதர திலகரையும், மகாத்துமா காந்தியையும் நான் முன்மாதிரியாகக் கொண்டவன். சிறுவனா யிருக்கும்போதே திலகரின் படத்தை எனது படுக்கையின் முன்னே சுவரில் தூக்கி வைத்துக் கொண்டு அதிகாலையில் எழுந்தவுடன் அதில் விழித்துக் கொண்டே வெளியே செல்வது வழக்கம். திலகர் அங்கவஸ் திரம் தரிக்கும் முறையிலேயே நானும் அங்கவஸ்திரம் தரித்துக்கொள்வேன்.

இலக்கியப் பேச்சென்றாலும் சரி; சமயப் பேச்சென்றாலும் சரி; அரசியல் பேச்சென்றாலும் சரி; உள்ளக் கருத்துக்களையும், கொள்கை வேறுபாடுகளையும் எடுத்து விளக்குவதுதான் எனது போக்கு. ஆட்களைத் தாக்கிப் பேசும் முறையில் நான் பழகவில்லை; என்னைத் தாக்கி பேசுவோருக்கும் நான் மறுமொழி சொல்வதில்லை; நமது பேச்சு நம்மையும் திருத்திப் பிறரையும் திருத்தும் முறையிலே அமையவேண்டும்.

இதை நான் ஏன் சொல்கின்றேனென்றால் ஒரு சிலர் பிறரைத் தூற்றிக் கீழ்த்தரமாகப் பேசுவதிலேயே பேரும் புகழும் பெற்று, உயர் பதவியை அடைந்து சமயோசிதமாக மாறிக்கொள்கிறார்கள். சந்தர்ப்ப வாதத்தால் இவர்களின் மனப்பண்பும் கெடுகிறது; சமூகம் கெடுகிறது; நாடும் தனது பாரம்பரியத்தை இழக்கும் நிலைமை ஏற்படுகிறது என்பதை உணர்த்துவதற்காகவே என்க. சந்தர்ப்பவாதி அந்தரத்தில் தொங்குவான்.

கல்லடிப் பாலம் தொடக்கம் பாணமை வரையும் இந்த முறையிலேயே எங்கள் தேர்தல் பிரசாரம் நடந்தது; தேர்தலில் முதலியாரே பிரதிநிதியானார். இந்தத் தேர்தல் முறையினால் மற்றைய அபேட்சகர்களின் மனம் புண்படவுமில்லை; பழைய நண்புக்குப் பாதகம் உண்டாகவுமில்லை.

இதன் பின்பு இரண்டொரு வருடம் மண்டூரில் உபதபால் நிலைய அதிபராகக் கடமையாற்றினேன். இது எனது மனநிலைக்கும், தாராள சிந்தைக்கும் ஏற்ற வேலையல்ல.

ஒருநாள் சாயந்தரம் நாலரை மணியிருக்கும் மோட்டார் வாகன மொன்று கந்தோரை நோக்கி விரைந்து வந்துகொண்டிருக்கிறது. திடீர்ப் பரிசோதனைக்காரர் யாரோ வருகின்றார் என்று நான் விழிப்பாயிருந்து கொள்கிறேன். வாகனம் வந்து நின்றதும் இருவர் இறங்கி வருகிறார்கள். ஒருவர் மட்டுநகர் உள்ளூர் ஆட்சி அலுவலகத்தின் (Local Board) காரியதரிசி திரு. சி. மயில்வாகனபிள்ளை. இவர் எனக்கு நண்பர். மற்ற அன்பரை இனித்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

இருவரையும் வரவேற்று பின் நண்பர் மயில்வாகனத்திடம் இந்த ஐயாவைத் தெரியவில்லை. இருவரும் வந்தகாரியம் யாது? என வினாவினேன். தெரியுமென்றல்லவோ நினைத்திருந்தேன். ஐயா அவர்கள் திரு. வீ. கே. நாதன்; கிழக்குப் பிரதேசக் கல்வி நிருவாகத் தலைவர். ஒரு அவசியமான அலுவலாக உங்களின் உதவியை நாடி வந்திருக்கிறார் என்று கூறினார்.

“ஐயாவைப் பெயரளவாக முன்னமே தெரியும்; இன்று நேரிற்

கண்டது மிக மகிழ்ச்சி" என்றேன். நாதன் கதையைத் தொடங்கலானார். கிழக்கிலங்கைச் சங்கீத சபை என்று ஒரு தாபனம் இருக்கிறது. அது வித்தியா பகுதியின் அதிகாரத்தின் கீழ் இயங்கி வருகிறது. நான் அதன் உத்தியோகப்பற்றுள்ள தலைவர். மைக்கேல் கல்லூரி ஆசிரியர் திரு. சின்னையா என்பவர் காரியதரிசி.

எனக்கும் காரியதரிசிக்குமிடையில் ஏற்பட்ட அபிப்பிராயபேதம் காரணமாகக் காரியதரிசி ஒரு அவசர பொதுக்கூட்டத்தைக் கூட்டி என்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிறைவேற்றி வித்தியா பகுதிக்கு அனுப்பிவிட்டார். இதற்கு மறுமொழி கூறுமாறு வித்தியா பகுதி என்னைக் கேட்டிருக்கிறது. என்மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை நிறைவேற்றி வித்தியா பகுதிக்கு அனுப்பும்பொருட்டு ஒரு அவசர பொதுக்கூட்டத்தைக் கூட்டியிருக்கிறேன்.

பிரேரணையை எனது சார்பில் ஆமோதித்துப் பேச வருமாறு பலரைக் கேட்டேன். எல்லாரும் உங்கள் பெயரைத் தான் சொல்லுகிறார்கள். உங்களை எனக்குப் பழக்கமில்லை. அன்பர் சி. மயில்வாகனபிள்ளையையும் கூட்டிக் கொண்டு வந்தேன். இவைகள்தான் சம்பந்தப்பட்ட பத்திரங்கள். படித்துப்பாருங்கள் என்று சொல்லி ஒரு பத்திரக்கோவையை என்னிடம் தந்தார்.

நான் அவற்றைப் படித்துப் பார்த்துவிட்டு உங்கள் கட்சியில் நிறைய நியாயமிருக்கிறது. நான் கூட்டத்துக்கு வருகிறேன். நம்பிப் போங்கள். வாகன வசதி செய்யவேண்டியதில்லை. வஸ் வண்டியில் வருகிறேன் என்று சொல்லி இருவரையும் வழியனுப்பி வைத்தேன்.

ஒரு சனிக்கிழமை மாலை 6-30 மணிக்குக் கூட்டம். இடம் மட்டுநகர் அர்ச். மரியநாயகி பாடசாலை மண்டபம். தலைவர் பதில் மாவட்ட நீதிபதி திரு. தம்பையா அவர்கள். அங்கத்தவர் கூட்டம் நிரம்பி வழிகிறது. அவர்களின் உணர்ச்சி வெள்ளம் பொங்கித் ததும்பிக்கரை புரள்கிறது.

இதன் மத்தியிலே தலைமையுரை முடிந்ததும் நம்பிக்கைப் பிரேரணை முறையாக முன்மொழிந்து வழிமொழிந்து சபையிற் சமர்ப்பிக்கப் பெற்றது. நிகழ்ச்சி நிரலின்படி பிரேரணைக்குச் சாதகமாகப் பேசுமாறு தலைவர் என்னை அழைத்தார்.

இரண்டரை மணி நேரம் நான் வாதாடினேன். பாதகமாகப் பேச ஒருவரும் முன்வரவில்லை. தலைவர் பிரேரணையை வாக்கெடுப்புக்கு

விடலானார். பாதகமாக ஒரேயொரு வாக்கைப் பெற்றுப் பிரேரணை நிறைவேறியது. பாதகமாக வாக்களித்தவர் எனது ஒரு நண்பர். ஆள் ஒரு முசுப்பாத்திக்கட்டை.

தலைவர் தமது நிறைவுரையின்போது பண்டிதர் கல்வித் துறையில் மாறான ஒரு பாதையைத் தெரிந்து கொண்டார். சட்டம் படித்து எங்களைப் போல் வந்திருக்க வேண்டியவர் அவர். அவரது வாதத்திறமையை நான் பாராட்டுகிறேன் என்று கூறினார். நாதன் உபசார மொழி கூறித் தமது மோட்டார் வாகனம் மூலம் என்னை வழியனுப்பி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியின் பின்பு நாதனுக்கு என்மீது அளவு கடந்த அன்பும் பெருமதிப்பும் உண்டாயிற்று. இவ்வளவு கல்வித் திறமை வாய்ந்த ஒருவர் கல்வி உலகுக்குப் பயன்படாமல் ஏன் ஒரு மூலையில் ஒதுங்கிக்கிடக்க வேண்டும்? எனத் தமக்குள்ளேயே வினவிக் கொண்டு, அகஸ்தீனார் ஆசிரிய கலாசாலை முகாமையாளரைக் கண்டு கலந்து பேசி, நான் மீண்டும் அந்தப் பழைய கூரையின் கீழ் விரிவுரை நிகழ்த்தும் பணிக்கு என்னை ஆளாக்கி வைத்தார். இதனால் நாதன் மூலமாகப் பல ஆசிரியர்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. என்னால் புது நியமனம் பெற்றோரும் சிலர் உளர்.

ஒவ்வொரு நாளும் இரவு ஏழு மணிக்கு நாதன் வீட்டுக்குச் செல்வேன். நான் திரும்பிப் போகப் பத்தரை பதினொரு மணியாய்விடும். அநேகமாகப் பாடசாலைகளிலுள்ள குறைகளைப் பற்றியும், அவற்றை நிவர்த்தி செய்யும் முறைகளைப் பற்றியுமே கலந்துரையாடுவோம். சில ஆசிரியர்களின் கஷ்ட நிவாரணத்துக்கும் நான் அருமையாக வேண்டிக் கொள்வேன். ஆசிரியர்களின் சார்பில் நாதனுக்கு நான் பாடிக்கொடுத்த பிரியாவிடைச் செய்யுள்களில் ஒன்றை நினைவின் பொருட்டு இங்கே தருகின்றேன்.

**'சொல்மலரை அன்பென்னும் நாரில் தொடுத்தினிய**
**நல்மணமாம் பண்பு நனிகமழ - நன்மைவளர்**
**செய்ந்நன்றி யென்னும் செழுமாலை சூட்டினோம்**
**துய்யசீர் நாதன் துரைக்கு"**

# இலங்கை அரசியலில் மறக்க முடியாத சம்பவம்

நாம் ஒரு கருமத்திற் புகும் போது நாம் போகும் வழி நேர்மை யானதா என்பதை முதலிற் சிந்திக்க வேண்டும். நேர்மையான வழியால் அடையும் வெற்றி நிலையானது. தோல்வி வந்தாலும் அது முன்னேற்றத் துக்கு ஒருபடியாய் அமையும். குறுக்கு வழியால் வருகின்ற வெற்றி நிலைத்து நில்லாது. அது பின்பு பல தோல்விகளுக்குக் காரணமாகும். குறுக்கு வழியால் வரும் தோல்வி இனிமேல் தலைதூக்க முடியாத படுதோல்வியாகிவிடும்.

எனது அனுபவம் ஒன்றை இங்கே சொல்லுகின்றேன். இலங்கை அரசியலில் இது மறக்கமுடியாத சம்பவம். 1936ஆம் ஆண்டு அரசாங்க சபைப் பொதுத் தேர்தல் நடந்து முடிந்ததும் மட்டக்களப்புத் தென்பகுதிப் பிரதிநிதி என்னைச் சந்தித்துத் தாங்கள் ஒருசாரார் கூடி அண்மையில் எடுக்கவிருக்கும் பாரதூரமான ஒரு நடவடிக்கை பற்றி எனக்குச் சொன்னார்.

“சிறுபான்மை வகுப்புப் பிரதிநிதிகளும் மலை நாட்டுச் சிங்களப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி அரசாங்க சபைக்குள் ஒரு பெரிய மாற்றத்தைச் செய்யப் போகிறோம். இதன்படி சிறுபான்மை வகுப்பினர் ஒருவர் சபாநாயகராகயிருப்பார். இப்போதுள்ள ஏழு மந்திரிமாரும் ஒரே நிருவாகக் குழுவில் போடப்படுவார்கள். அவர்களுள் ஒருவர் மாத்திரமே மந்திரியா கும் வாய்ப்பினைப் பெறுவார். ஏனைய ஆறு மந்திரிப் பதவியையும் நாங்கள் பங்கிட்டுக் கொள்வோம். இதுதான் எங்கள் திட்டம். என்ன நினைக்கிறீர்கள்” என்று கேட்டார்.

“நமது நாட்டில் சரியான கட்சியமைப்பு இல்லை. இனம் இனத்தை சேரும் என்பது நியதி. மலைநாட்டு சிங்களப் பிரதிநிதிகள் உங்களோடு சேர்ந்தாலும் அது நிலைத்து நில்லாது. இதனால் வரும் நன்மை சிறுபான்மை வகுப்பினருக்கே பெரிய தீமையாய் வந்து முடியும். இதுதான் எனது அபிப்பிராயம்” என்று கூறினேன்.

அவர்கள் தங்கள் சங்கேதப்படியே நடந்து கொண்டார் கள். அரசாங்க சபையின் முதற் கூட்டம் கூடுகிறது. ஆரம்ப நடவடிக்கையாகச் சபாநாயகர் தெரிவு நிகழப்போகிறது. இரண்டு வேட்பாளர்கள் முன்னிற்கிறார்கள். ஒருவர் திரு. ஜீ. கே. டபிள்யூ. பெரேரா. மற்றவர் சேர் வைத்தியலிங்கம் துரைச்சுவாமி. பெரும்பான்மை வாக்குகளால் சேர் துரைச் சுவாமி சபாநாயகராகத் தெரிவு செய்யப்பெற்றார். சபையில் ஒரே பரபரப்பு. இதன் மத்தியில் முதுபெரும் அரசியல் ஞானியாகிய சேர். பாரன் ஜெயதிலக எழுந்து நிற்கின்றார்.

கூட்ட நடவடிக்கைகளை அடுத்த நாளைக்கு ஒத்திவைக்க வேண்டும் எனப் பிரேரிக்கிறார். பிரேரணை நிறைவேறுகிறது. சபை கலைந்தது. அன்று இரவே சேர். பாரனின் இல்லத்திலே சமஸ்த (சர்வ) சிங்களப் பிரதிநிகளின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. இனம் இனத்தைச் சேர்ந்து விட்டது. அடுத்த நாள் நிகழப் போவதை இனிப் பார்ப்போம்.

அடுத்த நாள் சபாநாயகர் சேர். துரைச்சுவாமி தலைமை யிலே சபை கூடியது. ஏழு நிருவாக சபைகளுக்கும் சிங்களப் பிரதிநிதிகளே பெரும்பான்மையினராகத் தெரிவு செய்யப்பெற்றனர். சிறுபான்மைப் பிரதிநிதிகளை எந்த நிருவாக சபைக்கேனும் எவராயினும் பிரேரிக்கவில்லை; தெரிவின் பின் எஞ்சியிருந்த அவர்களைச் சபாநாயகர் வசதிப்படி அங்கங்கே நியமித்து வைத்தார்.

சேர். பாரன் அங்கே எழுந்து வேண்டுமென்றே திட்டமிட்டுச் சர்வ சிங்கள மந்திரிசபையை அமைத்தோம் என வீரமொழி பேசியதை நாற்பது வருடங்கள் சென்ற பின்பும் என்னால் மறக்கமுடியவில்லை. குறுக்கு வழியாற் கிடைத்த வெற்றி தலைதூக்க முடியாத படுதோல்விக்குக் காரணமான சம்பவத்தை மிக்க மனவருத்தத்துடன் இங்கே சொல்கின்றேன்.

சேர் வைத்திலிங்கம் துரைச்சுவாமி அவர்கள் யோகர் சுவாமிகளிடம் மிகுந்த பயபக்தியுள்ளவர். சுவாமிகளின் அருள் நோக்கினைப் பூரணமாகப் பெற்றவர். அவர் சுவாமியைப் பார்ப்பதற்கு அடிக்கடி கொழும்புத்துறைக்குப் போவார். சிலநேரம் சுவாமிகள் ஆர். அங்கே வாறது? துரைச்சாமியா? இப்ப நேரமில்லை; போ என்று சொல்வார். உடனே திரும்பிப் போய்விடுவார். இது சும்மா வெறுஞ்சொல் அல்ல. அதற்குள் ஏதோ ஒரு நன்மையிருக்கும். நாமறியோம். அவரறிவார்.

பெரியோர் முன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைத் துரைச்சுவாமி அறிவார். வறண்ட புத்தியைப் பெரிதாக மதித்துக்கொண்டு நாம் பெரியவர்களின் முன்பு செல்லல் ஆகாது.

1936ஆம் ஆண்டு சேர். வை. துரைச்சுவாமி கல்முனை ஸ்ரீராமகிருஷ்ண சங்கப் பாடசாலையின் புதிய கட்டிடத் திறப்பு விழாவுக்கு வருகின்றார். அரசாங்க சபைத் தலைவர் வருகிறாரென்றால் சொல்லவும் வேண்டுமா? மட்டக்களப்பு முழுவதுமே திரண்டு வருகிறது. உயர் மட்ட அதிகாரிகள் பலர் வந்து கூடிவிட்டார்கள். உயர்திரு. சுவாமி சர்வானந்த, உயர்திரு. சுவாமி விபுலானந்தா முதலிய துறவிகளும் கூடிய பெரிய கூட்டம். மாவட்ட நீதிபதி தெல்லிப்பழை திரு. வைத்திலிங்கம் அவர்கள் தலைமை தாங்குகிறார்கள்.

**'இலங்கைப் பெருமகனே வருக - எங்கள்**
**ஏந்தல் துரைச்சுவாமி வருக**
**களங்கமில்லா மனத்தோய் வருக - தமிழ்க்**
**கல்வி தழைத்திடவே வருக."**
**'நல்லவர்க ளெல்லாரும் வருக - நமது**
**நாடு செழித்திடவே வருக**
**செல்வர்களும் ஏழைகளும் வருக - கலைச்**
**செல்வமிங்கு சேர்த்திடுவோம் வருக."**

எனத் தொடங்கும் எனது வரவேற்புப் பாடலைச் செல்வி சந்தனப்பிள்ளை பாட விழா ஆரம்பமானது.

தலைமையுரையும், விழாத் தலைவரின் பேருரையும் முடிந்த பின்பு நான் பேசுவதற்கு எழுந்தேன். "விபுலானந்த சகாப்தத்தில் சைவம் வளர்ந்த வரலாறு" என்னும் பொருளில் நான் நீளமான பேச்சொன்றை நிகழ்த்தினேன். எனது பேச்சு மிகவும் காரசாரமாயிருந்தது.

பேச்சின்போது அரசாங்க அதிகாரிகள் பலரை மிகவும் கடுமை யாகத் தாக்கினேன்.

அவர்கள் எவ்வாறு ஒருதலைச் சார்பாக நடந்து கொண்டார்கள் என்பதை அரசாங்க அதிபர் தொடக்கம் கீழ் மட்டம் வரையும் பேர் சொல்லிச் சொல்லி ஒவ்வொருவர் மீதும் எனது கண்டனக் கணைகளைத் தொடுத்தேன். அவர்களின் பெயர்களை இப்பவும் சொல்லலாம். பழைய புண்ணிலே குத்த நான் விரும்பவில்லை.

உபசார மொழிகளுடன் கூட்டம் நிறைவுற்றது. இதன் மத்தியில் சபைத் தலைவர் அவசர அவசரமாகச் சென்றுவிட்ட செய்தி ஒருவருக்கும் தெரியாது. அன்று சாயந்தரம்தான் அது தெரியவந்தது.

பிரபல கல்விமானாகிய வித்தியாதரிசி பிரமஸ்ரீ தி.சதாசிவ ஐயரவர்கள் அன்று மிக மிக விரைவாய் விபுலாநந்த சுவாமியைக்

காண வருகிறார். வந்தவர், "சுவாமி, பெரியதம்பிப் பிள்ளையின் பேச்சைக் கேட்டு நீதிபதி வைத்திலிங்கம் அவர்கள் பயந்துவிட்டார்கள். அரசாங்கத்தைத் தாக்கிப் பேசிய அவரின் பேச்சுக்கு நானும் ஓர் அரசாங்க அதிகாரியாய் இருந்து கொண்டு தெரியாமல் தலைமை தாங்கிவிட்டேன். எனக்குப் பயமாயிருக்கிறது. இதற்கு நான் என்ன செய்ய? என்று தங்களைக் கேட்டு வருமாறு என்னை நீதிபதி அனுப்பியிருக்கிறார். இதற்கு என்ன செய்வது சொல்லுங்கள்" என்று ஐயர் கேட்டார்.

இதைக் கேட்டதும் சுவாமிகள் சிரித்துக் கொண்டே "பெரியதம்பிப் பிள்ளை அரசாங்க ஊழியர் சிலர் செய்த அநீதிகளையே கண்டித்துப் பேசினார். அரசாங்கத்தை அவர் கண்டிக்கவில்லை, அவரின் பேச்சு அரசாங்கத்துக்கு ஆதாரவான பேச்சு. இதற்கேன் இவ்வளவு பயம்? ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் என்று நீதிபதி அவர்களுக்குச் சொல் லுங்கள் ஐயா" என்று சொன்ன சொல் இன்னும் எனது நினைவிலிருக்கிறது.

சுவாமி விபுலானந்தர் இல்லாதிருந்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் என்னைக் கைது செய்து சிறையிலே போட்டிருப்பார்கள். இதை நினைந்தே எழுந்தது,

**'சைவமெங்கே தெய்வத் தமிழெங்கே நீறெங்கே**
**மெய்தேர் வேதாந்த விசாரமெங்கே - தெய்வம்போல்**
**வந்து கிழக்கிலங்கை மண்ணில்விபு லாநந்தர்**
**இங்கு பிற வாமலிருந் தால்"**

என்னும் எனது பாடல்.

# சோல்பெரி கமிஷன் விசாரணையில் ஜீ. ஜீ. யின் "கிடுக்கிப் பாய்ச்சல்!"

1944ஆம் ஆண்டு மட்டக்களப்பு வில்காசிம் மண்டபத்திலே அகில இலங்கை ரீதியில் தமிழர்களின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. வில்காசிம் மண்டபம் கொழும்பிலுள்ள வில்காசிம் என்னும் இஸ்லாமியப் பிரமுகரால் கட்டப்பட்டது. பின்னர் இது இலட்சுமி மண்டபம் என அழைக்கப்பெற்றது. இப்போது இம்பீரியல் படமாளிகை எனப் பெயர் பெற்றுள்ளது.

பொதுக் கூட்டம் கூட்டுவதற்குத் திருவாளர்கள் சு. நடேசபிள்ளை, எஸ். நடேசன் கியூ.ஸி.எஸ். சிவசுப்பிரமணியம் புறக்டர், ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ.ஸி. இன்னும் பலர் வந்திருக்கிறார்கள். பெரிய சனக் கூட்டம். ஆயிரம் பேரிருக்கும். நான் மூன்றாவது பேச்சாளன்.

இந்தக் காலச் சூழ்நிலையில் நமது நல்லையா நல்ல பேரும் புகழும் செல்வாக்கும் பெற்று விளங்குகிறார். மட்டக்களப்பு - திருகோணமலைப் பிரதிநிதியென நினைக்கிறேன். தலைவர் பேச எழுந்ததும் நல்லையா மேசையொன்றின் மேல் எழுந்து நின்று கைத்தடியால் மேசையைத் தட்டி ஆரவாரித்து, "இங்கே யாழ்ப்பாணத்தாருக்கு என்ன அலுவல்? எல்லாரும் வெளியேறுங்கள்" என்று கூச்சலிட்டார். கூட்டம் அல்லோல கல்லோல மாயிற்று. எல்லாரும் வெளியேறிவிட்டனர்.

வெளியிலிருந்து வந்தவர்களும் நானும் நண்பன் ஆர் டபிள்யூ. வீ. அரியநாயகமும்தான் மிச்சம். இப்பொழுது என்னைப் பேசவிடுங்கள் என்று நான் ஜீ. ஜீ. யைக் கேட்டேன். பேசுங்கள் என்றார். நான் பேச்சைத் தொடங்கியதும் எழுநூறு பேர்வரை திரும்பி வந்து விட்டார்கள். கூட்டம் ஒழுங்காய் நடைபெற்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கிளைத் தாபனம் ஒன்று அங்குரார்ப்பணமாயிற்று. திரு. வ. நல்லையாவின் எதிர்ப்புக் கூட்டமொன்றும் முற்றவெளியில் நடைபெற்றது.

ஜீ. ஜீ. என்னைப் பார்த்து, "பண்டிதர், உங்களை முதலாவதாகப் பேசவிடாததற்கு மன்னிக்க வேண்டும். என் சீவனுள்ள அளவும் நான் உங்களை மறக்கமாட்டேன்" என்று அன்னார் கூறிய அந்தச் சொல்லை அவரும் மறக்கவில்லை; நானும் மறக்கவில்லை. எல்லாரும் விடை பெற்றுச் சென்று விட்டார்கள்.

இந்த அன்பின் தொடர்பினாற் போலும் ஜீ. ஜீ. மலாயா வில் இறக்கும்போது நான் கொழும்பிலே தேசீய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. கே. ஸி. தங்கராசா அவர்களின் இல்லத்தில் இருக்க நேர்ந்தது. ஜீ. ஜீயின் சடலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல முன்பு இரண்டு நாள் நான் கூடஇருக்கக் கிடைத்ததையும் அன்புக் கடனைச் செலுத்தியதையும் இங்கே நினைவு கூருகின்றேன்.

தமிழ்க் காங்கிரஸ் கிளை தாபனமானபின்பு முதல் முதல் ஜீ. ஜீயைச் சந்திக்கக் கொழும்புக்குச் செல்கின்றேன். அப்போது ஜீ. ஜீ. அரசாங்க சபையிலே விவசாய நிருவாகக் குழுவில் அங்கம் வகிக்கிறார். ஆனந்த பவனிலிருந்து தொலைபேசியில் அவருடன் பேசினேன். அவர் முதல் முதல் சொன்ன சொற்கள் இன்னும் என் நினைவில் இருக்கின்றன. "பயமில்லாமல் பேசுங்கள்" என்பதுதான் அந்தச் சொற்கள்.

நான் பம்பலப்பிட்டியிலே டிக்மன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்துக்குச் சென்றதும் என்னை இனிதாக வரவேற்று உபசரித்து வந்த காரியம் விசாரித்தார். "எனது தம்பி முறையான ஒருவருக்காக வந்திருக்கின்றேன். அவர் பெயர் ப. சிவசுப்பிரமணியம். என்ஜீனீயர்ப் படிப்புக்கு நாலுவருட உபகாரப் பணம் பெற விண்ணப்பித்திருக்கிறார். ஆள் நல்ல கெட்டிக்காரன்" என்று சொன்னேன்.

அவர் உடனே நான் உங்களுக்கு உதவி செய்வதை நேரே நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டே நீர்ப்பாசனப் பகுதி அதிபருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார் . அதிபர் ஒரு ஆங்கிலேயர். "உவையர்"என்பது அவர் பெயர்.

சிவசுப்பிரமணியத்தை எனக்குத் தெரியும். நல்ல கெட்டிக்காரர். உபகாரப் பணம் கொடுக்க ஒழுங்கு செய்கிறேன் என்று அவர் சொன்னார்.

பக்கத்தில் அவரின் தமையனும் இருக்கிறார். ஏதும் நீதியீனம் நடவாமல் பாதுகாக்கும் பொருட்டே நான் இதில் தலையிட்டேன். மிக நன்றி ஜீ. ஜீ. கூறினார். நான் விடைபெற்றுக் கொண்டேன்.

இனி பிரசித்திபெற்ற "சோல்பெரிக் கமிஷன்" விசாரணைக்கு

வருகின்றேன். பொன்னம்பலத்தின் தூதுக் குழுவில் நானும் ஒரு அங்கத்தவன். மட்டக்களப்பு குருநாத பிள்ளை கனகசபை, ஆர். டபிள்யூ. வீ. அரியநாயகமும் இன்னும் சிலரும் இங்கிருந்து சென்ற ஞாபகம். ஒரு "கார்" நிறைந்த புத்தகம்; ஒவ்வொரு புத்தகத்தினுள்ளும் குறித்த இடத்தை "ரைப்" அடித்த மும்மூன்று பிரதிகள். புத்தகங்களுக்குப் பொறுப்பு திருமதி அழகு பொன்னம்பலம்.

ஜீ. ஜீயின் சாட்சியம் நாலரை மணி நேரம். எந்த ஒரு இனமும் தனித்து நின்று சட்டம் இயற்றும் அதிகாரம் இருக்கக்கூடாது. பெரும்பான்மை வகுப்பினருக்கு ஐம்பதும், ஏனைய வகுப்பினர் எல்லாருக்கும் பொதுவாக ஐம்பதுமாக ஐம்பதுக்கைம்பது வீதம் பிரதிநிதிகள் இருக்க வேண்டும்.

இன்ன ஆசிரியர் இன்ன நூலில் இன்ன இடத்தில் இவ்வாறு சொல்கின்றார் என்று பேசிக்கொண்டே கையை நீட்டுவார். உடனே திருமதி பொன்னம்பலம் புத்தகத்தை எடுத்துக் கொடுப்பார். விரித்து "ரைப்" அடித்த பிரதிகளைக் கொமிஷனர்களிடம் கொடுத்து விட்டு புத்தகத்தை வாசித்துக் காட்டுவார்.

விசாரணையின் ஒரு கட்டத்தில் கொமிஷனர் பரோஸ் என்று நினைக்கிறேன். அவர் ஜீ. ஜீயைப் பார்த்து நீங்கள் எங்களைப் பிடித்து விட்டீர்கள் என்று கூறியபோது பொன்னம்பலம் பிடித்ததா? இது "கிடுக்கிப் பாய்ச்சல்" என்று கூறியது இன்னும் எனக்கு ஞாபகமிருக்கிறது. கிடுக்கிப் பாய்ச்சல் என்றால் முன்னும் பின்னும் ஒரே பிடியாய்ப் பிடித்துக் கொள்ளும் ஒரு யுத்த தந்திரம். இது இரண்டாவது உலக மகா யுத்தத்திற் கையாண்ட முறைகளுள் ஒன்று.

விசாரணை முடிந்ததும் விசாரணைச் சபையினர்க்கு ஜீ. ஜீ. யாழ்ப்பாணத்தில் ஒரு வரவேற்பு உபசாரம் நடத்தினார். பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரை இருபத்தொரு மைல் நீளமான வரவேற்பு. வீதியின் இருமருங்கிலும் வரிசை வரிசையான வெள்ளிக் குத்துவிளக்குகளும் வெள்ளி நிறை குடங்களும்.

உபசாரத்தைத் தாங்கமாட்டாத சோல்பரிப் பிரபு இது ஒரு புது அனுபவம். இதற்கு முந்தியும் நான் கண்டதில்லை; இனிமேலும் காணப்போவதில்லை என்று சொல்லிட்டு இங்கிலாந்துக்குப் பயணமானார். இதன் பின்பு என்ன நடந்தது என்பது எல்லார்க்கும் தெரியும்.

ஜீ. ஜீ. என்பது பொன்னம்பலத்தின் தந்தையாரின் பெயர்; காங் கேயர் என்பதின் சுருக்கமாக அது வழங்கிவந்து பின்னர் பொன்னம்பலம் என்பது தேவைப்படாமல் ஜீ. ஜீ. என்பதே பிரபலம் பெற்று விட்டது.

டிக்மன் வீதி வாசஸ்தலத்தை விட்டு இராணி றோட்டிலுள்ள வாசஸ்தலத்துக்கு ஜீ. ஜீ.மாறிய பின்பு நான் கொழும்புக்கு செல்லும் போதெல்லாம் அங்கு போவது வழக்கம். டிக்மன் வீதி இல்லத்தில் நாங்கள் கலந்துரையாடிக் கொண்டிருக்கையில், கதிரைக்கையைப் பிடித்து ஏறித் தந்தையின் கையைப் பிடித்துத் தாவித் தோளின்மேல் வீற்றிருந்து கீழே இறங்கி மீண்டும் பலதரம் ஏறி இறங்கி விளையாடுகின்ற குமார் இப்பொழுது பெரிய இளைஞனாகி விட்டார். எங்கள் சிநேகிதம் நிலைபெற்று விட்டதென்பதற்கு இதை உதாரணமாகச் சொல்கின்றேன்.

நான் வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் ஜீ. ஜீ. எழுந்து வெளியே வந்து எனது தோளின்மேல் கையைப் போட்டு அழைத்துச் செல்வார். இந்த நேரம் என்ன குடித்தால் உங்களுடைய உடம்புக்குப் பொருத்தமாயிருக்கும்? என்று அவர் கேட்கின்ற அன்புரையை இனி எப்போது நான் கேட்கப்போகின்றேன்? நான் நல்ல சுகமாயிருக்க வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாயிருந்த அன்பர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை நான் இறந்த பின்பும் என்னால் மறக்க முடியுமா?

# ஜீ.ஜீ. உலகப் பிரசித்தி பெற்ற சர்வதேசச் சட்ட நிபுணர்.

ஒரே இலங்கை. சம அந்தஸ்து. இதுதான் ஜீ. ஜீயின் கொள்கை. ஒன்பது மாகாணமும் சுயாட்சி பெற வித்திட்டவர்கள் தமிழ் மக்களே. சமஷ்டியாட்சி இருபத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்களைக் காலகதியில் சிங்களவராக்கிவிடும். இது சிங்களவருக்கே நல்லது. தமிழருக்கு உகந்ததல்ல. இதுதான் ஜீ. ஜீயின் அரசியல் சித்தாந்தம். இந்தக் கொள்கைகளை முன்வைத்தே நாங்கள் அரசியலிற் பிரவேசித்தோம்.

"பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது" என்று ஏதேதோ எல்லாம் சொல்லுகிறவர்கள் இன்னும் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். சாத்துவிகம் சத்தியாக்கிரகம் என்கிறார்கள். பிறரை தூஷிப்பது சத்தியாக்கிரகிக்குத் தர்மமல்ல என்பதை உணர்கின்றாருமில்லை. களையெடுக்க வேண்டும் என்கிறார்கள். காந்தீயமும் பேசுகிறார்கள். ஜீ. ஜீ. இப்படியொன்றும் பேசுவதில்லை. இது இவ்வளவில் நிற்க இன்னும் மூன்று சம்பவங்களுடன் ஜீ.ஜீயின் செய்திகளை முடித்துக் கொள்கின்றேன்.

சிட்னி சொயிசா சதி வழக்கு நினைவுக்கு வருகிறது. சிட்னிக்கும் எனக்குமுள்ள தொர்பினை முதலிற் சொல்லிக் கதையைத் தொங்கு கின்றேன். ஒரு ஆலோசனைச் சபைக் கூட்டத்துக்காக இரவு ரயிலிற் கொழும்புக்குப் பயணம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். முதலாம் வகுப்பில் எனக்கு மேற்படுக்கை. கீழ்ப்படுக்கைக்கு உரியவர் பொலனறுவையில் வருவதாகத் தெரிந்து கொண்டேன்.

குறித்த நேரத்தில் ரயில் பொலனறுவையில் வந்து நின்றதும் திடும் பொதும் என ஒருவர் உள்ளே ஏறினார். மலைபோன்ற தோற்றம். உத்தியோக உடை. பார்த்தால் பயம் வரும். நான் இன்முகம் காட்டி ஐயா வாருங்கள் என்று உபசாரமாகக் கூறினேன். அவரும் பக்கத்தில் அமர்ந்து கொண்டார். பெயர் விசாரித்தேன். சிட்னி சொயிசா என்று கூறினார்.

நான் உடனே ஐயா போதும் ; இனிச் சொல்ல வேண்டாம்; உங்களைப்பற்றி நானே உங்களுக்குச் சொல்லுகின்றேன் என்று கூறிக்கொண்டே, நீங்கள் யாழ்ப்பாணத்தில் எஸ். பீயாய் இருந்ததும், அங்கே முதலாம் நம்பர்க் காடையர்களையெல்லாம் ஜீப்வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்று தலைமயிரைக் கத்தரித்துக் காட்டுப் பிரதேசங்களில் விட்டுவிட்டு வருவதும் பிறவுமெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். வீரதீரப் பிரதாபராகிய நீங்கள் பொலீஸ் படைக்கு ஒரு அணிகலனாக விளங்குகிறீர்கள். சொயிசா குடும்பத்தினர் பலரை எனக்குத் தெரியும் எனச் சொன்னேன்.

அவர் மிக மகிழ்ச்சி கொண்டு என்னைப் பற்றியும் விசாரித்தார். நானும் சொன்னேன். பின்னர் ஒருசில நிமிஷம் உரையாடிவிட்டு சொயிசா என்னைப் பார்த்து "நான் மேலே போகிறேன்; நீங்கள் பயமில்லாமல் கீழே படுங்கள். சிட்னி சொயிசா என்றால் இயமனும் நடுங்குவான்" என்று சொல்லிக் கொண்டே மேலே போய் விடுகிறார்.

இந்தப் பெரிய பொலீஸ் மா அதிபர் சிட்னி சொயிசா அரசாங் கத்துக்கு எதிரான சதி வழக்கொன்றில் எதிரியாக நிறுத்தப்பட்டுள்ளார். ஜீ. ஜீ. பொன்னம்பலம் எதிரிக்காக வாதாடிக் கொண்டிருக்கிறார். குற்றம் முந்தியது; சட்டம் பிந்தியது; எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்பது ஜீ. ஜீயின் விவாதத்தின் அடிப்படையாகும்.

இந்தக் காலப் பகுதியில் கொழும்புக்குப் போயிருந்த நான் வழக்கம்போல ஜீ. ஜீயைப் பார்ப்பதற்கு அன்னாரின் இல்லத்துக்குச் சென்றேன். சிக்கலான சில அரசியல் பிரச்சினைகளுக்குச் சுமுகமாகத் தீர்வு காண்பது பற்றியே அதிகம் பேசுவோம். தீர்க்க முடியாத பிரச்சினைகளைத் தூக்கிக் கொண்டு பொதுமக்கள் முன் போவது எங்கள் முறையல்ல. நாங்களே ஏகப் பிரதிநிதி என்று சொல்லும் குறுகிய கொள்கையையும் நாங்கள் ஆதரிப்பதில்லை. கூட்டுறவுக் கொள்கையிலேயே ஏகோபித்த மனப்பான்மையில்லை. அரசியலில் அது எப்படி வரப்போகிறது?

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் சதி வழக்கைப் பற்றிக் கேட்டேன். சிறிதும் தாமதியாமல் "தூக்கியெறிஞ்சு போடுவேன்" என்று துணிவாகக் கூறினார். "பிறீவிக் கவுன்சிலில்" அவர் கூற்று அப்படியேயாயிற்று.

ஒருநாள் காலை மட்டுநகருக்குச் சென்ற நான் முற்பகல் பத்தரை மணியளவில் நீதிமன்றத்தின் பக்கமாகப் போனேன். தாங்க முடியாத சனக் கூட்டம். ஏன் இவ்வளவு கூட்டம் என்று வினாவினேன். இன்று சிறைச்சாலைக் கொலை வழக்கு. ஜீ. ஜீ. வந்திருக்கிறார். அதுதான்

இவ்வளவு சனக் கூட்டம் என்று சொல்லிக் கொண்டே பொன்னம்பலத்தை நாங்கள் ஒருதரம் பார்க்க வேண்டும் எனக் கூட்டத்திலிருந்த பலர் மிக்க ஆர்வத்துடன் என்னைக் கேட்கலாயினர். சரி பார்ப்போம் என்று சொல்லிக் கொண்டிருக்கையில் தேநீர் இடைவேளைக்காக நீதிமன்றம் கலைந்தது.

எல்லாரும் வாடி வீட்டுக்குச் சென்று விட்டார்கள். நான் போய்ச் சட்டத்தரணிகளின் அறையில் இருந்து கொண்டேன். பதினொரு மணி பதினைந்து நிமிஷம் அளவு ஜீ. ஜீ. முதலியோர் திரும்பி வந்தனர். என்னைக் கண்டதும் ஜீ. ஜீ. விரைந்து வந்து வழக்கம்போலத் தோளின்மீது கையைப் போட்டு என்னை அணைத்துக் கொண்டு தமது உதவி வழக்கறிஞருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

பின்னர் அங்கிருந்த வழக்கறிஞர்களைப் பார்த்து கடைசி வரையும் என்னோடு கூட நிற்பவர்களில் பண்டிதரும் ஒருவர் என்று கூறியதும் நான் ஜீ. ஜீ. யைப் பார்த்து, “மலையை விழுங்கிய மகாதேவனுக்குக் கதவு ஒரு பப்படம்” என்று சொன்னேன். இது அவருக்கு விளங்கவில்லை; அது என்ன என்று கேட்டார்?

மலையை விழுங்கியவனுக்குக் கதவைச் சாப்பிடக் கொடுத்தால் அது அவனுக்கு ஒரு பப்படத்தைச் சாப்பிடுவது போல இலேசாயிருக்கும் பெரிய சிட்னிசொயிசா சதி வழக்கை தூக்கியெறிந்த உங்களுக்கு இந்தக் கொலை வழக்கும் ஒரு வழக்கா? என்று நான் சொன்னதும் எல்லோரும் “கொல்” என்று சிரித்தார்கள்.

நான் இவ்வளவோடு விடவில்லை. வந்த அலுவல் இருக்கிறது. ஜீ. ஜீயைப் பார்த்து இந்த யன்னலின் நேரே வந்து நில்லுங்கள் என்றேன். ஏன் என்றார். இந்த மக்கள் கூட்டம் உங்களைப் பார்க்க விரும்புகிறது என்றேன். நீங்களும் வாருங்கள் என்றார். இருவரும் போய் நின்றோம். அது கம்பியில்லாத திறந்த யன்னல். எல்லோரும் ஜீ. ஜீயைக் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். ஜீ. ஜீ. கைகூப்பி வணக்கம் செலுத்தினார்.

நீதிமன்றம் கூடிவிட்டது. வழக்கு என்னவாய்ப் போயிற்று என்பது சொல்லாமலே விளங்கும். இந்த வழக்கில் எனது இனத்தவரான சிறைச்சாலைக் காவலர் க. பொன்னுத்துரை என்பவரும் ஒரு எதிரி என்பது இங்கே நினைவுக்கு வருகிறது.

இனி ஜீ.ஜீ. யுடன் அடுத்த கட்டத்துக்கு வருகிறேன். இதுதான் எங்கள் கடைசிச் சந்திப்பு. வழக்கம்போல உற்சாகமாய் இருக்கவில்லை. தோளில் கை போடவுமில்லை. எதிர்முகமாயிருந்து பேசவுமில்லை. பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டார். தணிந்த குரலிலேயே உரையாடல் நிகழ்ந்தது.

இருதயத் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இம்முறை கொஞ்சம் கூடிப் போயிற்று. மேலே படுக்கைக்குப் போகும்போது படியேறிப் போவதில்லை. கதிரையில் வைத்துத் தூக்கிக் கொண்டுதான் போவார்கள் என்று பேசிக் கொண்டிருக்கையில் தொலைபேசி மணியடித்தது.

கிளாக்கர் விரைவாக வந்து திரு. அ. அமிர்தலிங்கம் வருவதாகக் கூறினார். வழக்கு எப்படிப் போகும் என வினாவினேன். அங்கே சாரமொன்றும் இல்லை. ஆளைக் கழற்றி விட்டுவிடுவேன் என்று துணிவாகக் கூறினார். நான் விடை பெற்றுக்கொண்டு அன்பர் கே.ஜி. தங்கராசா அவர்களின் வீடு திரும்பினேன். வழக்கம் போல அன்று ஜீ. ஜீ. என்னை வழியனுப்ப வரவில்லை.

ஜீ.ஜீ. உலகப் பிரசித்தி பெற்ற சர்வதேசச் சட்ட நிபுணர். தமக்கு முந்தி வாழ்ந்த சட்ட நிபுணர்களின் புகழையும், தமது சமகால சட்ட நிபுணர்களின் புகழையும் தமது புகழாக்கிக் கொண்டு மறைந்து போனார். பல கோணங்களில் வைத்து அன்னாரை நான் நினைவு கூருகின்றேன்.

# கல்முனை கண்ட விளைவு விழா
# அசீஸ், காரியப்பர் ஆற்றிய பணி

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்த பின்பு கல்முனையில் 1941இல் அவசரகாலக் கச்சேரி ஒன்று நிறுவப்பெற்றது. இது கல்ஓயா (பட்டிப்பளை ஆறு) அபிவிருத்தித் திட்டத்தின் முன்னோடியாக அமைந்தது. முதலாவது அரசாங்க உதவி அதிபராக அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அசீஸ் அவர்கள் நியமனம் பெற்றார்கள்.

திரு.வ. நல்லையா அவர்கள் என்னிடம் வந்து கல்முனை உதவி அரசாங்க அதிபர் நல்ல தமிழறிஞர் ஒருவருடன் தொடர்புகொள்ள விரும்புகிறார். நான் உங்கள் பெயரைத்தான் சொல்லியிருக்கிறேன். விரைவில் இருவரும் உங்களைச் சந்திக்க வருவோம் என்று எனக்குச் சொன்னார்.

இரண்டு மூன்று நாள் கழித்து இருவரும் குருக்கள் மடத்துக்கு என்னைப் பார்க்க வந்தார்கள். அன்று தொடக்கம் கல்முனையிலிருந்து மட்டக்களப்புக்குப் போகும்போதெல்லாம் அசீஸ் பெரும்பாலும் என்னைச் சந்தித்துக் கொள்வார். சில ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழும் கேட்டுக் குறித்துக் கொள்வார்.

கூட்டங்களிலே தமிழிற் பேசும்போது என்னைத் தமது பக்கத்தில் வைத்துக் கொண்டே பேசுவார். பேச்சுக்களின் இடையே தகுதியான தமிழ்ச் சொற்கள் சிலவற்றை என்னிடம் கேட்டு அறிந்துகொண்டு அவற்றை அமைத்துப் பேசுவார். அவர் கல்முனையில் இருக்கும் காலமெல்லாம் இவ்வண்ணம் நடந்து வந்தது. தமிழும் இனிமையும் போல எங்கள் நட்பும் நிலைபெறலாயிற்று.

அசீஸ் கல்முனையில் இருந்த காலப் பகுதியில் விவசாயிகள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சி உண்டாயிற்று. அவர்களுக்கு எதிர்காலம் பற்றி ஒரு புது நம்பிக்கை பிறந்தது. விவசாயிகளே நாட்டின் முதுகெலும்பு என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

உலகுக்கு உழவன் உயிர் என்னும் உண்மையினை அதிகாரிகளும் உணர்ந்து கொண்டார்கள். கிழக்குத் திசையில் தானியக் களஞ்சியம் என்னும் பழைய பெயரை நமது நாடும் மீண்டும் பெற உழைப்போம் என வீறுகொண்டு எழுந்தார்கள் நம் விவசாயிகள்.

விவசாயிகள் எழுச்சியைக் கண்டு மகிழ்ச்சியடைந்த அசீஸ் அவர்கள் கல்முனையில் ஒரு விளைவு விழாவுக்காக விழைவு கொண்டார். 1942இல் விளைவு விழாச் சபையொன்று நிறுவப்பெற்றது. அதன் தலைவராக அசீஸ் அவர்களும் காரியதரிசியாக ஜனாப் முதலியார் எம். எஸ். காரியப்பரும் பணி புரிந்தார்கள்.

முதலியார் காரியப்பர் ஒரு கருமவீரர்; அழகாக ஆங்கிலம் பேசுவார். இந்தியாவில் எம். எஸ். என்றால் எம். எஸ். சுப்புலட்சுமியைக் குறிப்பதுபோல மட்டக்களப்பில் எம். எஸ். என்றால் முதலியார் காரியப்பரையே குறிக்கும் அவ்வளவு பிரபலமானவர் அவர். கரைவாகுப் பகுதி வன்னிமை முதலியாராகவும், கூட்டுறவு இயக்கப் பிரமுகராகவும், நாடாளுமன்றப் பிரதிநிதியாகவும் இலங்கை முழுவதும் புகழ் பரப்பியவர் முதலியார் காரியப்பர்.

விழாவின் சார்பில் ஒரு நினைவு மலரும் வெளியிடப்பெற்றது. ஆங்கிலச் செய்திகளையும், கட்டுரைகளையும் தமிழாக்கம் செய்வதில் விழாச் சபைக்கு உதவிய அன்பர்கள் சிலரின் பெயர் இப்போது நினைவில் இல்லை. செல்வி கிறேஸ் தில்லையம்பலம் நினைவில் இருக்கிறார். மாட்சிமை தங்கிய தேசாதிபதி அவர்களின் கட்டுரையை நான் தமிழாக்கம் செய்து கொடுத்தேன்.

மலருக்கு விவசாய மாதிரிப் பாடல் ஒன்றும் கிருஷிக ஆத்திசூடியும் ஒரு வாழ்த்துப் பாடலும் பாடிக்கொடுத்தேன். அகில இலங்கை ரீதியில் பாட்டுப் போட்டிகள் இரண்டை நடத்தவும் பிற பரிசில்களும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டன. மாதிரிப் பாடலின் உள்ளுரைச் செய்யுளை இங்கே தருகின்றேன்.

**'உழவால் உயரும் உலகம், உழவும்**
**உழைப்பால் உயரும் உழைப்பும் - தொழிலுணர்ச்சி**
**பெற்றால் உயருமெனும் பேருண்மை நம்மிளைஞர்**
**கற்றால் வருமின்பம் காண்"**

வாழ்த்துப் பாடலின் ஒரு சிறு பகுதியையும் இங்கே காண்க.

**'கொல்லும் புலிகரடி கோப மதயானை**
**செல்லும் வழிகளெல்லாம் - கிளியே**
**செந்நெல் விளையுதடி"**

**'காயும் விஷநுளம்புக் காடுகள் நாடாகிக்**
**காயும் கனிகிழங்கும் - கிளியே**
**கற்பகச் சோலையடி"**

**'வாழ்க விளைவுவிழா வாழ்க பொருட்காட்சி**
**வாழ்க அசீஸ்துரையும் - கிளியே**
**மங்களம் பொங்குகவே."**

அசீஸ்துரை இங்கிருந்து உத்தியோக மாற்றம் பெற்றுச் செல்லும்போது பக்கத்திலே தமிழறிஞர் ஒருவர் இருக்க வேண்டிய அவசியமில்லாமற் போயிற்று. அவர் பெரிய தமிழறிஞராகிவிட்டார். "குல வித்தை கல்லாமற் பாதி" அல்லவா? அவர் தமிழிலே பிறந்து, தமிழிலே வளர்ந்தவர், தமிழிலே நிறைந்த ஒரு யாழ்ப்பாணத்தவர். வைதீசுவர வித்தியாலயத்திலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் படித்தவர்.

கொழும்பிலிருந்தாலும் யாழ்ப்பாணப் பற்று அவருடன் ஒட்டிக் கொண்டேயிருந்தது. அது பிறவிக்குணம். இதனாலல்லவா அன்னார் கொழும்பு ஏழிலுள்ள வாண்ஸ் பிளேஸ் எண்பத்தோராம் இலக்க "மெடோ சுவீற்" என்னும் தமது இல்லத்துத் தலைவாசலில் பூவுலக கற்பகம் எனப் போற்றப்படுகின்ற பனைமரம் ஒன்றை அன்பாக வைத்து வளர்த்து வந்தார். அன்னாரின் நினைவு போல் அது இன்னும் நின்று நிலவுகிறது.

அன்னாருக்கு நான் கூறிய பிரியாவிடை செய்யுள் ஒன்றினை நினைவின் பொருட்டு இங்கே தருகின்றேன். இச்செய்யுளில் அவர் நீடு வாழ்கின்றார்.

**'புலத்துயர்ந்து வண்மைப் புகழ்க்கதிர்கள் வீசி**
**நிலத்ததிகா ரஞ்செய்து நின்று - பலத்தினிறை**
**நல்ல களம்பொலிந்து நாடு புரத்தலால்**
**நெல்லும் அசீஸ்துரைக்கு நேர்"**

இது நெல்லுக்கும் அசீசுக்கும் சிலேடை. புலத்து உயர்ந்து – வயலில் வளர்ந்து உயர்ந்து; வண்மைப் புகழ்க் கதிர்கள் வீசி - வாரி வழங்குகின்ற புகழினையுடைய தானியக் கதிர்களைப் பரப்பி; நிலத்து

அதிகாரஞ்செய்து நின்று -நிலத்திலிட்ட ஒருநெல் பல நெல்லுகளாக அதிகரித்து நின்று; பலத்தில் நிறை நல்ல களம் பொலிந்து- பயனில் நிறைவு பெற்ற நல்ல நெற்களத்திலே பொலிகளாகக் குவிந்து; நாடு புரத்தலால் - உணவூட்டியும் பணமீட்டியும் நாட்டைப் பாதுகாப்பதால்; நெல்லும் அசீஸ்துரைக்கு நேர் - நெல்லும் ஆசீஸ் துரைக்கு நிகராகும் என நெல்லின் மேல் வைத்துப் பொருள் கொள்க.

புலத்து உயர்ந்து - அறிவில் உயர்ந்து; வண்மை புகழ்க் கதிர்கள் வீசி - கொடையால் வருகின்ற புகழாகிய ஒளியைப் பரப்பி; நிலத்து அதிகாரம் செய்து நின்று - நாட்டில் நிருவாக அதிகாரம் செய்து நின்று; நல்ல களம் பொலிந்து - கற்றோர் அவைக்களத்திற் பொலிவுபெற்று; நாடு புரந்தலால் - நாட்டைப் பாதுகாத்தல்; நெல்லும் அசீஸ்துரைக்கு நேராகும் என அசீஸ்துரைமேல் வைத்துப் பொருள் கொள்க.

மட்டக்களப்பிலே நெல் விளைவைப் பெருக்குவதையே பிரதான நோக்கமாகக் கொண்டு பல வழிகளிலும் சேவை செய்த அருமையும் பெருமையும் கருதி அசீஸ் அவர்களுக்கு நெல்லை உவமையாக்கிப் பிரியாவிடை கூறிய பொருத்தம் வாசகர்கள் அறிந்து மகிழ்வதற்குரியது.

முதலியார் காரியப்பர் இப்பிரியாவிடைச் செய்யுளை நான் பாடக் கேட்டதும் தம்மையே மறந்து போனார். இப்படிப் பாடுவது அபூர்வம் அபூர்வம். பழைய புலவர்களுக்குத்தான் இது முடியும். இப்போதுள்ளவர்களால் பெரும்பாலும் இது இயலாத காரியம். இந்தப் பாட்டின் மூலமாக உங்கள் இருவரின் நட்பும் நிலைத்து நிற்கும் என அல்ஹாஜ் அசீஸ் அவர்களிடம் கூறியது எங்களால் மறத்தற்குரியதன்று. நாங்கள் இருவரும் மறக்கவுமில்லை.

அசீஸ் அவர்கள் மிக்க நன்றியறிதலுடன் எனது பாட்டை ஏற்றுக் கொண்டு எனக்கு நல்வாழ்த்தும் கூறிப் பிரியாவிடை பெற்றுக்கொண்டார்.

அன்னாரின் வாழ்க்கைத் துணைவியார் உம்முகுல்தூம் அம்மையார் எல்லா நல்லியல்புகளும் ஒருங்கே அமைந்த ஒரு உயர் குடும்பப் பெண்ணாவார். செல்வச் செருக்கினை வென்ற அம்மாதர் திலகம் எளிமையும் இனிமையுமே வடிவானவர். ஏழைகளின் புகலிடம்.

எனது மனைவி மக்கள் கொழும்பிலே ஒருவார காலம் அம்மையாரின் விருந்தாளிகளாக "மெடோ சுவீற்" என்னும் இல்லத்தில் தங்கியிருந்தபோது அவர் செய்த இனிய உபசாரங்களையும் அவரின் மக்கள் காட்டிய அன்பையும் இறக்கும்போதும் நாங்கள் மறப்பதற்கில்லை. இது ஒரு முன்மாதிரியான குடும்பம்.

அசீஸ் அவர்கள் தமது வாழ்க்கைத் துணைவியாரைத் தமது வழித்துணையென்றும், என் உம்முகுல்தூம் என்றும் அழைப்பதிலிருந்து அவர்கள் இருவரும் ஒருவராய் வாழ்ந்தமை எளிதில் விளங்குகின்றது. இருவரும் ஒருவர்பின் ஒருவராய் மறைந்தமை நாட்டுக்குப் பேரிழப்பாகும். இருவரின் பிரிவும் அவர்களின் ஒருமை வாழ்வுக்குச் சான்றாகின்றன.

பிறர் வாழப் பிறந்தவர் அசீஸ். கல்முனை டாக்டர் ஜீ.கே. வேலுப்பிள்ளை, பொலீஸ் இன்ஸ்பெக்டர் எம். எஸ். ரஹீம், களுதாவளை வீரபத்திரன் கந்தசாமி, எனது மகன் விஜயரத்தினம் (சிவலிங்கம்) என்போர் அசீஸ் அவர்களின் நேர்மையினாலும் சீர்மையினாலும் ஆக்கம் பெற்று வாழ்வதை இங்கே நன்றியுடன் குறிப்பிடுகின்றேன். ஏ. எம். ஏ. அசீஸ் என்னும் நாமம் என்றும் நின்று வாழ்க. நீடுவாழ் அசீஸ் பெருமகனை இங்கே நினைவு கூருகின்றேன்.

# கானல் வரியை நினைவூட்டும் கல்ஓயா வருணனை

1949ஆம் ஆண்டிலே கல்ஓயாத் திட்டம் ஆரம்பமானது. கல்ஓயா என்பது கல் என்னும் அனுகரண ஓசை ஓயாமல் ஒலித்துக் கொண்டு பாயும் பட்டிப்பளை ஆற்றைக் குறிக்கும்.

அம்பாறை என்பது அழகிய கற்பாறைகள் உள்ள இடமாகும் கௌரவ டி. எஸ். சேனநாயக்கா அவர்கள் அத்திவாரக் கல் நாட்டிய இத்திட்டத்துக்கு அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அசீஸ், இராசவாசல் முதலியார் எம். எஸ். காரியப்பர் இருவருமே முன்னோடிகளெனக் கருதுகின்றேன்.

இந்தத் திட்டம் தொடங்கிய அன்றைக்கே இதன் பூரண வடிவத்தை எனது அகக்கண்ணால் நான் கண்டுகொண்டேன். எனது சிந்தனைச் சிற்பத்தில் அழகொழுக அதை அமைத்துக் கொண்டேன். கட்டுப்பாடின்றி பாய்ந்தோடுகின்ற பட்டிப்பளையாறு எனது கவிதை வரப்பினுள்ளே கட்டுப்பட்டுவிட்டது. அமரிக்கர் கல்ஓயா நங்கையை சிறை செய்வதற்கு முந்தியே அவள் மனச்சிறையினுள்ளே அகப்பட்டுக் கொண்டாள்.

வாழி கல்ஓயா நங்கை; நீ வாழ நாடு வாழ வேண்டும்; உனது ஒழுங்குபட்ட நடையால் நாட்டு மக்களிடையே ஒழுங்கான நடை அமைய வேண்டும். இந்த நடையை நீ யாரிடம் கற்றாய்? நீ உன் தலைவன் பெயரை வாயால் சொல்லமாட்டாய் அல்லவா? அது நின்குலவொழுக்கம். அதை நான் சொல்லுகின்றேன்.

காடும் நாடாய்ச் சிறந்தோங்க; வயல் வளம் பொலிய; மக்கள் வாழ்வு சிறக்க; நடந்து வந்தாய்; கல்ஓயா நங்கையே! நீ வாழ்வாயாக. நாடு வாழ நீ நடந்து வந்ததெல்லாம் உனது தலைவனின் இனிய நடைப் பாங்கினால் அல்லவா? வாழி கல்ஓயா நங்கை! உன்வரவு நல்வரவாகுக.

**'காடும் நாடாய்ச் சிறந்தோங்கக்**
**கழனிச் செல்வம் பொலிந்தோங்க**
**நாடும் வாழ்விற் திகழ்ந்தோங்க**
**நடந்தாய் வாழி கல்ஓயா!**
**நாடும் வாழ்விற் திகழ்ந்தோங்க**
**நடந்த தெல்லாம் நின்தலைவன்**
**பாடும் புகழ்சேர் இனியநடைப்**
**பாங்கே வாழி கல்ஓயா!"**

இரவும் பகலாய் ஒளிவீச; இங்கேயே நாங்கள் சுவர்க்கத்தைக் காண நாட்டைப் புரந்து நீ நடந்து வந்தாய்; கல்ஓயா நங்கையே! நீ வாழ்வாயாக. நாட்டைப் புரந்து நீ நடந்து வந்ததெல்லாம் உனது தலைவன் டி. எஸ். சேனநாயக்காவின் நடைப் பாங்கேயென நான் அறிந்து கொண்டேன். கல்ஓயா நங்கையே! நீ வாழ்வாயாக நின் வரவு நல்வரவாகுக!

**'இரவும் பகலாய் ஒளிவீசி**
**இங்கே சுவர்க்க நிலைகாட்டப்**
**புரவே பூண்டு தவழ்ந்தினிது**
**புகுந்தாய் வாழி கல்ஓயா!**
**புரவே பூண்டு தவழ்ந்தினிது**
**புகுந்த தெல்லாம் நின்தலைவன்**
**திருவார் செனநா யகன்புரவின்**
**திறனே வாழி கல்ஓயா!"**

கரும்பின் நாவுக்கு இனிய சாறு பாய; கரும்பாலையில் நின்றும் மூக்குக்கு இனிய புகை கமழ்ந்து சூழ; இனிய பாகுபதம் நிறைந்து தேங்கப் பரந்து வந்தாய் கல்ஓயா நங்கையே நீ வாழ்வாயாக. உனது தலைவனின் இனிய மனப்பண்புக்குத் தகுதியாக நீ நடந்து கொண்டாய். கல்ஓயா நங்கையே நீ வாழ்வாயாக. நின் வரவு நல்வரவாகுக.

**'கண்ணார் கரும்பின் தேன்பாயக்**
**கமழ்ந்தே ஆலைப் புகைசூழப்**
**பண்ணார் பாகின் பதம்தேங்கப்**
**பரந்தாய் வாழி கல்ஓயா!**
**பண்ணார் பாகின் பதம்தேங்கப்**
**பரந்த தெல்லாம் நின்தலைவன்**
**தண்ணார் இனிய மனப்பண்பின்**
**தகவே வாழி கல்ஓயா!"**

அத்தமன சூரியன்போன்ற சிவந்த நிறத்தினையுடைய அமெரிக்கர் குறித்த கால எல்லை முடிய முன்னரே உன்னைச் சிறை செய்து விட்டார்கள். நீ சிறைப்பட்டாலும் இயல்பாகவே உனக்குரிய பெருந்தன்மை யுடன் நீ நடந்து கொண்டாய். உன்னால் நாட்டின் பசிபிணிகள் தணிந்து விட்டன. நீ இவ்வாறு நாட்டின் பசிபிணிகளைத் தணித்தது உனது தலைவனின் கருணைத் திறத்தையே காட்டுகின்றது. கல்ஓயா நங்கையே நீ வாழ்வாயாக. நின் வரவு நல்வரவாகுக.

**'மேல்பாற் பரிதி நிறத்தருனை**
**விரைந்தே சிறைசெய் திட்டாலும்**
**சால்பாற் பரந்தே பசிபிணிகள்**
**தணித்தாய் வாழி கல்ஓயா!**
**சால்பாற் பரந்தே பசிபிணிகள்**
**தணித்த தெல்லாம் தண்மதியம்**
**போல் வான் நினது தலைவருட்**
**பொலிவே வாழி கல்ஓயா!"**

இரண்டு மலைகளின் இடையே அணைபோட்டு உன்னை வலிந்து சிறை செய்து விட்டார்கள். தேசத் தொண்டர்கள் தமது சிறைவாசத்தைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வது போல நீயும் உனது கற்சிறையைப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டாய்.

இந்தப் பொறுமை உனக்கு எங்கிருந்து வந்தது? உன்னை மணந்து கொண்ட தலைவன் டி. எஸ். சேனநாயக்கவிடமிருந்து அல்லவா வந்தது? இந்தப் பொறுமை உனக்குத் தகுதியானதே. கல்ஓயா நங்கையே நீ வாழ்வாயாக. நின் வரவு நல்வரவாகுக.

1915ஆம் ஆண்டு டி. எஸ். சேனநாயக்கா முதலிய சிங்களத் தலைவர்கள் இருட்சிறையில் இடப்பட்டதும்; சேர். பொன்னம்பலம் இராமநாசன் இங்கிலாந்து சென்றதும்; ஆங்கில மன்னரையும் மந்திரிமாரையும் கண்டதும்; நீதிக்காக வாதாடியதும்; எல்லாத் தலைவர்களும் உடனடியாக விடுதலையானதும்; இராமநாதன் வெற்றி வீரராக மீண்டு வந்ததும் இலங்கை அரசியல் வரலாற்றில் பொன்னெழுத்துக் களாற் பொறிக்கப்படவேண்டிய நன்றிக்கடன் குறிக்கும் சம்பவங்க ளாகும். இவை நம்மால் நினைவுகூரத்தக்கன. இராமநாதன் தமிழினத்தின் மணிமுடி.

**'மலையி னிடையே அணைகோலி**
**வலிந்து சிறைசெய் தாலுமுனைப்**
**புலவாய் தொண்டர் சிறைபோன்றே**
**பொறுத்தாய் வாழி கல்ஓயா!**
**புலவாய் தொண்டர் சிறைபோன்றே**
**பொறுத்த தெல்லாம் நினைமணந்த**
**தலைவன் செனநா யகன்பொறையின்**
**தகவே வாழி கல்லோயா!"**

உன்னை வெளிநாட்டவர் சிறை செய்தது போதாமல் உள் நாட்டவரும் சிறை செய்கின்றார்களே. வெளிநாட்டவர் சிறை செய்தது ஒருதரம் மாத்திரமே. உள்நாட்டவர் பலதரம் அடிக்கடி சிறை செய்து உனது விளையாட்டைக் குழப்புகிறார்களே. அவர்கள் பலகால் சிறை செய்தாலும் நீ வரம்பு கடப்பதுமில்லை; கலங்குவதுமில்லை; தெளிந்து ஓடி வருகின்றாள். கல்ஓயா நங்கையே நீ வாழ்வாயாக. நின் வரவு நல்வரவாகுக.

நீ வரம்புக்குள் நிற்பதுவும், தெளிந்து ஓடுவதுவும் எதனால் என எண்ணிப் பார்த்தேன். உனது தலைவனின் திருத்தமான ஜனநாயக வரம்பின் தெளிவே இதற்குக் காரணம் என அறிந்து கொண்டேன். கல்ஓயா நங்கையே நீடுழி வாழ்வாயாக. ஜனநாயகம் வாழ நீ நடந்து வருக. நின்வரவு நல்வரவாகுக.

**'பரந்து விளையாட் டயருமுனைப்**
**பலகால் உழவர் சிறை செயினும்**
**வரம்பு கடவாய் தெளிந்தோடி**
**வருவாய் வாழி கல்ஓயா!**
**வரம்பு கடவாய் தெளிந்தோடி**
**வருவ தெல்லாம் நின்தலைவன்**
**திருந்து சனநா யகவரம்பின்**
**தெளிவே வாழி கல்ஓயா!"**

எனது கனவு நனவாய்விட்டது. எதைச் சொல்லட்டும்? இங்கினியா கலையிலே அமுதசுரபி போல் அமைந்துள்ள கல்ஓயா நீர்த் தேக்கத்தைச் சொல்வதா? விஞ்ஞானமயமாய் மின்சக்தியால் இயங்கும் நவீன வாடி வீட்டைச் சொல்வதா? நீர் வீழ்ச்சி மின்சக்தி நிலையத்தைச் சொல்வதா?

கற்பாறைகள் படர்ந்த இடங்கள் தோறும் மரகதப் பாளங்களைப் பரப்பினாற்போன்று பச்சைப்பசேலென்று காட்சியளிக்கின்ற வயல்

வெளிகளைச் சொல்வதா? பட்டிப்பளையாறு என்கின்ற அன்னை தமது இரண்டு கைகளையும் நீட்டினாற்போன்ற வலதுகை இடதுகை வாய்க்கால்களைச் சொல்வதா?

அம்பாறைப் புதுநகர நிர்மாணத்தைப் புகழ்வதா? அங்குள்ள மாட மாளிகை கூட கோபுரங்களைக் கூறுவதா? ஆகாய விமான நிலைய அமைப்பினைப் புகழ்வதா? ஒலிபரப்பு நிலையத்தைப் பற்றி உரைப்பதா? இங்குறானைக் கரும்புப் பண்ணையின் இயல்பினை இசைப்பதா? சீனித் தொழிற்சாலையின் இனிய செய்தியைச் செப்புவதா?

யானை, புலி, கரடிகள் உறைந்த இருண்ட இடமெல்லாம் கல்ஓயாத் திட்டத்தால் இராப்பகலற்ற இடமாகிவிட்டன. கல்ஓயா நீர்த்தேக்கம் சேனநாயக்கா சமுத்திரமாயிற்று. குளக்கோட்டன், பராக்கிரமவாகு இவர்களுடன் டி. எஸ். ஒரே வரிசையில் சாசுவதமான சமமான இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

## பகவத்கீதை வெண்பாவை எதற்காக, எப்படிப் பாடினேன்?

**பட்டங்கள் பல சுமத்தப்பட்டாலும்**
**பாரமற்றது "புலவர்மணி'ப் பட்டமே.**

இது எதிர்பாராத சம்பவம். 1943ஆம் ஆண்டு கொழும்பு மாநகர் இருளில் மூழ்கிக் கிடந்த காலம். இரண்டாவது உலக மகா யுத்தம் உச்ச நிலையடைந்துள்ள நிச்சயமற்ற நிலை. பெரும்பாலான மக்களின் மனத்தை அச்சமாக்கிய இருள் சூழ்ந்துள்ள அல்லற் காலை. பல நாட்டு மக்கள் தங்கள் உயிருக்கும் உடைமைக்குமாகத் துடித்துக் கொண்டிருந்த துன்பக் காட்சி ஒருபுறம்; சுதந்திரம் பறிபோவது குறித்த கவலை மறுபுறம்; சுதந்திர தாகம் இன்னொரு புறம்.

எங்கும் ஒரே பரபரப்பு. ஜப்பானியரின் குண்டு வீச்சுக்கு இலங்கையும் ஒருசிறிது இலக்காக நேர்ந்த இடுக்கண் நிறைந்த காலம்.

இந்தக் கலக்கம் நிறைந்த போராட்ட காலத்தில் எனது மனைவியாரின் உடலானது நோயோடு போராடிக் கொண்டு கிடந்தது. வைத்திய நிபுணர் இருவரின் ஆலோசனைப்படி இந்தப் போராட்டத்துக்கு ஒரு முடிவு காண்பதற்காக கொழும்புக்குப் போகவேண்டிய சந்தர்ப்பம் வந்து சேர்ந்தது.

பெரிய சத்திர சிகிச்சையாம். தருமம், சாந்தம், சிவம், சத்தியம் என்னும் நான்கு சிறுவர்களையும் பிரிந்து செல்வதில் தாயடைந்துள்ள துயரம், நோய் தருகின்ற துன்பத்தையும் விஞ்சிவிட்டது. இத்தனைக்கும் மத்தியில் எனது திடசித்தம் மாத்திரம் வலுப்பெற்று நின்றது. இது ஆண்டவன் எனக்குத் தந்த அருட்கொடை.

ஒருநாள் மாலையில் மனைவியாரை புகையிரதத்தில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டேன் கொழும்புக்கு. விடியக் கொழும்புக் கோட்டையில் வந்து நின்றது புகையிரதம். மறக்க முடியாத மட்டக்களப்பு நண்பர் இருவர்; கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் உபகாரிகள்; திரு. ஆ. தெட்சணாமூர்த்தியும், திரு. கு. ஞானசெல்வமும் அங்கே எங்களைக் காத்து நின்றனர்.

இவர்களின் உதவியுடன் டாக்டர் ஜயசூரியா அவர்களின் இல்லத்துக்குச் சென்றோம். தாயினும் நல்ல அந்த வைத்திய நிபுணரின் ஆலோசனையுடன் மனைவியாரைப் பெரியாசுபத்திரியிற் சேர்த்துவிட்டுச் சற்று வெளியே சென்ற நான் மதியம் பன்னிரண்டு மணிக்குத் திரும்பி வந்தேன்.

அப்போது அங்கு கண்ட காட்சியை என்னென்பேன்! மனைவியாரின் உடல் நிலையிலே புதியதோர் மாற்றம். இவ்வளவு கெதியாக, ஒரு சிகிச்சையுமின்றி, எதிர்பாராத இம்மாற்றத்தை யார் செய்தாரோ?

மூன்று மாதகாலமாக வைத்திய நிபுணர்களை ஏமாற்றிய சலப்பைக் கோளாறு கொழும்பு வைத்தியசாலையிலிருந்த சத்திர சிகிச்சைக் கருவிகளுக்குப் பயந்தது போலத்தானே ஓடி ஒளித்துவிட்டது! உடல் நிலை சமனாயிருக்கக் கண்டேன். வருணிக்க முடியாத இன்பமாயிற்று. இவ்வுலக இன்ப துன்பங்கள் நிலையில்லாதன அல்லவா? நகையும் அழுகையும் கலந்ததுதானே இவ்வுலகம்.

அன்று மாலை வைத்திய நிபுணரை மீண்டும் சந்தித்தேன். உமது மனைவியாருக்கு ஒரு வருத்தமும் இல்லை; நன்றாகப் பரிசோதித்துப் பார்த்தேன்? உடம்பு களைத்திருக்கிறது; கொழும்புக்கு வந்த நீங்கள்தானே; சிலநாள் ஆசுபத்திரியிலே தங்கியிருக்கட்டும்; அவசரப்பட வேண்டாம்.

நீங்கள் இருப்பது டாக்டர் கபிரியேலின் உவாட்; அவர் வந்துவிட்டார், அவருக்கு எல்லாம் சொல்லியிருக்கிறேன்; கவனமாய்ப் பார்ப்பார் என்று ஆறுதல் மொழி கூறிக்கொண்டே வயித்திய ஆலோசனைக் கட்டணத்தையும் திருப்பித்தந்து விட்டார். எதிர்பாராத சம்பவம்.

இருபத்தெட்டு நாள்வரை மனைவியார் ஆசுபத்திரியில்; நான் ஞானசெல்வம் வீட்டில். அங்கே எனது மன அமைதிக்கு வாய்ப்பான புத்தகம் ஏதும் இருக்குமோ என ஞானசெல்வத்தின் மேசையிலே பார்த்தேன். தெய்வக் குறிப்பால் ஒன்று கிடைத்தது. அது பகவத்கீதை; பாரதியாரின் மொழிபெயர்ப்பு. ஞானசெல்வத்தின் வீட்டிற் கிடைத்த மெய்ஞானச் செல்வமாகிய அந்நூல் இருளிலும் துன்பச் சூழலிலும் எனக்கோர் இன்ப ஒளியாய் அமைந்துவிட்டது.

சுலோகங்களைப் படித்துக் கொண்டே சென்றேன். முன்பு ஒரு போதும் கண்டறியாத இந்நூலில் என்மனது அதிகம் பதிந்து கொண்டது. மனைவியாரின் உடல்நிலைபோன்று எனது மனநிலையும் சமனாயிற்று. ஒவ்வொரு சுலோகத்தையும் ஒவ்வொரு வெண்பாவாகப் பாடிப்

படித்தாலென்ன? இது வருமோ? வராதோ? என நினைந்து பார்த்தேன். செய்யுள்கள் இலேசாக வெளிவரத் தொடங்கின.

மொழிபெயர்ப்பைப் படிப்பதும், வந்த வெண்பாக்களை அவ்வப்போது கிடைத்த கடதாசித் துண்டுகளிலே எழுதுவதுமாகப் பொழுது போய்க்கொண்டிருந்தது. நாட்கள் கழியக் கழிய நாலேழு நாளில் ஆறு அத்தியாயங்கள் வெண்பா வடிவிலே வெளிவந்துள்ளதைக் கண்டு என்னுள்ளே ஒரு நிறைவு கொண்டேன்.

பகவத்கீதையைப் படித்தது எனது மன அமைதிக்கு.வெண்பாவாகப் பாடியதும் மன அமைதிக்கே. இதைப்பற்றி நான் வேறெதுவும் நினைக்கவில்லை. சிறு துண்டுகளில் எழுதிய பாடல்களை வரிசைப்படுத்தி ஒரு கொப்பிப் புத்தகத்திலே திருத்தமாக எழுதிக் கொண்டு அவற்றை அடிக்கடி படித்து இன்புறலானேன்.

அவ்வப்போது பாடிய மற்ற அத்தியாயங்கள் சிலவற்றையும் அதே கொப்பியில் எழுதிக் கொண்டு அதே தியானமாக இருந்து வருகையில் ஒருநாள் கொழும்பு மாநகருக்குச் சென்றிருந்தேன். வழக்கம் போல வீரகேசரி ஆசிரியர் அன்பர் கே. பி. ஹரன் அவர்களின் இல்லத் துக்குச் சென்று சுகம் விசாரித்து உரையாடிக் கொண்டிருக்கும் போது பகவத்கீதை வெண்பா இயல்பாகவே அங்கு வெளிவந்து விட்டது.

அறிவும் பண்புமுள்ள ஹரன் இயல்பாகவே அமைந்து கிடந்த பகவத்கீதை வெண்பாக்களை 1944ஆம் ஆண்டு "வீரகேசரி" யில் வெளி வந்தது உலாவச் செய்தார்.

ஞாயிறுதோறும் வெளிவந்து கொண்டிருந்த பகவத்கீதை வெண்பாக்களை எனது தமிழ்ப் பெருங்குரவரும்; இருபதாம் நூற்றாண்டின் ஈழநாட்டுச் சோதியுமான தவப் பெருந்திரு விபுலானந்த அடிகளார் கண்டு இயல்பாகவே என்மீது கொண்ட கருணை காரணமாக என்னைக் கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ணசங்கத் திருமடத்துக்கு வருமாறு பணித்து அங்கே நல்லறிவாளர் சபைமுன் தமது தலைமையில் வெண்பாக்களை விரித்துரைக்கச் செய்து உள்ளங்குளிர ஆசீர்வதித்தார்கள்.

**'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்."**

1947ஆம் ஆண்டு அடிகளார் மறைந்து நம்முள்ளம் கலந்த பின்பு, யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் கௌரவ செயலாளரும், மட்டக்களப்பு மாவட்ட வித்தியாதரிசியும், தமிழ்ப் பேரன்பருமாகிய திரு. ஆ. சரவணமுத்து அவர்களின்

நல்லாதரவோடு கூடிய முயற்சியின் பயனாக, 1951ஆம் ஆண்டு வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்திலே, பேரறிவாளரின் அவைக் குழாத்திலே, சைவத்திருவும் பல்கலைத் திருவுமுடைய பண்பாளர் திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையிலே பகவத்கீதை வெண்பா அரங்கேற்றப் பெற்றது.

இதன் பின்னர் 1952ஆம் ஆண்டு பிற்பகுதியில் யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்திலே ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் ஆதரவிலே பட்டமளிப்பு விழா ஒன்று நடைபெற்றது. இவ்விழாவுடன் சங்கத்தின் இருபத்தொன்பதாவது வருடாந்த விழாவும் நடைபெற்றது.

பட்டமளிப்பு விழாவுக்குக் கவியோகி சுத்தானந்த பாரதியார் தலைமை தாங்கினார். வருடாந்த விழாவைச் சங்கத்தின் உப தலைவர்களுள் ஒருவரும் தபால், தகவல் அமைச்சருமான கௌரவ சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமை வகித்து நடத்தினார். சங்கத்தின் சிறப்பு அமைப்பாளராகப் பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் சென்னையிலிருந்து வருகைதந்து இரு விழாக்களையும் இனிது பொலிவுபெறச் செய்தார்.

பட்டமளிப்பு வைபவத்தின் ஈழநாட்டின் புலனழுக்கில்லா அந்தணராகிய மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களுக்கு வித்துவசிரோமணி என்னும் கௌரவப் பட்டம் வழங்கப்பெற்றது. வித்துவசிரோமணியின் எண்பதாண்டு நிறைவு விழாவின்போது சிறியேன் பாடிய பாடல்களுள் ஒன்றை நினைவின் பொருட்டு இங்கே தருகின்றேன்.

**'நூல்நிலையம் குருவாக நூற்பொருளின்**
**மேற்பரப்பின் நுனியில் நின்றே**
**கால்மதியும் அறியாமே கலைவளர்க்கும்**
**குழுமலிந்த காலம் ஈதில்**
**நூலிதுநூற் பொருளீது நுவல்முறையீ**
**தெனஅவற்றின் நுண்மை காட்டி**
**மாலகற்றும் ஆசிரிய பரம்பரையின்**
**விளக்கமென வயங்கி நின்றோன்"**

நீடுவாழ் கணேசையர் எனது குருவும் ஆவார். விழாவிலே கௌரவிக்கப்பெற்ற மற்றொரு பெரும் புலவர் பண்டிதமணி பிரம்மஸ்ரீ க. சு. நவநீதகிருஷ்ண பாரதியாவார். அன்னார்க்குப் புலவர்மணி என்னும் கௌரவப் பட்டம் வழங்கப்பெற்றது.

ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோனாகிய வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்கள் விழாவிலே பண்டிதமணி என்னும் பட்டம் சூட்டிக் கௌரவிக்கப் பெற்றார். அன்னார் அகத்தியர் போன்றவர்.

முன்னரே 1951ஆம் ஆண்டில் எனது பிறந்த நாடாகிய மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் கவிராஜகேசரி பண்டிதர் ஆ. சபாபதி அவர்களால் புலவர்மணி என்னும் பட்டமும் பட்டயமும் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றுள்ள சிறியேனுக்கு, இந்தப் பட்டமளிப்பு விழாவிலே பண்டிதமணி என்னும் பட்டம் வழங்கப்பெறலாயிற்று. ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினருக்கு எனது மனம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

எத்தனை பட்டங்கள் என்மீது சுமத்தப்பட்டபோதிலும் புலவர்மணி என்னும் பட்டமே எனக்குத் தாங்குவதற்கு இலேசாயிருக்கிறது. பண்டிதர் ஆ. சபாபதி, பண்டித வித்துவான் வி. சீ. கந்தையா, வித்துவான் எவ். எக்ஸ். சீ. நடராசா, அன்பர் திரு. வே. திருநாவுக்கரசு முதலிய நண்பர்கள் ஏற்றிய உள்ளூர்ச் சுமையாதலால் இதை இலேசாகத் தாங்குகின்றேன். புலவர்மணி மக்கள் மத்தியில் வாழ்கின்றது.

# தேசிய இனங்களை ஒன்றிணைத்த அன்புப் பாலம் அன்பர் பூபதிதாசர்

எனது மனைவியாருக்குக் கடுமையான நோய் வந்ததும், கொழும்புப் பெரியாசுபத்திரிக்கு அவரை எடுத்துச் சென்றது, சிகிச்சையின்றி நோய் குணமடைந்ததும், நான் ஞானசெல்வம் வீட்டில் இருந்ததும் எல்லாம் யார் செய்த விளையாட்டு? அவனுக்கு விளையாட்டு; நமக்கு வினை.

"நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல; பொல்லாக் குணம் போக்க." அருச்சுனன் அடைந்த துயரம் ஞான நூலாகிய பகவத்கீதையை உலகுக்கு அருளியது. எனது மனைவியாருக்கு வந்த நோய் பகவத்கீதை வெண்பாவை என் மூலமாக உலகுக்கு அளித்தது.

மனைவியார்க்கு நோய் வராதிருந்தால் நாங்கள் கொழும்புக்குப் போவதுமில்லை; மனைவியார் பெரியாசுபத்திரியிற் புகுவதுமில்லை; நான் ஞானசெல்வம் வீட்டில் இருப்பதுமில்லை; அந்த இடத்தில் நான் பகவத்கீதை காண்பதுமில்லை; படிப்பதுமில்லை; பகவத்கீதை வெண்பாவை நான் இயற்றுவதுமில்லை. இத்தனைக்கும் காரணமாயிருந்த மனைவியாரின் நோய்க்கு நான் நன்றி கூறுகின்றேன்.

**'நானறியேன் என்னை வழிநடத்தும் எம்பெருமான்**
**தானறிவான் அந்நாள் சமர்க்களத்தே - ஞானநெறிக்**
**கீதையினைப் பார்த்தனன்பாற் கேட்க உரைத்தமறை**
**ஏதுமறியேன் பாடும் ஈது"**

பக்தியோகப் பதிப்பின் முகவுரையில் இப்பாடலைக் காணலாகும். நானறியேன். அவனறிவான்.

பகவத்கீதை வெண்பா கருமயோகப் பகுதி "வீரகேசரி" ஞாயிறு இதழில் வெளிவந்து கொண்டிருந்த போது பல பெரியோரின் அன்பு எனக்குக் கிடைக்கலாயிற்று. அவர்களுள் அன்பர் பூபதிதாசரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.

இப்பெரியாரின் இயற்பெயரை நான் கேட்டு வைத்துக் கொள்ளவில்லை. இவர் ஒரு தென்னிந்திய முஸ்லீம்; பெரிய தனவந்தரின் பிள்ளை; இங்கே சினிமாத் தணிக்கைச் சபையில் அங்கம் வகித்தவர்; எல்லாம் உண்டாகத் துறந்தவர்.

தூய வெள்ளை உடை; நீண்ட தாடி; உறுதியான தேகக்கட்டு; கவர்ச்சியான பார்வை; என்றும் மலர்ந்த முகம் அமைந்த அன்னாரின் இனிய தோற்றத்தை ஒருக்காற் கண்டவர் அதை மறக்கவே மாட்டார். அருட்கடல் ஞானபூபதி என்னும் இஸ்லாமியப் பெரியார் மீது அளவற்ற அன்பு பூண்டவர் ஆதலின், அன்பர் பூபதிதாசன் என்பது இவருக்குப் பெயராயிற்று.

கௌரவ டி. எஸ். சேனநாயக்கா போன்ற பிரபல அரசியல் வாதிகளாலும் அரசாங்க நிருவாகத் தலைவர்களாலும் இவர் பெருமதிப்புப் பெற்றவர். என்னை முன்பின் அறியாதிருந்தும், வீரகேசரி ஞாயிறு இதழில் பகவத்கீதை வெண்பாக்களைப் படித்ததும் அன்னாரின் அன்புப் பெருக்கு மட்டக்களப்பு வரையும் பரவிவிட்டது.

என்னைக் கொழும்புக்கு வருமாறு அழைத்து, குறித்த நாள் அதிகாலையிலேயே கோட்டைப் புகையிரத நிலையத்திற் காத்திருந்து, மாலைமரியாதைகளுடன் வரவேற்றுத் தமது தவப்பள்ளிக்கு இட்டுச் சென்று, ஒரு துறவி செய்த உபசாரத்துக்கு நான் எத்தனைதரம் பிறந்து நன்றி செலுத்தினாலும் அது ஈடாகுமா?

அன்னாரின் அன்பு கலந்த விருந்துபசாரத்தை என்னென்பேன்? பக்கத்தில் இருந்துகொண்டு தாம் மென்று பார்த்து இது நல்லாயிருக்கிறது. இது நல்லாயிருக்கிறது உண்ணுங்கள், உண்ணுங்கள் என்று தமது உண்கலத்தில் உள்ளத்தில் நல்லதை எனது உண்கலத்தில் எடுத்தெடுத்து வைக்கின்ற அன்பினும் புனிதமானது இவ்வுலகில் எங்கேனும் உளதாமோ?

எதை உண்ணும்போதும் அமிர்தம் என்றே சொல்லிக் கொண்டு உண்கின்ற அன்பர் பூபதிதாசரின் அகத்தூய்மை எங்கே? நாம் எங்கே? அன்புக்கு மதுரையில் அங்கொரு ஆங்கிலேயர் பாப்புலி. கொழும்பில் இங்கே ஒரு இஸ்லாமிய அன்பர் பூபதிதாசர்.

1943ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்புக்குப் போகும் போதெல்லாம் அன்பர் பூபதிதாசருடன் தங்குவது வழக்கமாய்விட்டது. இது அன்னாரின் அன்பாணை. பெரியோரின் அன்பிலே பழகுவது எவ்வளவு இனிமை.

ஒருமுறை அன்பரின் ஆச்சிரமத்திலே தங்கியிருக் கையில் இஸ்லாமிய இளைஞர் ஒருவரை அன்னார் அழைத்து வந்து, இவர் மனமுடைந்து போயிருக்கிறார் ஏதாவது சொல்லுங்கள் என்று என்னைக் கேட்டுக் கொண்டார்.

நான் அவ்விளைஞரை விசாரித்ததில் பின்வரும் செய்திகளை அறிந்து கொண்டேன். இந்த இளைஞர் தென்னிந்தியாவிலே திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர், அவர் பெயர் முகையதீன் பீர்சாகிப்; வியாபாரத் தொழில் செய்பவர்; பங்காளிகள் செய்த மோசடியால் வியாபாரம் முறிந்து போயிற்று; கை முதலுமில்லை; சீவியம் கடனிலே தான் போய்க் கொண்டிருக்கிறது. இதுதான் இளைஞரின் நிலை.

இவைகளை அறிந்து கொண்டு இரண்டு பாடல்களை அவ்விளை ஞருக்குச் சொன்னேன். "உலகிலே இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும். இவை நிலையில்லாதன. அல்லாவின் அருளொன்றே நிலையானது. அது துணை செய்யும். மனம் வருந்த வேண்டாம். அதுவும் ஆண்பிள்ளை யாகப் பிறந்த நீ இவ்வாறு வருந்துதல் அழகன்று".

அப்பொருளமைந்த முதற் பாடலை இதோ தருகின்றேன்.

**'ஒன்பது வாயில் உடற்கோட்டைக்**
**குள்வாழ் உயிருக் கிங்கே**
**இன்பமும் துன்பமும் எல்லாம்**
**இயைவ தியற்கை கண்டாய்,**
**மன்பதைக் கல்லாவின் இன்னரு**
**ளுண்டு மனம் பதையேல்**
**அன்ப முகையதீன் பீர்சாகிப்**
**நெல்வேலி ஆண் பிள்ளையே"**

ஆண்டவனின் அருள் மாத்திரமல்ல, நல்லோரின் அன்பும் இருக்கிறது. செய்கின்ற முயற்சியினாலே பொருள் வரும். தருமம் செய்யலாம். புகழும் தேடலாம். இருண்ட மனமுடைய வஞ்சகர்களின் தீய செயல்கள் ஒரு நட்டமும் செய்யமாட்டா. நீ மனம் மயங்கி வருந்தாதே. இது உனக்கு நான் சொல்லும் வாசகம் என்னும் பொருளமைந்த அடுத்த பாடலை இதோ பாருங்கள்.

**'அருளுண்டு நல்லோரின் அன்புண்டு**
**செய்திடும் ஆள் வினையால்**
**பொருளுண்டு அறமுண்டு பூணும்**
**புகழுண்டு பூமி தனில்**

**இருளுண்ட நெஞ்சத்து வஞ்சகர்**
**தீவினை என்செய்யுங் காண்?**
**மருளுண்டு நீதளரேல் இது**
**யான் சொல்லும் வாசகமே."**

இரண்டு பாடல்களையும் எழுதி எனது கையொப்பமிட்டு அன்பர் பூபதிதாசரிடம் சமர்ப்பித்தேன். அன்னார் குறித்த இளைஞர்வசம் ஒப்படைத்தார். நான் மட்டக்களப்பிற்குத் திரும்பினேன். அடுத்த முறை நான் கொழும்புக்குப் போன போது அன்பர் பூபதிதாசர் கூறிய சொற்கள் எனக்கு மிகவும் மகிழ்ச்சியளித்தன.

"பீர்சாகிப் ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து, உங்கள் பாடல்கள் இரண்டையும் கண்ணாடி போட்டு அதில் உரிய இடத்திலே திரைநீக்கம்செய்து வைத்து, ஒரு சிறிய வியாபாரத்தைத் தொடங்கினார். அது நல்ல பலனளித்தது. இன்று பெரிய வியாபாரி ஆகிவிட்டார். உங்களை ஓயாமல் விசாரித்துக் கொண்டிருக்கிறார். உங்களைக் காண்பதற்கு உடனடியாக இப்போது இங்கே வருவார்" என்று அன்பர் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே முகையதீன் பீர்சாகிப் எல்லா உபசார உபகாரங்களோடும் அங்கே வந்து விட்டார்.

சுகநலம் விசாரித்துக் கலந்துரையாடி மகிழ்ந்து மேலும் நல் வாழ்த்துக் கூறி அன்னாரை அனுப்பிவைத்தேன். நாலு பேரும் நல்லாயிருந்தால்தான் உலகம் நல்லாயிருக்கும். இது அன்பர் பூபதிதாசர் செய்ததுமல்ல; நான் செய்ததுமல்ல; என் பாட்டுச் செய்தது. என் பாட்டுக் கலைமகள் கடாட்சம்.

அன்பர் பூபதிதாசர் இஸ்லாமியர் மத்தியில் மாத்திரமன்றி இந்துக்கள், பௌத்தர், கிறிஸ்தவர் மத்தியிலும் சமமான மதிப்பைப் பெற்று வாழ்ந்த ஒரு பெரியாராவர். அவர் இஸ்லாம் கோட்பாடுகளிற் காலூன்றி நின்றுகொண்டே ஏனைய மதங்களையும் சமமாக மதித்த அன்புப் பெருக்கே இதற்குக் காரணமாகும்.

வணக்கத்துக்குரிய தம்மஜோதி தேரோ அவர்களுடன் அன்பர் நல்ல நட்புப் பூண்டிருந்தார். ஒரு முறை என்னையும் அன்னாரிடம் அழைத்துச் சென்று நண்புசெய்து வைத்ததும், அன்னார் என்னுடன் அளவளாவி உபசரித்து பௌத்த தர்மம் பற்றிய இரண்டு தமிழ் நூல்களை எனக்கு அன்பளிப்புச் செய்ததும் என் மனநினைவில் இருக்கின்றன.

தம்மபதம் என்னும் நூல் தம்மஜோதி, அன்பர் பூபதி தாசர் இருவர் பெயரையும் நினைவூட்டிக்கொண்டு அன்னாரின் கையெழுத்துடன்

இன்றும் என் கைவசம் உள்ளது. பூபதிதாசர் இந்நாட்டிலுள்ள தேசிய இனங்கள் மூன்றையும் இணைக்கின்ற அன்புப் பாலமாக வாழ்ந்து வந்தார்.

இந்த இணைப்புப் பாலத்தை உடைக்கும் வன் செயலில் ஈடுபடுவோர் மூன்று இனங்களுள்ளும் இருக்கிறார்கள். சம உரிமையை மறுக்கும் இவர்கள் தமது மார்க்கங்கள் சொல்லும் அன்பு நெறியை ஒருகால் திரும்பிப் பாராரோ? அன்பர் பூபதிதாசர் மறைந்து விட்டார். அவரின் அன்பு இருக்கிறது.

# கிழக்கின் சாந்தி நிகேதனமாக விளங்கியது அரசினர் கல்லூரி.

### அதில் 48 ரூபா சம்பளத்தில் மீண்டும் ஆசிரியரானேன்.

1946ஆம் ஆண்டு திரு. வ. நல்லையா எம். எஸ். சீ. அவர்களின் முயற்சியால் மட்டுமா நகரில் அரசாங்கக் கல்லூரி நிறுவப்பெற்றது. இலங்கையிலே றோயல் கல்லூரி போன்ற ஒரு தாபனமாக அது விளங்க வேண்டுமென்பது நல்லையாவின் குறிக்கோளாகும். நாட்டு மக்களை முன்வைத்து அதற்கேற்ப அரசியல் அந்தஸ்தைப் பயன் செய்த விசாலமான நோக்குடையவர் நமது நல்லையா.

கட்டடத் தூண்களைப் பார்க்கிலும் நல்லாசிரியர்களே கல்லூரியின் உறுதியான தூண்கள் என அவர் கருதினார். முதலில் எல்லா நல்லியல்புகளும் அமைந்த ஒரு நல்ல அதிபரைத் தேடிப் பிடித்தார். அதிபர் திரு. ஏ. ஜே. இராஜகாரியருக்கு உதவியாக விசேஷ தகைமை வாய்ந்த நல்லாசிரியர்களையும் சேவையில் அமர்த்தி வைத்தார்.

மட்டுநகர் அரசினர் கல்லூரி, றோயல் கல்லூரி போலல்ல; அதிலும் மேலாக இது கிழக்கின் சாந்தி நிகேதனமே. விஸ்வபாரதியோ என்று ஐயுறும் வண்ணம் காட்சியளித்தது.

பெரிய நிழல் மரங்கள் அவற்றின் மத்தியில் இடையிடையே நீளமாக அமைந்த ஓலைக் குடிசைகள். அதிபரின் காரியாலயம் மாத்திரம் கண்ணாடி யன்னல்கள் உள்ள ஒரு கற்கட்டிடம்.

இது இவ்வாறு நடந்து கொண்டிருப்பது ஒன்றும் எனக்குத் தெரியாது. சில காலமாகக் கலாசாலைகளிலே கற்பிக்கும் வேலையை நான் கைவிட்டு ஒரு மூலையில் ஒதுங்கிக் கொண்டேன். இப்பொழுது உணவுக் கட்டுப்பாடு இலாகாவில் தடுப்பு அதிகாரியாகக் கடைமை பார்க்கிறேன். கை நிறையச் சம்பளம். பிரயாணச் செலவு வேறு. மறைமுகமாக எவ்வளவு வேணுமென்றாலும் உழைத்துக் கொள்ளலாம். இது எனக்கு வேண்டாத வேலை. வேண்டா வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

தபாற்கந்தோர் வேலையிலும் இது கண்டிப்பான வேலை. அது பணக் கட்டுப்பாடு. இது உணவுக் கட்டுப்பாடு. ஏழைகளின் வயிற்றிலடிக்கும் வேலை. கறுப்புச் சந்தைக்காரரின் கவர்ச்சிகரமான பிடியிலிருந்து தப்ப வேண்டிய கடினமான வேலை. சில பெரிய புள்ளிகளுக்கு என்னிற் பிடிப்பில்லை.

இந்தச் சூழ்நிலையிலே நண்பர் நல்லையாவுக்கு என்னையும் தேடிப்பிடிக்க வேண்டிய கிரமம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நாள் ஓந்தாச்சி மடத்திலுள்ள எனது தடுப்பு நிலையத்துக்கு அவர் வருகிறார். வந்தவர் மட்டக்களப்பில் அரசினர் கல்லூரி ஒன்றைத் தொடங்கிக்கொண்டேன். உங்களையெல்லாம் நம்பித்தான் இந்தக் கல்விச் சேவையில் ஈடுபட்டிருக்கிறேன். தமிழுக்குத் தகுதியான ஆளில்லை. நீங்கள் வந்து அதைக் கையேற்க வேண்டும் என வேண்டிக்கொண்டார்.

சம்பள விஷயமாக நான் சற்றே தயங்கினேன். அதைப்பற்றி ஒன்றும் யோசிக்க வேண்டியதில்லை. நீங்கள் இங்கே பெறும் சம்பளத்தைப் பெற்றுத்தருகிறேன். இதில் கையொப்பம் வைத்துத் தாருங்கள் என்று சொல்லித் தாம் தயாரித்து வந்த விண்ணப்பப் பத்திரத்தை என்னிடம் தந்தார்.

நல்லையாவில் எனக்கொரு தனி மதிப்பு. ஒன்றையும் யோசியாமல் கையொப்பம் இட்டுக் கொடுத்துவிட்டேன். ஒருசில நாளில் நியமனக் கடிதம் வந்து விட்டது. ஆனால் அடிப்படை மாதச் சம்பளம் 48/- மட்டுமே. ஒவ்வொரு நாளும் குருக்கள் மடத்திலிருந்து வஸ் பயணம் பண்ண வேண்டும் மட்டக்களப்பில் மத்தியானச் சாப்பாடும் சாப்பிடவேண்டும். பத்தரை மணிக்குத் தேநீர் அருந்தும் மேலதிக செலவும் இருக்கிறது.

காரியமில்லை. கண்ணன் இருக்கிறான்; நல்லையாவும் விடமாட்டார்; பதில் வித்தியாதிபதி க. ச. அருள்நந்தியின் நண்பும் இருக்கிறது. மனப் பண்புக்கு மாறான தடுப்பு அதிகாரிப் பதவியின் பிடியிலிருந்து விடுபடுவதே நல்லது. அற்ப ஊதியம் கிடைத்தாலும் ஆசிரியப் பணி புரிவதே மேல் என்று தீர்மானித்துத் தடுப்பு அதிகாரிப் பதவியைத் துறந்து 1947ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசினர் கல்லூரி ஆசிரியரானேன்.

வாழ்க்கையில் எத்தனை கரணங்கள்? அந்தக் கரணங்கள் ஒழுங்காயிருந்தால் இந்தக் கரணங்கள் என்ன செய்யும்? அந்தக் கரணம் மனம் புத்தி, சித்தம், அகங்காரம்.

அரசினர் கல்லூரியிற் கண்ட அடிப்படைக் காட்சி: 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம் வகுப்புகளிலேயுள்ள தரம் குறைந்த மாணவர்களைக்

கண்டுபிடிப்பதை எனது தலையாய கடமையாகக் கொண்டேன். ஒரு வகுப்பிலேயே பலதரப்பட்ட மாணவர்களைக் கண்டேன். பலதரப்பட்ட மாணவருள்ள ஒரு வகுப்புக்கு ஏற்றபடி பாடத்திட்டம் வகுப்பது எப்படி? படிப்பிப்பது எப்படி? பாடக் குறிப்பு எழுதுவது எப்படி?

இதை அதிபருக்கு எடுத்துச் சொல்லி இவர்களுக்கென அடிப்படை வகுப்பொன்றை நடத்த அனுமதி தருமாறு வேண்டினேன். காலை 7மணி தொடக்கம் 8 மணி வரையும் நடத்தலாமென அனுமதி தந்ததுடன் எனது காலைச் சாப்பாட்டையும் தம்முடைய அறையிலே தாமே ஒழுங்கு செய்து என் தமிழார்வத்துக்கு உதவினார்கள். இலண்டன் வரையும் புகழ் பரப்பிய பிரபல நியாயவாதி எச். ஏ. பி. சந்திரசேகராவின் குடும்பத்திற் பிறந்த பண்பாளர் அவர்.

அரசினர் கல்லூரியென்றால் அது மக்கள் கல்லூரி. தனியார் பாடசாலைகளின் கெடுபிடியிலிருந்து விடுபட்ட பல மாணவர்கள் அரசினர் கல்லூரியை வந்தடைந்தனர். இவர்களுள் செல்வக் குடும்பங்களிற் பிறந்த அடங்காமல் வளர்ந்தவர்கள். சாதாரண குடும்பங்களிற் பிறந்து இவர்களின் தோழமையைப் பெற்றவர்கள். திருத்த முடியாதவர்கள் என்று கைவிடப்பட்ட வர்கள். இப்படிப் பல தினுசான மாணவர்களுக்கு அரசினர் கல்லூரி புகலிடமளித்தது. இதனால் ஆளாகியவர் பலர்.

சமாளிக்க முடியாத சில மாணவர்களை ஒரு சில ஆசிரியர் வகுப்புக்கு வெளியே அனுப்பிவிடுவர். எனது பாடத்துக்கு மணியடித்ததும் ஒருவர் தப்பாமல் எல்லாரும் வந்து கூடிவிடுவார்கள்.

எங்கே அடங்காத்தனம் இருக்கிறதோ அங்கே அன்பினால் அடக்கத்தை உண்டாக்குவதுதான் செயல் திறமை. எங்கே பிரிவினை இருக்கிறதோ அங்கே சமாதானத்தை நிலைநாட்டுவதுதான் உண்மையான சேவை.

அரசினர் கல்லூரியில் இந்த முறை அதிகம் பலனளித்தது. என்னால் ஆக்கம் பெற்று ஆளாகிய மாணவர் பலர். எங்கே குறைபாடு இருக்கிறதோ அங்கேதான் நமக்கு வேலை இருக்கிறது.

இதை நான் தற்புகழ்ச்சிக்காக இங்கே சொல்லவில்லை. மகிழ்ச்சிக்காகச் சொல்லுகின்றேன். முன்மாதிரிக்காகச் சொல்லுகின்றேன். இதனால் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவீத மாணவர் எனது வகுப்புகளிலே சித்திபெற்றுள்ளனர். எஸ். எஸ். சீ., எச். எஸ். சீ. வகுப்புகளில் "சீ" க்குக் குறைந்த சாதாரண சித்திகளை மிகக் குறைவாகவே காணலாகும்.

இத்தனைக்கும் மத்தியில் எனது சம்பளத்தை மறந்து போனேன். இலங்கை வானொலியில் முதலாந்தரப் பேச்சாளர் வரிசையில் எனக்கும்

ஓர் இடம் கிடைத்து விட்டது. ஒரு பேச்சுக்கு ரூபா அறுபது. நாலைந்து பேச்சுகளை ஒரே முறையில் ஒலிப்பதிவு செய்து கொள்வார்கள். கிழக்கு மாகாணத்தின் குரல் வானொலியில் வருடம் முழுதும் அடிக்கடி ஒலித்துக் கொண்டிருக்கும்.

கல்விப் பகுதிப் பரீட்சைகளுக்கும் நான் ஒரு பரீட்சகராக நியமனம் பெறலானேன். சிறிய சம்பளம். ஆனால் பணத்தைப் பற்றிய பிரச்சினை இல்லை. இந்த நிலையிலே பதில் வித்தியாதிபதி திரு. க. ச. அருள்நந்தி அவர்கள் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை அலுவலாக மட்டக்களப்புக்கு வந்தார். வந்தவர் அரசினர் கல்லூரியில் என்னைச் சந்தித்தார். எனது சம்பளப் பிரச்சினை அவருக்குத் தெரியாது.

அட்டாளைச்சேனைக்குப் போகிறேன். வாருங்கள் போவோம் என்று என்னை அழைத்தார். நான் அதிபரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அன்னாருடன் புறப்பட்டேன். அட்டாளைச்சேனை முப்பத்தேழு கட்டை.

எனது பதினெட்டு வயதில் யாழ்ப்பாணத்தில் வைத்து வெண்பாப் பாடும்படி என்னைப் பரீட்சித்த பெரும் புலவர் அவர் எம். எஸ்சிப் பட்டதாரி. பாட்டுகளைப் பரிமாறிக் கொண்டே பயணம் பண்ணுகிறோம். ஒரு சந்தர்ப்பத்தில் எனது நிலையை விளக்கி ஒரு பாடலைப் பாடினேன் அவர் பிரமித்துப் போனார்.

ஒரு நிலையில் நில்லாது ஆடிக்கொண்டேயிருக்கின்ற ஊஞ்சல் போல நிலையில்லாத தமிழாசிரிய வாழ்க்கையிலே நீங்காத துன்பத்துக்கு ஆளாகியுள்ளேன். யாப்பிலக்கணத்தில் மெய்யெழுத்தின் நிலைபோன்றது ஆசிரியர் மத்தியிலே எனது நிலை.

வன்மை, மென்மை, இடைமை ஆகிய சந்தங்களை உண்டாக்கிப் பாட்டுக்களை இயக்கி நிற்கின்ற மெய்யெழுத்து; அசைகளை வரையறுத்துக் கொள்வதற்கு உதவி செய்யும் மெய்யெழுத்து; பாட்டுகள் முறியுமிடங்களில் முன்னின்று சமன் செய்யும் மெய்யெழுத்து எழுத்தெண்ணும்போது ஓர் எழுத்தாகக் கணிக்கப்படுவதில்லை. இந்த நிலையிலே நான் இருப்பது செந்தமிழின் காவலராகிய அருள்நந்தியே உமக்கு நல்லதா?

இந்த கருத்தமைய நான் பாடிய பாடலை வாசகர்களுக்கு இதோ தருகின்றேன்.

**தாப்பியல் ஊச லெனத்தடு மாறும் தனித் துயர் யான்**
**நீப்பிய லாது தமிழா சிரிய நிலையி லிங்கே**
**யாப்பியல் மெய்போல் மதிப்பில னாகி இருத்தல் நன்றோ**
**காப்பியம் வல்ல அருணந்தி செந்தமிழ்க் காவல னே"**

தாம்பு இயல் ஊசல் - தாம்புக் கயிற்றில் ஆடுகின்ற ஊஞ்சல்.

நீப்பு இயலாது - நீங்கள் முடியாமல். யாப்பு இயல் மெய் - பாட்டிலக்கணத்தின் மெய்யெழுத்து.

இந்தப் பாடலைக் கேட்ட அருணந்தி எனது நிலையைத் தெரிந்து கொண்டு கொழும்புக்குப் போன உடனேயே எனக்கென ஒரு விசேட சம்பளத் திட்டம் வகுத்து எனது நிலையை உயர்த்தி உறுதிப்படுத் திவைத்த அருஞ்செயல் என்னால் என்றும் நினைவு கூரத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்தாரின் நட்புறவு சக்தி வாய்ந்தது. தருண மறிந்து உதவி செய்யப் பின்னிற்க மாட்டார்கள். துணிந்து நன்மை செய்வார்கள்.

மேற்கூறிய எனது பாடலில் வந்துள்ள "யாப்பியல் மெய்போல்" என்னும் உவமையைப் பாராட்டி வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதனும், தருமையாதீனப் புலவர் ரா. முருகவேளும் இலக்கணத்தில் இலக்கியம் என்னும் நூலிலே இப்பாடலைச் சேர்த்துக் கொள்வதற்குக் கொண்டு சென்றதையும் வரலாற்றின் பொருட்டு இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணத்தார் பற்றி நான் பாடியுள்ள ஒரு பாடலையும் தொடர்புபற்றி இங்கே தருகின்றேன்.

**'உலகமுவப் புறஉரைக்கும் நூற்பொருள்கள் தெரிவார்**
**ஒருவர்தமக் கொருவர்நிதம் ஒப்புரவு புரிவார்**
**பலதிசையும் சென்றுமுயன் றீட்டுபெரும் பொருளார்**
**பரமனடித் தொண்டுபுரிந் தேத்துதிரு வருளார்**
**மலையெனநின் றுயர்ந்தோங்கு நன்மானமுடையார்**
**மானமழிந் தெய்தவரு வருமானம் அடையார்**
**அலகில்புகழ் ஆறுமுக நாவலனாம் கொடையார்**
**அவர்வாழும் யாழ்ப்பாணம் அனைவோர்க்கும் இனிதே"**

நான் யாழ்ப்பாணத்திற் பிறந்திருந்தால் எனது நிலை வேறு. ஆனால், மட்டக்களப்பிலே பிறந்திருப்பதை நினைந்து மகிழ்கின்றேன். நமது உயர்ச்சி கிடக்கட்டும். மக்களின் உயர்ச்சியே நமது உயர்ச்சியாகட்டும். சேவையை வேண்டி நிற்கும் மக்கள் மத்தியிலே நாம் வாழ்வது அவசியமல்லவா? அது மனத்துக்கு இன்பமுமாகும்.

# ஆசிரியத் தொழிலிலிருந்து பிரியாவிடை

அரசினர் கல்லூரியிலே பன்னிரண்டு ஆண்டும் பதினான்கு நாளும் சேவையிலிருந்து 1959ஆம் ஆண்டு மாசி மாதம் பதினைந்தாம் தேதி ஓய்வு பெற்றேன். ஜனவரி மாதம் எட்டாந் தேதி ஓய்வு பெற்றிருக்க வேண்டும். பிறப்புப் பதிவில் காணப்பட்ட வித்தியாசம் காரணமாக இந்தச் சேவை நீடிப்பு இடம்பெற்றது.

ஐந்து அதிபர்களின் கீழ் சேவை செய்திருக்கிறேன். முதல் அதிபர் ஏ. ஜே. இராசகாரியர். இவர் காரியாலயத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவர் மீதுள்ள மதிப்புக் காரணமாக வேலைகள் ஒழுங்காய் நடந்து கொண்டிருக்கும். எங்கும் அமைதி நிலவும். அவரது மனோசக்தி காரியாலயச் சுவர்களையும் ஊடுருவிப் பாயும்.

திரு. சபாரத்தினம். இவர் மெலிதாகச் சொல்லி அதிகம் வேலை வாங்கும் சுபாவம் உடையவர். திரு. நவரத்தினராஜா. இவர் விருந்துபசாரம் செய்யும் குணமுள்ளவர். உயர்ந்து பருத்த தோற்றப் பொலிவு பெற்றவர். நடந்து போகும்போதே விஷயங்களை அவதானித்துக் கொள்வார். பத்தொன்பது வயதிலேயே திருமணம் செய்து கொண்ட ஒரு செல்லப்பிள்ளை இவர்.

திரு. ஏ. கே. கந்தையா. இவர் அடிக்கடி ஆசிரியர்களின் அலுவல்களிலே தலையைப் போட்டுக் கொள்வார். ஆசிரியர் தங்கும் அறைக்குப் பலதரம் வருவார். ஓய்வு நேரத்தில் ஆறுதலாயிருக்கும் ஆசிரியர்களோடு அவசியமின்றி மோதிக்கொள்வார்.

தான் நிருவாகத் திறமையுள்ள ஒரு மேலதிகாரி என்னும் எண்ணத்துக்கு அவர் அடிமைப்பட்டிருந்தார். இதுவும் ஒரு மதுபோதை போன்றதுதான்.

"ஏகே"யின் காலத்தில் ஆசிரியர்களின் மனமார்ந்த சேவை நின்றுபோயிற்று. எல்லாம் ஏட்டுச் சுரைக்காயாகி விட்டது. தகாத முறையில் இவர் தம்மோடு நடந்து கொள்வது பற்றி ஆசிரியர் பலர் என்னிடம் முறையிட்டு இதற்கு ஒரு வழி பண்ணுங்கள் என வேண்டிக் கொண்டார்கள். சரி என்று நான் சொல்லிக்கொண்டே மேசையைப் பார்த்தேன். மெய் கண்டான் தினக்குறிப்பின் முதல்நாள் இதழொன்று அங்கே கிடந்தது.

அதன் பின் புறத்தில் ஒரு பாடலை எழுதிவைத்துவிட்டு எனது வகுப்புக்குச் சென்று சிறிது நேரத்தினுள் பாடல் பற்றி கதை பள்ளிக்கூடம் முழுதும் பரவிவிட்டது. பாடலைக் கந்தையாவும் கண்டு கொண்டார். நான் என்ன செய்வேன்? உள்ளதைத் தான் சொன்னேன். இது அவருக்கும் நல்லது. ஆசிரியர்க்கும் நல்லது. கல்லூரிக்கும் நல்லது. எனக்காக இதைச் சொல்லவில்லை. குறித்த பாடலை இதோ தருகின்றேன்.

**'சட்ட மென்பது வேசரி யேயதைத்**
**தழுவி நிற்பது வேசரி யேயிட்ட**
**சட்ட மென்ப ரகந்தைய ரேயதைத்**
**தாங்கு வோர்பழங் கந்தைய ரேயன்பாய்க்**
**சிட்ட வந்துநற் பண்பொடு வாழ்வரேல்**
**கிட்டும் நன்மையல் லாவிடி லோசட்டி**
**சுட்ட தும்கையை விட்டது மாய்விடும்**
**தொல்லையே யதற் கெல்லையு மில்லையே."**

சட்டம் நல்லது. சட்டத்தின்படி நடப்பதும் நல்லது. இட்டதே சட்டம் என்று சொல்வோர் அகங்காரிகள். அதன்படி நடப்போர் பழைய கந்தையர்களே. அன்பாக ஒருவரை ஒருவர் அணுக வேண்டும் பண்புடன் வாழவேண்டும் நன்மையுண்டாகும் இதற்கு மாறாக நடந்தால் தீமையே விளையும். சட்டி சுட்டதும் கையை விட்டதும் போலாகிவிடும்.

சட்டம் ஒரு கழுதை. கழுதையின் முதுகில் எவ்வளவு சுமையையும் ஏற்றலாம். நினைத்த பக்கம் எல்லாம் கொண்டுபோகலாம். ஒரு சட்டத்துக்குப் பலவிதமான வியாக்கியானம் பண்ணலாம். நாவன்மை படைத்த ஒருவர் தமது விருப்பம் போல் அதைத் திருத்தலாம். சட்டம் என்பது சரி. சட்டம் என்பது "வேசரி".வேசரி-கழுதை.

ஒரு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையொன்று நடப்பதாக வைத்துக் கொள்வோம் முறைப்பாட்டுகாரரும் சாட்சிகளும் எதிரிக்கு மாறாக ஓரெழுத்தும் தவறாமல் சாட்சியமளித்து விட்டார்கள். முரண்பாடு

சிறிதுமில்லை. ஆனால், எதிரிபக்கத்து விவாதம் வேறு விதமாய்த் திரும்புகிறது. இந்த எதிரி ஒரு மகான். இதோ இருக்கிறது அத்தாட்சிகள். இந்த முறைப்பாட்டுக்காரரும் சாட்சிகளும் அயோக்கியர்கள். இதோ ஆதாரங்கள்.

"கனம் நீதிபதி அவர்களே! இந்த அயோக்கியர்களின் சொல்லைக் கொண்டு ஒரு மகானைச் சிறைக்கு அனுப்பப் போகின்றீர்களா? எதிரியை விடுதலை செய்யுமாறு தங்களைப் பணிவாக வேண்டுகின்றேன்" என்பது எதிர் விவாதம். எதிரி விடுதலையாகின்றார். இதுதான் சட்டம். சட்டத்தைத் திருப்பி விடுகிறார் சட்டத்தரணி. வேசரி திசை திரும்பி விட்டது.

இன்னுமொரு உதாரணம். உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒரு வழக்கு நடப்பதாக வைத்துக் கொள்வோம். உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி சாட்சிக் கூண்டில் நிற்கிறார். எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்கின்றார். எதிரிக்கு எத்தனை புஷல் நெல்லுக் கொண்டுபோக அனுமதிப் பத்திரம் கொடுத்தீர்கள்? எழுநூற்றைம்பது புஷல் கொண்டுபோக.

மேலதிகமாக எதிரி எத்தனை புஷல் கொண்டுசென்றார்? முப்பத்தைந்து புஷல். எல்லாமாக மொத்தம் எத்தனை மூடைகள்? முந்நூறு மூடைகள். எந்தெந்த மூடையில் எவ்வளவு எவ்வளவு மேலதிகமாக இந்த முப்பத்தைந்து மேலதிக புஷலைக் கண்டு பிடித்தீர்கள்? மறுமொழியில்லை. இறங்குங்கள். எதிரி விடுதலை. மேலதிக நெல் அரசாங்கத்துக்கு. சட்டம் திரும்புகிறது.

அதிபர் கந்தையா அவர்களே, சட்டம் ஒரு கழுதை. சட்டத்துடன் மனிதத் தன்மையும் வேண்டும். சட்டத்தால் ஆசிரியரை வருத்தாதீர். அன்புக் கரம் நீட்டும். அதிகம் நன்மை தரும் இது ஒரு பெரிய கலாசாலை. முன்மாதிரி வேண்டும் இந்தக் கருத்தமைந்த பாடலால் கலாசாலையிலே ஒரு சுமுகமான போக்கு உண்டாயிற்று. கலாசாரப் பண்பும் வளரலாயிற்று. எனது பாட்டும் கொழும்பு வித்தியாகந்தோர் வரையும் சென்றுவிட்டது.

திரு. கே. சிவசிதம்பரம் இவர் கரவெட்டியைச் சேர்ந்தவர். உண்மையிலே கரவெட்டிதான். கரவை எட்டிக் கனிபோல் வெறுப்பவர்கள் கரவெட்டி வாசிகள். மணியகாரர் முதலியார் சிற்றம்பலம், அவரின் புதல்வர் முருகேசபிள்ளை உடையார், உடையாரின் புதல்வர் நல்லூர் எம். பி. மு. சிவசிதம்பரம், மாவட்ட நீதிபதி சண்முகலிங்கம், டாக்டர் ம. முருகேசபிள்ளை, உதவி வித்தியாதிபதி எஸ். கே. இராசலிங்கம்,

ஆசிரியர் வீ. கந்தப்பு முதலிய பண்பாளர்கள் இதற்கு உதாரணமாவர்.

கே. சிவசிதம்பரம் ஒரு பி. எஸ்சிப் பட்டதாரி. படிப்பிப்பதில் அதிக நேரம் செலவிடுவார். நிருவாகத்திலும் நல்ல திறமையுள்ளவர். இவர் அதிபராயிருந்த காலத்தில் நான் ஓய்வுபெறக் கிடைத்தமை எனக்கு ஒரு பெரும் பேறாகும்.

எனது பிரியாவிடை வைபவத்தில் பொதுமக்களும் கலந்து கொள்ளும் வாய்ப்பினை அவர் நல்கினார். எனது உருவப் படத்தினைப் பெரிய அளவில் பெருப்பித்துக் கலாசாலை மண்டபத்திலே அதைத் திரை நீக்கம் செய்து வைக்க ஒழுங்கு செய்தார். தவத்திரு சுவாமி நடராஜானந்தா அவர்களை அழைத்து விழாவைத் தலைமை தாங்கிச் சிறப்பிக்கும் ஏற்பாட்டினையும் செய்து வைத்தார். அதிபர் சிவசிதம்பரத்தின் அன்பு என்னுடன் என்றும் வாழ்கின்றது

எனது பிரியாவிடை வைபவத்தில் என் மனத்தைக் கவர்ந்த மூன்று சம்பவங்களை மிக்க நன்றியுடன் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். சுவாமியின் தலைமை உரையில் "பண்டிதரின் ஒரு சொல் இராமகிருஷ்ண மிஷனுக்கு ஆறாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்தது. அதுதான் சோமசுந்தர ஞாபகார்த்த மண்டபம்" என்று பேசும்போது உணர்ச்சி மேலீட்டால் அப் பெரியாரின் மூக்குக் கண்ணாடி கழன்றுபோய்ச் சிறிது தூரத்தில் விழுந்த நிகழ்ச்சியை எனது பிள்ளைகள் இன்னும் சொல்லிக் கொள்வார்கள். இது ஒரு சம்பவம்.

மற்றது மட்டக்களப்பு இராஜா ஸ்ரூடியோ உரிமையாளர் திரு. கே. நடராஜா ஜே. பி. அவர்கள் எனது உருவப்படத்தைப் பெரிதாக்கி இலவசமாகக் கலாசாலைக்கு உபகரித்த பெருந்தகை.

அடுத்தது சிவசிதம்பரம் சொன்ன ஒரு சொல். "நேரத்துக்குச் சாப்பிட்டுக் கொள்ளுங்கள்" என்று அவர் சொன்ன அன்பின் சொல் எனக்கு ஜீவமந்திரம் ஆயிற்று.

மாணவர்கள் தனித்தனி வகுப்பாகவும் சங்கமாகவும் எனக்களித்த பிரியாவிடை வாழ்த்துகள் பல. அங்கெல்லாம் அவர்களின் அன்பு வெள்ளம் கரைபுரண்டு ஓடிய காட்சி இருபது வருடம் சென்றும் என்னுள்ளத்தே புதுமை பெற்றுக் கிடப்பதை நான் இன்னும் காண்கின்றேன். அவர்கள் தாமே இயற்றி எனக்களித்த கவிதைகளாகிய மழலைச் செல்வங்களுள் இரண்டை இங்கே தருகின்றேன். பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்களின் தமிழார்வத்துக்கு வாசக நேயர்கள்

இவ்விரண்டையும் உதாரணமாகக் கொள்க.

**'சாதியென்றும் மதமென்றும் பேத மின்றிச்**
**சன்மார்க்க நெறிமுறையில் வாழ்ந்த ஞானி**
**நீதியுரை சாற்றியறி யாமை நீக்கி**
**நெறிமுறையில் மாணவரைத் திருத்தி இந்த**
**மேனியில் தமிழர்வாழ் தேச மெல்லாம்**
**மேன்மைபெறு சேவையினைப் புரிந்த தியாகி**
**ஆதியிலே தமிழ்வளர்த்த சங்க மதன்**
**அறிஞர்வழித் தோன்றலென அறியச் செய்தார்"**

இந்தச் செய்யுளிலே "சங்கமதன்" என்னும் தொடரிலே ஒரு அசை குறைந்து. இது மாணவரின் சிருட்டி என்பதை விளக்கி நிற்பதை நேயர்கள் காண்க. அடுத்த செய்யுள் ஒரு வெண்பா.

**'முந்திப் பிறந்து முடிகொண்ட செந்தமிழைச்**
**சந்தி சிரித்த சமயத்தே - தந்தாய்**
**புலவர்மணி ஐயாவே போகின்றீர் விண்ணில்**
**எழில் நிலவு போனால் இருள்."**

மாணவர்கள் கூறிய உருக்கமான இச்சொற்கள் அவர்கள் மீது நான் வைத்திருந்த அன்பின் பிரதிரூபமாகும். எனது சேவையின் மதிப்பீடாக அவை அமைந்துள்ளன. அரசினர் கல்லூரியில் நான் இருந்த பன்னிரண்டு வருட காலத்தில் பத்து வருடம் வைத்திய விடுமுறை பெறாமல் சேவையாற்றினேன்.

**'இனியருட் கடலே ஏழையேன் என்னால்**
**இங்கொரு செயலிலை பயண**
**அனுமதிச் சீட்டும் செலாதினி 'விசா"வும்**
**முடிந்ததென் றறிவிலேன் இருந்தேன்**
**புனிதனே எனது, விசா"வினை நீட்டிப்**
**புதுப்புது வினைசெயப் பணிப்பாய்**
**உனதுபே ரறிவின் முன்புகு னியம்யான்**
**உணர்கிலேன் உன்விளை யாட்டே"**

எனது சர்வ சமய சமரசப் பதிகத்தில் வந்துள்ள இப்பாடல் இதை நினைந்து எழுந்ததே. பயண அனுமதிச் சீட்டு "பாஸ்போட்" இது எனது உடம்பைக் குறிக்கும். "விசா" எனது உடம்பைக் குறிக்கும்.

# தமிழர் – இஸ்லாமியர் இணைப்பு மொழியின் பலத்தால் ஆனது.

### இந்த ஐக்கியத்தை என்றும் பேணிக் காக்க வேண்டும்.

மட்டக்களப்பிலே மருதமுனையில் இரண்டு மகாநாடுகள் நடைபெற்றன.

ஒன்று அரசியல் மகாநாடு. இது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் ஒழுங்கு செய்தது. 1956ஆம் ஆண்டில் நடைபெற்றது. மேற்சபை உறுப்பினர் அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அசீஸ் அவர்கள் பிரதம விருந்தினராக மகாநாட்டிற் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

கிழக்கிலங்கையிலே தமிழர்களும் இஸ்லாமியர்களும் எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாதபடி இணைந்து வாழ்கின்றார்கள். இந்த இணைப்புச் சாதாரணமான ஒன்றல்ல. தமிழ் மொழியினால் உண்டான இயற்கையான இணைப்பு; உயிர்ப்புள்ளது; துடிப்புள்ளது.

இரண்டு இனமும் இந்த நாட்டில் பழங்குடிகள். நம் முன்னோர்கள் இங்கே அண்ணன் தம்பிகள் போல் வாழ்ந்திருந்தார்கள். நமது சந்ததியிலும் இந்த ஐக்கியம் நிலைபெறவேண்டும். எதிர்காலச் சந்ததிக்கும் இந்த ஐக்கியமே பாதுகாப்பாக அமைய வேண்டும். இந்த ஐக்கியத்தைப் பேணிக் காப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் குறிக்கோளாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பு நமது நல்வாழ்வையே இலட்சியமாகக் கொண்டுள்ளது. எல்லாரும் ஏகமனமாக ஐக்கிய தேசியக் கட்சியையே ஆதரிப் போமாக என அசீஸ் அவர்கள் இனிமையாகவும் தெளிவாகவும் கூறிக் கொண்டு தமது பேச்சை நிறைவு செய்தார்கள். அசீஸ் மூவினங்களுக்கும் மத்தியில் ஓர் இணைப்புச் சக்தியாக விளங்கினார்.

அடுத்தது எனது பேச்சு. தமிழர், முஸ்லீம்கள் ஆகிய நாம் மட்டக்களப்பு அன்னையின் இருதயத்தின் இரண்டு இதழ்களையும் போன்றவர்கள். இரண்டு இதழும் ஒத்து இயங்கினால்தான் இதயத்

துடிப்பு நிலைபெறும். ஒத்து இயங்காவிடின் இதயத் துடிப்பு நின்று போகும். அன்னையின் உயிர்வாழ்வுக்கு இந்து, முஸ்லீம்களாகிய நமது ஒற்றுமை அவசியம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். பிரிவினைச் சக்திகளுக்கு இடம்கொடுத்து அழிவுப் பாதையிலே செல்லாமல் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வோமாக என்னும் பொருளமைந்த ஒரு பாடலைப் பாடி எனது பேச்சைத் தொடங்கினேன். குறித்த பாடலை இதோ தருகின்றேன்:

**'இருதயத்தின் ஈரிதழ் போல் இந்துமுசி லீம்யாம்**
**ஒருவயிற்றுப் பிள்ளைகள்போல் உள்ளோம் - அரசியலில்**
**பேராசை கொண்டோர் பிரித்துநமை வேறாக்கி,**
**ஆராயார் செய்வார் அழிவு."**

அடுத்தது இஸ்லாமிய இலக்கிய கலாசார மகாநாடு. இது 1966ஆம் ஆண்டில் நடைபெற்றது. ஜனாப் நூர்தீன் உதவி வித்தியாதிபதி அவர்கள் மகாநாட்டின் ஒரு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குதற்காக வந்திருந்தார்கள். நூர்தீன் அவர்கள் முன்பு மட்டக்களப்பிலே பிரதேசக் கல்வி அதிகாரியாகக் கடமை புரிந்தவர். அப்போது அவருடன் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. இதனால், உதவி வித்தியாதிபதிப் பதவி வகிக்கும் அண்ணாரை அல்ஹாஜ் ஏ. எம் ஏ. அசீஸ் அவர்கள் மூலம் இப்போது பழகவேண்டிய அவசியம் ஒன்று எனக்கு ஏற்பட்டது.

நூர்தீன் மேடையில் அமர்ந்திருக்கிறார். பக்கத்தில் எனது மாணாக்கர் மாவட்ட வித்தியாதரிசி ஜனாப் எம்.ஏ.மஜீது, இப்போது பிரதேச வித்தியாதிபதி. அவருடன் உரையாடிக் கொண்டிருக்கிறார். பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை இங்கே வந்திருக்கிறாரா? என்று மஜீதை வினாவுகிறார் நூர்தீன். மேடையிலே ஒருபக்கத்தில் இருந்த என்னை மஜீது கண்சாடை காட்டி அன்னாருக்குத் தெரிவிக்கின்றார்.

மகாநாட்டில் மஸ்தான் சாகிபு பாடல்கள் என்னும் பொருள்பற்றி ஒன்றரை மணி நேரம் நான் உரை நிகழ்த்தினேன். மருதமுனைக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பு; இலங்கையிலும் இந்தியாவிலும் இஸ்லாமியப் புலவர்கள் தமிழுக்குச் செய்துள்ள சிறந்த தொண்டு; மஸ்தான் சாகிபு பாடல்களின் நடைப் பாங்கு; அவற்றில் இடையிடையே படிந்துள்ள இந்துமதச் சாயல்; தாயுமான சுவாமிகளுக்கும் மஸ்தான் சாகிபுக்குமிடையே காணப்படும் ஒப்புமை முதலிய பல செய்திகள் எனது பேச்சில் வந்துள்ளன.

பேச்சுகள் யாவும் ஜனாப் செய்யது ஹசன் மவுலானாவின் அயராத முயற்சியினால் நூல் வடிவில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்த மகாநாடு சமயத் துறையிலும் பயனளித்ததுடன், இலங்கை முழுவதிலும் இருபது இளைஞர்களின் தனி வாழ்வையும் சிறப்புற நிலைப்படுத்திய செம்மைசான்றது என்பதை இங்கே குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எனது மகிழ்ச்சிக்குரிய பிரதான காரணம் இக்கட்டுரையைப் படித்து முடித்தவுடன் விளங்கிவிடும்.

மகாநாட்டின் காலை நிகழ்ச்சிகள் நிறைவுற்ற பின்புதான் நூர்தீன் அவர்களை நான் அணுகினேன். அன்னார் என்னைப் பார்த்து, நான் மட்டக்களப்பிலிருந்தபோது உங்களுடன் பழகாமல்விட்டதற்கு மிகவும் வருந்துகின்றேன். பழகியிருந்தால் எவ்வளவு இனிமையாய் இருந்திருக்கும்? ஏன் பழகாமல் விட்டேன் என்பதற்குக் காரணமும் தெரியவில்லை என உபசார மொழிகள் கூறி அன்பு பராட்டினார். இருவரும் நண்பர்களாகி விட்டோம். இது பலரின் மத்தியில் நடந்தது. இதனால், பலருக்கு நன்மையும் உண்டாயிற்று.

தொடர்ந்தாற்போல் நான் ஒன்று சொன்னேன். ஐயா, மதிய போசனம் முடிந்ததும் நான் இரண்டொரு நிமிடம் உங்களோடு தனிமையாக ஒரு விடயம் பேசவேண்டும் என்பதுதான் அது. நான் பேச முந்தி அவரே அந்த விடயத்தை என்னுடன் பேசுவதற்கு எண்ணியிருந்தவர் போல என்ன அசீஸ் சொன்ன விஷயமோ? அதென்றால் பேச வேண்டியதில்லை; அது சரி என்று உடனே பதில் சொல்லிவிட்டார்.

நேரத்தோடு "பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை இங்கே வந்திருக்கிறாரா?" என்று மஜீதிடம் வினாவியது இதை மனதில் வைத்துக் கொண்டுதான் என்பது இப்போ தெரிகிறது. மகாநாடு நிறைவுற்றதும் எல்லாரும் பிரிந்து சென்றோம். நாங்கள் வெறுங்கையோடு செல்லவில்லை; பரஸ்பர அன்புடன் சென்றோம்.

நூர்தீன் அவர்கள் அப்போது ஆசிரிய நியமன சபைத் தலைவராயிருந்தார். அதன் செயலாளர் திரு. அ. சந்திரசேகரம் அவர்கள். சந்திரசேகரம் எனது மாணாக்கர். இன்றும் இந்த மாணாக்க மனப்பான்மையுடனேயே வாழ்ந்து வருகிறார். பிரதம கல்வி அதிகாரியாயிருந்து ஓய்வு பெற்றுள்ள இவர் திருக்கோணமலை பிரபல வைத்தியர் அருணாசலம் அவர்களின் புதல்வருமாவார்.

இரண்டொரு மாதம் சென்ற பின்பு நான் கொழும்புக்குப் போயிருந்தபோது வழக்கம் போலச் சந்திரசேகரத்தை அவரது இல்லத்திற் சந்தித்தேன். அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன், ஐயா, உங்கள் மகனுக்கு உத்தியோகம் கிடைத்திருக்குமே. இப்பொழுது எங்கே வேலை

பார்க்கிறார்? என்று வினவினார். மிக்க நன்றி; கிடைத்துவிட்டது; பழுகாமத்தில் வேலை; நல்ல வசதியான இடம்; நெருங்கிய உறவினர் மத்தியில் இருக்கிறார்; ஒன்றுக்குமே குறைவில்லை என்று சொன்னேன்.

சந்திரசேகரம் மேலும் இதனைச் சொன்னார். நூர்தீன் அவர்கள் மருதமுனை இஸ்லாமிய இலக்கிய கலாசார மகாநாட்டில் நின்று திரும்பி வந்த உடனேயே விண்ணப்பதாரர்களின் சுயவிபரக் கோவையில் பண்டிதரின் மகனின் பெயருக்கு நேரே நியமனம் வழங்கப்பட்டது என எழுதி விடுங்கள் என்று தமக்குக் கூறியதுதான் அது. அவர் உங்கள்மீது நல்ல மதிப்பு வைத்திருக்கிறார். கந்தோரில் அவரை ஒருதரம் பார்த்துவிட்டுப் போங்கள் என்று சொன்னார் சந்திரசேகரம்.

வசதிபோல் நான் வித்தியா கந்தோருக்குச் சென்று ஜனாப் நூர்தீன் அவர்களைச் சந்தித்தேன். அவர் என்னை இன்முகம் காட்டி வரவேற்று இந்தியப் பட்டதாரிகளுக்கும் வேலை வழங்குவதாக எங்கள் திட்டத்தை நாங்கள் மாற்றிக்கொண்டமையால் உங்கள் மகன் உட்பட இருபதுபேர் நன்மையடைந்துள்ளார்கள் என அவர் கூறினார். நான் அன்னாருக்கு நன்றி கூறிக்கொண்டு விடைபெற்றுச் சென்றேன்.

ஒன்றை இங்கே சொல்லிக்கொண்டு இதை நிறைவு செய்கின்றேன். நமது கலை, கலைப்பண்பாடு முதலிய எல்லாவற்றிக்கும் தாயகம் இந்தியாவே என்பது உலகறிந்த உண்மை. உலகம் முழுவதற்கும் அறிவொளியூட்டிய தகைமை இந்தியாவுக்கு உண்டு. இங்ஙனமிருக்க இன்னும் எல்லாம் மேற்கிலிருந்துதான் இறக்குமதியாகவேண்டும் என எண்ணுகின்ற சிலர் நம்மிடையே இருக்கின்றார்கள். ஏகாதிபத்தியம் போய்விட்டது. ஆனால், அதன் வாசனை போகவில்லை. இந்த வாசனையும் நீங்கவேண்டும்.

# கோபல்லாவ, தேவசூரியசேன, சரத்சந்திரா ஆகியோருடன் ஏற்பட்ட பழக்கமும் நட்பும்

இலங்கைக் கலைக்கழகம் 1954ஆம் ஆண்டில் முதல் முதல் நிறுவப்பட்டபோது அதன் முதலாவது தலைவராக பொலீஸ் மா அதிபர் சேர். றிச்சேட் அளுவிகாரா தெரிவு செய்யப்பட்டார். அதன் உப குழுக்களுள் ஒன்றான நாட்டுப் பாடல், நாட்டுக் கூத்துக் குழுவில் நான் ஓர் அங்கத்தவராக நியமனம் பெற்றேன். குறித்த குழுவுக்கு எனது பேரைச் சிபார்சு செய்தவர் அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அசீஸ் எனப் பின்னர் அறிந்து கொண்டேன். தருணமறிந்து தகுதியாகச் செயற்படும் தீர்க்க புத்திவாய்ந்தவர் அசீஸ்.

நாட்டுப்பாடல், நாட்டுக் கூத்துக் குழுவின் தலைவர் திரு. உவில்லியம் கோபல்லாவ அவர்கள். அப்போது அன்னார் கொழும்பு முனிசிப்பல் கொமிஷனராகப் பதவி வகித்திருந்தார். பின்னர் மாட்சிமை தங்கிய மகாதேசாதிபதியாகவும், அதன் பின்னர் மகா மேன்மை தங்கிய இலங்கை ஜனாதிபதியாகவும் அதி உன்னத பதவிகளை வகித்த அன்னார் தலைமை தாங்கிய ஒரு உபகுழுவில் நானும் ஒரு அங்கத்தவனாய் இருந்து சேவை செய்யக் கிடைத்தமை ஒரு பெரும் பேறெனவே கருதுகின்றேன். என்னுடன் வட்டுக்கோட்டை மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் அவர்களும் அங்கம் வகித்தமை குறிப்பிடுதற்கு உரியதாகும்.

எங்கள் குழுவின் செயலாளர் திரு. டீ. ஜீ. தயாரத்தின அவர்கள். அன்னார் அப்போது கிராம முன்னேற்றப் பகுதி அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். பின்னர் மந்திரி சபையின் காரியதரிசியாக உயர்பதவி தாங்கி ஓய்வு பெற்று, பின்னர் பல்கலைக்கழகத் தனிநபர் ஆணைக்குழுவின் அங்கத்தவராக அதிகௌரவ ஜனாதிபதி அவர்களால் நியமனம் பெற்றமை பாராட்டுதற்கு உரியதாகும்.

குழுக்கூட்டங்கள் யாவும் தலைவரின் இல்லத்திலேயே, நடைபெற்றுவந்தன. தலைவரின் இனிய குணமும், அடக்கமும், அமைதியும், நற்பண்புமாகிய மனித இயல்புகளே அன்னாரை இலங்கையின் முதல் மனிதராக உயர்த்தி வைத்தன என்று துணிந்து கூறுவேன். கூட்டங்கள் நடக்கும்போது சிற்றுண்டி, தேநீர் ஆகியவற்றைத் தமது கைகளாலேயே பரிமாறி உபசரித்த அந்தப் பெருமகனாரின் பேரன்பினை எம்மால் மறக்கலாகுமா? இது நமக்கு முன்மாதிரியல்லவா?

நம்மால் நினைக்கவும் முடியாத குணநலன்களை அணிகலனாகப் பூண்டு கொண்டமையால் அல்லவா அந்த பெருந்தகையார் நமது நாட்டுப் பண்பாட்டுக்கு ஒவ்வாத ஆடம்பர உத்தியோக உடைகளைக் களைந்தெறிந்துவிட்டுச் சாதாரண மனித உடையிலே காட்சியளித்தது?

அன்றியும் 1963ஆம் ஆண்டு அன்னார் மாட்சிமை தங்கிய மகாதேசாதிபதியாய் இருந்தபோது, களனியா வித்தி யாலங்காரப் பல்கலைக்கழகத்தில் வைத்து எனது பகவத்கீதை வெண்பா கருமயோகப் பதிப்புக்கு ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தில் முதற் பரிசாக ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை எனக்கு வழங்கிய சந்தர்ப்பத்தில், பழைய நினைவைக் கொண்டு "சுகமாயிருக்கிறீர்களா?" என்று விசாரித்த அன்னாரின் மனிதப்பண்பை என்னால் எவ்வாறு மறக்கமுடியும்? "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்." இது கலித்தொகை.

இந்தக் காலப்பகுதியில் நான் பழகிய இரண்டு நண்பர்களைப் பற்றி இங்கே குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இருவரும் நமது தேசீய கலாசாரப் பண்பின் இரண்டு வடிவங்கள்போல் என்முன் காட்சியளிக்கின்றனர். ஒருவர் தேவசூரியசேன; மற்றவர் கலாநிதி சரத்சந்திர.

தேவசூரியசேனவின் தந்தையார் பிரபலம் பெற்ற அரசியல் ஞானி; சிறுபான்மை வகுப்பினரின் பிரச்சினைகளை நன்கு உணர்ந்தவர். சிறுபான்மையினரின் உரிமைகளுக்காக அந்தரங்க சுத்தியுடன் உழைத்தவர்; சட்டநிரூபண சபையின் உபதலைவராயிருந்தவர். சேர். ஜேம்ஸ் பீரிஸ் என்பது அன்னாரின் பெயராகும்.

சேர். ஜேம்ஸ் பீரிஸ் என்னும் பெயரை இங்கே நினைவுகூரும்போது வரலாற்றுப் பெருமைவாய்ந்த ஒரு சம்பவமும் நினைவுக்கு வருகின்றது. சட்ட நிரூபண சபைக் கூட்டங்களுக்கு உபதலைவரே தலைமை தாங்குவது சம்பிரதாயம். சட்ட நிரூபண சபையிலே பெரும்பான்மை

வகுப்பினருக்குப் பதினேழு பிரதிநிதிகளும் சிறுபான்மை வகுப்பினருக்குப் பதினெட்டுப் பிரதிநிதிகளும் இருந்தார்கள்.

சிறுபான்மையினரால் மறக்க முடியாத டொணமூர் அரசியல் திட்டம் சபையில் விவாதத்துக்கு வருகிறது. வாக்கெடுப்பின்போது வாக்குகள் சமனாகப் பிரிந்தால் தமது வாக்குரிமையை “வேண்டாம்” என்னும் கட்சிக்கு வழங்கி டொணமூர்த் திட்டத்தை நிராகரித்து விடுவதென்னும் ஒரு தார்மீக வாக்குறுதி பற்றிச் சேர். ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் மீது சிறுபான்மை வகுப்புப் பிரதிநிதிகள் கொண்டிருந்த நம்பிக்கை பலனளிக்கவில்லை. எதிர்பார்த்த படி வாக்குகள் சமனாகப் பிரியவில்லை. அரசாங்கத் தரப்புக்கு ஒன்று கூடி விட்டது. ஒரு தமிழ்ப் பிரதிநிதி இந்தச் சந்தர்ப்பத்தில் இழைத்த இமயமலை போன்ற பெரிய தவறுதல் இந்த நம்பிக்கையைச் சிதறடித்துவிட்டது. சேர். ஜேம்ஸ் பீரிஸ் போன்ற கலைஞர்கள் நம்மிடையே பிறக்கவேண்டும்.

இந்த விசாலமான நோக்கம் படைத்த ஒரு தந்தையின் மைந்தன் என்னும் உரிமைக்குத் தகுதி வாய்ந்தவர் தேவசூரியசேன. இவரது இயற்பெயர்வேறு. தாம் பிறந்த நாட்டின் மொழி, கலாசாரப் பண்பு, பாரம்பரியம் என்பவைகளைக் கருத்திற்கொண்டே தமது பெயரை இவ்வாறு மாற்றிக் கொண்டார். இதுவும் ஒரு முன்மாதிரியே.

தேவசூரியசேன ஓர் இசை நடனப் பிரியர். மேல் நாட்டு இசைக் கலையில் ஒருமேதை. நாட்டுப்பாடல், நாட்டுக்கூத்து ஆகிய தேசீய கலைகளில் அதிக ஆர்வம் கொண்டவர். அவற்றின் முன்னேற்றத்துக்குத் தம்மை அர்ப்பணம் செய்தவர். இனிய பண்பாளர்.

இற்றைக்கு இருபது ஆண்டுகளின் முன்பு அன்னார் என்னோடு தொடர்புகொண்டு கலாநிதி சரத்சந்திரா அவர்களுடன் மட்டக்களப்புக்கு வருகை தந்தார். அறிமுகம் குறியாத விருந்தினராய் முதல் முதல் மட்டக்களப்புக்கு வருகை தந்த இப்பெரியார் இருவரையும் மட்டுநகர் எல்லையிலே வரவேற்று அழைத்துவந்து அகநகருட் புகலானேன். அப்போது தேவசூரியசேன அதிசய மேலிட்டால் இதென்ன அழகான பட்டினம்? இதன் இயற்கை அழகுபோல நான் எங்கும் கண்டதில்லை.

நீரரணும், மதிலரணும் சூழ்ந்து இயற்கை வனப்பின் மத்தியிலே உதய சூரியனை வரவேற்கின்ற மட்டுநகர் மங்கையின் அழியாத அழகினையும், அவளின் பாதுகாப்பையும் நான் எவ்வாறு வருணிப்பேன்? என்று கூறுகையில் கலை, கலாசாரப் பண்பின் பிறப்பிடமும், புகலிடம்

போல் காட்சியளிக்கின்ற மட்டுநகருக்கு வந்தமை குறித்து நான் பெருமையடைகின்றேன் எனக் கலாநிதி சரத்சந்திரா அவர்கள் தேவசூரிய சேனவின் சொல்லை வழி மொழிந்ததுபோல் சொல்லிக் கொண்டிருக்க நாங்கள் மூவரும் தேவசூரியசேனவின் "மே பிளவர் கார்" மூலம் அகநகரை வலம் வந்து வாடி வீட்டில் சிறிதுநேரம் தங்கினோம்.

கலாநிதி சரத்சந்திரா இலங்கைப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர். சமஸ்கிருதம், பாளி, சிங்களம் ஆகிய பல மொழிப் பீடத்தின் தலைவர். பல நாடகங்கள் இயற்றிய எழுத்தாளருமாவார்.

இரு நண்பர்களும் குருக்கள்மடத்தில் என்னுடன் ஒருவார காலம் தங்கியிருந்தனர். பழைமை வாழ்கின்ற கிராமங்களுக்கெல்லாம் அவர்களை அழைத்துச் சென்றேன். பிரபல அண்ணாவிமாரையும், சிறந்த நடிகர்களையும் சந்திக்கச் செய்தேன். மட்டக்களப்பு நாட்டின் பழைமையை ரசித்து அவர்கள் புதுமகிழ்ச்சி கொண்டார்கள்.

பலரக நாட்டுப் பாடல்களை ஒலிப்பதிவு செய்ததுடன் நாட்டுக்கூத்துகள் சிலவற்றின் பகுதிகளையும் நடிக்கச் செய்து ஒலிப்பதிவு செய்து கொண்டார்கள். செட்டிபாளையம் இ. கணபதிப் பிள்ளைப் புலவர் முதலிய புலவர் சிலரின் நட்பும் இவர்களுக்குக் கிடைக்கலாயிற்று. நள்ளிரவில் மீன்பாடும் இன்னிசை விருந்தாகிய புது அனுபவத்தையும் அடைந்து கொழும்பு திரும்பினார்.

இரண்டொரு மாதம் சென்றபின் நான் கொழும்புக்கு போயிருந்தபோது சூரியசேன அவர்கள் என்னை அல்விஸ் பிளேசில் உள்ள தமது பத்தாம் இலக்க வீட்டுக்கு அழைத்துச் சென்று தமது மனைவியாரை அறிமுகஞ் செய்து வைத்து விருந்துபசாரம் செய்து வழியனுப்பிய இனிய நிகழ்ச்சி இன்னும் என் நினைவில் இருக்கின்றது.

தேவசூரியசேனவின் வாசத்தலத்தில் நாடக அரங்கொன்றும் அமைந்துள்ளமை எனது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. கலாநிதி சரத்சந்திரா அவர்கள் எழுதியிருக்கும் ஒரு நூலில் மட்டக்களப்பு நாட்டுப் பாடல், நாட்டுக் கூத்து இவற்றின் செய்திகள் காணப்படுவதாக அறிகின்றேன். கலைப் பண்பினால் இணைந்து வாழ்வோம்.

## வாதிட்டு நீதியை நிலைநாட்ட பயந்து நடுங்கினர் பலர்.

### அப்படிப்பட்டவருடனும் பல சபைகளில் இலவசப் பணியாற்றினேன்.

இலங்கைக் கலைக்கழக உறுப்பினராகச் சில ஆண்டுகள் சேவை செய்த பின்னர் 1958இல் அரசகரும மொழித் திணைக்களத்தின் ஆலோசனைச் சபையில் கலைச்சொற் குழு உறுப்பினராகப் பணிபுரியும் வாய்ப்பு வந்து சேர்ந்தது. கொழும்பு "றேஸ் கோஸ்" றீட் அவென்யு வீதியிலே றோயல் கல்லூரிக்கும் இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் உள்ள ஒரு கட்டிடத்தில் இந்தத் திணைக்களம் அமைந்திருந்தது.

கலாநிதி விஜயசேகரா அவர்கள் திணைக்களத்தின் மா அதிபராயிருந்தார். திரு.எம்.ஜே.பெரேராவும், நண்பர் அ. வி. மயில்வாகனமும் துணை அதிபர்களாய் இருந்தனர். வித்தியாரத்தினம் சோ.நடராசா, வித்துவான் எவ்.எக்ஸ்.சீ. நடராசா, திரு.மு.கணபதிப்பிள்ளை, திரு. சரவணமுத்து முதலிய நண்பர்கள் மொழிபெயர்ப்புத் துறை அத்தியட்சர்களாய்ப் பணிபுரிந்தனர். பண்டிதர் கா. போ. இரத்தினம் ஆராய்ச்சித் துறை அதிபராக பணிபுரிந்தார். இப்போது அன்னார் ஊர்காவற் றுறை எம். பி. ஆகப் பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலோசனைச் சபையில் நான் சேவை செய்த காலத்தில் பழைய நண்பினைப் புதுக்கும் வாய்ப்பும், புதிய அறிஞர்களின் நண்பைப் பெறும் சந்தர்ப்பமும் கிடைக்கலாயின. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பதில் வித்தியாதிபதி க. ச. அருள்நந்தி, கொக்குவில் கலாநிதி பொன்னையா என்போர் இங்கே நினைவுக்கு வருகின்றனர். பொன்னையா அதிதீவிர மதி படைத்தவர், அதிகம் படித்தவர், ஒருவரையும் விட்டுவைக்க மாட்டார். அவருடைய ஆலோசனையே மேலோங்கி நிற்கும்; என்றாலும் அவரை வழிக்குக் கொண்டுவந்து விடுவோம்.

துணை அதிபர் எம். ஜே. பெரேரா வினாவுள்ளவர்; கீழைத்தேச மொழிகள் சிலவற்றில் நல்ல தேர்ச்சி பெற்றவர். கல்வி அமைச்சில்

அன்னார் செயலாளராயிருந்தபோது எங்கள் பழைய நண்பு அதிகம் பயன் செய்தது. எவ். எக்ஸ். சீ. பின்னர் உதவி ஆராய்ச்சி அதிபராகப் பதவி வகித்து இளைப்பாறி இன்று பொதுப்பணி புரிந்து வருகிறார்.

இந்த ஆலோசனைச் சபையில் நாங்கள் செய்த சேவை மகிழ்ச்சிக்குரியது; நிலையுள்ளது; நின்று பயன் தருவது; தேசீய நோக்கம் படைத்தது; அரசாங்க நிருவாகத்தைப் புனர்நிர்மாணம் செய்வது. இது ஊதியம் பெறாத சேவை.

அடுத்து இலங்கை வானொலி கல்வி ஒலிபரப்பு ஆலோசனைச் சபையில் சில ஆண்டுகள் சேவை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. உத்தியோக உயர்வை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அங்கத்தவர் சிலரால் சில சந்தர்ப்பங்களில் எனக்கு வசதிக் குறைவுகள் ஏற்பட்டதும் உண்டு. சில சமயங்களில் நானே முன்னின்று விவாதங்களை நடத்திய நிலைகளும் எனக்கு ஏற்பட்டுள்ளன. விவாதங்களில் நான் ஈட்டிய வெற்றிகளை இரகசியமாகப் பாராட்டுவார்கள். உதாரணத்துக்கு ஒன்று சொல்லுகின்றேன்.

நான் மட்டுநகர் அரசினர் கல்லூரியில் ஆசிரியனாய் இருந்த காலம். கல்விமா அதிபரின் பேரில் ஒரு பிரேரணை விவாதத்துக்கு வருகிறது. உதவி வித்தியாதிபதி திரு. வீரசிங்க அவர்கள் மாஅதிபரின் பிரதிநிதியாக வந்திருக்கிறார். வாரந்தோறும் வியாழக் கிழமைகளில் முற்பகல் பத்து மணி தொடக்கம் பதினொரு மணி வரை இலங்கையில் உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் வானொலி மூலம் புத்த சமயத்தைப் போதிக்க வேண்டும் என்பது பிரேரணை.

பிரேரணை விவாதத்துக்கு வந்ததும் இந்துமதம், இஸ்லாமியமதம், கிறிஸ்தவ மதம் இவைகளைப் போதிக்க நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதா? என வினாவினேன். இல்லை எனப் பதில் வந்தது. மற்ற மத போதனைகளுக்கும் நேரம் ஒதுக்கிப் பிரேரணையைத் திருத்தி சமர்பிக்க வேண்டும். இப்போது சபைமுன் இருக்கும் பிரேரணையை நான் எதிர்க்கிறேன் எனக் கூறிக்கொண்டு காரணங்களை விபரித்தேன். எனது விவாதத்தின் பின்னர் பிரேரணை காலவரையறையின்றிப் பின்போடப்பட்டது.

கூட்டம் முடிந்த பின்பு எனது உடன் உறுப்பினர்கள் சிலர் இரகசியமாக, நாங்கள் அரசாங்க உத்தியோகத்தர். ஒன்றும் எதிராகப் பேசும் நிலையில் இல்லை. இப்படியான சந்தர்ப்பங்களில் நிலைமைகளைச் சமாளித்துக் கொள்வதற்காகத்தானே உங்களை வைத்திருக்கிறோம்

எனத் தட்டிக் கொடுத்தார்கள். நானும் ஒரு அரசாங்க ஊழியன்தானே.

பின்னர் திருமதி. இ. நவரத்தினம் அவர்கள் உதவி வித்தியாதிபதியாய் இருந்த காலத்தில் தமிழ் மலர் நூற்குழுவின் ஆலோசனைச் சபை உறுப்பினராகச் சில வருடம் பணிபுரியலானேன். ஆலோசனைச் சபைக் கூட்டங்கள் சில காலம் பலாலி ஆசிரிய காலசாலையிலும், சில காலம் பரமேசுவரக் கல்லூரியிலும் நடைபெற்றன.

விமானம் மூலம் போய்வர வித்தியா பகுதியினர் வசதி செய்து தந்தமையால் சுறுசுறுப்பாக வேலை செய்யும் வாய்ப்பு உண்டாயிற்று. ஒவ்வொரு முறையும் பகல் பதினொரு மணி தொடக்கம் இரண்டு இரண்டரை மணிவரையும் கையெழுத்துப் பிரதிகளைப் பார்வையிட்டு வேண்டிய ஆலோசனைகளைச் சொல்வோம். வித்துவான் க. வேந்தனார் முதலிய அன்பர்கள் செய்து வைக்கும் ஒழுங்குகள் எங்கள் வேலைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு மிகவும் உதவியாயிருந்தன.

ஆலோசனைச் சபைத் தலைவர் திரு.மு.ஞானப் பிரகாசம் பீ. ஏ. பி. எஸ். ஸி. அவர்களின் அன்பும், பண்பும், அறிவும் எம்மால் என்றும் நினைவு கூரத்தக்கன. பரமேசுவரக் கல்லூரி அதிபராயிருந்த அப்பெரியார் சைவ சித்தாந்த சாத்திர உணர்ச்சியிலும் ஒப்புயர்வற்று விளங்கினார். எனக்கு இனிய நண்பருமாவர்.

சபைக் கூட்டங்களில் எனது மனத்தைப் பெரியதும் கவர்ந்த ஓர் அன்பரைப் பற்றி இங்கே குறிப்பிடுவதில் அகம் மிக மகிழ்கின்றேன். அவர்தான் சபையின் செயலாளர் திரு. அ. அருளையா. கணித மேதையும் வானசாத்திர நிபுணருமாக விளங்கிய காரைநகர்ப் பேராசிரியர் திரு. அலன் ஏப்ரகாம் அவர்களின் புதல்வராகிய அருளையா மாவட்ட வித்தியாதரிசியுமாவர். மட்டக்களப்பில் அவர் வித்தியாதரிசியாயிருந்த பழைமைகெழுமிய நண்புரிமையும் உடையவர்.

நான் கூட்டங்களுக்குப் போகும் நாளெல்லாம் விமான நிலையத்துக்கு வந்து என்னை அழைத்துச் சென்று சுண்டிக்குழியில் உள்ள தமது இல்லத்தில் உண்டியும் உறையுளும் அளித்து உபசரித்து வழியனுப்பி வைக்கும் அன்னாரின் அன்பு பதிலுபகாரம் கருதாத மெய்யன்பாகும். இது 1965ஆம் ஆண்டு வரை நிகழ்ந்தது.

வாசகர்களுக்கு ஒன்று சொல்கின்றேன். கலைக்கழகம் முதலாக இந்தச் சேவைகளெல்லாம் தியாக சேவையே. இலவசப் பிரயாணம் மாத்திரமே அன்றிப் படிச்செலவாக யாதேனும் வழங்கப்படுவதில்லை.

இதே நேரத்தில் வேறு ஆலோசனைச் சபைகளில் அங்கத்தவர்களுக்கு ஒரு கூட்டத்துக்கு ரூபா இருநூற்றைம்பது வரை வழங்கப்பட்டு வந்ததையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

இனி இந்த ஆலோசனைச் சபைச் சேவையின் இறுதிக் கட்டத்துக்கு வருகின்றேன். 1970ஆம் ஆண்டு இந்து சமய விவகார ஆலோசனைச் சபைக்கு நியமனம் பெற்று 1978 முற்பகுதி வரை அங்கத்தவராயிருந்தேன். இதுதான் ஒரு ஆலோசனைச் சபையில் நான் சேவை செய்த நீண்ட காலமாகும்.

ஆலோசனைச் சபை அங்கத்தவர்களுக்கு முதலாம் வகுப்புப் பிரயாணச் சீட்டு வழங்குவது வழக்கம். இந்த ஆலோசனைச் சபையின் முதலாவது கூட்டம் கௌரவ கலாசார அமைச்சர் திரு. ஆர். எஸ். குலதிலக அவர்களின் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வந்த சில அங்கத்தவர்கள் தங்களுக்குப் படிச்செலவு வழங்க வேண்டுமென அமைச்சரிடம் ஒரு கோரிக்கையை விடுத்தனர்.

நான் அமைச்சருக்கு ஓர் ஆலோசனை கூறினேன். இது ஒரு சமயத் தொண்டு. இந்த ஆலோசனைச் சபை உழைக்கும் சபையல்ல முதலாம் வகுப்புப் புகையிரதப் பயணச்சீட்டை இரண்டாம் வகுப்பாகக் குறைத்து வருகிற வித்தியாசத்தைப் படிச் செலவாக வழங்கலாம். இந்த ஆலோசனையை அமைச்சரும் சபையினரும் ஏற்றுக் கொண்டனர். பத்து ரூபா படிச் செலவு அனுமதிக்கப்பெற்றது. பின்னர் அது பதினைந்து ரூபாவாகக் கூடிற்று

வெள்ளவத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க கலாசாரக் கட்டிட நிலையத்திலே சுதந்திரமாக இயங்கி வந்த ஆலோசனைச் சபை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் கலாசார அதிபர் காரியாலயத்துக்கு மாற்றப்பெற்றது. இதனால் உண்டாகிய வசதிக் குறைவுகள் காரணமாக, திரு. என். நவரத்தினம் உயர்நீதிமன்றப் பதிவாளர் சபைக் காரியதரிசிப் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். நவரத்தினம் ஒரு கருமவீரர்.

பின்னர் கணக்காய்வாளர் திரு. மு. சிவராசா அவர்கள் காரியதரிசிப் பதவியை ஏற்கலானார். ஓய்வுபெற்ற நீதியரசர் உயர்திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்களின் தொடர்ச்சியான தலைமையின் கீழ் புதிய அமைப்புப் பெற்று ஆலோசனைச் சபை சிறந்த சேவை செய்து வருகின்றது.

தலைவரின் விடா முயற்சியால் திரு. சீ. ரங்கநாதன் கியூ. சீ. போன்ற சட்ட நிபுணர்களின் தன்னலமற்ற சேவை கொண்டு நாங்கள் உருவாக்கிய இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் (நிதி நிருவாகம்) நடைமுறைக்கு வரும் நன்னாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

அன்றியும் நமது சைவக் குருமார் வஸ் பிரயாணத்தின் போது கம்பிகளிற் பிடித்துத் தொங்குகின்ற ஆசாரமில்லாத அவல நிலை நீங்குவதற்கேற்ற சீருடை ஒன்றினை ஆலோசனைச் சபை ஆக்கித் தருமெனவும் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

இந்து சமயத்துக்கு மாத்திரமல்ல; சட்டநூல் துறைக்குபம் தமிழ்ச் சமூகத்துக்கும் ஒரு மங்கல நல்லணியாக விளங்குகின்ற தலைவர் உயர்திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு நானும் ஒரு அன்பனான தொடர்பு குறித்து அகம் மிக மகிழ்கின்றேன். அன்பினால் ஆக்கமுண்டு.

# சிறுபான்மையினர் உரிமைகள் பறிபோனது ஏன் ?

அகில இலங்கை இந்துமா மன்றம் 1955ஆம் ஆண்டு மாசி மாதம் ஆறாம்தேதி நிறுவப்பெற்றது. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்துகூடி பல நூற்றுக்கணக்கான மக்களிடையே பெயர் வைப்பதில் அபிப்பிராய பேதமுண்டாயிற்று. சைவமாமன்றம் எனப் பெயரிட வேண்டுமென வாதாடினர் ஒரு சாரார். இந்துமா மன்றம் எனப் பெயரிடுவதே பொருத்தமாகுமென வாதாடினர் மறுசாரார்.

இந்துமா மன்றம் எனப் பெயரிட வேண்டுமென வாதாடிய கோஷ்டியின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் உயர்திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள். நான் ஸ்ரீஸ்கந்தராசா கோஷ்டியில் சேர்ந்துகொண்டு உரையாற்றுகையில், இந்து என்னும் சொல் சைவம் முதலிய எல்லாப் பிரிவுகளையும் அடக்கும். சைவம் என்னும் சொல் அவ்வாறு அடக்காது. இந்து சாதனம் இந்துக் கல்லூரி, இந்து வித்தியா விருத்திச் சபை, இந்து அற நிலையம் போன்ற அடிபட்ட வழக்குடைய சொற்களையும் நாம் நோக்கிப் பார்க்க வேண்டும் பெயர் பொருத்தமாக அமையவேண்டும்.

நமது நோக்கம் விசாலமானது. நாம் எல்லார்க்கும் இடம் கொடுக்க வேண்டும். இந்துமா மன்றம் என பெயரிடுவதே பொருத்தமானது நல்லது என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம் சபை இப்பெயரையே ஏகமனமாக ஏற்றுக்கொண்டு நமது இந்த தாபனத்துக்கு அகில இலங்கை இந்துமா மன்றம் எனப் பெயரிட வேண்டுமென அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன் எனக் கூறி முடித்தேன். இந்து என்ற பெயரே சபையில் அங்கீகாரம் பெறலாயிற்று.

எங்கு போனாலும் பிரச்சினைகள் அதிகமாக என் தலையில் விழுவதே வழக்கம். புத்த ஜயந்திக் கொண்டாட்டம் நடைபெறப் போகிறது. உலகப் புகழ்பெற்ற தத்துவசாத்திர மேதை டாக்டர் ராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராக இலங்கைக்கு வருகின்றார்.

இந்துமா மன்றத்தின் உப தலைவருக்குள் ஒருவராக நான் பதவிவகித்த காலமென நினைக்கின்றேன். மன்றத்துக்கு ஒரு பிரேரணை வருகிறது. இலங்கையிலுள்ள இந்து சமய சங்கங்களெல்லாம் புத்த ஜயந்தியைக் கொண்டாட வேண்டுமென இம்மன்றம் தீர்மானிக்கிறது. இதுதான் பிரேரணை.

விவாதத்தின்போது புத்த ஜயந்தியைக் கொண்டாட வேண்டும்மென மன்றத்தைக் கேட்டுக்கொண்டது யார்? புத்த தாபனங்களா? அல்லது அரசாங்கமா? என வினாவினேன். அரசாங்கமே எனத் தலைவர் பதிலளித்தார். தாபனங்கள் கேட்டால் நாம் கொண்டாடலாம். அது அன்புப் பணிப்பு. அரசாங்கம் கேட்டால் நாம் கொண்டாடப்படாது. அது அதிகாரப் பிணிப்பு. பௌத்த மதத்தின்மீது நான் வைத்திருக்கும் எல்லா மதிப்புக்களுடனும் சொல்கின்றேன். பிரேரணைக்கு எனது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றேன் எனக் கூறினேன்.

எனது நண்பர் சிலர் அரசாங்கத்தில் உயர்பதவி வகிப்பவர்கள்; பதவி உயர்வை எதிர்பார்த்திருப்பவர்கள்; சைவப் பழங்கள்; என்னை எதிர் மறுத்து, சைவத்துக்கும் பௌத்தத்திற்கும் என்ன வேற்றுமையிருக்கிறது? இரண்டும் சரிசமம்தானே. நாம் புத்த ஜயந்தி கொண்டாடுவதில் ஒன்றும் பாதகமில்லை என்று வாதாடினர்.

நான் நினைத்தது ஒன்று. இவர்கள் சொல்வது வேறொன்று. சமயக் கொள்கை பற்றி இங்கே பேசவேண்டியதில்லை. ஒரு சமயத்தை இன்னொரு சமயம் கௌரவிப்பது மிக அவசியம். அதைச் சுதந்திரமாகச் செய்யவேண்டும். அரசாங்க அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுச் செய்வதையே நான் எதிர்க்கின்றேன்.

இந்த நிலையில் எனது விவாதத்தைத் தளர்த்திக்கொள்ள நான் இணங்கவில்லை. பின்னர் ஒரு சமரச முடிவுக்கு வந்தோம். விரும்பிய சங்கங்கள் கொண்டாடலாம் என்னும் திருத்தத்துடன் பிரேரணை நிறைவேறியது. சிறுபான்மையினரின் உரிமைகள் சிறிது சிறிதாகப் பறிபோனது நம்மவர்களின் இந்தப் புத்தியினாலேதான்.

இனி, ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்துக்கு வருவோம். செந்தமிழ் இலக்கியக் குழுவில் நான் 1967இல் ஒரு அங்கத்தவரானேன். புலவர் சிவங்கருணாலய பாண்டியனாரும் அதில் அங்கத்துவம் வகித்தார். கலாநிதி பண்டிதர் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் செந்தமிழ்க் குழுவின் தலைவராவார்.

ஆண்டுதோறும் தமிழ்ச் சாகித்திய விழாக்களை நடத்தி யும், கலைப் பூங்கா என்னும் செந்தமிழ்ச் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டும் கலாநிதி சதாசிவம் அவர்கள் செய்த சேவை பாராட்டுவதற்கு உரியதாகும். செந்தமிழ் இலக்கியக் குழுவின் முதலாவது நோக்கம் தமிழ் மரபினைப் பேணிக் காப்பதேயாகும்.

மரபென்பது ஆக்கத்திலிருந்து பிறப்பது. முன்னோர் செய்துவைத்த ஆக்கம் அவர்தம் பின்னோர்க்கு மரபாகிறது. பின்னோர் செய்து வைக்கும் ஆக்கம் அவர்தம் பின்னோர்க்கு மரபாகியது. இதனை விளங்கிக் கலைப் பூங்காவில் மரபும் ஆக்கமும் என்னும் தலையங்கத்தில் நான் நீண்டதோர் செய்யுள் எழுதிருப்பதும் இங்கே நினைவுக்கு வருகின்றது.

சுவைபல துளும்பப் பல புதுப்புது ஆக்கங்களைப் படைத்து உதவிய கனக செந்திநாதன் அவர்களுக்குச் செந்தமிழ் இலக்கியக் குழுவின் சார்பில் இரசிகமணி என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்து பொன்னாடை போர்த்திய மங்கல நிகழ்ச்சி மட்டக்களப்பு விழாவில் நடைபெற்றதையும் இங்கே நினைவுகூருகின்றேன். இந்தத் தமிழ்ப் பணியில் எனக்கு பிரதான பங்கு கிடைத்தமை குறித்து மகிழ்கின்றேன். இரசிகமணி போய்விட்டார். அவர்தம் இனிய படைப்புக்களை நாம் ரசிக்கின்றோம்.

முன்பு குறிப்பிட மறந்துபோன மூன்று செய்திகளை இனம்பற்றி இங்கே சேர்க்க விரும்புகின்றேன். தமிழ்மலர் ஆலோசனைச் சபை பலாலியிற் செயற்பட்டுக் கொண்டிருந்த சமயம் நடந்தது ஒன்று. பலாலி ஆசிரியர் கலாசாலையின் தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை அவர்களது நினைவு இங்கே வருகிறது. பண்டிதர் பருத்தித் துறையைச் சேர்ந்தவர். கவச்சிகரமான பேச்சாளர். இன்சுவை எழுத்தாளர். இலக்கியச்சோலை என்னும் அன்னாரின் கட்டுரைத் தொகை நூல் அவர்தம் பண்பட்ட உள்ளத்தைத் தெள்ளிதிற் காட்டும் வகையில் அழகாக அமைந்துள்ளது. இரசிகமணி கனக செந்திநாதனுக்கு இவர் அன்பர். எனக்கு இருவரும் நண்பர்.

ஒருமுறை நான் பலாலிக்குப் போன சமயம் பார்த்து ஆசிரியர் கலாசாலையினர் பண்டிதருக்கு ஒரு பாராட்டு விழா நடத்தும் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். இந்த இரசிகருக்கு இவ்விழாவிலே செந்தமிழ்மணி என்னும் சிறப்புப் பட்டம் சூட்டிக் கௌரவிக்கும் உரிமையையும், தகுதியையும் எனக்களித்து மதிப்புச் செய்த கலாசாலை

அதிபர், உப அதிபர், விரிவுரையாளர்கள், பயிற்சி ஆசிரியர்கள் அனைவரையும் இங்கே நினைவு கூருகின்றேன்.

மற்றது அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா அவர்களை இலங்கை வானொலி நிலையத்தில் வைத்து கௌரவிக்கும் பேறு பெற்றமை. அன்பர் செல்லையா அவர்கள் இந்த நூற்றாண்டில் சிறந்த தமிழ் கவிஞர்களுள் ஒருவர். தைப்பொங்கல், சித்திரைத் திருநாள், தீபாவளி ஆகிய மங்கல நன்னாள்களிலே வானொலி கவியரங்குகளில் சந்தித்து அன்னாரின் நண்பினைப் பெறலானேன்.

இயல்பான கவிநடை அவரைத்தேடி வந்தது போல் இருக்கும் அவரது கவியமைப்பு. அதற்கேற்ற சாரீரம். சொற்கள் இசையோடு சேர்ந்து வருவதுதான் பாட்டு. அதை இசையோடு பாடுவதுதான் இன்பம் என்று சொல்லிக் கொண்டு தமது பாடல்களை இசையோடுதான் அவர் பாடுவார்.

ஒருமுறை வானொலிக் கவிதைப் போட்டியில் இந்தக் கவிஞருக்குப் பதக்கம் பரிசாக கிடைத்தது. வானொலி நிலையத்தினர் மட்டக்களப்பிலிருந்து என்னைக் கொழும்புக்கு அழைத்து கலையரங்கு ஒன்றை அமைத்து அறிஞர் பலரின் முன்னிலையில் கவிஞருக்கு என்னைக் கொண்டு பதக்கம் அணிவித்துக் கௌரவித்தமையை நினைக்குந்தோறும் எனக்கு மகிழ்ச்சி மிகுகின்றது. மற்றவரை மதிப்பதுதான் நமக்கு மதிப்பு.

**'உண்ணும் உணவில் உயிரில் எமதிரண்டு**
**கண்ணில் இனிய கவிப்புலவீர் - பண்ணமையும்**
**இன்பக் கவியால் இளஞ்சந் ததிவாழ**
**அன்புப் பணிபுரிவோம் யாம்."**

**'பாடுவ தெல்லாம் பாட்டோ**
**மக்கள்தம் பாட்டை நாளும்**
**நாடியே யுணர்ந் துயர்த்தும்**
**நலமின்றேல் சமூகந் தன்னைச்**
**சாடியே கிண்டல் செய்து**
**தாழ்த்துவோன் கவிஞ னாமோ?**
**வாடியே உழலும் மக்கள்**
**வருத்தம் நீங்கிடவே பாடீர்"**

என்னும் எனது இரு பாடல்களை இந்தச் சந்தர்ப்பத்தில் நமது இளங் கவிஞர்களுக்கு அல்வாயூர்க் கவிஞரின் நினைவாகச் சமர்ப்பிக்கின்றேன். கவியுயர என வாழ்த்துகின்றேன்.

மட்டக்களப்பின் முதுபேரறிஞர் சைவ சித்தாந்த சாகரம் கா. அருணாசல தேசிகமணி அவர்களை இங்கே நினைவு கூர்வதில் எனது உள்ளம் தளிர்க்கின்றது. 1962ஆம் ஆண்டில் எனக்குத் தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவித்த மட்டக்களப்புத் தமிழ் கலாமன்றம் 1964ஆம் ஆண்டில் என்னைக் கொண்டு தேசிகமணிக்கும் தங்கப் பதக்கம் அணிவித்துப் பெருமதிப்பளித்த தகுதியான செயலை இங்கே கூறிக்கொள்வதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

சைவ சமய சித்தாந்தமணி என்னும் நூலை எழுதி வெளியிட்டுப் பெரும் புகழ் படைத்த தேசிகமணியைக் கௌரவித்த காலாமன்றம் இதனால் தன்னையே கௌரவித்துக் கொண்டது. பிரபல எழுத்தாளர் செழியன் பேரின்பநாயகம் முதலிய இளைஞர்களால் நடத்தப்படும் இத்தாபனம் பல பேரறிஞர்களின் மதிப்பைப் பெற்றது. மன்றத்துக்கு எனது பாராட்டும் நல்வாழ்த்தும் உரியனவாகுக.

# இமயத்தில் தமிழின் இனிமையை நிலைநாட்டிய ஈழத்துக் கரிகாலன்.

### மாதவ விபுலானந்தர் மனம் கவர்ந்த "மீட்சிப் பத்து"

இருபதாம் நூற்றாண்டின் ஈழநாட்டுச் சோதியாகிய விபுலானந்த அடிகளார் 1931ஆம் ஆண்டு தொடக்கம் மூன்று நாலாண்டுகள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதற்றமிழ்ப் பெரும் பேராசிரியராய் அமர்ந்திருந்து அறிவொளி பரப்பினார். அடிகளார் விரித்த அறிவொளி சென்னைப் பல்கலைக்கழகத்தையும் அணி செய்வதாயிற்று.

பின்னர் 1943ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதற்றமிழ்ப் பெரும் பேராசிரியர் பதவி அடிகளாரை வலிய வந்தடைந்தது. நமது வழக்கமொன்று: நம் நாட்டில் பிறந்தவர் எவ்வளவு பேரறிஞராயினும் அவர் இந்தியாவில் முதல் மதிப்புப் பெற்ற பின்புதான் சொந்தநாடு அவருக்கு மதிப்பளிப்பது. நாவலர் பொருமானை நோக்கிப்பாருங்கள்.

இன்னுமொன்று: வெளிநாட்டிலிருந்து வரும் இயல் இசை நாடகக் கலை விற்பன்னர்கள் எத்தகைய மேதாவிகளாயிருந்தாலும் அவர்கள் யாழ்ப்பாணத்தில் மதிப்பைப்பெற வேண்டும். பெற்றால்தான் அவர்களின் புகழொளி சோபிக்கும். ஈழ நாட்டிற் பிறந்தவர்களும் யாழ்ப்பாணத்தின் மதிப்பைப் பெறவேண்டும் அது அறிவின் சிகரம் ஆனால் நமது அடிகளாரோ இந்தியாவும், ஈழநாடும் ஏற்று நிற்கும் ஒப்புயர்வற்ற பேரறிஞராக விளங்கினார். அடிகளாரின் அதிதீவிர விவேகம் நமது புத்திக்கு அப்பாற்பட்டது.

அடிகளார் இலங்கைப் பல்கலைக்கழகத்திற் பேராசிரியராயிருந்த காலப்பகுதியில் 1944இல் ஒருநாள் முற்பகல் பத்து மணியளவில் பண்டிதர் கே. எஸ். சந்திரசேகரி, பிரசித்த நொத்தாரிசி அவர்கள் என்னைக் காண அவசரமாக வருகிறார். வந்தவர் சுவாமி விபுலானந்தருக்கு நெருப்புக் காய்ச்சலாம். கொழும்பு பெரியாசுபத்திரியில் இருப்பதாக இன்று பத்திரிகையிற் செய்தி வெளியாயிருக்கிறது எனக் கூறினார்.

அப்போது வாதநோயாற் பிணிக்கப்பட்டுப் படுக்கையில் கிடந்த நான் எனது நோயையும் மறந்துவிட்டேன். எனக்குமே நெருப்புக் காய்ச்சல் வந்து விட்டதுபோல ஒரு வெப்பம் உண்டாயிற்று. மேல் முழுவதும் காஞ்சிரங் கொட்டை எண்ணெய்ப் பூச்சு. நான் என்னை செய்வேன்? அவசர அவசரமாக நல்வாழ்த்து அனுப்பவேண்டும்.

சந்திரசேகரி எனக்கு மாணவர் முறையினர். குமாரசுவாமி ஐயருக்கு நேர் மாணவர். என்னில் அளவுகடந்த அன்பு அவருக்கு உண்டு. நான் படுத்த படுக்கையிற் கிடந்துகொண்டே சில பாடல்களைச் சொல்லச் சொல்லச் சந்திரசேகரி அவற்றை எழுதிக்கொண்டார். எல்லாமாகப் பத்துப் பாடல்கள் வெளிவந்துவிட்டன.

விபுலானந்தர் மீட்சீப்பத்து எனப் பெயரிட்டு அப்பாடல் களைப் பதிவுத் தபால் மூலம் கொழும்பு பெரியாசுபத்திரிக்கு விலாசமிட்டுச் சந்திரசேகரியைக்கொண்டு சுவாமிகளுக்கு அனுப்பிவைத்தேன். சுவாமிகள் சுகமே மீள்க. பல்லாண்டு வாழ்க என்னும் பொருளமைந்த இப்பாடல்கள் சுவாமிகளுக்கு கிடைத்ததும் தமது காரியதரிசி மூலம் எனக்கு அன்புப் பதில் ஒன்றினை உடனே அனுப்பிவைத்தார்கள். மனத்துக்கு இனிய பாடல்கள் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. மட்டக்களப்பு தமிழ்க்கலை மன்றத்தின் முதற் பிரசுரமாக இது *19-07-1960* இல் வெளிவந்தது.

**"காரே றுந்திரு மூதூர்த் தாய்தரு**
**கடவுட் காதல்மகன்**
**கருவிற் திருவுள கலைஞன் பெற்றோர்**
**கண்ணிறை திருமயிலோன்**
**ஏரே றும்படி கீழ்பால் மேல்பா**
**லாக்கிநல் லிசைநட்டோன்**
**இமயத் தலையிற் தமிழ்முத்**
**திரைவரை ஈழக் கரிகாலன்**
**சீரே றுந்தமி ழறிவர்க் காங்கில**
**நூற்சுவை இனிதூட்டித்**
**தெருட்டும் புதுமைக் கபிலன்**
**கலியுக தெய்வ அகத்தியனாம்**
**பாரே றும்புக ழாளன் மீள்கெனக்**
**கூவாய் பைங்குயிலே**
**பன்மொழி விபுலா னந்தன் வாழ்கெனக்**
**கூவாய் பைங்குயிலே."**

இது மீட்சிப் பத்தின் முதற் பாட்டு. அடிகளார் மட்டக்களப்புக்

காரைதீவில் அவதரித்தவர். காரைதீவைக் காரேறு மூதூர் என வழங்குவதில் அடிகளார்க்கு அதிகம் பிரியம். அவர் தெய்வக் காதல் கொண்டவர். மானுடக் காதல் அவருக்கு இல்லை. ஆனால் மக்கள் மீது அவருக்கு அளவிலாக் காதல். அவர் மக்களுக்காகத் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்தவர். கருவிலே திருவுடைய கல்விமான்.

அவரது பிள்ளைத் திருநாமம் மயில்வாகனன். அவர் அவதரித் தமையால் கீழ்மாகாணம் எழுச்சியடைந்தது; மேன்மை பெற்றது. கீழ்மாகாணம் என்னும் அவச்சொல் நீங்கியது. மட்டக்களப்பு என்று சொல்லி நம்மை மட்டம் தட்டும் வெளியாரின் மனோபாவம் மறைந்து போயிற்று. நமது மாகாணம் கிழக்கு மாகாணமாயிற்று. நமது நாடும் மட்டு நன்னாடாயிற்று.

விபுலாந்த அடிகளார் ஈழத்துக்கு கரிகாலனாகி விட்டார். சோழநாட்டுக் கரிகாலம் இமயமலையிலே தனது புலிக்கொடி யைப் பொறித்து மீண்டவன். அடிகளார் இமயம்வரை சென்று தமிழின் இனிமையை நிலை நாட்டிக்கொண்டு அங்கேயே மூன்றாண்டு காலம் வாழ்ந்தவர். "இமயம் சேர்ந்த காக்கை" யில் அடிகளாரின் தமிழினிமையைப் படித்துப் பாருங்கள்.

சுவாமி புதுமைக் கபிலருமாகக் காட்சி தருகின்றார். கபிலர் என்னும் சங்கப் புலவர் குறிஞ்சிப் பாட்டு என்கின்ற அழகிய செய்யுளை இயற்றிப் பிருகத்தன் என்னும் அரசனுக்குத் தமிழ் மொழியின் நுட்பங்களை அறிவுறுத்தி வடமொழி மாத்திரமே சிறந்த மொழி என்று அவர் கொண்டிருந்த தவறான எண்ணத்தை மாற்றியவர்.

நமது அடிகளார் தமிழ் மொழி மாத்திரம் அறிந்த புலவர்களுக்கு ஆங்கிலக் கவிகளின் சிறப்பியல்புளைச் சுவைபெற எடுத்துரைத்து அவர்களை அக்கவிச் சுவையிலும் திளைக்கச் செய்தவர். இதனால் அடிகளாரைப் புதுமைக் கபிலர் எனப் புகழ்ந்துரைத்தேன்.

அடிகளார் கலியுக அகத்தியருமாகின்றார். அகத்திய முனிவர் முத்தமிழுக்கு முதலிலக்கணம் செய்தவர். அவற்றுள்ளே பிற்காலத்தில் தலைமயங்கிய இசைத் தமிழ் இலக்கணத்தைத் திருத்தியமைத்து, இதுதான் தமிழிசை, இவைதாம் தமிழரின் இசைக் கருவிகள், இவற்றை இயக்குவது இவ்வண்ணம்தான் என விளக்கிக்காட்டி யாழ் நூல் என்னும் முதல் நூலை ஆக்கித் தந்த அற்புத சாதனையைச் செய்தவர். இயற்றமிழ், நாடகத் தமிழ் இரண்டிலும் ஆழ்ந்து அகன்ற நுண்ணறிவாளர். இதனால்

கலியுக அகத்தியர் என அன்னாரைப் போற்றுகின்றேன்.

பைங்குயிலே, பூமி புகழும் நம் அடிகளார் சுகமே மீள்கெனக் கூவுக. தமிழ்மொழி, வடமொழி, ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு முதலிய பன்மொழிகளிற் பண்டிதரான விபுலானந்த அடிகளார் நீடு வாழ்கெனக் கூவுக பைங்குயிலே. இது முதற் பாட்டின் பொருளாகும். இன்னொரு பாட்டையும் தருகின்றேன்.

**'பாற்கடல் மீதொரு மரகத மலைதான்**
**பைம்பொற் போர்வைகொடே**
**போர்த்திய தென்னப் பொலிதிரு மேனிப்**
**புனிதத் திருவுருவான்**
**மேற்கடல் மிசையெழில் வெற்றித் திருவினில்**
**வீறு கொழும்புநகர்**
**வேந்தர் வயித்திய சாலையுளான் சுர**
**வெம்மை தணித்திடுவான்**
**நூற்கடல் அசைவில் குணக்கடல் அருள்வளர்**
**நோன்மைத் தவவலியான்**
**நோய்நலி யாதுடல் தான்மெலி யாதூன்**
**றூறாண் டுயிர்வாழ**
**நாற்கடல் உலகம் மகிழ்ந்திட நன்றே**
**கூவாய் நறுங்குயிலே.**
**நம்பன் விபுலா னந்தன் வாழ்கெனக்**
**கூவாய் நறுங்குயிலே."**

குயிலே நமது ஈழ நன்னாட்டின் மேல்பாற் கடலின் நடுவே கொழும்பு மாநகரம் காட்சியளிக்கின்றது. அது எல்லா நகரங்களையும் வென்ற பேரழகு வாய்ந்தது. அதன் மத்தியிலே அரசினர் வைத்தியசாலை அமைந்திருப்பதைக் காண்பாய்.

அதனுள்ளே சென்றால், பாற்கடல் போன்ற வெண்ணி றமான மெத்தையிட்ட கட்டிலின்மீது ஒரு மரகத மலையானது பொற்பூந் துகிலைப் போர்த்துக்கொண்டு படுக்கின்ற கரிய திருமேனியையுடைய அடிகளாரை அங்கே காண்பாய்.

நெருப்புக் காய்ச்சலின் வெம்மை தணியுமாறு அவர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார். அடிகளார் சாதாரணமானவர் அல்லர். அவர் ஒரு கல்விக் கடல், நிலை கலங்காத நற்குணக் கடல், அருட் கடல், தமக்கு வருகின்ற துன்பங்களைப் பொறுப்பவர், பிறர்க்கு துன்பம் செய்யாதவர். இதனால் தவ வலிமையிற் சித்தி பெற்ற மகான்.

நோய் நலியாமலும், உடல் மெலியாமலும் அடிகளார் பல்லாண்டு காலம் வாழ்கவென உமது மணிக் குரலால் இனிமையாகக் கூவுக. நறுங் குயிலே, கடல் சூழ்ந்த இவ்வுலக மக்கள் அழுகை நீங்கி உவகையடையும் வண்ணம் நன்றாகக் கூவுவாயாக. நமது தலைவர் விபுலானந்தர் நீடூழி வாழ்கவெனக் கூவுவாயாக நறுங்குயிலே.

தமிழன்னை ஆறுமுகநாவலரைப் பெற்ற பின் நூறாண்டு தவஞ் செய்து தேடிப் பெற்ற பெருஞ் செல்வம் நமது அடிகளார். விபுலானந்த அடிகளார் சுகமே மீள்க; நீடூழி வாழ்க எனக் கூவினால் உனக்கு இரண்டு பரிசுகளை அப்பெருந்தகையார் வழங்குவார். தமிழ் நாட்டையே நீ காணிக்கையாகப் பெறுவாய்.

“புவிக்கினி அலைத்து வறுந்தளிர் கோதி வருந்தேல் போவாயேல்
புத்தமிழ் தளைந்த முத்தமிழ் இதழுன்பொன்வாய் விருந்திடுவான்”

மாதவ விபுலானந்தர், மனம் நிறை விபுலானந்தர், மதி நிறை விபுலானந்தர், கலை நிறை விபுலானந்தர், திருநிறை விபுலானந்தர், இசைத் தமிழ் விபுலானந்தர், சுகமே மீள்க, நீடூழி வாழ்கவென இனிதே கூவுவாயாக!

வரிக்குயிலே, மாங்குயிலே, மணிக்குயிலே, கவிக் குயிலே, செழுங்குயிலே, கவின்குயிலே, மென்குயிலே, இன்குயிலே, சிறிதும் தாமதியாமற் சென்று விரைவாகக் கூவுவாயாக. இவ்வாறு நிறைவுறுகின்றது மீட்சிப்பத்து.

அடிகளாரின் நோய் நீங்கியது. என் பாட்டும் வாழ்கின்றது. என் பாட்டு அடிகளார் தந்த பாட்டு. அவர் தந்த பாட்டால் அவரைப் பாடி நானும் வாழ்கின்றேன். என் வாழ்வும் அடிகளார் தந்ததே. என்னை உருவாக்கியவர் அவர்.

# கோயில் நிர்வாகிகளுக்கு முதலிடம் சுவாமிக்கு இரண்டாம் இடமா?

## குடியாட்சி தாண்டவமாடுவதால் ஏற்படும் அதிகாரச் செருக்கு.

இனி மட்டக்களப்புச் சைவாலயங்களுக்கு வருவோம். வெருகல் தொடங்கிப் பாணமை வரையும் உள்ள இவ்வாலயங்களிலே மிகப்பல ஆலயங்களை அன்புக் கண்கொண்டு நோக்குவோர் எவரும் மனம் வருந்தாமல் இருக்க முடியாது. அங்கெல்லாம் சாதிக்குத்தான் கோயில், சாமிக்குக் கோயில் இல்லையென்பதுவே எமது அபிப்பிராயம்.

சாதியென்றால் எல்லாரும் சாதிகள் அல்லர். பேருக்கு எல்லாரும் தமிழர். எல்லோரும் சைவர். ஆனால் கோயில்களிலோ குடியாட்சி தாண்டவமாடுகிறது. பெருங்குடி, சிறுகுடி, இளங்குடி, பசுங்குடி, இப்படி எத்தனையோ குடிவகை.

இந்தக் குடிவகையைச் சேராதவர்களுக்குக் கோயில் நிருவாகத்தில் உரிமையில்லை. கும்பிடும் உரிமை மட்டும் தான். இதுபெரிய ஆசீர்வாதம் ஆனால், வரி கொடுக்கவேண்டும் வாக்குரிமை கிடையாது. இது எவ்வளவு அநீதி! இவற்றிற்கு நிவாரணமே இல்லையா?

இது நிற்க, குடி வகையைச் சேர்ந்தவர்களின் நிலையையும் ஒரு சிறிது நோக்குவோம். இவர்கள் வீட்டிலே பார்த்தால் ஒரே சாதி, ஒரே இனம், மச்சினமைக்குடி என்பார்கள். மணஞ் செய்துகொள்வார் கள். சம்பந்திகளாய் வாழ்வார்கள். சமபந்தி போசனம் பண்ணுவார்கள். சமரசமாகக் கலந்து கொள்வார்கள். ஒரு வேற்றுப் பிறிப்பும் இல்லை.

வீட்டைவிட்டு கோயிலுக்கு வந்து விட்டாலோ! சில பெருங்குடி மக்கள் உயர் சாதிச் சைவர்களாய் விடுவார்கள். அண்ணன் மக்கள், தம்பி மக்களைத் தாழ்வாக மதித்து அலச்சியம் பண்ணுவர். அக்கை தங்கையரின் மக்கள், தமயன் தம்பிகளின் மக்களைக் கீழாக மதித்து ஆலய நிருவாகத்திலிருந்து அகற்றிவிடுவர். தந்தையே தன் மைந்தனைத் தாழ்வாக அல்லது தன்னிலும் உயர்வாக மதிக்கும் நிலைமைகளையும்

மட்டக்களப்புச் சைவாலயங்களிலே தாராளமாகக் காணலாம்.

ஊரிலே பெருமதிப்புள்ள ஒருவர் சுவாமியின் திருமுன்னிலையிலே ஒதுக்கப்படலாம். ஒரு மதிப்பும் இல்லாத ஒருவர் கோயில்களிலே பெருமதிப்பும் பெறலாம். "வேலிக்கட்டைக்குப் பிறந்தாலும் போடிப்பட்டம் போகாது" என்னும் பழமொழி மட்டக்களப்புச் சமூக அமைப்பிலே பெரும்பாலும் அத்திவாரமாக நிலைபெற்றுள்ளது.

"வேரோடி விளாத்தி முளைந்தாலும் தாய்வழி தப்பாது" என்னும் பழமொழியும் இதனை வலியுறுத்துகின்றது. கோயில்களிலே தந்தையைப் பற்றிய விசாரம் அவசியமில்லை. அவர் அந்தஸ்தில் எவ்வளவு உயர்ந்த வராயிருப்பினும் அதைப் பற்றிய கவலையும் இங்கே இல்லை. தாயைப் பற்றிய கவலைதான் கோயில்களிலே தலைதூக்கி நிற்கும். தாயின்குடியே மக்கள்குடி. தாயின் கோயில் உரிமையே மக்களுக்கும் உரிமையாய் வந்து அமையும்.

ஒரு குடியையும் சேராத தாய்க்குப் பிறக்கும் பிள்ளைக்கும் கோயிற் பரிபாலன் உரிமை கிடையாது. ஆனால், அப்படிப் பிறந்த ஓர் ஆண் பிள்ளை ஏதாவதொரு குடிசைச்சேர்ந்த ஒரு பெண்ணை மணம் முடித்துப் பெற்ற பிள்ளைக்குத் தாயின் குடியே குடியாகும்.

தந்தைக்கில்லாத உரிமையை அப்பிள்ளை பெற்றுவிடும். ஒருகுடியையும் சேராத ஒரு பெண்ணின் வயிற்றுவாருக்கு திரிசங்கு சுவர்க்கமேயன்றி வேறில்லை. வயிற்றுவார் என்பது தாயின் வயிற்றிலிருந்து வருகின்ற பிற்சந்ததியைக் குறிக்கும்.

இங்கே இது பற்றி என்னையே உதாரணம் சொல்கின்றேன். எனது தந்தையார் பெரியகவுத்தன் குடியிற் பிறந்தவர். மண்டூர்க் கந்தசுவாமி கோயிலின் பரிபாலன சபைத் தலைவராக முப்பத்திரண்டு ஆண்டுகள் தொண்டு செய்தவர். எனது தாயார் அதே கோயிலின் பரிபாலன சபைத் தலைவராயிருந்த ஒருவரின் புதல்வியாவார். அவரும் பெரிய கவுத்தன் குடியைச் சேர்ந்தவரே. எனினும் கோயில் நிருவாகத்தில் எனக்கு உரிமையில்லை.

எனது தாயாரின் முதற் சந்ததியினரும் பிற்சந்ததியினரும் உயர்ந்த அந்தஸ்து உடையவர்கள். அப்பாவுக்கு முந்தியும் பிந்தியும் வாழ்ந்த பெரிய கவுத்தன்குடித் தலைவர்கள் பலர் எனது முன்மாதாக்களையும், சிறிய தாய்மாரையும், சகோதரிகள், மருமக்கள், பேர்த்திகளையும் மணம் முடித்துள்ளார்கள். ஆனால், இவர்களுக்குப்

பிறந்த பிள்ளைகளுக்குக் குடியுரிமையில்லை. கோயிற் பரிபாலன உரிமையும் கிடையாது.

எனது தாய்வழியினர்க்குக் குடியுரிமையும் கோயில் நிருவாக உரிமையும் இல்லாதிருப்பதற்குரிய மூலகாரணம் ஆராய்ச்சிக்குரியது.

இந்தக் குடியுரிமை கோயில் நிருவாகத்திலே தலைதூக்கி நிற்பதால் முற்போக்குச் சக்திகளுக்கு அங்கே இடமில்லாதிருக்கிறது. தகுதியுள்ளவர்களுக்கு உரிமையில்லை. இதனால் பல ஆலயங்களிலே நிருவாகம் சீர்கேடு அடைந்துள்ளது.

ஆலய வருமானங்கள் தனி ஒருவரின் ஆதிக்கச் சொத்தாக மாறுகின்றன. ஆண்டவன் சந்நிதியிலே பெருமை சிறுமை, உயர்வு தாழ்வு, முன்னீடு முகனை இவைகள் தாண்டவமாடுகின்றன. சுவாமியே குடியெழும்புமளவுக்கு இவைகள் உச்சநிலையடைந்து விடுகின்றது.

கோயில் நிருவாகிகளுக்கு முதலிடம், சுவாமிக்கு இரண்டா மிடமானால் சமயத்தால் என்ன பயன்? கோயிலால் என்ன பயன்? கும்பிடுவதால் என்ன பயன்? இந்தக் குடிவகை மயக்கம் தெளிந்தால்தான் சுவாமியைக் காண்பார்கள்.

வெகுதூரம் போக வேண்டியதில்லை. எனது பிறந்த ஊருக்கே வருகின்றேன். 1924ஆம் ஆண்டு நான் அப்போது இங்கில்லை இந்தியாவில் இருக்கின்றேன். மண்டூர்க் கந்தசுவாமி கோயில் தீர்த்த உற்சவம் நடக்கிறது.

தீர்த்தம் என்பது பரிசுத்தம். இருபது நாளும் நடந்த திருவிழாவில் ஆன்மா தன்னைப் பரிசுத்தம் செய்துகொண்டு சிவானந்தம் அனுபவிப்பதைக் குறிப்பது தீர்த்தத் திருவிழா. இந்தத் திருவிழாவிலே சிவானந்த அனுபவத்தை மறந்து குடியுரிமை தாண்டவமாடுவதைப் பாருங்கள்.

தீர்த்தம் முடிந்து சுவாமி சபாமண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறார். சுவாமியின் திருமுன்னிலையிலே குடியுரிமை தலைதூக்கி நிற்கின்றது. பக்த கோடிகள் மண்டபத்தின் வெளியே புடைசூழ்ந்து நிற்கிறார்கள்.

“யார்கொலோ அக்கிர பூசனைக்குரியார்?” என்னும் கேள்விக்கு அங்கே இடமேயில்லை. முன்னீடு பற்றிய வழக்கமான சம்பிரதாய மொன்று அங்கே நடைமுறையில் இருந்து வருகின்றது. அதை மாற்றியமைக்கும் அதிகாரம் ஆலய பரிபலான சபைத் தலைவருக்கு இல்லை. எனது தந்தையாரே அப்போதைய தலைவராயிருந்தார்.

சபா மண்டபத்தினுள்ளே முன் வரிசையில் முதலில் நிற்கின்றார் தந்தையார். அடுத்தாற் போல் அப்பகுதியின் வன்னிமை முதலியார் (மணியகாரர்), அதற்கடுத்தாற்போல் அப்பகுதி உடையார். இன்னும் பல பிரமுகர்கள் நிற்கின்றார்கள் .வன்னிமை முதலியாருக்குக் குடியுரிமையில்லை. அரசாங்க நிர்வாக அதிகாரி என்னும் நிலையில் மண்டபத்தினுள்ளே அவருக்கு ஓர் இடம் கிடைத்தது. உடையார் குடியுரிமையுடையவர். தலைவருக்கு அடுத்தபடியாக முன்னீடு பெருவதற்கு உரியவர். உத்தியோக முறையில் வன்னிமை முதலியாருக்கு அடுத்து நிற்கின்றார்.

அங்கே கற்பகனார் தீர்த்தச் செம்புடன் வந்து தலைவருக்கு முதலில் தீர்த்தம் கொடுக்கிறார். இரண்டாவதாக நின்ற வன்னிமை முதலியாரை விட்டு, மூன்றாவதாக நின்ற உடையாருக்கு தீர்த்தம் கொடுக்குமாறு தலைவர் கற்பகனாரைக் கேட்டுக்கொள்கிறார். வன்னிமை முதலியார் நிற்க உடையார் தீர்த்தம் பெருகிறார். உடையார் தீர்த்தம் பெற்ற பின்பு அவரின் மேலதிகாரிக்குத் தீர்த்தம் கிடைக்கிறது. இந்தக் குடிமுறைச் சம்பிரதாயத்தின் பின்விளைவை இனி நோக்குவோம். முதலியாருக்கு அதிகாரச் செருக்குத் தலைக்கேறி விட்டது. நான் நிற்க, என்னை மதியாமல் என் கீழ்ச் சேவகஞ் செய்யும் உடையாருக்கு முதல் தீர்த்தம் கொடுப்பதா? இதோ ஒரு கை பார்க்கின்றேன் எனக் கொதித்து எழும்புகிறார்.

பஞ்சபாண்டவர் செய்த இராசசூய யாகத்திலே கண்ணபிரான் அக்கிரபூசனை (முன்னீடு) பெற்றதைப் பொறாமல் சீறியெழுந்த சிசுபாலனைப் போலாகிவிட்டார் முதலியார். ஆனால், சிசுபாலைப் போல் முட்டி மோதிக்கொள்ளவில்லை. சீறியவர் ஆறிக் கொண்டு வெளியேறுகிறார்.

ஆலய பரிபாலன விதானைமார் சிலர் இருப்பதை முலியார் அவதானிக்கிறார். சபைத் தலைவரின் தம்பியார் ஒருவர் உடையாராய் இருப்பதையும் கவனிக்கிறார். தமது தம்பி ஒருவர் மட்டக்களப்புக் கச்சேரியில் உயர்தர அதிகாரியாய் இருப்பதையும் நோக்குகிறார். அந்தரங்க ஆலோசனை நடக்கிறது.

முதலியாரின் பஞ்சதந்திர விளையாட்டினால் ஆலய பரிபாலன சபை அவர் வசமாய் விட்டது. தலைவர் தனித்துக்கொண்டார். விசாரணைச் சபையொன்று நியமனமாயிற்று. தலைவர் விசாரணைச் சபைமுன் சமுகமளிக்கவில்லை. அவர் ஒரு விவாகப் பிறப்பு இறப்புப் பதிவுகாரர்.

பதிவுகார பதவியிலிருந்து அவரை தக்காலிகமாக நிறுத்துகிறார்கள். அவர் அசையவில்லை. பதிவுகாரர் பதவி மீண்டும் அவரைத் தேடி வருகிறது. என்ன நடந்தும் விசாரணைச் சபை முன் சமுகமளிக்கத் தலைவர் ஒரேயடியாக மறுத்துவிட்டார்.

முதலியாருக்கு ஒரு வழியும் தெரியவில்லை. கடைசியாகத் தலைவரின் தம்பியின் உடையார் வேலையிலே அவர் கைவைத்து விட்டார். உடையார் தமயனிடம் அடைக்கலம் புகுகின்றார். தம்பியின் வேலைபறக்கப் போகிறதேயென்ற கவலையால் தமயன் விசாரணைச் சபை முன் சமுகமளிக்கின்றார். மேல் என்ன நடந்ததென்பதை அடுத்த கட்டுரையிற் பார்ப்போம்.

# அறநிலைய நிதி நிருவாகச் சட்டம் அவசியம் இந்து ஆலயங்கள் சீராகச் செயற்படுவதற்கு

விசாரணைச் சபையில் கிறிஸ்தவர் ஒருவரும் அங்கம் வகிக்கிறார். இது சட்டவிரோதமானது. இதைவிட முதலியாரின் தம்பிக்கு ஓர் இடம் கிடைக்கிறது.

விசாரணையிலே சமாதானம் ஏற்படாவிடின் முதலியாரின் கட்சி நீதிமன்றத்துக்குப் போய் நிவாரணம் பெறவேண்டும். இது பெரும் பொருட் செலவும், நீண்ட காலக் கழிவும், மனக் கசப்பும் உண்டாகக் காரணமாகும். எதிர்பாராத பலனைப் பெறுவதிலும் நிச்சயமில்லை.

இந்தச் சூதாட்டச் சூழ்நிலையிலே தலைவரின் தம்பி உடையார், முதலியார் கையிற் பகடைக்காயாகி விடுகிறார். தலைவர் பதவிக்கு ஒரு பொம்மையைத் தெரிவு செய்யும் தந்திரோபாயம் நடக்கிறது. இதற்கேற்ப விசாரணைச் சபையினர் ஓர் அறிக்கையைத் தயாரிக்கிறார்கள்.

தலைவர் பதவி மண்டூர்ப் பெரியகவுத்தன் குடியாருக்கே உரியது. அந்தக் குடியைச் சேர்ந்தோர் தலைவரை தெரிவு செய்யும் உரிமையுடையர். ஆனால் ஒன்றின் மேற்பட்ட வேட்பாளர்கள் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டால், வாக்குப் பலத்தைக் கவனியாமல் ஆலய பரிபாலன சபை அங்கத்தினர்கள் குறித்த வேட்பாளர்களுக்குள்ளே தாம் விரும்பிய ஒருவரைத் தலைவராகத் தெரிந்து கொள்ளலாம். விசாரணைச் சபையினரின் அறிக்கை இவ்வாறு சொல்கிறது. எந்த நாட்டிலும் காணக் கிடையாத அகட விகட ஜனநாயக முறை இது. தலைவர் இந்த அறிக்கையை ஒப்பவில்லை.

தந்தையார் கபடமில்லாதவர். அவர் ஒரு "சுத்தாத்துமா" என்று மூன்றாவது கட்டுரையில் கூறியிருக்கின்றேன். ஆனால், தம்பிமாரின் சொல்லைத்தட்டி நடக்கமாட்டார். தலைவர் கையொப்பம் போடாவிட்டால் சமாதானம் உண்டாகாது. முதலியார் கட்சியினர் கோட்டுக்குப் போக வேண்டும்.

முதலியார் கையிலே தப்பாத ஆயுதமொன்று இருக்கிறது. அது தான் தலைவரின் தம்பி உடையார். உடையாரின் சகோதர பாசத்தை தமக்குச் சாதகமாக ஏவுகிறார் முதலியார். உடையார் ஒரு விவேகி. முதலியார் அவ்வளவு படித்தவரல்லர். கள்ளோட்டம் ஓடுவதில் வல்லவர். உடையாரின் விவேகம் முதலியாரின் அதிகாரத்துக்கும் கள்ளோட்டத்துக்கும் அடிமையாகிவிட்டது. தமயனிடம் செல்கிறார் அவர்.

"அண்ணா இது தலைபோகிற அலுவலாய் வந்துவிட்டது. நீங்கள் வந்து விசாரணைச் சபை அறிக்கையில் கையொப்பம் போடா விட்டால் முதலியார் எனது உடையார் வேலையிலே கைவைத்து விடுவார். மற்றது ஒருவரும் தம்மை மிஞ்சிப்போக விடமாட்டார். இந்த அறிக்கை நம்மை ஒன்றுஞ் செய்யாது. வாருங்கள் விசாரணைச்சபை முன் போவோம்"

இவ்வாறு தம்பி தமயனைப் பிடித்துக் கொண்டார்.தம்பி முதலியாருக்குள்; தமயன் தம்பிக்குள் கட்டுப்பட்டுவிட்டார்கள்.

**'ஒண்பொரு ளாவதையா உடற்பிறப்பு."**
**'எம்பியை இங்குப் பெற்றேன்."**
**'என் எனக்கரியது."**

இந்த நம்பிக்கையுடன் சென்று அறிக்கையிலே ஒப்பம் வைத்து விட்டார் தலைவர். இந்த ஒரு கையொப்பத்தால் எல்லாம் தலைகீழாகி விட்டது. கீழ் மேல், மேல் கீழ் என்னும் ஓர் அவல நிலை தாண்டவமாடு கின்றது. எல்லா மதிப்புடனும் தலைமை தாங்கிவந்த ஓர் குலத்தினர் தலைமைப் பதவிக்காகப் பரிபாலன சபை முன்னே ஏக்கடைந்து (தாழ்ந்து) நிற்க வேண்டிய இழிநிலைக்கு உள்ளாகி விட்டனர். இதுபற்றி நான் இனிச் சொல்வதை வாசக நேயர்கள் இன்னும் சற்றே அவதானிக்க வேண்டுகின்றேன்.

1931ஆம் ஆண்டு முடியுமட்டும் இந்த அறிக்கை நடைமுறைக்கு வரவில்லை. 1932ஆம் ஆண்டு தொடக்கத்தில் எனது சிறிய தந்தையார் உடையாரின் மறைவு நிகழ்ந்தது. அவரைத் தொடர்ந்து அடுத்த மாசத்தில் எனது தந்தையாரின் மறைவும் சம்பவித்து விட்டது. சகோதர உதிரபாசத்துக்கு இது ஓர் உதாரணமாகும்.

தந்தையாரின் பிரிவினால் ஆலய பரிபாலன சபையின் பதவி காலியாகிவிட்டது. தலைவரால் தேர்தலுக்காக ஒருநாள் குறிப்பிடப்பட்டது. இரண்டு வேட்பாளர்கள் முன்னிற்கிறார்கள். ஒருவர் மாத்திரம் அபேட்சகராய் நின்றால் வாக்கெடுப்பு இல்லாமலே அவர் தலைவராக

அங்கீகரிக்கப்படுவார். இரண்டு அபேட்சகர் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டதால் வாக்கெடுப்பின் மூலம் இதற்கு முடிவு காண வேண்டும்.

இதன்படி மகாசபைத் தலைவர், நிருவாகத்தலைவர் தேர்தலை வாக்கெடுப்புக்கு விடுகிறார். ஒருவர் ஐம்பத்திரண்டு வாக்குகளையும், மற்றவர் பதின்மூன்று வாக்குகளையும் பெறுகின்றார்கள். தேர்தல் முடிவில் நிர்வாக சபை அங்கத்தவர் ஒருவர் எழுந்து பதின்மூன்று வாக்குகளைப் பெற்றவரையே நிருவாகத் தலைவராக நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் என்று ஆணையிட்டார். அவரே தலைவரானார். இந்தத் தேர்தல் முறைக்கு "அப்பீல்" கிடையாது.

இது ஜனநாயகமா? ஏதேச்சாதிகாரமா? சர்வாதிகாரமா? என்று கேட்டால் இதுதான் அநாகரிக ஜனநாயகம் என்று நான் சொல்வேன். இந்த அநாகரிகத் தேர்தல் முறை நாகரிக உலகில் தில்லைமண்டூர்த் திருமுருகன் சன்னிதியில் இன்றும் பகிரங்கமாக நடந்துவருவது எந்த நாட்டிலும் நடவாத அநீதியாகும். வெட்கம்! வெட்கம்!

வேட்பாளர்களுள்ளே தமக்கு விருப்பமான ஒருவரை வாக்கெடுப்பில்லாமலே பரிபாலன சபையார் தெரிந்து கொள்ளக் கூடுமானால் ஜனநாயத்துக்கு இந்த அவமானம் ஏற்படமாட்டாது. வாக்காளர்களுக்கும் அவமதிப்பு உண்டாகாமல் பாதுகாத்துக் கொள்ளமுடியும். எல்லா அவமானமும் நமது முதலியாருக்கே சன்மானமாகட்டும். முதலியார் ஒரு சிவ பூசைக்காரர். அர்த்தமில்லாத சிவபூசை.

நமது சைவக் கோயில்களிலே இடம்பெற்றுள்ள முன்னீடு முகனை (முதன்மை) முறையானது எவ்வளவு பாரதூரமான விளைவுகளுக் குரியதாகும் என்பதை நாம் உணர்ச்சியுடன் கருத்திற் கொள்ள வேண்டும். இதைக் கருத்திற் கொண்டு 1940ஆம் ஆண்டில் நான் பாடிய இரண்டு பாடல்களை இங்கே தருகின்றேன்.

**'சாதி சமயம் கடந்தநின் சன்னிதியில்**
**சாதிமதம் பேசிநிற்பார் தம்மனத்தே-சோதி**
**வடிவே லெறிந்து மனவிருளைத் தேவே**
**விடிவேசெய் யாயோ விரைந்து"**

**'சாதித் திமிரோடுன் சன்னிதியிலே முருகா**
**வாதித் ததிகாரம் வாய்பேச - மோதிச்**
**செருக்கோடு நிற்பாரைச் செவ்வேலால் நெஞ்சத்**
**திருக்கோட்டி யாள்வாய் தினம்"**

திருக்கு - மாறுபாடு.

இந்த முன்னீடு முகனையால் சாதித் திமிரால் குடியுரிமையால் நமது சைவாலயங்களில் எத்தனை பிணக்குகள்? எத்தனை கொலைகள்? எத்தனை வழக்கு? எத்தனை கணக்குகள்? எத்தனை பண மோசடிகள்? எவ்வளவு காலம் கழிவு? எவ்வளவு கடன் தொல்லை? இத்தனையும் யார் மத்தியில்? ஒரே இன சனத்துக்குள், ஒரே குடிக்குள் எங்கேயோ அன்னியர் மத்தியில் இல்லை. இவைகளெல்லாம் சுவாமியின் பேரால், சமயத்தின் பேரால் நடக்கும் அட்டூழியங்கள். சமயம் எங்கே நாம் எங்கே?

சில ஆண்டுகளின் முன் ஒருநாள் முற்பகல் பத்து மணியளவில் மட்டுநகர் நீதிமன்றக் காரியாலயத்துக்கு நான் போயிருந்தேன். அங்கே எனது பழைய மாணவர் ஒருவர் உதவிப் பதிவாளராயிருக்கிறார். அவரது மேசையின் முன்னே மூன்று, நான்கு பேர் சூழ்ந்து நிற்கிறார்கள். ஒருவர் ஒரு கோயில் வண்ணக்கர் (Trustee).

என்னைக் கண்டதும் எனது மாணவர் எழுந்து மரியாதை செலுத்திக்கொண்டு, ஐயா, நீங்கள் வகுப்பிலே சொல்லித்தந்த ஒரு பாட்டைப் படித்துக்காட்டி இவரைக் கேலிபண்ணுகிறோம் என்று அந்த வண்ணக்கரைச் சுட்டிக்காட்டினார். வண்ணக்கர் எனக்கு நண்பர். ஒரு சட்டத்தரணியின் லிகிதருமாவார். இதனால், நீதிமன்றத்தில் எல்லாருக்கும் தெரிந்தவர். முகத்திலே நாணத்தின் சாயல் தோன்ற அவர் அங்கே நிற்கிறார். பாட்டை எனக்கும் சொல்லுங்கள் என்று நான் கேட்டதும் எனது மாணவர் தங்குதடையின்றி உடனே,

**'கோயில் நிலங்கொடுத்துக் குத்தகையை வாங்கித்தம்**
**வாயிலிடும் வண்ணக்கு மார்தலைமேல் - போயிடிதான்**
**வீழாதோ? சுற்றம் மிடியும் பிணியுமுற்றுத்**
**தாழாதோ? தெய்வமிருந் தால்"**

என்று பாடிக் காட்டினார்.

இருபது வருடத்தின் முன்பு வகுப்பிலே பாடிய பாட்டு. நான் எழுதிவைக்கவில்லை. மாணவரின் கையாலேயே அதைப் பிரதி பண்ணிக்கொண்டு எடுத்துச் சென்றேன். குறித்த நாளில் இந்தச் சந்திப்புக் கிடைத்திராவிடின் இப்பாட்டு எனக்குக் கிடைத்திராது. இங்கே அதைப் பயன் செய்திருக்கவும் முடியாது. இப்படி எத்தனையோ பாடல்கள். என் பாடல்களை வைத்திருக்கும் தமிழன்பர்கள் எனக்கு ஒவ்வொரு பிரதி அனுப்பி வைத்தால் உபகாரமாகும்.

இவைகளையெல்லாம் மனத்திற்கொண்டு 1974ஆம் ஆண்டு

இந்து அறநிலைய நிதி, நிருவாகச் சட்டம் ஒன்று கொண்டு வருவதற்காக இந்து சமய விவகார ஆலோசனைச் சபை மூலம் நாங்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தோம்.

சட்ட நிபுணர்களைக் கொண்டு நகல் சட்டமும் தயாரிக்கப்பட்டது. குறித்த நகல் சட்டம் கௌரவ கலாசார அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. தகுதிவாய்ந்த இந்து சமயத் தலைவர் சிலரின் எதிர்ப்பே இதற்குக் காரணமாகும். பெரியவர்கள் நமது ஆலய நிதி நிருவாகச் சீர்கேட்டைக் கண்விழித்துப் பாராதிருக்கும் போது நாம் என்ன செய்ய முடியும்?

இனி, அடுத்த கட்டுரையில் ஆலய நிருவாகத்தைப் பரவலாக்கு வதிலும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஒதுக்கப்பட்டவர்களுக்கும் உரிமை பெற்றுக் கொடுப்பதிலும் நான் செய்த சேவைகளைப் பற்றிக் கூறுகின்றேன்.

# சம உரிமை நிலவும் நாட்டில்தான் தார்மீக சமுதாயம் உருவாகும்

நான் இங்கே சொல்லப்போகும் சம்பவங்கள் புரட்சிகரமானவை. இவை ஆன்மீகப் புரட்சியும் சமூகப் புரட்சியுமாகும். பழம் பெருமை பேசும் பெருங்குடி மக்கள் சிலருக்கும், வறண்ட தத்துவம் பேசும் மதவாதிகள் சிலருக்கும் இவை கசப்பாய் இருக்கலாம். உண்மையான சமய, சமூக சீர்திருத்தத்தை விரும்பும் விசாலமான மனப்பான்மையுடைய நன் மக்களுக்கு இவை இனிப்பாயிருக்குமென நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

உலக மக்கள் யாவரும் உடலாலும் உயிராலும் ஒரே அம்சமாகப் படைக்கப்பட்டுள்ளார்கள் என்னும் அடிப்படை உண்மையிலே அசையாத நம்பிக்கை கொண்டவன் நான்.

சகலருக்கும் சமசந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். சமத்துவ நிலைக்கு உயர்த்த வேண்டும். அவர்கள் சமரசம் அனுபவிப்பதை நாம் கண்டுகளிக்க வேண்டும். யார் விரும்பாவிடினும் எல்லா மக்களும் இந்த உயர்நிலையினைப் படிப்படியாக அடைந்தே விடுவார்கள் என்பதில் ஐயமில்லை; சிறிதும் இல்லை.

இந்த அடிப்படையிலேயே மனித சேவை ஆரம்பிக்க வேண்டும் எந்த ஒரு மனிதனும், எங்கேனும் ஒடுக்கப்பட்டவனாக, ஒதுக்கப்பட்டவனாக இருக்கும் வரை விசாலமான ஒரு உலகத்தைக் காண முடியாது. எல்லா இன மக்களும் சம அந்தஸ்தும், சம உரிமையும் பெற்று வாழ்கின்ற ஒரு நாட்டிலேதான் தார்மீக சமுதாயமொன்றை நாம் காணமுடியும்.

தார்மீக சமுதாயமொன்று கறுப்பு வெள்ளையும் சேர்ந்த ஒரு சாசனத்தினால் மாத்திரம் உண்டாகிவிடாது. அது மனிதனுடைய மனதிலிருந்து தோன்ற வேண்டும். பாடசாலையிலும், கோயில்களிலுமே தார்மீக சமுதாயம் முதலில் அரங்குரார்ப்பணமாக வேண்டும். அங்கே அது வேரூன்றித் தழைத்துக் கிளைத்து வளர்ந்தால் மாத்திரமே நாடு

முழுவதிலும் அது நிழல் பரப்பிக் குளிர்ச்சி தரும்.

இந்தச் சேவையிலே ஆசிரியர்களும் மாணவர்களும் தங்கள் பங்கை நிறைவேற்றி வைக்கட்டும். சமூக சேவையாளர்கள் தங்கள் பங்கை நிறைவேற்றி வைக்கட்டும். அரசியல்வாதிகள் தங்கள் பங்கை நிறைவேற்றி வைக்கட்டும். ஆலய தர்மகர்த்தர்களும் நிருவாகப் பெருங்குடி மக்களும் தங்கள் பங்கை நிறைவேற்றி வைக்கட்டும் சேவை முற்றமுடிய நிறைவேறி ஒரு தார்மீக சமுதாயம் நாட்டிலே நிலைகொள்வதை நாம் கண்டுகளிப்போம்.

பதினொரு ஆலய விசாரணைச் சபைகளுக்கு அவ்வப் போதிருந்த அரசாங்க அதிபர்களால் நான் அங்கத்தவராக நியமனம் பெற்றுள்ளேன். அநேகமாக எல்லாப் பிணக்குகளையும் சமாதானமாகத் தீர்த்து வைப்பதில் நான் கையாண்ட புரட்சிகரமான முறைகளை விசாரணைச் சபைகளின் ஏனைய அங்கத்தவர்களும் வியந்து பாராட்டியிருக்கிறார்கள். ஆயினும், விசாரணைச் சபை அறிக்கைகளிலே என்னைப்பற்றி ஒரு சொல்லாவது விசேஷமாகக் குறிப்பிடுவதற்கு நான் அனுமதிக்கவில்லை.

இங்கே மூன்று சம்பவங்களை வாசக நேயர்களுக்குத் தருகின்றேன். நான் எங்கேயோ போகின்றேன் என்று நினைக்க வேண்டாம். மட்டக்களப்பிலுள்ள சாய்ந்தமருதூரை யாழ்ப்பாணத் திலுள்ள கரவெட்டி துன்னாலையுடன் இணைக்கப் போகின்றேன்.

*1923*ஆம் ஆண்டில் எனது சிறிய தந்தையார் ச. கார்த்திகேசுப் பாதிரியார் கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் தேவாலயத்தின் பொறுப்பாளராய் இருந்தார். நான் அடிக்கடி அங்கே போய்த் தங்குவது வழக்கம். அங்கே கரவெட்டியைச் சேர்ந்த எஸ். மயில்வாகனம் என்னும் இளைஞரொருவருடன் எனக்கு நண்பு உண்டாயிற்று. அவர் எஸ். எஸ். சி. பரீட்சையிலே சித்திபெற்றவர். எழுதுவினைஞர் பரீட்சை எழுதிவிட்டு அதன் பெறுபேற்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். பொழுது போக்குக்காக அவர் அதிகம் என்னிடம் வருவார்.

ஒருநாள் இரவு. பூரணை நிலவு. மயில்வாகனம் என்னோடு தங்கிவிட்டார். கட்டைவேலித் தேவாலயத்தின் அடித்தளம் மிகவும் உயரமானது. மூன்று படிகள் ஏறித்தான் முன் "விறாந்தை" யிற் கால் வைக்கவேண்டும். முன் இரண்டு படிகளின்மேல் இரண்டு "வாங்கு" களை இணைத்துப் போட்டுக் கொண்டு மயில்வாகனம் படுக்கிறார். நான் மேலே விறாந்தையிற் படுக்கிறேன். எங்கள் இருவருக்கும் இடையே மூன்றாம் படி இடைவெளியாகக் கிடக்கிறது.

மட்டக்களப்புச் சைவக் கோயிற் கதை சொல்லவந்த இடத்திலே இதென்ன கட்டைவேலிக் கிறிஸ்தவ கோயிற்கதை என்று கேட்க வேண்டாம். சற்றே பொறுத்துக்கொளுங்கள் வாசகர்களே!

நடுச்சாமம் பன்னிரண்டு மணியிருக்கும். பட்டப் பகல்போன்ற வெண்ணிலவு. "ஓரகப்பைப் பாலாலே ஊரெங்கும் கலியாணம்" என்று இந்த நிலவை வருணிப்பார்கள். நாங்கள் இருவரும் ஆழ்ந்த நித்திரை. ஓர் அரவம் கேட்கிறது. உண்மையில் அரவம்தான். பனை மரத்திலிருந்து விழுகின்ற ஒரு காவோலை மரத்தை உரஞ்சிக்கொண்டு கீழேவந்து விழுந்தது போன்ற ஓர் அரவம். தூக்கம் கலைந்து நான் கண் விழித்துப் பார்த்தேன்.

பார்க்கப் பயம். இடைவெளியாகக் கிடந்த படியின் மீது ஒரு பெரிய நாகப் பாம்பு. இல்லை நல்ல பாம்பு படமெடுத்துக் கொண்டு நிற்கிறது. ஒரு பக்கம் நான். மறுபக்கம் மயில்வாகனம். நடுவே நல்லபாம்பு. தமது உல்லாசப் பிரயாணத்தை நாங்கள் தடைசெய்து விட்டோம் என்ற சீற்றத்தால் அது எழுந்து நிற்கிறது. அதன் சீறரவந்தான் என்னைத் துயிலெழுப்பியது.

ஒன்றும் பேசமுடியாத நிலை. மயில்வாகனத்தை எழுப்பினால் நிச்சயம் அவர் பாம்பின் மேல் காலை வைத்து விடுவார். நான் இரங்குதற்குரிய பெரிய பிழையைச் செய்தவனாவேன். சமயோசிதமாக விரைந்து தொழில் செய்ய வேண்டும்.

நான் மெதுவாக எழுந்து மறுபக்கமாக விரைந்து சென்று மயில்வாகனத்தின் கையைப்பிடித்துக் கறகறவென்று இழுத்துச் சென்றதும் மயில் பயந்து கண்விழித்துக்கொண்டார். பாம்பு பயந்து ஓடிவிட்டது.

மயிலிருக்குமிடத்துக்கு நாகபாம்பு தெரியாமல் வந்து உயிர் தப்பி விட்டது என இந்த நிகழ்ச்சியைப் புனைந்துரைத்தாலும், நாங்கள் இருவரும் ஒரு பெரிய ஆபத்திலிருந்து தப்பிவிட்டோம் என்பதுதான் உண்மை. இச்சம்பவத்தால் நாம் இருவரும் திருந்தி நடப்பதற்குத் தெய்வம் ஒரு சந்தர்ப்பம் தந்திருக்கிறது என நான் மயில்வாகனத்துக்குக் கூறிய சொற்கள் அரைநூற்றாண்டு சென்றும் இன்னும் என் நினைவில் இருக்கின்றன.

நான் மட்டக்களப்புக்கு வந்துவிட்டேன். அதன் பின் ஒருவரை ஒருவர் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. நீண்டகால இடைவெளி. இருவரும் நடுவயதைத் தாண்டிவிட்டோம். ஒருநாள் அம்பாறைக்

கச்சேரியிலிருந்து கடிதமொன்று வந்தது. திறந்து பார்த்தேன்.

கட்டைவேலிப் பழைய நண்பன் மயில்வாகனம் அம்பாறைக் கச்சேரிக் காரியாலய உதவியாளராக (ஒ. ஏ.) வந்திருக்கிறேன். நாம் இருவரும் விரைவில் சந்திக்க வேண்டும். அதற்கு ஒரு வசதியையும் செய்கின்றேன். சாய்ந்தமருதூர் பிரதான வீதியிலுள்ள ஆலய நிருவாகம் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி அரசாங்க அதிபர் ஒரு விசாரணைச் சபையை நியமிக்கின்றார். நானும் அங்கம் வகிக்கிறேன். இருவரும் அங்கே சந்திப்போம். இதுதான் கடிதத்தின் சாரம். வியப்பும் நயப்பும் தோன்றக் கடிதத்தை வாசித்து உடனே பதிலும் அனுப்பிவிட்டேன். இங்கேதான் எனது முதலாவது புரட்சி ஆரம்பமாகிறது.

ஆலய விசாரணைச் சபையில் இருவரும் சந்திக்கலானோம். "பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமா" என்பது போலாயிற்று எங்கள் சந்திப்பு. இனி ஆலய நிர்வாக நிலைமையை நோக்குவோம்.

குறித்த ஆலய பரிபாலனம் பூரணமாக முக்குவ வகுப்பினரின் ஆதிக்கச் சொத்தாகவே உரிமை பாராட்டப்பட்டு வந்தது. சாய்ந்தமருதூரில் முஸ்லிம் மக்களே மிகப் பெரும்பான்மையினராக வாழ்கின்றார்கள். தமிழ்ப் பற்றும், தமிழறிவும், தமிழ்ப் பண்பும், தமிழருடன் அன்பு கெழுமிய நண்பும் உடையவர்களாக இங்குள்ள முஸ்லிம் மக்கள் வாழ்ந்திருந்த போதிலும் தங்கள் மத்தியில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கும், சைவாலயங்களுக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்போ, வளர்ச்சியடையும் வாய்ப்போ, மதிப்போ கொடுக்கவில்லை என்பதே எனது கருத்தாகும்.

இந்தச் சூழ்நிலையிலே அங்கு வாழ்ந்திருந்த தமிழ் மக்களும் தமக்குள்ளே இன ஒதுக்கல் கொள்கையைக் கடைபிடித்து வந்தமையால் அவர்கள் பெருகுவதற்குப் பதிலாக அருகிக் குறைந்து போகும் நிலையினை அடையலாயினர். ஆயிரக் கணக்கான முஸ்லீம் மக்கள் வாழ்கின்ற கிராமத்தில் பன்னிரண்டுபேர் முக்குவர். நாற்பத்தைந்து பேர் சலவைத் தொழிலாளர். ஆலய விசாரணையின் போக்கையும், நோக்கையும், அதன் புரட்சிகரமான தீர்ப்பையும் அடுத்த கட்டுரையிலே படித்துப் பாருங்கள்.

## இன ஒதுக்கல் கொள்கைக்கு முற்றுப்புள்ளி. ஆலய நிருவாகமும் பரவலாக்கப்பட்டது.

முக்குவர் பன்னிரண்டு பேர். சலவைத் தொழிலாளர் நாற்பத்தைந்து பேர். ஆலய பரிபாலனம் முழுவதும் பல நூற்றாண்டு காலமாக முக்குவர் கையிலேயே இருந்து வருகிறது. சலவைத் தொழிலாளருக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாது. என்ன நடக்கிறது என்று கேட்கவும் முடியாது. கேட்கும் உரிமையில்லை.

வரி கொடுக்க வேண்டும். உள்படு கருமங்களிற் பங்குகொள்ள வேண்டும். கட்டாடி! தண்டற்காரன்! என்று கூப்பிடும்போதெல்லாம் காலடியில் நிற்க வேண்டும். கடுஞ் சொல்லும் கேட்க வேண்டும். கடமை மட்டும் இருக்கிறது, உரிமை இல்லை எவ்வளவு காலத்துக்கு? படித்து நாகரிகம் அடைந்த பின்புமா?

விசாரணையின் போது முக்குவர் தலைவர் ஊர்ப் போடியார் சீனித்தம்பி என்பவர் ஒரு வழிக்கும் வருவதாகக் காணவில்லை. பழைய குடிவகை மயக்கம் அவரை ஆட்கொண்டு விட்டது. எல்லோரும் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியைத் தாண்டிவிட்டார்கள். அவர் மாத்திரம் இன்னும் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பழைய பல்லவியையே பாடிக் கொண்டு நிற்கிறார். இவரை நோகாமல் ஒரு வழிக்குக் கொண்டுவர வேண்டும். போடியார் வஞ்சகமில்லாத ஒரு பேர்வழி. நான் நம்பிக்கை இழக்கவில்லை.

விசாரணைச் சபைத் தலைவரிடம் நான் ஓர் அனுமதி வேண்டினேன். அனுமதி கிடைத்தது. அதன்படி நான் ஊர்ப் போடியாரைத் தனிமையாக அழைத்துச் சென்று அந்தரங்க ஆலோசனை நடத்தினேன். ஆலய நிருவாகச் செயலாளரும் அதிற் கலந்துகொண்டார். செயலாளர் ஓர் இளைஞர். முக்குவ வகுப்பினர். அவர் ஒரு கிராமத் தலைவருமாவார்.

நான் சொன்னேன் “காலம் மாறிவிட்டது. நாம் விரும்பாத எத்தனையோ சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. காலத்துக்கேற்ப

நாம் நெகிழ்ந்து கொடுக்க வேண்டும். நாம் ஒருவர் மற்றவரை மதித்து நடத்தால் எவ்வளவு நன்மை வரும். தெய்வத்தின் முன்னிலையில் எல்லாரும் சமம்.

"சலவைத் தொழிலாளிகள் தமது சேவையால் நம்மை சிறப்பிக்க, நாம் அவர்களைப் புறக்கணித்து வாழ்வது தருமமல்ல. அவர்களுக்கும் ஒரு இடம் கொடுங்கள்."

இவ்வாறு நான் சொன்னதும் விதானையார் மனம் இளகிவிட்டார். தலைவர், காரியதரிசிப் பதவிகள் எங்களோடிருக்கட்டும். தனாதிகாரிப் பதவியை விட்டுக் கொடுக்கிறோம். எங்கள் சாதியாருக்கு நாங்கள் மறுமொழி சொல்ல வேண்டியிருக்கும் என்று அவர் தயக்கத்துடன் சொன்னார். சாதிக்காரரை நான் சமாளித்துக்கொள்வேன். விதானையார் சொன்ன படியே செய்வோம் என்று ஊர்ப்போடியார் சீனித்தம்பியும் ஒப்புக்கொண்டு விட்டார்.

இந்தப் புரட்சிகரமான முடிவுடன் நாங்கள் மூவரும் விசாரணைச் சபைமுன் சென்றோம். எங்கள் சுமுகமான முடிவை எங்கள் முகங்களே முன்னறிவிப்புச் செய்துவிட்டன. விசாரணைச் சபைக்கும், அங்கு குழுமியிருந்த மகா சபைக்கும் எங்கள் சமாதானத்திட்டத்தை வெளியிட்ட போது இளைஞர்கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அதற்கு வரவேற்புத் தெரிவித்தார்கள்.

உடனே நாங்கள் விசாரணையை முடித்துக் கொண்டு எங்கள் சமாதானத் திட்டத்தைத் தயாரித்து இரு கட்சிக்காரரிடமும் ஒப்பம் பெற்று எங்கள் கையொப்பமும் இட்டு, அதற்கேற்ப அப்போதே புது நிருவாகத்தையும் அமைத்துவைத்து நன்றியும் கூறி, நன்றியும் பெற்றுக் கொண்டோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் விசாரணைச் சபைத் தலைவர் திரு. எஸ். மயில்வாகனம் அவர்களுக்கு இரண்டு மகிழ்ச்சி பிறந்து விட்டது. முப்பது ஆண்டுகளின் பின் என்னைச் சந்தித்த மகிழ்ச்சி, எங்கள் முதல் முயற்சி சமாதானம் செய்வதில் வெற்றிபெற்ற பெருமகிழ்ச்சி. எங்கள் நட்பினை நினைந்து நானும் மகிழ்கின்றேன்.

**'நீடுதற்குத் தக்கதுநன் னெறிநின்றோர் நட்பொன்றே,**
**தேடுதற்குக் கிடையாத திரவியமும் அஃதாமால்"**

பெரிய போரைதீவு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய விசாரணைச் சபைக்கு இனி வருகின்றேன். இந்த ஆலோசனைச் சபையில் அங்கம் வகிக்குமாறு நாங்கள் மூன்று பேர் கேட்கப்பட்டோம். திரு. வி. உ.

குருகுலசிங்கம், திரு. எஸ். பொன்னம்பலம், மாவட்ட நீதி மன்றத்தின் முதலியார், நான். திரு. குருகுலசிங்கம் என்னைச் சந்தித்து, பெரிய போரைதீவு, முனைத்தீவு வாசிகள் இலங்கையிலேயே அதிகம் தந்திரம் படித்த மக்கள். நாம் அவர்களுடன் சரிக்கட்டிக் கொள்ள மாட்டோம். விசாரணைச் சபையில் அங்கம் வகிக்காமல் மரியாதையாக விலகிக் கொள்வோம் என்று சொன்னார்.

குருகுலசிங்கம் சாதாரணமான ஒரு பேர்வழியல்லர். அவர் நீதிமன்றத்து முதலியாராய், செயலாளராய், கச்சேரி ஓ. ஏ. யாய்ப் பதவி வகித்து இளைப்பாறிய மதிப்புக்குரிய பிரமுகர். ஆலய விசாரணைச் சபைகள் பலவற்றுக்குத் தலைமை தாங்கிச் சமாதானம் செய்துவைத்த அனுபவசாலி. குருகுலசிங்கமே இப்படிச் சொல்லுமளவுக்கு வந்துவிட்டால் இந்த ஆலய விசாரணையைத் தலைமை தாங்கி நடத்த இனியார் முன்வரப் போகிறார்?

நான் சொன்னேன். "இலேசாக வழிக்கு வரக் கூடியவர்களை வசப்படுத்துவது கெட்டித்தனமல்ல. அதை எவரும் செய்யலாம். விடாத கண்டர்களையும், கொடாத கண்டர்களையும் விட்டுக் கொடுக்கச் செய்வதிலேதான் நமது திறமையைக் காட்டவேண்டும். தெய்வம் துணை செய்யும்.

"ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். பிரச்சினையை இலேசாகத் தீர்த்துவிடலாம். விசாரணைச் சபையில் அங்கம் வகிக்கச் சம்மதம் என்று அரசாங்க அதிபருக்கு எழுதி விடுவோம் முதலியார் பொன்னம்பலத்துக்கும் நமது தீர்மானத்தைச் சொல்லி விடுங்கள்."

நான் இதைச் சொன்னதும் சிங்கத்தாருக்கு நம்பிக்கை பிறந்து விட்டது. "சரி நீங்கள் சொன்னபடியே செய்வோம். நான் இன்றைக்கே ஜீ. ஏக்கு எழுதியிருக்கிறேன். நீங்களும் எழுதிவிடுங்கள். முதலியாரும் எழுதிவிடுவார்" எனச் சொல்லிக்கொண்டு அவர் போய்விட்டார்.

சிலநாளின் பின்பு விசாரணையைத் தொடங்கினோம். இளைஞர்கள் ஒரு பக்கம். வண்ணக்குமார் மறுபக்கம். விசாரணை தொடர்கிறது. சமாதானம் செய்துகொள்ள முடியாத இரண்டு சிக்கல்கள். ஒன்று வண்ணக்குமார் முறையை மாற்றிப் பரிபாலன சபை முறையைப் புகுத்துதல்; மற்றது இன ஒதுக்கல் கொள்கையை நீக்கி நிருவாகத்தைப் பரவலாக்குதல்.

அநேகமாக எல்லோரும் வழிக்கு வந்துவிட்டார்கள். தலைமை வண்ணக்கர் திரு. தம்பிமுத்து மாத்திரம் ஒன்றுக்கும் இணங்குவதாகக்

காணவில்லை. பரிபாலன சபையும் வேண்டாம். நிருவாகத்தைப் பரவலாக்க வேண்டியதுமில்லை. பழைய வழக்கம் போல் நாங்கள் நடந்துகொள்வோம். இவ்வாறு சொல்லிக்கொண்டு சமாதானத்துக்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டார் தம்பிமுத்து.

விசாரணைச் சபைத் தலைவர் என்னைப் பார்க்கிறார். "நான் முந்தியே சொன்னேனே. இதில் நாம் வெற்றிகாணமாட்டோம். மரியாதையாக விலகிக்கொள்வோமென்று. நீங்கள் தானே விடவில்லை. தம்பிமுத்தரின் பிடிவாதத்திலும் உங்கள் நம்பிக்கை பெரிய ஏமாற்றமாயிற்றே" என்றார்.

"அப்படியொன்றுமில்லை. நம்பிக்கை இருக்கிறது. தம்பிமுத்தரைத் தனியே சந்தித்துச் சரிகட்டப் பார்க்கிறேன். தயவு செய்து உத்தரவு தாருங்கள்" என்று நான் தலைவரைக் கேட்டுக் கொண்டேன். அனுமதி கிடைத்தது.

நான் தம்பிமுத்தருடன் தனிமையாகக் கலந்து பேசியதில் பின்வரும் விஷயங்களில் இணக்கம் கண்டோம் :- வண்ணக்கர் முறையை ஒழித்தல், பரிபாலன சபையை அமைத்தல், தம்பி முத்தரின் குடியாகிய சூரி அடப்பன் குடிக்கே தலைவர் பதவியை வழக்குதல், தம்பிமுத்தரே சபையின் ஆயுள்காலத் தலைவராகயிருத்தல். மூன்று வருடத்துக்கு ஒருமுறை தேர்தல்.

இந்த முடிபினை நான் விசாரணைச் சபை முன் வெளியிட்டபோது ஏகமனதாக எல்லாரும் அதனை வரவேற்றனர். விசாரணை சமாதானமாக நிறைவுற்றது.

நாங்கள் செய்து வைத்த சமாதானத் திட்டத்தினால் இன ஒதுக்கல் கொள்கைக்கு முற்றுப்புள்ளி இட்டதுடன் ஆலய நிருவாகமும் பரவலாக்கப்பட்டது. இளைஞர்கள் மிகவும் திருப்தி அடைந்தனர்.

சூரி அடப்பன் குடி நான்கு வயிற்றுவார் கொண்டது. அதாவது நான்கு தாய் வயிற்றுப் பிள்ளைகளின் வாரிசிக்கு உரியது. இதுவரை காலமும் ஒரு தாய் வழியினர் மாத்திரமே தலைமைப் பதவியை வகித்து வந்துள்ளார்கள். ஏனைய மூன்று தாய்வழி வாரிசுகளுக்கும் தலைமைப் பதவியில் உரிமையில்லாதிருந்தது. இதன்படி தம்பிமுத்தரின் தாய்வழியினருக்கே அது ஏகபோக உரிமையாக நடைமுறையிற் கிடைத்துவர ஏனைய மூன்று தாய்வழி வாரிசுகளும் சட்டப்படி தமக்கு கிடைக்க வேண்டிய தலைமைப் பதவியின் உரிமையை இழந்து வாழ்ந்தமை இங்கே மனமடிவுடன் குறிப்பிடத்தக்கது.

இனிமேல் நான்கு வயிற்றுவாரின் ஆதரவையும் பெறும் ஒருவரே தலைவராவார். தம்பிமுத்தரின் வாரீசுகள் மாத்திரம் தாம் ஒரு தலைவரைத் தெரிவு செய்யும் தனி உரிமைக்கு இடமில்லாமற் போகிறது. நாலு வயிற்றுவார் கொண்ட ஒரு குடியுரிமையை ஒரு வயிற்றுவார் மாத்திரம் தனியுரிமை கொண்டாடுவது அநாகரிகச் செய்கையென்றே நான் கருதுகின்றேன். இது சட்டத்துக்கும் முரணானது. ஒரு இனமே தன் இனத்தை ஒதிக்கி வைப்பது, அதுவும் தெய்வத்தின் முன்னிலையில் ஒதிக்கி வைப்பது எவ்வளவு, பெரும் பாவம்! இன்னும் சொல்கின்றேன் பொறுத்திருங்கள்.

# விபுலானந்தர் கல்விச் சகாய நிதியின் கதி என்ன ?

1935ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். ஒரு நாள் எங்கள் பகுதி வன்னிமை முதலியாரைப் பார்க்கப் போயிருந்தேன். போய் அன்னாருடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது ஒரு சந்தர்ப்பத்தில், "நான் மண்டூர்க் கோயிலுக்கு ஒரு யானையை அன்பளிப்புச் செய்யப் போகிறேன்" என்று அவர் என்னிடம் சொன்னார்.

"கோயிலைச் சாப்பிடுவதற்கு வண்ணக்குமாரே போதும். யானை ஒன்று அவசியமில்லை ஐயா" என்று நான் அவருக்குச் சொன்னேன். நான் இவ்வாறு சொன்னதற்குரிய காரணத்தை நேயர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும்.

எத்தனையோ ஆலய நிருவாகிகள் தாமாகவே சிந்தித்து எவ்வளவோ பெரிய காரியங்களைச் செய்திருக்கலாம். பல்லாயிரக் கணக்கான, ஏன் பல லட்சக்கணக்கான ரூபா வருமானமுடைய பல ஆலயங்கள் மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களில் இருக்கின்றன.

நிரந்தர வருமானம் தருகின்ற பலகோடி ரூபா பெறுமதியான அசைவில்லாத ஆதனங்களைப் பல ஆலயங்களுக்கு முன்னோர் தருமதானம் பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் மறைந்துவிட்டார்கள். நாம் எப்படியும் நடக்கலாம் என்று எண்ணவேண்டாம். நாம் செய்வதை அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது நினைவில் இருக்கட்டும்.

பல ஆலய நிருவாகிகள் தமது முன்னோரின் நம்பிக்கைக்குத் தகுதியாக நடந்து கொள்வதில்லை. நிருவாக உரிமையைப் பெறுவதற்கு வாதும் சூதும் செய்து வழக்கும் ஆடுகிறார்கள். வாதம் ஒழிந்த இடத்தில் வாதம். சமாதானம் நிலவவேண்டிய இடத்தில் வழக்கு. நிருவாகத்தைக் கைப்பற்றிய பின்பு எதிர்க்கட்சிக்கும் மறைமுகமாகப் பங்கு கிடைக்கிறது. "பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது" என்பதுபோல் ஆகிவிடுகிறது பரிபாலன நிலைமை. புண்ணியம் போல் பாவம்!

காரைதீவுக் கண்ணகை அம்மன் கோயிலுக்கு இனி வருகின்றேன். இருபது ஆண்டுகளின் முன்பென்று நினைக்கிறேன். ஆலய விசாரணைச் சபைத் தலைவர் கிழக்குப் பிரதேச வித்தியாதிகாரி திரு. ஏ. வீ. மயில்வாகனம். வழக்கறிஞர் திரு. கே. என். குமாரசாமியும் நானும் அங்கத்தவர்கள். விசாரணை நடந்து கொண்டு போகிறது. விசாரணைச் சபைத் தலைவர் ஒரு கட்டத்தில் என்னைப் பார்த்து இந்த பிரதம வண்ணக்கர்தான் நிருவாகச் சீர்கேடு முழுவதுக்கும் காரணகர்த் தாவாயிருக்கிறார் என்று சொன்னார்.

“ஐயா அவசரப்பட வேண்டாம் சாயந்தரம் எல்லாம் அம்பலமாகும் பொறுத்திருப்போம்” என்று நான் தலைவருக்குக் கூறினேன். மதிய போசனத்தின் பின்பு விசாரணை நடந்து கொண்டிருக்கையில், நான் தலைவரிடம் நகைச்சுவையாகச் சொன்னேன், ஐயா, முறைப்பாடு செய்ய வேறு ஆள் தேவைப்படுகிறது என்று.“என்ன சொல்லுகிறீர்கள்? விளங்க வில்லையே” என்று தலைவரும் மற்றைய அங்கத்தவரும் என்னைக் கேட்டார்கள்.

“இந்த மனுதார்களும், எதிர் மனுதார்களும் முந்தி ஒரே கூட்டு. இந்த ஆலய நிருவாக ஊழல்களுக்கு இவர்கள் எல்லாருமே காரணகர்த்தாக்கள். ஏதோ உள்ளுக்கு நடந்த குத்துவெட்டுகள் காரணமாக இரண்டாகப் பிரிந்துகொண்டு “கொமிஷன்” கேட்டிருக்கிறார்கள். இதைத்தான் சொல்கிறேன்” என நான் விஷயத்தை அம்பலப்படுத்தினேன்.

நான் இப்படிச் சொன்னதும் மேல் விசாரணையை நடத்தும் அவசியம் இல்லாமற் போய்விட்டது. இரு கட்சியினரும் ஒரு சமாதானத்துக்கு வந்துவிட்டார்கள்.

இந்த ஆலயத்துக்கு நூற்று முப்பத்திரண்டு “ஏக்கர்” நெல்வயல் இருக்கிறது. இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன்பே “ஏக்கர்” ஒன்றுக்கு நூற்றறுபது புசல் விளையும் பொன் கொழிக்கும் போக பூமியாகும். சங்கநிதி, பதுமநிதி இரண்டும் வாய்ந்த கரைவாகுப் பகுதியிலுள்ளது. இந்தத் தங்கவயல்.

இந்த நூற்று முப்பத்திரண்டு ஏக்கர் நெற்காணியில் சரி அரைவாசி அறுபத்தாறு ஏக்கரில் வரும் வருமானம் கோயில் வண்ணக் குமாருக்கு; மற்ற அரைவாசி வருமானம் கோயிலுக்கு. இதைவிடக் கோயிலுக்கு வருகின்ற பிற வருமானமோ அள்ளாகொள்ளை.

இரு கட்சியினரும் கூட்டாக இணங்கிக் கொண்டதன் பேரில்

எங்களால் அங்கீகரிக்கப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை இங்கே தருகின்றேன். குறித்த சமாதான அம்சம் நாங்கள் சிறப்பாகச் சிபார்சு செய்ததும் பிரதானமானதும், பெரும்பயன் தருவதுமான ஒன்றாதலால் அதுபற்றி வாசக நேயர்கள் அறிந்திருக்க வேண்டியது மிகமிக அவசியமாகும்.

வண்ணக்குமார் பரம்பரை பரம்பரையாக அனுபவித்துவந்த அறுபத்தாறு ஏக்கர் வருமானத்தையும் காரைதீவுக் கல்வி விருத்திக்குப் பயன்படுத்துவது; “விபுலானந்தர் கல்விச் சகாய நிதி” என்னும் பெயரில் இலங்கை வங்கி போன்ற ஒரு வங்கியில் குறித்த வருமானத்தை நிரந்தர வைப்பாக இட்டு வைப்பது; அதற்கொரு தர்மகர்த்தா சபையை நியமிப்பது; காரைதீவிலிருந்து பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்குத் தகுதிக்கேற்பக் கல்வி நன்கொடையோ, கடன் தொகையோ வழங்குவது.

இந்த நிபந்தனைகளுக்கு அடக்கமாக “விபுலானந்தர் கல்விச் சகாய நிதி” நிறுவனம் அம்மாளின் சன்னிதியில் கொமிஷனர்களின் முன்னிலையில், இரு கட்சியினரதும் ஒரே சம்மதத்துடன் சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்று நிறைவேறியது. ஆனால் இதுவரை குறித்த கல்விச் சகாய நிதி நிறுவப்படவுமில்லை; நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யவுமில்லை.

கால் நூற்றாண்டுவரை இதற்குச் சேரவேண்டிய நிதி என்னவாய்ப் போயிற்றோ தெரியவில்லை. காரைதீவு இளஞ் சந்ததி இந்தக் கொடுமையைக் கண்விழித்துப் பார்க்கமாட்டாதா? எத்தனை லட்சம் சேர்ந்திருக்கும்.

அடுத்து இன்னொன்றை நோக்குவோம். விபுலானந்தர் சிலைத் திறப்பு விழா. பிரதம விருந்தினராக வருகின்றார் தெய்வசிகாமணி குன்றக்குடி அடிகளார். திறப்பு விழாவைச் சிறப்புறத் தொடங்கி மங்கள சம்பூரணமாக நிறைவு செய்து வைத்த அடிகளார், விபுலானந்தர் கல்விச் சகாய நிதியொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துக் குறித்த நிதிக்குத்தாமே ஒரு பெருந் தொகையை நன்கொடையாக வழங்கிய உருக்கமான நிகழ்ச்சி நமது முது சமுதாயத்தின் தளர்ந்த ஞாபகத்துக்கு மறைபொருளாகப் போய்விட்டாலும், கிளிர்ந்தெழுகின்ற நமது இளஞ் சமுதாயத்தின் ஞாபகத்துக்கு இது மறைபொருளாகப் போய்விட்டதோ? இந்த நிதிக்கு என்ன நடந்தது? எங்கே போயிற்று? கேட்பாரில்லையா? எத்தனை சாதனைகளைச் செய்திருக்கலாம்? வேதனை! வேதனை! வேதனை!

காரைதீவு என்றால் அது சாதாரணமான ஓர் ஊரன்று. மட்டக்களப்புத் தமிழ்ச் சமூகம் முழுவதையுமே தோள் கொடுத்துத் தாங்கக்கூடிய சக்தி அதற்குண்டு. அது சரியான முறையிலே ஒருமுகப் பட்டுத் திடமாகச் செயற்படுமானால் மட்டக்களப்புத் தமிழ் மக்களின் தலைவிதியையே நிர்ணயித்து விடக்கூடிய பழவிறற் பெரும் பேருராகும். காரைதீவே நீ எங்கே சென்று கொண்டிருக்கிறாய்? எவ்வாறு சென்று கொண்டிருக்கிறாய்? இடுக்கிப் பாய்ச்சலுக்குள் அகப்படாதே. வடக்கையும் தெற்கையும் திரும்பிப்பார். நிலைத்து நில்.

**(முற்றும்)**

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி

அஞ்சாமை -108
அருளாதொழியில் - 35
அருளுண்டு - 163
அறுகுமுள் - 44
அன்னை நிகர -11
ஆடும் பாம்பு - 70
ஆயிரத்துத் தொள் - 57
இரவும் பகலாய் - 152
இருதயத்தின் - 177
இரும்பை - 112
இலங்கைப் பெருமகனே - 136
இனியருட்கடலே - 175
உடல் பொருள் ஆவி - 22
உண்ணும் - 192
உலக முவப்ப - 170
உழவால் - 147
உள்ளுமன்புடன் - 6
எட்டின மட்டும் - 1
எல்லாமறிந்த நீ - 71
ஒழுக்கத்துயர் - 65
ஒன்பது - 163
கண்ணர் கரும்பின் - 152
கல்வியுடையார் - 111
கல்வியும் - 97
காடும் - 152
காரேறுந்திரு - 195
கொல்லும் - 148
கோயில் நிலம் - 207
கோயிலிலும் - 66
சகதர்ம - 108
சங்கத்தமிழ் - 86
சட்டமென்பது - 172
சாதிசமயம் - 206
சாதித்திமிர் - 206
சாதியென்றும் - 175
சாந்தம் - 107
சைவமெங்கே - 137
சொல்மலரை - 133
சாட்சியாய் - 69
தம்மின் தம்மக்கள் - 115
தாடி தலைப்பாகை - 111
தாம்பியல் - 169
தாவில்பொற் - 61
நல்லவர் - 136
நானறியேன் - 161
நிமிர்ந்த நடையை - 125
நீலக்கடல் - 123
நூல் நிலையம் - 159
பட்டார்களத்தே - 125
பண்டூரும் - 38
பண்புடையார் - 127
பரந்து - 154
பாடுவதெல்லாம் - 192
பாராளும் -62
பால்பெருகும் - 20
பாற்கடல் - 197
புலத்துயர்ந்து - 148
பூலோகந்தனிற் - 68
பொல்லாத - 71
மக்கள் நடைக்கு - 36
மட்டுவிலால் - 29
மலர்கிரண - 38
மலையினிடையே - 154
மாத்திரையில் - 36
முந்திப்பிறந்த - 175
முன்னமே - 111
முன்னைவினை - 89
மேல்பாற் - 153
மையிலங்கு - 113
விரைந்து - 127
விறகில் - 75

# சிறப்புப் பெயர்கள் அகராதி

அகில இலங்கை இந்து மாமன்றம் - 189
அசீஸ். ஏ. எம். ஏ. அல்ஹாஜ் - 146, 148, 149, 150, 151, 176, 180,
அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை -123
அண்ணமலைப் பல்கலைக்கழகம் -194
அப்பாசாமி, கலாநிதி - 70
அப்பாத்துரை -64, 65
அம்பலவாணர். பொ. - 23
அம்பாறை - 151, 155
அமிர்தலிங்கம். அ. - 145
அமிர்தாம்பிகை சைவ வித்தியாலயம் - 55
அர்ச். அகுஸ்தினர் ஆசிரியர் கலாசாலை - 113, 129, 133
அர்ச். சிசிலியா கல்லூரி - 113, 117
அர்ச். மரியநாயகி பாடசாலை - 132
அரசகரும மொழித் திணைக்களம் - 184
அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு - 124
அரசினர் கல்லூரி, மட்டக்களப்பு - 124, 166, 167, 168, 175.
அரியநாயகிம். ஆர். டபிள்யூ. - 140
அருணாசலம். கா. தேசிகமணி - 23, 193
அருள்நந்தி. கே. எஸ். - 34, 35, 100, 167, 169, 184.
அருளம்பலச் சாமியார்.- 23
அருளம்பலம் - 63
அருளையா. அ. - 186
அலன் ஏபிரகாம் - 186
அழகு பொன்னம்பலம் - 140
அளுவிகாரா றிச்சேட் - 180
அறப்பளீசுரசதகம் - 21
ஆசைப்பிள்ளை விஜயர் - 32
ஆபிரகாம் உபதேசியார் - 34
ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் - 158, 159
ஆரையம்பதி -45
ஆறுமுகம் - 64
ஆறுகம் கொஸ்தாப்பல் - 45
ஆறுமுகசாமி -23
இந்துக் கல்லூரி திருகோணமலை - 47
இந்துக் கல்லூரி மானிப்பாய் - 50
இந்து சமய விவகார ஆலோசனைச் சபை - 187
இப்றாகிம். எம். எம். - 15

இரத்தினம். கா. பொ. பண்டிதர் - *184*
இராச அரியரத்தினம் - *33, 55*
இராசசிங்கம். எஸ். கே. - *93*
இராசேந்திரம். கே. எஸ். - *97*
இராஜ காரியர். ஏ. ஜே. - *166, 171*
இராஜகோபாலச்சாரியர் - *109*
இராமசுவாமி ஐயர். கே. எஸ். - *107*
இராமசுவாமி ஐயர். சேர். சீ. பி. -*84*
இராமநாதன் - *55*
இராமநாதன் கல்லூரி - *31, 59*
இராமநாதன். சேர். பொன். - *54, 107, 110, 111, 153*
இராமலிங்கம். மு. மக்கள் கவிமணி. - *180*
இராமநாத மாண்மியம் - *59*
இராமாயணம் - *31, 59*
இலங்கைக் கலைக்கழகம். - *180*
இலங்கைப் பல்கலைக்கழகம் - *194*
இலங்கை வானொலி கல்வி ஒலிபரப்பு - *185*
இவான்ஸ். ஈ. *53*
இன்னாசிப் போடியார் - *15*
இஸ்லாமிய இலக்கிய கலாசார மகாநாடு - *177*
உம்மு குல்தூம் - *149*
உவெஸ்லியன் மிஷன் ஆங்கிலப் பாடசாலை - *4*
ஏகாம்பரபிள்ளை சோமநாதர் வண்ணக்கர் - *3*
ஐக்கியச் செல்லப்பா - *23*
ஐக்கிய தேசியக் கட்சி - *176*
ஐசக் தம்பையா.ஞான கலாநிதி - *66*
ஐயாக்குட்டி - *15*
கண்ணகி வழக்குரை காதை - *8*
கண்ணகை அம்மன் கோயில் காரைதீவு - *219*
கணபதிப்பிள்ளை. சி. பண்டிதமணி இலக்கிய கலாநிதி - *25, 29, 31*
கணபதிப்பிள்ளை. மு. - *184*
கணேசையர் மகாவித்துவான் - *74, 159*
கதிர்காமம் - *5*
கதிரேசன் செட்டியார். பண்டிதமணி. -*74,*
கதிரைமலை விதானை -*6*
கதிரவேற்பிள்ளை. மு. டாக்டர் - *129*
கந்தசாமி. வீரபத்திரன் - *150*
கந்தசுவாமி கோயில் மண்டூர் -*5, 201*

கந்தபுராணம் - 9, 10, 14, 30
கந்தம்மை - 89
கந்தவனம் வதனக்குட்டி விதானையார் - 7
கந்தையா. ஏ. கே. -171, 173
கந்தையா முதலியார். - 96
கந்தையா. எஸ். ரீ. - 21
கந்தையா. வி. சீ. பண்டிதர் - 5, 160
கம்பராமாயணம் - 59
கல்ஓயா - 151, 155
கல்முனை - 15, 18
கல்லடி வேலுப்பிள்ளை - 43, 47, 49
கல்வளையந்தாதி - 30
கலைப் பூங்கா - 191
களுவாஞ்சிக்குடி - 11, 23, 45
கற்பகனார் - 5
கன்னக் கொண்டை - 12
கனகசபை. க. வைத்திய கலாநிதி - 15
கனகசபை குருநாதபிள்ளை - 23
கனகசெந்திநாதன், இரசிகமணி - 191
கனகசுந்தரம்பிள்ளை. தி. த. - 99
கனகநாயகம். எஸ். ஆர். - 104
கனகரத்தினம். வீ. சீ. - 55
கனகரத்தினம். எஸ். ஒ. முதலியார் - 130
கனகரத்தினம். வே. - 3
கனம் அப்பாப்பிள்ளைப் போதகர் - 70
கனம் ஜே. கே. சின்னத்தம்பி - 66
கனம் சேதுகாவலர். ஆர். என். - 16
கனம் தம்பிப்பிள்ளைப் போதகர் - 15
கனம் மாசிலாமணிப் போதகர் - 67, 72
கனம் மாட்டின் ரெய்லர் - 71
கனம் தாமோதரம் பாதிரியார், சீ. டபிள்யூ. - 13
கனம் பாக்கர் ஐயர் - 4
கனம் பொப்லி ஐயர் - 74, 77, 78
கனம் லாபியர் எவ். எல். - 82
கனம் லொக்வூட் ஐயர் - 13
கஸ்தூரி வேலுப்பிள்ளை - 129
காந்தியடிகள் - 81, 109, 130
கார்த்திகேசுப் பாதிரியார். ச. - 11, 210

காராளபிள்ளை புறோக்கர் - 50
காரியப்பர். எம். ஏ. எல். - 130
காரியப்பர். எம். எஸ். முதலியார் - 147, 149, 151
கிங்ஸ்பெரி அழகசுந்தரம் - 105
கிருஷ்ணதாசன். நா. - 110
கிருஸ்ணபிள்ளை. பொன். பண்டிதர் - 191
கிருஸ்ணபிள்ளை மகாகவி - 70
கிறிக்கன் பேக் - 14
கிறிஸ்தவ சபைத் துயிலுணர்ச்சி - 69
கிறிஸ்து திருவவதாரக் கீதங்கள் - 67
கிறேஸ் தில்லையம்பலம் - 147
குஞ்சுத்தம்பி. கே. எஸ். - 13, 15
குணரத்தினம். சீ - 15
குமரப் பெருமாள் - 89
குமரசே சதகம் - 21
குமார் பொன்னம்பலம் - 141
குமாரசாமி. க. - 29
குமரசாமி. கே. என் - 219
குமாரசுவாமி வே - 61
குமாரசுவாமி. எம். எம். - 50
குமாரசுவாமி ஐயர். சி - 27
குமாரசுவாமிப் புலவர். அ. - 28, 36, 114
குமாரவேலுப் க. - 7
குருகுலசிங்கம். வி. உ. - 215
குருசாமி நாயுடு. டாக்டர் - 79, 81
குருநாதபிள்ளை நாகப்பர் - 89
குருமூர்த்தி ஐயர் - 29, 30
குலத்திலக. ஆர். எஸ் - 187
குலேந்திரன். வைத்திய கலாநிதி - 15
குறுமண்வெளி - 6
கைலாசபிள்ளை. த - 28
கொடிகாமம் - 42
கொழும்புத்துறை - 40
கொஸ்தாப்பல் கந்தையா - 45, 46, 47
கோட்டைக் கல்லாறு - 6
கோபல்லாவா. உவில்லியம் - 180
கோபாலபிள்ளை ஆசிரியர் - 25
கோவிந்தக் கப்புகனார் - 6
சங்கத்தானை இந்துக் கல்லூரி - 55

சண்முகலிங்கம் - 173
சதாசிவம் - 57
சதாசிவம். ஆ. கலாநிதி - 190
சதாசிவம். இ - 12
சதாசிவ ஐயர். தி. முகாந்திரம் - 29, 136
சந்திரசேகரம். அ - 179
சந்திரசேகர உபாத்தியாயர் - 10, 16, 18, 36
சந்திரசேகரா. எச். ஏ. பி. -168
சந்திரசேகரி கே. எஸ். பண்டிதர் - 195
சந்திரசேனன் - 61
சபாபதி. ஆ. பண்டிதர் - 160
சபாரத்தினம் - 171
சரத்சந்திரா. கலாநிதி - 183
சரவணமுத்தன். அ. வித்துவான் - 23, 49
சரவணமுத்து - 184
சரவணமுத்து. அ. - 123, 158
சரவணமுத்து ஐ. பண்டிதர் - 90
சரவணமுத்து சுப்பையா - 62
சனிவெண்பா - 49
சாகித்திய மண்டலம் இலங்கை - 181, 190
சாமித்தம்பி ஆசிரியர் சிரோமணி - 6
சாவக்சேரி - 25, 26, 33, 55, 62, 64, 66
சாவகக்சேரி டிறி. பேக் கல்லூரி - 67
சிட்னி சொயிசா - 142, 143, 144
சித்தரஞ்சன தாசர் - 81
சிதம்பரப்பிள்ளை. ஏ - 67
சிதம்பரப்பிள்ளை - 90
சிதம்பரப்பிள்ளை வண்ணக்கர் - 3
சிந்தாமணி - 1, 55
சிலப்பதிகாரம் - 31
சிவகாமசுந்தரி விஜயரத்தினம் - 15
சிவகுரு முதலியார் - 59, 64
சிவங்கருணாலய பாண்டியன். புலவர் - 190
சிவசரணம் - 87
சிவசிதம்பரம். மு -173
சிவசுப்பிரமணியம். ப. 139
சிவசுப்பிரமணியம். வீ. - 187, 188
சிவசுப்பிரமணியம் எஸ். - 138
சிவஞானரத்தினம். க. டாக்டர் - 129

சிவதாஸ் - 90
சிவநாயகம். எஸ். டி - 127
சிவபாதசுந்தரம். சு - 55, 105
சிவராசா. மு - 187
சிவராசா நாகலிங்கம் - 92
சிவானந்தா வித்தியாலயம் - 127
சிறீநிவாச ஐயங்கார். ரீ. சீ - 74
சின்னத்தம்பி - 15
சின்னப்பிள்ளை விதானை - 6
சின்னையா - 132
சீவகசிந்தாமணி - 31
சீனித்தம்பி. த. - 45
சீனித்தம்பிப் போடியார் - 213, 214
சீனிவாசகம். க. 90
சுக்கிரநீதி - 74
சுத்தானந்த பாரதியார். - 159
சுதேச நாட்டியம்- 43
சுப்பிரமணிய ஐயர் - 50, 53
சுப்பிரமணிய சர்மா.நா. - 85
சுப்பையாபிள்ளை. ந. வித்துவான். - 160
சுப்பிரமணிய தேசிகர் - 55
சுவபாக்கியம் பிள்ளை. கவிஞர்- 62
சுவாமி அவிநாசானந்தர்- 107, 108
சுவாமி உருத்திர கோடீஸ்வரர்- 103
சுவாமி சர்வானந்தா - 54, 103
சுவாமி சிவானந்த மகராஜ்- 72
சுவாமி நடராஜா - 90
சுவாமிநாதன் - 118
சுவாமி விவேகானந்தர் - 22
சுந்தரலிங்கம். செ.- 104
சுன்னாகம் - 40
சூடாமணி நிகண்டு - 5, 7, 9, 13, 30
சைவப்பிரகாச வித்தியா சாலை - 28
ஞானசெல்வம். க. - 92, 156, 157, 161
ஞானத்தந்தை டானியேல் - 114
ஞானப்பிரகாசம் .மு. - 186
ஞானப்பிரகாசம் ஏ. எவ். - 129
டேவிட் இராசையானார். வ. சு. - 34
டேவிட் ஈ. சீ. - 13, 14

தங்கராசா. கே. சி. - *139, 145*
தங்கராசா வே. - *16*
தசரதன் குறையும் கைகேயி நிறையும் - *76*
தண்டலையார் - *21*
தண்டியலங்காரம் - *31*
தம்பாப்பிள்ளை. மூ - *3*
தம்பாப்பிள்ளைக் கொஸ்தாப்பல் - *45*
தம்பிப்பிள்ளை. வே - *15*
தம்பிப்பிள்ளை வைத்தியர் - *56, 57*
தம்பிபஞ்சாட்சரம் - *23*
தம்பிமுத்து - *98*
தம்பிமுத்துப்பிள்ளை. செ. - *24, 26*
தம்பிமுத்துப் போடியார் - *45*
தம்பிமுத்து வண்ணக்கர் - *215*
தம்புத்துரைச்சாமி - *32*
தம்பு நீதவான் - *33*
தம்பையா நீதிபதி - *132*
தமிழ்க் கலைமன்றம் மட்டக்களப்பு - *160, 193*
தயாரத்தின. டீ. ஜீ. - *180*
தாமோதரம்பிள்ளை.. சி .- *55*
தாமோதரம்பிள்ளை. சி. வை - *105*
தாமோதரம்பிள்ளை - *92, 93*
தியாகராசா - *55, 57*
திருக்குறள் - *30*
திருக்கோணமலை - *25, 47*
திருச்செந்தூர்ப் புராணம் - *5, 13*
திரு. சோமசுந்தரம் பண்டிதர் - *31*
திருநாவுக்கரசு. வே - *127, 160*
திருமுருகாற்றுப்படை - *34*
திருமுல்லை வாயிலந்தாதி - *30*
தீருமேனிப்பிள்ளை விதானை கண்டுக்குட்டி - *6*
திருவாசகம் - *21*
திருவிளங்கம். மு - *50*
தில்லைநாயகம். எஸ். ரீ. - *16*
தில்லை மணடூர் முருகன் மும்மணிக்கோவை - *63*
துறைநீலாவனை - *6, 13*
தெட்சணமூர்த்தி - *156*
தெய்வசிகாமணி குன்றக்குடி அடிகளார் - *220*
தேவகாயம் பிள்ளை - *79*

தேவ சூரியசேன - 182, 183
தேமதாசன் - 73, 74, 85, 98
தேவபந்த தாசர் - 81
தேவராஜன். ஸி. என். - 50
தையல் நாயகி சுப்பிரமணியம் - 99
தோம்புதோர் கந்தோர் - 5
நடராசன்.க கி. வித்துவான் - 40
நடராசா. எவ். எக்ஸ். சீ. வித்துவான் - 115, 160, 184, 185
நடராசா. கே. (ஜே. பி) - 174
நடராசா. சோ - 25, 26, 28, 184
நடேசன். எஸ். - 138
நடேசபிள்ளை. சு - 159
நம்பியகப்பொருள் - 31
நல்லம்மா - 89
நல்லையா வ. - 122, 124, 146, 166, 167
நவநீத கிருஷ்ண பாரதியார் பண்டிதமணி - 31, 159
நவரத்தினம். இ - 186
நவரத்தினம். கலைப்புலவர் - 53
நவரத்தினராஜா - 171
நவரத்தினராஜா. எம் - 104
நன்னூல் - 30, 31
நாகமுத்து அடம்பன் - 6
நாகலிங்கம் - 55
நாதன். வீ. கே - 131
நாராயண ஐயங்கார் - 74
நாவலர் காவிய பாடசாலை - 27, 28, 32
நாவிதன்வெளி - 7
பகவத்கீதை வெண்பா - 158, 161
பசுபதி. வீ. ரி டாக்டர். ,
பசுமலை - 67, 71, 74, 87
பஞ்சநாதக் குருக்கள் - 31
பண்டித மயில்வாகனனார் - 27, 31, 34, 196
பத்தக்குட்டி ஆசிரியர் - 25
பரசுராமர் - 15
பரமசாமி. ஆ. - 90
பரமேசுவரக் கல்லூரி - 54
பரிபூரணானந்தர். டாக்டர் - 90
பருத்தித்துறை - 42
பனிங்கா. ஞானகலாநிதி - 67, 69, 78

பாண்டிருப்பு - 9
பாரன் ஜெயதிலக சே - 135
பாரதியார் - 157
பாலசுந்தரம். வீ. - 55
பிறதர் ஆசீர்வாதம் - 114
பிறதர் இக்னேஷியஸ் - 114
பிறதர் கிறிசொஸ்தம் - 114
பிறதர் பிலிப் - 114
பிறதர் ஜராட் - 114
பீதாம்பரன். மா - 66, 90, 97
புலவர்மணிப் பட்டம் - 156, 160
புறப்பொருள் வெண்பாமாலை - 31
பூபதிதாசர் - 161, 162, 164
பூபாலபிள்ளை. ச. வித்துவான் - 23, 124
பூபாலபிள்ளை. செ பண்டிதர் - 90, 124
பூபாலபிள்ளை. ஜே. கே. - 97
பெரியகல்லாறு 6, 15
பெரியதம்பி - 3, 12, 16, 39
பெரியதம்பி விதானை - 6
பெரேரா. எம். ஜே. - 184
பெரேரா. ஜி. கே. டபிள்யூ - 135
பேரின்பநாயகம். எச் - 106
பேரின்பநாயகம் செழியன் - 193
பொன்னம்பலம். எஸ் - 214
பொன்னம்பலம் சி. - 15
பொன்னம்பலம். ஜி. ஜி - 139, 140, 141, 142, 144, 145
பொன்னம்பலப்பிள்ளை - 57
பொன்னம்பலப்பிள்ளை. ச. புலவர் - 31, 59
பொன்னம்பலப்பிள்ளை. ந. வித்துவான் - 57
பொன்னம்மா - 87
பொன்னுத்துரை. க. - 144
பொன்னையா. ஏஸ். கே. - 19
பொன்னையா கலாநிதி - 184
மகாத்மா காந்தி- 107
மகாலிங்கசிவம் பண்டிதர் - 24, 25, 29
மங்கம்மாள் சத்திரம் - 85, 113
மட்டக்களப்பு - 3, 8, 9, 12, 26, 28, 39, 41, 45, 49, 51, 54, 55, 65, 67, 75, 85, 87, 113, 126, 127, 130, 136, 146, 149, 156, 176, 199, 211,
மட்டுவில் - 24, 25, 26, 28, 55

மண்டூர் - 4, 6, 26, 54, 87
மண்டூர்ப் பதிகம் - 36
மண்ணியற் சிறுதேர் - 75
மணிமேகலை - 76
மத்திய மகா வித்தியாலயம் வந்தாறுமூலை - 124
மயில்வாகனம். ஆ. வி. -184
மயில்வாகனபிள்ளை மு - 31
மயில்வாகனப்பிள்ளை. சி. - 131, 132
மயில்வாகனனார் சாமித்தம்பிபண்டிதர்- 23, 34, 36, 38, 50, 52, 55, 62, 72
மரகதமடம் - 26, 32, 90
மருதமுனை- 177
மறைசையந்தாதி- 30
மறைமலை அடிகள் - 35
மஸ்தான் சாபு பாடல் - 177
மாணிக்கம் - 23
மார்க்கண்டன். கா. வ. -23
மீட்சிப்பத்து - 194
மீனாட்சி சுந்தரனார். தே. போ. - 159
முகையதீன் பீர்சாகிப்- 164
முத்துக்குமாரு. வீ - 105
முத்தையா கந்தப்பர் - 23
முத்தையா செல்வி - 123
முருகவேள். நா. புலவர் - 170
யாப்பருங்கலக் காரிகை - 31, 34
யாழ்ப்பாணம் -26, 41, 42, 140, 143
யோகர் சுவாமி - 34, 39, 40, 50,54
ரஹீம் எ. எஸ் - 150
ரங்கநாதன். சீ - 188
ரவீந்திரன் டாக்டர் - 127
ராதாகிருஷ்ணன் டாக்டர் - 189
லியூசி ஞானத்தாய் - 117
வண்ணக்கர் - 207, 218, 220
வயித்தியலிங்கம் .எஸ் - 110
வயித்தியலிங்கம். க. - 23
வல்லிபுரம் - 55
வன்கைலன் பேக் -51
வாழைச்சேனை -45, 47
விபுலானந்த அடிகளார் - 8, 13,76, 85, 90, 91, 97, 103, 105, 107, 124, 136, 137

வில்லிபுத்தூரர் பாரதம் - 7, 8, 14, 28, 30, 31
வினாசித்தம்பி விதானை - 6, 8, 9
விஜயசேகரா கலாநிதி - 184
வியரத்தினம் - 150
வீரசிங்க - 185
வேங்கடசாமி நாடார் - 74
வேதசாத்திர கலாசாலை - 67
வேல்முருகு கொஸ்தாப்பல் - 45
வேலாயுதம் பரிகாரியார் - 6
வேலுப்பிள்ளை - 55
வேலுப்பிள்ளை. ஜி. கே. டாக்டர் - 150
வேற்பிள்ளை ம. க. உரையாசிரியர் - 26
வைத்தியநாதர் - 15
வைத்தியலிங்கம் துரைசாமி சேர் - 135
வைத்தியலிங்க தேசிகர். போ. வித்துவான் - 2,3
வைத்தியலிங்கம் நீதிபதி - 136
வைத்தீசுவர வித்தியாலயம் - 148, 159
றாஜறாவ் பண்டிதர் - 84
ஜகந்நாதன். கி. வா. - 65, 170
ஜனாப் அப்துல் றகூல் - 99
ஜனாப். நூர்தீன் - 177, 179
ஜனாப். முஜீது . எம். எ. -177, 179
ஜனாப். செய்யது ஹசன் மவுலான - 177
(ஜனாப். சேய்யிது ஹஸன் மௌலான)
ஜெகா பசுபதி டாக்டர்- 129
ஜேம்ஸ் பீரீஸ் சேர் - 182
ஸ்ரான்லி ஜோன் கலாநிதி - 69
ஸ்ரீ இராமக்கிருஷ்ண மடம்- கல்லடி உப்போடை - 108
ஸ்ரீஸ்கந்தராசா பொன் - 189
ஹரன். கே. பி - 158

இந்துசமய, தமிழ் கலாசார அலுவல்கள் இராஜாங்க
அமைச்சரின் அலுவலகம்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

# தமிழ் சாகித்திய விழா - 1991

*1981 ஆம் ஆண்டு தை முதல் 1988 ஆம் ஆண்டு மார்கழி வரையான காலப்பகுதியில் இலங்கையில் பிரசுரிக்கப்பட்ட சிறந்த*

*வாழ்க்கைக் குறிப்பு நூலாகக்*

*கணிக்கப்பட்ட உள்ளதும் நல்லதும்*

*என்னும் ஆக்கத்தின் ஆசிரியரான இயற்கையெய்திய*

*புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை*

*அவர்களின் இலக்கியப் பணியை பாராட்டி 1991 பங்குனி மாதம் 31 ஆம் திகதி கண்டி கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவின் போது இச்சான்றிதழ் வழங்கப்பட்டது. இவருக்கு ரூபா பத்தாயிரம் (10,000/-) வெகுமதியும், இவ்விழாவின் போது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.*

பி.பி. தேவராஜ்

பி.பி. தேவராஜ்.
*இந்துசமய, தமிழ் கலாசார*
*இராஜாங்க அமைச்சர்.*

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இந் நூற்றாண்டில் வாழ்ந்த ஈடிணையற்ற தமிழ்ப் புலவராவார். அவர் மண்டூர் சோ. ஏகாம்பரபிள்ளை வண்ணக்கர் அவர்களுக்கும், சி. சின்னத்தங்கம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியைக் கிராமப் பாடசாலையில் முடித்தபின் புலோலியைச் சேர்ந்த சந்திரசேகர உபாத்தியாயரிடம் தமிழ்க்கல்வியைக் கற்றார். அதன்பின் கல்முனை லீஸ் பாடசாலையில் சேர்ந்து ஆங்கிலக் கல்வியை ஆரம்பித்தார். மட்டக்களப்பின் மாபெரும் புதல்வர்களில் ஒருவரான வண. ஆர். என். சேதுகாவலர் எம்.ஏயிடம் கற்கும் அரிய வாய்ப்பையும் பெற்றார். இவரது ஆங்கிலக் கல்வி நோய் காரணமாகத் தடைப்பட்டது.

மட்டுவில் பண்டிதர் வே. மகாலிங்கம் அவர்களின் துணையால் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற காவிய பாடசாலையில் கல்வி நன்கொடை பெற்றுச் சேர்ந்தார். அங்கு சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் படிக்கும் வாய்ப்பைப் பெற்றார். இக்காலத்தில் பண்டிதர் மயில்வாகனனாரின் தொடர்பும் அவருக்குக் கிடைத்தது. காவிய பாடசாலையில் கற்றுத் தேறியபின் சாவகச்சேரியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது நடந்த ஒரு சம்பவம் சமத்துவவாதியான புலவர்மணியின் மனதிலே பெரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர் தீண்டாமையை எதிர்த்துக் கிறிஸ்தவப் போதகர் பயிற்சிக்கு மதுரையின் அருகிலுள்ள பசுமலைக்குச் சென்றார்.

அங்கு பயிற்சி பெற்றுவரும்போது தீண்டாமை கிறிஸ்தவர்களிடம் இருப்பதைக் கண்டு மனம் புழுங்கிய வேளையில் சுவாமி விபுலானந்தர் மதுரைக்குச் சென்று சொற்பொழிவாற்றினார். அதனைக் கேள்வியுற்று ஊசியைக் காந்தம் இழுப்பது போல் அவரைத் தேடிச்சென்று மதுரையில் அவரைச் சந்தித்தார். அவரது ஆணையை ஏற்று இலங்கை திரும்பி திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆசிரிய பதவியை ஏற்றார். இதனைத் தொடர்ந்து மட்/அர்ச். சிசிலியா மகளிர் பாடசாலை, மட்/அர்ச். அகுஸ்தினார் ஆசிரியர் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அதன்பின் சிலகாலம் உபதபாலதிபராகவும் பணியாற்றியபின் மட்/அரசினர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறினார்.

இவர் பகவத்கீதையை வெண்பாவாகப் பாடி கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய மூன்று பாகங்களாக வெளியிட்டார். அவர் இயற்றிய தனிப் பாடல்களைத் திரட்டிப் 'புலவர்மணி கவிதை' என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது அவரது கட்டுரைகள் 'உள்ளதும் நல்லதும்' என்ற பெயரில் வெளிவருகின்றன.

அவருக்கு பல பட்டங்கள் கிடைத்தபோதும் மட்டக்களப்புத் தமிழ்க் கலை மன்றம் வழங்கிய 'புலவர்மணி' என்ற பட்டத்தை விரும்பி ஏற்றுக்கொண்டார்.

Wanasinghe Printers, Batticaloa. + 94 65 222 7170